பங்கிம் சந்திரரின் கட்டுரைகள்

செவ்விலக்கியம்

பங்கிம் சந்திரரின் கட்டுரைகள்

தொகுப்பு:
அமித்ர சூதன் பட்டாச்சார்யா

வங்கத்திலிருந்து தமிழில்:
சு.கிருஷ்ணமூர்த்தி

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

ISBN 81-237-1517-X

முதற்பதிப்பு : 1995 (சக 1917)

Bankim Chandra's Essays (*Tamil*)

ரூ. 41.00

வெளியீடு : இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
ஏ-5, கிரீன் பார்க், புது தில்லி - 110 016

பொருளடக்கம்

தொகுப்பாசிரியர் முன்னுரை

'வந்தே மாதரம்' மந்திரத்தின் படைப்பாளி, இலக்கிய மாமன்னர் பங்கிம் சந்திர சட்டோபாத்தியாய் (தோற்றம்: 26ஜூன் 1838; மறைவு: 8 ஏப்ரல் 1894) அவர்களின் கொடை தற்கால இந்திய இலக்கிய வரலாற்றில் மறக்க வொண்ணாததாகும். அவர் இந்திய நாவலின் தந்தை மட்டுமல்லர்; பத்தொன பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய சிறந்த சிந்தனை யாளர்களுள் ஒருவர். வங்காள நாட்டு மக்கள் மட்டுமன்றி இந்தியா முழுவதும் உள்ள மக்கள் அவரது வாழ்நாளிலேயே அவரது இலக்கியப் படைப்புகளால் ஈர்க்கப் பட்டனர். அயல் நாடுகளில் வாழும் கல்வியறிவுள்ள மக்களின் ஆழ்ந்த ஆர்வங் காரணமாக அவருடைய படைப்புகள் ஆங்கிலத்திலும், ஜெர்மன் மொழி யிலும் பெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப் பட்டன. பங்கிம் சந்திரரின் மறை வுக்குப் பிறகும் அவருடைய பல படைப்புகள் பல்வேறு இந்திய மொழி களிலும், பிறநாட்டு மொழி களிலும் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட் டுள்ளன. வங்காளி அல்லது இந்தியர் மட்டுமின்றி உலக மக்களின் கவனத் தையும் நூறாண்டுக்காலமாக ஈர்க்கவல்ல ஏதோ ஒரு சிறப்பு அவருடைய படைப்புகளில் இருக்கிறதென்பது தெளிவு. பங்கிம் சந்திரரின் 'விஷ விருட்சம்' 'The poison tree' என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் 1884ம் ஆண்டில் லண்டனிலிருந்து வெளி வந்தது. இந்திய மொழியல்லாத ஒரு மொழியில் வெளியான அவரது முதல் நாவல் இதுதான். அவரது 'ஆனந்த மடம்' 'LE MONASTERE DE LA FELICITEE' என்ற தலைப்பில் பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டு 1985ம் ஆண்டில் பிரான்சில் பிரசுரமாயிற்று. மேலை நாடுகளில் பங்கிம் சந்திரரிடத்திலும் அவரது படைப்புகளிலும் கொண்ட ஆர்வத்தின், நூறாண்டு நிறைவின் ஒளிமிகுந்த அடையாளமாக இந்த வெளியீடு திகழ்கிறது.

உலகம் போற்றும் இந்த மனிதரிடம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் ஈடுபாடு கொள்வது இயற்கையே. இந்தியாவின் கோடிக்கணக் கான மக்கள் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் வானொலியிலோ தொலைக் காட்சியிலோ 'வந்தே மாதரம்' கீதத்தைக் கேட்டவாறே துயிலெழுகின்றனர்.

இந்த மந்திரத்தைப் படைத்த மாமனிதரைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள அவர்கள் விரும்புவதும் இயற்கைதான். இந்த விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்வது இந்திய அறிஞர் களின் கடமையாகும். பங்கிம் சந்திரரின் படைப்புகளைப் பயில்வதுதான் அவரை அறிந்து கொள்ளச்சிறந்த வழி யாகும். பங்கிம் சந்திரர் தம் நாவல்களிலும் கட்டுரைகளிலும் வெளியிட்டுள்ள மனித நேயக்கருத்துக்களும், ஆழ்ந்த சிந்தனைகளும் தற்கால இந்தியாவுக்கு மிகவும் பொருத்தமாயிருக்கின்றன என்பது இப்போது மிகவும் அழுத்தமாக உணரப்படுகிறது.

இந்த நூல் பங்கிம் சந்திரரின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. பல்வேறு விஷயங்களைப் பற்றி, பங்கிம் சந்திரரின் கருத்துக்களை வெளிப்படுத்தும் கட்டுரை களைத் தேர்ந்தெடுத்து இந்தத் தொகுப்பில் சேர்க்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. எனினும் அவருடைய மிகப்பெரிய கட்டுரைத் தொகுப்பான 'விவித பிரபந்த' நூலின் இரண்டு பாகங்களிலிருந்தே பெரும் பான்மையான கட்டுரைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தொகுப்பின் கட்டுரைகள் அவை முதன்முதலில் பத்திரிகைகளில் பிரசுரமான காலவரிசைப்படி அமைக்கப் பட்டுள்ளன. இதன் விளைவாகப் பங்கிம் சந்திரரின் நம்பிக்கைகள், சிந்தனைகள் இவற்றின் ஒரு தொடர்ச்சி யான சித்திரம் உருப்பெறும் என்பது என் கருத்து.

பங்கிம் சந்திரரை ஆசிரியராகக்கொண்டு வெளியான 'வங்க தர்சன்' பத்திரிகையின் முதல் இதழில் அவர் 'பத்ரசூசனா' (பத்திரிகைக்கு முன்னுரை) என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதினார். இதுதான் அவர் வங்காளியில் எழுதிய முதல் கட்டுரை. இதற்கு முன் அவர் மூன்று வங்காளி நாவல்கள் எழுதி யிருந்தாலும் அவரது முதல் வங்காளிக் கட்டுரை 'வங்கதர்சன்' பத்திரிகையில் தான் வெளியாயிற்று. இது எழுதப்பட்டு இருபது ஆண்டுகளுக்குப் பின் அவர் தம் 'விவித பிரபந்த' தொகுப்பின் இரண்டாம் பாகத்தில் இக்கட்டுரையை 'வங்கதர்சனின் முன்னுரை' என்ற தலைப்பில் சேர்த்து இதன் அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதினார்; "இக்கட்டுரை திரும்பப் பிரசுரிக்கப்படு வதற்குக் காரணம், இதிலுள்ள கருத்துக்கள் இப்போதும் தேவையாயிருப்பதுதான்." இதற்கு நூறாண்டுகளுக்குப்பிறகு இப்போதும் இவை தேவைதான் என்பது நம் கருத்து. இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள எல்லாக் கட்டுரைகளுக்குமே இந்தக் கருத்து பொருந்தும்.

தற்காலத்தில் பங்கிம் சந்திரரின் கருத்துக்களின் பொருத்தம் மட்டுமல்ல, அவற்றின் தேவையைப்பற்றியும் இந்திய வாசகர்களுக்கு ஒரு விஷயத்தை நினைவுறுத்த விரும்புகிறேன். பங்கிம் சந்திரர் வங்காளத்தில் வாழ்ந்து, வங்காளி மொழிபேசிய ஒரு வங்காளி. அவரது பல்வேறு படைப்புகளில் இந்திய நாடு பற்றிய அவருடைய கருத்துகள் வெளிப்பட்டாலும் அவர் முக்கியமாக வங்காளத்தைப் பற்றியே தம் சிந்தனையை வெளிப்படுத்தி

யுள்ளார் என்பது உண்மைதான். எனினும் வங்காளத்தின் முன்னேற்றத் துக்காக அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்திய நாட்டின் முன்னேற்றத் துக்கும் நலத்துக்கும் கூடப் பொருந்தும். நீண்ட காலமாகத் தொடர்ந்து இருக்கும் சில கடுமையான பிரச்னைகள் வங்காளத்துக்கு மட்டுமல்ல, இந்தியா முழு மைக்குமே பொதுவானவை. இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப தற்காகப் பங்கிம் சந்திரர் தம் ஆழ்ந்த சிந்தனை வாயிலாகக் கண்டிருக்கும் வழிகள் இன்றும் நமக்கு நன்மை யளிக்கும்; ஆகையால் இந்த வழிகள் இன்றும் நாம் பின்பற்றத்தக்கவை. -

'வங்கதர்சனின் முன்னுரை' கட்டுரையில் பங்கிம் சந்திரர் நம் நாட்டின் மொழிப் பிரச்னையை ஆராய்ந்துள்ளார். இந்தியாவின் வெவ்வேறு பகுதி களில் அங்கங்கு பயிலப்படும் மொழிகள் வளர்க்கப்பட்டு மேன்மேலும் பயன் படுத்தப்பட வேண்டும், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கூடும் போதும் நாட்டுக்கு வெளியிலும் ஆங்கிலம் கையாளப்பட வேண்டும் என்பதே பங்கிம் சந்திரரின் கருத்து. நாடு முழுவதுக்கும் பொதுவான ஒரு மொழியின் தேவையையும் அவர் உணர்ந்திருந்தார். "இந்தியாவில் வாழும் பல்வேறு இனத் தவரும் ஒரே கருத்து, ஒரே நோக்கம், ஒருமித்த முயற்சி இவற்றோடு செயல் படாவிட்டால் இந்தியா முன்னேறாது." வங்காளிகள், மராத்தியர் அல்லது பஞ்சாபிகள் மட்டுமின்றி எல்லா இந்தியர்களும் கேட்டறிய வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. அவற்றை வெளிப்படுத்த ஆங்கிலம் இன்றியமையாதது. ஆனால் நாட்டின் சாதாரண மக்களின் முன்னேற்றமும் நாட்டின் வளமும் மக்களின் தாய்மொழி மூலமே சாத்தியம் என்று அப்போதே வலியுறுத்தி யுள்ளார் பங்கிம் சந்திரர். ஏனென்றால், "நாட்டு மக்கள் எல்லோரும் ஆங்கி லத்தைப் புரிந்துகொள்ள முடியாது; அவர்கள் என்றாவது புரிந்து கொள் வார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது". சாதாரண மக்கள் புரிந்து கொள்ள இயலாத மொழியின் மூலம் சமூக முன்னேற்றம் சாத்தியமல்ல என்பது அவரது கருத்து.

இந்தியர்கள் இவ்வளவு காலமாக அடிமைப்பட்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் கோழைகள், வலிமையற்றவர்கள் என்று வெளிநாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கருதினர். இந்தக் குற்றச்சாட்டு சரிதானா என்று கேட்கிறார் பங்கிம் சந்திரர். இந்தியாவின் பண்டைய வரலாற்றையும் தற்கால வரலாற் றையும் நன்கு ஆராய்ந்த அவர் இந்தியர்களின் அடிமைத்தனத் துக்கு அவர் களுடைய கோழைத்தனமோ வலிமையின்மையோ காரணமல்ல என்று கூறுகிறார். அவர் இரண்டு முக்கிய காரணங்களைக் கூறுகிறார். "ஒன்று, "இந்தியர்கள் இயற்கையாகவே சுதந்திர உணர்வு அற்றவர்கள்." இரண்டாவது காரணம், "இந்து சமூகத்தின் ஒற்றுமையின்மை, சமூக நலத்தில் ஆர்வமின்மை" தேசீய உணர்வு பற்றிய பங்கிம் சந்திரர் சிந்தனை ஒரு குறிப்பிட்ட நாடு, இனம் அல்லது மதத்தின் எல்லைகளைத் தாண்டி உலகளாவிய தேசிய உணர்வு

உடையது என்று நாம் 'இதனால் அறிகிறோம். சில நாடுகளில் சொந்த நலத்துக்கான சிந்தனை இனத்தின் முன்னேற்றத்துக்கு வேராக அமைகிறது. இந்தச்சிந்தனை இனம் முழுவதையும் ஒன்றுபடுத்துகிறது. இன முன்னேற றத்தின் அடுத்தபடி, மற்ற இனங்களின் பால் பகையுணர்வை ஏற்படுத்துவது. இந்தக் கட்டுரையில் தாம் பயன்படுத்தும் 'சாதி' என்ற வங்காளிச்சொல் nationality அல்லது தேசியத்தைக் குறிப்பிடுகிறது என்று பங்கிம் சந்திரர் அடிக் குறிப்பில் நினைவுறுத்துகிறார். "பிற இனத் துக்குத்தீங்கு செய்தாவது நம் இனத்தை மேம்படுத்துவோம் என்ற நோக்கு தேசீய முன்னேற்றத்தில் இரண் டாவது படி." இந்த இரண்டு படிகளைப் பற்றிப் பங்கிம் சந்திரருக்கு ஒரு தனிப் பட்ட கருத்து உண்டு. அவர் கூறுகிறார், "இந்த மனப்போக்கு தூய்மையானது என்று சொல்ல முடியாது. இதன் மூலம் தவறுகள் நிகழ வாய்ப்பு உண்டு. பிற இனத்துக்குத் தீமை செய்தால்தான் தன் இனத்துக்கு நன்மை ஏற்படும் என்ற கருத்தை இந்த மனப்போக்கு உண்டாக்கும். இந்தத் தவறான கருத்தின் விளைவாக ஐரோப்பியர்கள் பெருந்துன்பம் அனுபவித் திருக்கிறார்கள். இது காரணமாக ஐரோப்பா பல முறை வீணாகப் போர்த்தீயால் எரிக்கப்பட் டிருக்கிறது." "தன் இனத்தின் முன்னேற்றத்தில் ஆர்வம் நல்லதோ கெட்டதோ, அந்த ஆர்வமுள்ள இனம் மற்ற இனங்களைவிட வலிமை பெறுகிறது" என்பது பங்கிம் சந்திரரின் கருத்து.

வங்காளி, பஞ்சாபி, ஆந்திரர், மராத்தியர், ராஜபுத்திரர், ஜாட், இந்து, முஸ்லிம் ஆகிய பல இனங்கள் வாழும் நாடு இந்தியா. இந்த இனங்களிடையே நிலவும் ஒற்றுமையின்மை இந்தி யாவின் முன்னேற்றத்துக்குப் பெருந்தடை யாகும். இந்த இனங் களுக்குள் "எந்த இனம் எந்த இனத்தோடு சேரும்? மதத் துறையில் ஒற்றுமையிருந்தால் பாரம்பரியத்தில் ஒற்றுமையில்லை, பாரம் பரிய ஒற்றுமையிருந்தால் மொழியில் ஒற்றுமையில்லை, மொழியொற்றுமை யிருந்தால் வாழும் பகுதி வெவ்வேறாயிருக்கிறது." இந்த ஒற்றுமையின்மை தான் இந்தியாவின் பலவீனத்துக்கு முக்கியக் காரணம். ஒற்றுமையிருந்தால் வெற்றி உறுதி. "நாடு முழுதும் ஒற்றுமைப்பட்டால் எதையும் சாதிக்க இயலும்" என்பது பங்கிம் சந்திரரின் ஆழ்ந்த நம்பிக்கை. இந்தியா முழுவதிலும் ஒற்றுமை ஏற்படுத்துவதுதான் இக்கட்டுரையில் அவர் வெளியிடும் முதல் விருப்பம். அவரது கடைசி விருப்பம், உலகம் முழுதும் மனித இனத்திடையே பகையுணர்வற்ற ஒற்றுமையை ஏற்படுத்துவதுதான் .

'நாட்டு முன்னேற்றம்,' 'ஜமீந்தார்,' 'இயற்கைவிதி,' சட்டம்' ஆகிய நான்கு இயல்கள் அடங்கிய 'வங்கநாட்டு உழவர்' என்ற பங்கிம் சந்திரரின் சிறந்த கட்டுரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர்ஆவணமாகும். வேறு ஒரு முதல்தர இலக்கியப் படைப்பாளி எவரும் பங்கிம் சந்திரர் போல நாட்டின் உழவர் பற்றி இவ்வளவு ஆழமாகவும் விரிவாகவும் சிந்தித்திருக் கிறாரா என்று எனக்குத் தெரியாது. இப்போது நாட்டில் வேறு பல மாற்றங்களும்

முன்னேற்றங்களும் ஏற்பட்டிருந்தாலும், இன்றும் கல்வியறிவு பெற்ற ஒவ்வொரு இந்தியனும், பங்கிம் சந்திரர் 1872-73ல் இக்கட்டுரையின் வாயிலாகக் கூறியுள்ள கருத்துக்களைப்படித்து அவருடைய விருப்பம் நிறைவேறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இந்தக்கட்டுரையில் பங்கிம் சந்திரர் உதாரணமாகக் காட்டியுள்ள ஹாசிம் ஷேக்கும் ராமா கைவர்த்தனும் வங்காளநாட்டின் உழவர்கள் மட்டுமல்லர்; அவர்கள் இந்தியா முழுதும் வாழ்ந்து வரும் ஏழை உழவர் சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகள். கற்றவர்கள், வணிகர்கள், செல்வந்தர்கள், படிப்பாளிகள், அலுவலர்கள் ஆகிய நாம் வசதியாக வாழ்ந்து கொண்டு, "நாடு எவ்வளவோ முன்னேறியிருக்கிறது" என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருக்கிறோம். பங்கிம் சந்திரர் கேட்கிறார், "நாட்டு முன்னேற்றமா? நாட்டு முன்னேற்றம் என்றால் யாருடைய முன்னேற்றம்? நீயும் நானும் நலமாகத்தானிருக்கிறோம். ஆனால் நாடு என்பது நீயும் நானுந்தானா? நீயும் நானும் நாட்டு மக்களில் எவ்வளவு பேர்? இந்த உழவர்கள் எவ்வளவு பேர்? இவர்களை ஒதுக்கி விட்டால் நாட்டில் மிஞ்சுவது எவ்வளவு பேர்? கணக்குப் பார்த்தால் நாட்டில் பெரும்பான்மை யோர் உழவர்கள்; அவர்கள்தாம் நாடு. என்றாலும் உன்னாலும் என்ன காரியம் சாதிக்க முடியும்? உழவர்கள் எதிர்த்துக்கொண்டால் நாம் எங்கே இருப்போம்? அவர்கள் முன்னேறாவிட்டால் நாடு முன்னேறாது." இன்றும் இந்திய நாட்டின் முக்கியத் தொழில் உழவுதான். உழவர் சமூகத்தைப்பற்றி நம் சிந்தனையைத் தூண்டக்கூடிய பல சிறந்த கருத்துக்களை நாம் இன்றும் இக்கட்டுரையில் காணலாம்.

'இந்தியாவின் சுதந்திரமும் அடிமைத்தனமும்' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் பண்டைக்கால சுதந்திர பாரதத்தின் சாதாரண மக்களின் நிலையுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட அடிமை இந்திய மக்களின் நிலையை ஒப்பிட்டுப்பார்க்கிறார். "தற்கால இந்தியாவில் இந்தியருக்கும் ஆளும் இனத்தாருக்குமிடையேயுள்ள ஏற்றத்தாழ்வு பண்டைய பாரதத்தில் சூத்திரருக்கும் பிராமணருக்குமிடையேயிருந்த ஏற்றத் தாழ்வைவிட மோசமாயிருக்கிறதா?" என்பது அவரது கேள்வி. பண்டைய இந்தியாவில் சூத்திரரைக் கொடுமைப்படுத்திய பிராமண சத்திரியரை பங்கிம் சந்திரர் மன்னிக்கவில்லை. ஒரு நாட்டின் உண்மையான விடுதலை அந்நாட்டுப் பொதுமக்களின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. அந்த நாட்டை ஆள்பவன் உள்நாட்டானா அல்லது அன்னியனா என்பதில் இல்லை. உள் நாட்டாரால் ஆளப்படும் நாடு சுதந்திரமானது, அன்னியரால் ஆளப்படும் நாடு சுதந்திரமற்றது எனக்கருதப்படலாம். ஆனால் நாட்டின் விடுதலையும் அடிமைத்தன்மையும் அந்நாட்டுப் பொது மக்களின் உயர்நிலை அல்லது தாழ் நிலையால் தீர்மானிக்கப்படும். பண்டைய பாரதத்தில் பிராமணரால் ஆளப் பட்டுத் துன்புறுத்தப்பட்ட சூத்திர சமூகம், அதாவது நாட்டின் பெரும்பான்மை

மக்கள், விடுதலையின் சுகத்தை அனுபவிக்கவில்லை என்ற உண்மையைச் சொல்லத்தயங்கவில்லை பங்கிம் சந்திரர். இந்தவகையில், ஆங்கிலேயரால் ஆளப்படும் இந்தியா போலப் பிராமணர்களால் ஆளப்பட்ட பண்டைய பாரதமும் அடிமை நாடுதான். பண்டைய பாரதத்தில் பிராமணர்கள் ஆங்கிலேயர்களின் நிலையில் இருந்தார்கள் என்று அவர் தயக்கமின்றிக் கூறுகிறார். அவர் பொது மக்களின் இன்பதுன்பங்களை அளவுகோலாகக் கொண்டு பிராமணசத்திரியர்களால் ஆளப்பட்ட பாரதத்தை அடிமை நாடாகவும், பிற இனங்களைத் துன்புறுத்தாத அக்பரின் ஆட்சிக்குட்பட்ட பாரதத்தை சுதந்திர நாடாகவும் அறிவிக்கிறார்.

'தனிமை' என்ற கட்டுரை எழுத்தாளனின் சொந்த அனுபவத்தில் பிறந்த படைப்பு. இக்கட்டுரையின் இறுதியில் பங்கிம் சந்திரர் மனித நேயம் பற்றி வெளியிட்டுள்ள கருத்து அவருடைய எல்லாப் படைப்புகளிலும் இடம் பெற்றுள்ள முக்கியக் கருத்தாகும். அவர் விரும்பும் இலட்சிய இன்பம் இந்துக்கள், வங்காளிகள், இந்தியர்கள், அல்லது இடம்-காலம்-பாத்திரம் ஆகிய குறுகிய வேலிக்குள் அடைப்பட்டுள்ள எந்த மனித கோஷ்டியிடமாவது அன்பு செலுத்துவதோடு நின்று விடவில்லை. மனித இனம் முழுவதையும் அளவின்றி நேசிப்பதில்தான் அவர் உண்மையான இன்பம் காண்கிறார். இத்தகைய மனிதரால்தான் "உலகெங்கும் நிறைந்தது அன்பு. அன்பே கடவுள்!" என்று தெளிவாக முழங்க இயலும். "என்னிடம் மனிதநேயம் மட்டும் இருந்தால் எனக்கு வேறு இன்பம் தேவையில்லை" என்று அவரால்தான் சொல்ல முடியும். "இந்த அன்பின் பிணைப்பும் பிரிவும் சாதாரண மனிதனுக்கு எவ்வாறு சாத்தியமாகும்?" இந்த விஷயத்திலும் பங்கிம் சந்திரர் ஒரு எளிமையான வழியைக் காட்டுகிறார். இந்தக்கட்டுரையில் 1873ம் ஆண்டில் அவர் வெளியிட்டுள்ள கருத்தை, 1885ம் ஆண்டில் அவர் எழுதிய 'அன்பு' என்ற கட்டுரையில் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். இக்கட்டுரை 'தர்மதத்துவம்' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அன்பே அறம், அன்பே கடவுள் என்பது அவரது கருத்து. உண்மையான அற நோக்குள்ளவன் குடும்ப வாழ்க்கை வாழ வேண்டும் என்கிறார் அவர். "குடும்பமே அன்பின் முதல் பயிற்சிப்பள்ளி. ஏனென்றால் பிறருக்காகத் தன்னலத்தைத் துறக்கத்தூண்டும் உணர்வே அன்பு... குடும்ப வாழ்க்கையில் இந்த அன்பு ஓரளவு மலர்ச்சி பெற்றபின் குடும்பத்துக்கு வெளியிலும் பரவ விழைகிறது... இது நாடளாவியதாக விரியும் போது 'தேச பக்தி' என்று பெயர் பெறுகிறது. இந்த நிலையில் இந்த உணர்வு மிகவும் வலுவானதாக ஆகலாம். அப்படி ஆகும் போது சம்பந்தப்பட்ட நாட்டு மக்களுக்குப்பெரும் நலம் ஏற்படுகிறது." அவ்வாறு கூறும் பங்கிம் சந்திரர் அதையும் நினைவுறுத்துகிறார். "தேசபக்தி அன்புணர்வு மலர்ச்சியின் இறுதி எல்லை அல்ல. அதற்கும் மேலே இன்னொரு படி உண்டு. உலகளாவிய அன்பே அன்புணர்வின் இறுதியெல்லை ஆகும். அதுவே உண்மையான

அறம். இந்த எல்லையை எட்டும் வரை அன்பு முழுமை பெறாது, அறமும் முழுமை பெறாது" ஆகவே அவர் தொடக்கத்தில் வங்காளத்துக்குத் தெரிவிக்கும் நேசம் பின்னர் இந்தியா முழுமைக்கும், அதன்பின் உலகெங்கும் பரவும் மனித நேயத்துக்கு முதல் படியாகவே கொள்ளத்தக்கதாகும்.

'வித்தியாபதியும் ஜயதேவரும்' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் வங்காளி இலக்கியத்தில் இசைக்காவியங்கள் மிகுதியாயிருப்பதன் காரணத்தை விளக்குவதோடு, வங்காளி இசைக்காவியப் படைப்பாளிகளை அக இயற்கையின் கவி, புற இயற்கையின் கவி என்று இரண்டுபிரிவுகளாகப் பிரித்து அவர்களுடைய கவித் தன்மையை ஆராய்கிறார். இக்கட்டுரையின் தொடக்கத்தில் அவர் "எல்லாமே விதிகளுக்கு உட்பட்டது. இலக்கியமும் விதிகளுக்கு உட்பட்டதுதான்" என்று கூறி, இந்த அடிப்படையில் 'இந்திய இலக்கியத்தின் உண்மையான போக்கு என்ன?' என்று ஆராய்கிறார். ஒரு நாட்டின் இலக்கியம் அந்நாட்டு மக்கள் தன்மைகளின் விளைவு என்பது அவரது கருத்து. ஆகவேதான் ராமாயணத்துக்குப் பிறகு மகாபாரதம் பிறந்தது; பிறகு பக்தி நூல்கள், அறநூல்கள், அதன் பின்னர் புராணங்கள்; இறுதியில் காளிதாசர் போன்ற கவிகளின் காவிய, நாடகங்கள் என்று வரிசையாகத் தோன்றின. பரிணாமவளர்ச்சிக்கேற்ப நாட்டின் இலக்கியத்திலும் உருமாற்றங்களும் கருமாற்றங்களும் நிகழ்கின்றன.

'வங்காளியின் வலிமை' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் வங்காளிகளைப்பற்றி மட்டும் சிந்திக்கவில்லை. இந்தியா முழுவதையும் மையமாகக் கொண்டே அவரது சிந்தனை படர்கிறது. 'உடல்வலிமையே முன்னேற்றமாகிவிடாது, அது முன்னேற்றத்துக்கு ஒரு கருவி மட்டுமே" என்று அவர் இக்கட்டுரையில் கூறுகிறார். மேலும் சொல்கிறார், "உடல்வலிமையை முன்னேற்றத்தின் கருவி என்று கூடச் சொல்ல முடியாது. உடல் வலிமையால் மட்டும் எவருக்கும் முன்னேற்றம் ஏற்படுவதில்லை... எனினும் முன்னேற்றத்துக்குத் தடையாக ஏற்படும் இடையூறுகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள உடல் வலிமை தேவைப்படுகிறது. அது தேவையில்லாத சூழ்நிலையில் உடல் வலிமை இன்றியும் முன்னேற்றம் ஏற்படலாம்." பங்கிம் ஒரினத்தின் வலிமையை அதன் உடல்வலிமை என்ற அளவு கோலைக் கொண்டே அளக்க விரும்பவில்லை. ஆகவேதான் "உடல் வலிமை மட்டும் உண்மையான வலிமை அல்ல" என்று தெளிவாகக் கூறுகிறார். "ஊக்கம், ஒற்றுமை, துணிவு, தொடர்ந்த முயற்சி இந்த நான்குடன் உடல் வலிமையையும் பயன்படுத்தினால் ஏற்படும் விளைவே வலிமை. இந்த நான்கும் வாய்த்துள்ள இனத்தின் உடல் வலிமை எப்படியிருந்தாலும் இந்த இனம் வலிமை பொருந்தியதுதான்" என்பது அவரது கருத்து. இந்த வலிமையைப் பெற்றுவிட்டால் வங்காளிகள் மட்டுமென்ன, இந்தியாவின் பல்வேறு பகுதி மக்களும் பலசாலிகளாக ஆகலாம், அவர்கள் நாட்டை 'வலிமையற்றது' என்ற களங்கத்திலிருந்து விடுதலை செய்து அதை ஒற்றுமையுள்ள, வலிமையான, புதிய பாரதமாக உருவாக்கலாம்.

அன்பின் கொடுமை' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் எல்லா மதங்களினுடைய சாரத்தையும் வாசகனுக்குப் போதிக்க முயல்கிறார். அவர் போதிக்கும் அறம் இந்துவுக்கோ, முஸ்லீமுக்கோ, கிறித்துவருக்கோ அல்லது பௌத்தர், சமணருக்கோ மட்டும் உரியதல்ல. பங்கிம் சந்திரரின் உறுதியான கருத்து - "மதத்துக்கு யார் எப்படி வேண்டுமானுலும் விளக்கம் கூறட்டும். அறம் என்பது பொதுவானது." "பிறருக்கு இன்னல் செய்யாதே. இயன்றவரை பிறருக்கு நன்மை செய் என்ற உயர்ந்த கொள்கையே உலகத்தின் அனைத்து மதங்களுக்கும் ஆணி வேர் போன்றது. மற்ற எல்லா அறிவுரைகளும் இந்தக் கொள்கையில் அடங்கி விடுகின்றன. அன்பும் அறமும் ஒன்றே. உலகம் முழுவதும் அன்புக்கு ஆட்படும் போது அது அறம் என்று பெயர் பெறுகிறது. அறம் எல்லா மக்களையும் தழுவிக் கொள்ளும் அன்பாக மாறாத வரையில் அது நிறைவு பெறாது."

இக்கட்டுரையில் பங்கிம் சந்திரர் சத்தியத்தின் தன்மையை விளக்கவும் முயல்கிறார். இந்த முயற்சி அவரது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தது. பிறருக்குப் பெருந்தீங்கை விளைவிக்கும் சத்தியம் பின்பற்றத்தக்கதல்ல. அவரைப் பொருத்த வரையில் சத்தியமென்பது நடைமுறையோடு தொடர்பற்ற ஒரு வெறுந்தத்துவமல்ல. மக்களின் நலனோடு இணைந்ததே சத்தியம்.

பங்கிம் சந்திரரின் புகழ்பெற்ற கட்டுரை 'பூனை'. உலகத்தின் பசித்த மானிடத்தின் சார்பில் இவ்வளவு உணர்ச்சிகரமான படைப்பை இந்திய இலக்கியத்தில் பங்கிம் சந்திரருக்கு முன் யாராவது படைத்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியாது. இக்கட்டுரையில் கமலாகாந்தன் சமூகத்தின் மேல் மட்டத்தின் பிரதிநிதி; உணவின்மையால் வயிறு மெலிந்து, எலும்புகள் தெரியும்படி, தொங்கிய வால் கொண்ட பூனை வங்கம் அல்லது இந்தியாவில் மட்டுமின்றி உலகமெங்கும் புறக்கணிக்கப்பட்டுப் பசித்துக்கிடக்கும் மனித சமூகத்தின் பிரதிநிதி. இக்கட்டுரையில் பங்கிம் சந்திரர் சட்டத்தைவிட மனித நேயத்துக்கே அதிக முக்கியத்துவமளிக்கிறார். நீதிமன்றத்தின் சட்டம் சமூகத்தின் புறப்பகுதியில் ஒழுங்கை நிலை நிறுத்தலாம்; ஆனுல் ஒரு நாட்டின் நலம் அதன் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதோடு நின்றுவிடாது. நீதிமன்றம் திருடனுக்குத் தண்டனையளிக்கிறது. ஆனால் அவன் ஏன் திருடுகிறான் என்பதை ஆராய்வதில்லை. "திருட்டுக்குப் பொறுப்பு திருடனல்ல, பணக்காரக் கருமிதான். திருடன் குற்றவாளிதான், ஆனால் பணக்காரக்கருமி அவனைவிட நூறு மடங்கு குற்றவாளி" என்கிறார் பங்கிம் சந்திரர். சமூகத்தைப் புதிய கண்ணோட்டத்தோடு பார்க்க அவர் அழைப்பு விடுக்கிறார்.

'சந்திர உலகம்' என்ற கட்டுரை அறிவியல் பற்றியது. இது 'விஞ்ஞான ரகஸ்ய' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. சாதாரண வாசகன் மட்டுமின்றி, 'கல்வியறிவுள்ள தற்கால வங்காளிப்பெண்மணியும்' அறிவியல் தத்துவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே தம் முக்கி. நாக்கம் என்று

பங்கிம் சந்திரர் இந்த நூலின் முன்னுரையில் கூறுகிறார். பத்தொன்பதாம் நூற்றுண்டில் வங்காள நாட்டில் வாழும் போதே அவர் பெண்களுக்கும் அறிவியல் கல்வி தேவை என்பதை உணர்ந்திருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கிய ஒப்பியல் ஆராய்ச்சிப்படைப்புகளுக்கு ஒரு சிறந்த உதாரணம் 'சகுந்தலையும் மிராண் டாவும் டெஸ்டிமோனாவும்' என்ற கட்டுரை.

இந்திய இலக்கியத்தில் 'சீதை என்ற பாத்திரம் ஆயிரம் தடவை பின்பற்றப் பட்டிருக்கிறாள், ஆனுல் திரௌபதி பின்பற்றப்படவில்லை.' திரௌபதி பாத்திரம் ஆரிய இலக்கியத்தில் ஏன் தனித்தன்மை பெற்றுள்ளது என்பதை இக் கட்டுரையில் ஆசிரியர் விளக்கியுள்ளார். இக்கட்டுரையை எழுதி பத்தாண்டு களுக்குப்பின் அவர் இதைத் தொடர்ந்து 'த்விதீய பிரஸ்தாவ்' என்ற கட்டுரையை எழுதினார்.

சமத்துவம் பெண்ணினம் என்ற கட்டுரையில், நம் நாட்டில் ஆண்களின் உரிமைகளுக்கும் பெண்களின் உரிமைகளுக்குமிடையே இவ்வளவு ஏற்றத் தாழ்வு ஏன் என்ற கேள்வியை எழுப்புகிறார். பெண்கல்வியைப் பரப்புவதும் சமூகத்தில் சாதாரண மக்களிடையே ஆண் பெண் என்ற வேற்றுமையின்றிக் கல்வியைப் பரப்புவதுமே பெண்ணினத்தை சமூகத்தின் சுரண்டலிலிருந்து காப்பாற்ற ஒரே வழி என்கிறார் ஆசிரியர். "கல்வியே எல்லா வித சமூகக் கேட்டிலிருந்தும் விடுதலை பெற வழி" என்ற கருத்து பங்கிம் சந்திரரின் ஆழ்ந்த அறிவுக்கும் தொலைநோக்குக்கும் சாட்சியாகும். சமூகத்தின் பலவீனத்துக்கும் நமது குறுகிய மனப்போக்குக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் காரணம் கல்வி யின்மைதான் என்பது அவருடைய ஆழமான கருத்து.

'மக்களின் கல்வி' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் சாதாரண மக்க ளிடையே கல்வி பரவுவதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். நாட்டில் ஏற்றத் தாழ்வு மதத்துக்கும் மதத்துக்கும்; சாதிக்கும் சாதிக்கும்; ஏழைக்கும் பணக்கார னுக்கும்; ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மட்டும் இல்லை; சிறுபான்மை யினரான படித்தவர்களுக்கும் கல்வியறிவற்ற பெரும்பான்மையினருக்கு மிடையே கடுமையான ஏற்றத்தாழ்வு இருக்கிறது. பள்ளிகளில் புத்தகங்கள் மூலம் இலக்கணமும் கணக்கும் கற்பிப்பதால் மட்டும் எல்லா மக்களையும் கற்றவர்களாக ஆக்க முடியாது. பொது மக்களைப் பொருத்த வரை இத்தகைய கல்வி உண்மையான கல்வியுமல்ல. அறம் நிலையானது, சுயநலம் இகழத் தக்கது, பிறர்க்காகவே வாழ வேண்டும், கடவுள் இருக்கிறார், பாவத்துக்குத் தண்டனையும் புண்ணியத்துக்குப் பரிசும் நிச்சயம் உண்டு, அகிம்சையே பெரிய அறம், மக்கள் சேவையே சிறந்த கடமை - இந்தப் படிப்பினைகளை மனிதனுக்கு அளிக்கும் கல்வியே உண்மையான கல்வி. சாதி, மதவேற்றுமை யின்றி நாட்டின் எல்லா மக்களுக்கும் இத்தகைய கல்வி அளிக்கப்பட வேண்டும்.

இன்றிலிருந்து நூறாண்டுகளுக்கு முன்னால் பங்கிம் சந்திரர் நம் நாட்டில் மக்கள் தொகைக்கட்டுப்பாட்டின் தேவையை உணர்ந்தார். இவ்விஷயத்தில் அவர் தம் அசாதாரண எழுத்தால் நாட்டு மக்களை எச்சரித்து எழுதிய 'ராம் தன் போத்' என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும்.

'மனிதத்தன்மை எது?' என்ற கட்டுரை 'தர்மதத்துவம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையின் இறுதியில் அவர், "தோள் வலிமையால் துஷ்டர்களைத்தண்டித்தவரும், அறிவுத்திறனால் பாரத நாட்டை ஒன்றாக்கிய வரும், பேரறிவால் பற்றின்மை என்ற அறத்தைப் பரப்பியவருமான" பாரதக் கிருஷ்ணரை வணங்குகிறார். அவர் மேலும் சொல்கிறார், "வேதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த நாட்டில், வேதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் 'அறம் வேதத்தில் இல்லை; பிறருக்கு நன்மை செய்வதே அறம்' என்று முழங்கிய கிருஷ்ணர் கடவுளாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; நான் அவரை வணங்குகிறேன். புத்தர், ஏசு, முகம்மது, ராமர் ஆகியவர்களின் தன்மையைத் தம்முள் கொண்டவர் அவர்; எல்லா வலிமைக்கும் எல்லா குணங் களுக்கும் ஆதாரமானவர், எல்லா அறங்களையும் அறிந்தவர், முற்றிலும் அன்பு மயமானவர்; இந்தக் கிருஷ்ணர் இந்துக்களுக்கே உரிய கிருஷ்ணர் அல்ல, எல்லா மதங்களின் உயர்ந்த தத்துவங்களும் சேர்ந்த ஓர் இலட்சிய உருவகந்தான் என்று புரிந்து கொள்வது எளிது.

மதங்களின் உள்ளார்ந்த தத்துவங்கள் உள்ளத்தை ஈர்ப்பவை. மதகுரு மார்களின் கைகளில் அகப்பட்டுக் கொண்டுதான் அவை பயங்கரமாக ஆகி விட்டன. 'மதமும் இலக்கியமும்' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் கூறு கிறார், "சத்தியம் எதுவோ அதுவே அறம்" ஆகையால், "அறமின்றி நல்ல இலக்கியம் இல்லை. ஏனென்றால் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது தான் இலக்கியம்."

'புதிய வங்காளி எழுத்தாளர்களுக்கு விண்ணப்பம்' என்ற கட்டுரையில் பங்கிம் சந்திரர் சொல்கிறார், "சத்தியமும் அறமுமே இலக்கியத்தின் இலட் சியம். வேறு நோக்கத்தோடு எழுதுகோலைப் பயன்படுத்துவது மகாபாவம்." அவர் புதிய எழுத்தாளர்களுக்கு அளித்துள்ள பன்னிரண்டு கருத்துக்களில் பல இப்போதும் பொருத்தமானவை.

'வங்காளி இலக்கியத்துக்கு மதிப்பு' என்ற கட்டுரையில் ஆங்கிலம் கற்ற வங்காளி தன் தாய் மொழியையும் அதன் இலக்கியத்தையும் அலட்சியம் செய்வதையும் அவனது அறியாமையையும் பங்கிம் சந்திரர் கடுமையாகக் கேலி செய்கிறார்.

கிருஷ்ணரின் பாத்திரத்தைப் படைத்து மகாகவி என்று புகழ் பெற்ற மகா பாரதக்கவி ஏன் திரௌபதியை மட்டும் ஐந்து ஆண்களின் மனைவியாக அநாகரீகமாகச் சித்திரிக்கிறார்? "ஒரு பெண் பல கணவர்களை மணந்து வாழும் பழக்கம் பழங்கால ஆரிய சமூகத்தில் இருந்ததாகப் பண்டைய நூல்

களில் ஒரு குறிப்புக்கூட இல்லை." பங்கிம் சந்திரர் தம் 'திரௌபதி' கட்டுரையின் இரண்டாம் இயலில் "திரௌபதி பாத்திரத்தின் மையத் தத்துவ"த்துக்கு ஒரு புதுமையான, பொருள் நிறைந்த விளக்கம் கூறுகிறார். திரௌபதி ஒரு தத்துவத்தின் உருவகம், அந்தத் தத்துவத்தைச் சித்திரிக்கவே அந்தப்பாத்திரம் படைக்கப்பட்டது என்பது அவரது கருத்து. மகாபாரதத்தில் திரௌபதி புலனடக்கம் வாய்ந்த பெண்மைக்கு ஓர் உதாரணம். அவளுடைய கணவர்கள் தங்கள் அறக்கடன்களை ஆற்றும் பொருட்டு அவள் அவர்களால் ஒவ்வொருவருக்கும் ஒரு பிள்ளை பெற்றுத்தருகிறாள். அவளுக்குப் புலன் இன்பத்தில் நாட்டமில்லை. அறத்தின் தேவைக்காகப் பிள்ளைகள் பெற்ற பிறகு அவள் கணவர்களுடன் உடலுறவைத் தவிர்த்து விட்டாள். ஆகவேதான் ஐந்து ஆண்களுடன் இணைந்திருந்தாலும் அவள் தூய பத்தினித் தன்மையின் சிகரமாகக் கருதப்படுகிறாள். இதுதான் திரௌபதி பாத்திரத்தின் மையத் தத்துவம்.

பங்கிம் சந்திரரின் 'கிருஷ்ண சரித்திரம்' ஓர் அசாதாரணப் படைப்பு. இந்த நூலைப் பற்றி ரவீந்திரர் கூறுகிறார், "இந்த நூலின் கதாநாயகன் கிருஷ்ண ரல்ல, தளைகளிலிருந்து விடுபட்ட அறிவுதான். நாம குருட்டுத்தனமாக சாத்திரங்களுக்கோ உலக வழக்குக்கோ அடிமைப்பட்டு வழிபாடு செய்ய லாகாது. நாம் முழு உணர்வுடன் நம் உள்ளம் ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த இலட்சியத்தைப் பின்பற்றி வழிபாடு செய்ய வேண்டும் என்று பங்கிம் சந்திரர் நூலில் அறிவுறுத்துகிறார். சாத்திரத்தில் இடம் பெற்றுள்ளதால் மட்டும் எதுவும் நம்பத்தக்கதாக ஆகி விடாது, நம்பத்தக்கது எதுவோ அதுவே சாத்திரம் என்றும் பிறகு விளக்குகிறார். இந்த தத்துவந்தான் 'கிருஷ்ண சரித்திர'த்தின் ஆன்மீக வலிமையாகும், இதுதான இந்த நூலை உயர்ந்த படைப்பாக ஆக்கு கிறது." நம் நாட்டில அந்தக் காலத்தில சாத்திரங்களை இந்த நோக்கில் பார்ப்பது அரிய செயலாயிருந்தது.

இந்த நூலில் பங்கிம் சந்திரர் 'கிருஷ்ணர் கூறிய அறக் கொள்கை'யை இவ்வாறு விளக்குகிறார்:

1. அறத்துக்கு ஏற்ப இருப்பதே சத்தியம், அறத்துக்கு முரண்பட்டது அசத்தியம்.
2. மக்களுக்கு நன்மை எதனால் ஏற்படுமோ அதுவே அறம்.
3. ஆகவே மக்களுக்கு நலனளிப்பதே சத்தியம், அதற்கு முரண்பட்டது அசத்தியம்.
4. இத்தகைய சத்தியம் எல்லா இடங்களுக்கும் பொருந்தும்.

பங்கிம் சந்திரர் எந்த இடத்திலும் அறத்தைக் குறுகிய பொருளில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நாம் பல இடங்களில் கண்டிருக்கிறோம்.

இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை இவ்வாறு பட்டிய லிடலாம்:

1. நாட்டின் வாழ்வில் தாய்மொழி பரவலாகப் பயன்படுத்தப் பட வேண்டும்.
2. இந்தியா முழுவதையும் தேசிய உணர்வில் ஒன்றுபடுத்த வேண்டும்.
3. உழவனின் உயர்வில் நாட்டின் உயர்வு; உழவனின் நலத்தில் நாட்டின் நலம்.
4. ஒரு நாடு சுதந்திரமானதா அல்லது அடிமை நாடா என்பது அந்நாட்டு மக்களின் இன்பம் அல்லது துன்பத்தைப் பொருத்தது; அந்நாட்டின் அரசன் உள்நாட்டானா வெளிநாட்டானா என்பதைப் பொருத்தல்ல.
5. அன்பு உலகில் எங்கும் நிறைந்தது. அன்பே கடவுள்.
6. எல்லா விஷயங்களும் விதி அல்லது ஒழுங்குக்கு உட்பட்டவை. இலக்கியமும் அவ்வாறே. இந்திய இலக்கியத்தின் போக்கும் ஒரு விதிக்கு உட்பட்டதுதான்.
7. துணிவு, ஒற்றுமை, ஊக்கம், தொடர்ந்த முயற்சி இவை நான்கும் வாய்ந்த இனமே வலிமையானது.
8. ஒரு சத்தியத்தைக் கடைப்பிடிப்பதால் பிறருக்குத்தீங்கு நேருமெனில் அந்தச் சத்தியம் கடைப்பிடிக்கததக்கதல்ல.
9. ஒருவன் திருடினால் குற்றம் அவனுடையதல்ல; அதற்குப் பொறுப்பு பணக்காரக் கருமிதான்.
10. சந்திர உலகத்தில் நீருமில்லை, காற்றுமில்லை. ஆகவே அங்கே பூமியில் உள்ளவை போன்ற பிராணிகள் இருக்கமுடியாது.
11. சகுந்தலை பாதிமிராண்டா, பாதி டெஸ்டிமோனா, திருமணத்துக்கு முன் சகுந்தலை மிராண்டாவுக்கு ஒப்பானவள்; கலியாணமான பின் டெஸ்டிமோனாவையொத்தவள்.
12. சீதையைப் பின்பற்றியுள்ளோர் பலர், திரௌபதியை யாரும் பின்பற்ற முடியாது.
13. எல்லாவித சமூகக்கேடுகளுக்கும் கல்வியே தீர்வு.
14. நாட்டு மக்கள் எல்லோரையும் கல்வியறிவுள்ளவர்களாக்க மக்களுக்குக் கல்வி அவசியம்.
15. ஏழ்மையைத் தவிர்க்கக் குடும்பக்கட்டுப்பாடு தேவை.
16. மக்களின் நலனே உண்மையான அறம்.
17. சத்தியமே அறம். இலக்கியம் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டதால் அறமின்றி இலக்கியம் இல்லை.
18. சத்தியமும் அறமுமே இலக்கியத்தின் இலட்சியம். வேறு நோக்கத்துடன் எழுதுகோலைக் கையாள்வது பெரும் பாவம்.

19. உயர்ந்த கல்வி பெற்றவர்களாகச் சொல்லிக் கொள்பவர்களின் தாய் மொழி இகழ்ச்சியும் ஆங்கில மோகமும் அருவருப்பானவை, வெட்க கரமானவை.

20. பற்றும் வெறுப்புமின்றி, தன் உள்ளத்தால் புலன்களை அடக்கிக் கொண்டு எல்லாப் புலனின்பங்களையும் துய்ப்பவனே அமைதி பெறுகிறான்.

21. மக்களின் நலம் எதிலோ அதுவே அறம், அதுவே சத்தியம். இந்த சத்தியம் எப்போதும் எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கத்தக்கது.

மேற்கண்ட கருத்துக்களின் மூலம் பங்கிம் சந்திரரின் சிந்தனை வீச்சைப் புரிந்து கொள்ளலாம்; நம் நாட்டின் சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவராக அவர் ஏன் கருதப்படுகிறார் என்பதையும் அறிந்து கொள்ளலாம். இன்று பங்கிம் சந்திரர் இலக்கிய வாசகர்களுக்கு மட்டுமின்றி நம் நாட்டின் நன்மைக்காகவும் தேவைப்படுகிறார். அவரது இலக்கியப் படைப்பின் முக்கிய நோக்கம் வெறும் அழகியல் படைப்பு அல்ல; நமது நாட்டின் நலனும் மனித இனத்தின் நலனுமே அவரது குறிக்கோள்.

நேஷனல் புக் டிரஸ்டின் நிர்வாகத்தினர் இந்த நூலைத் தொகுக்கும் பொறுப்பை எனக்கு அளித்துள்ளனர். இந்த நூலை இந்தியாவின் பிற மொழிகளிலும் பெயர்த்து வெளியிடுவது அவர்களது நோக்கம். பங்கிம் சந்திரரின் படைப்புகளைப் பிற இந்திய மொழிகளில் பெயர்ப்பது மிக அவசியம் என்பது என் கருத்து. பங்கிம் சந்திரரின் கருத்துக்கள் வங்க நாட்டுக்கும் வங்காளிகளுக்கும் மட்டுமின்றி இந்தியா முழுமைக்குமே இன்று பொருந்துபவை, தேவையானவை.

இந்த நூலைத் தொகுப்பதிலும் வெளியிடுவதிலும் பல்வேறு நிலைகளில் நேஷனல் புக் டிரஸ்ட் அலுவலர் திரு. அருண் சக்கரவர்த்தி அவர்களின் ஒத்துழைப்பு எனக்குக் கிடைத்த பெரும்பேறு. நேஷனல் புக் டிரஸ்ட் நிறுவனத்தாருக்கும் திரு. அருண் சக்கரவர்த்தி அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

அமித்ர சூதன் பட்டாச்சார்யா

வங்கமொழித்துறை
விசுவபாரதி பல்கலைக் கழகம்
சாந்தி நிகேதன் 731 235
மேற்கு வங்காளம்

குறிப்பு: பங்கிம் சந்திரரின் வாழ்நாளில் வெளியான அவருடைய நூல்களின் கடைசிப்பதிப்புகள் இந்தத் தொகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'வங்கதர்சன்' பத்திரிகையின் முன்னுரை *

வங்காளி மொழியில் புத்தகம் அல்லது பத்திரிகை வெளியிடுபவர்கள் அதிர்ஷ்டங் கெட்டவர்கள். அவர்கள் என்னதான் முயற்சி செய்தாலும் படித்த மக்கள் அவர்களுடைய எழுத்துக்களைப் படிக்க விரும்புவதில்லை. ஆங்கிலப் பிரியர்களான இந்தப்படித்தவர்கள் தாங்கள் படிக்கத்தகுதியான எதுவும் வங்காளியில் எழுதப்பட முடியாது என்று உறுதியாக நம்புகிறார்கள். வங்காளியில் எழுதுபவர்கள் கல்வியறிவற்றவர்கள், எழுத்துத்திறனற்றவர்கள், அல்லது அவர்கள் ஆங்கிலப் புத்தகங்களைக் காப்பியடிக்கிறார்கள் என்பது இந்தப் படித்தவர்களுடைய கருத்து. அவர்களது எண்ணப்படி, வங்காளியில் எழுதப்படுவது குப்பை அல்லது ஏதாவதொரு ஆங்கில நூலின் தழுவல் மட்டுமே. ஆங்கிலத்தில் இருப்பதை வங்காளியில் படித்து நம்மையே ஏன் அவமானப படுத்திக் கொள்ள வேண்டும்? ஏற்கனவே 'கருப்புத் தோல்' களங்கத்தில் சிக்கி அதிலிருந்து தப்ப பலவிதமாக முயன்று கொண்டிருக்கிறோம், வங்காளி நூல்களைப் படித்து இன்னும் நம்மைக் கறைப்படுத்திக் கொள்வானேன்?

ஆங்கில பக்தர்களின் நிலைமை இது. சமஸ்கிருத அறிஞர்களுக்கு வங்காளியிடம் இருக்கும் 'மதிப்பை'ப் பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை. அன்றாட வாழ்க்கைப் பிரச்னையில் மூழ்கியிருப்பவர்களுக்கோ எல்லா மொழிகளும் ஒன்றுதான். எந்த மொழி நூலையும் படிக்க அவர்களுக்கு நேரமில்லை. அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். புத்தகம் படிப்பதும் ஏதாவது அழைப்பு வந்தால் அதை ஏற்றுக் கொள்வதும் அந்தப் பிள்ளைகளின் பொறுப்பு. ஆகையால் பள்ளி மாணவன், கிராமப் பள்ளி ஆசிரியர், சிறுவர் சிறுமியா, வேலை வெட்டியில்லாதவர்கள் இவர்கள் தாம் வங்காளி நூல்களை மதிக்கிறார்கள். அபூர்வமாக ஓரிரு பெரிய

---

*(இந்தக் கட்டுரையை மறுபடி வெளியிடக் காரணம், இதிலடங்கியுள்ள விஷயங்களை மறுபடியும் கூறுவது அவசியம் என்பதுதான். 'வங்கதர்சன்' 1279 பைசாக் (1872 ஏப்ரல்) மாதத்தில் முதன்முதலாக வெளியாயிற்று)

(இக்கட்டுரை 'விவித பிரபந்த' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)

மனிதர்கள் வங்காளி நூல் பற்றிய அறிவிப்பையோ அல்லது வங்காளி நூலின் முன்னுரையையோ மட்டும் படித்துவிட்டுக் கல்வியில் ஆர்வமுள்ளவர் களாகப் புகழ் பெறுகிறார்கள்.

புதிய சமூகத்தினர் வங்காளி படிப்பதில்லை, எழுதுவதில்லை என்பது மட்டு மல்ல; அவர்கள் வங்காளியில் எந்தக் காரியமும் செய்வதில்லை. அவர்கள் கல்வி கற்பது ஆங்கிலத்தில். அவர்களுடைய சாதாரண செயல்கள், கூட்டங்கள், உரைகள் எல்லாமே ஆங்கிலத்தில். இருவரும் ஆங்கிலம் தெரிந்த வர்களாயிருந்தால் அவர்களுடைய உரையாடல் முழுவதும் அல்லது முக்கால வாசி ஆங்கிலத்தில் இருக்கும். உரையாடல் எப்படியிருந்தாலும் கடிதப்போக்கு வரத்து ஒரு போதும் வங்காளியில் இருக்காது. கடிதம் அனுப்புபவரும் பெறு பவரும் ஆங்கிலம் தெரிந்தவர்களாயிருந்தால் அவர்கள் வங்காளியில் கடித மெழுதி நான் பார்த்ததில்லை. வெகு விரைவில் துர்க்கா பூஜை மந்திரங்களும் ஆங்கிலத்திலேயே சொல்லப்படும் என்று கூட நான் நம்புகிறேன்

இதில் வியப்பொன்றுமில்லை. ஆங்கிலம் நம்மை ஆள்பவர்களின் மொழி; பொருள் சம்பாதிக்க உதவும் மொழி; மேலும் அது பல்வேறு கலைகளைக் கொண்ட மொழி; நாம் அறிவைச் சேகரிக்க ஒரே சாதனம்; வங்காளிகள் அதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே பயின்று அதைத் தங்கள் இரண்டாவது தாய் மொழியாக்கிக் கொண்டு விட்டார்கள். குறிப்பாக, ஆங்கிலத்தில் நாம் பேசாவிட்டால் ஆங்கிலேயர்களுக்குப் புரியாது. ஆங்கிலேயர்களுக்குப் புரியாவிட்டால் அவாகள் நம்மை மதிக்க மாட்டார்கள். ஆங்கிலேயர் மதிக்கா விட்டால் வேறெங்கும் மதிப்பு இருக்காது; அப்படியே மதிப்பு இருந்தாலும், அது இருப்பதும் இல்லாததும் ஒன்றுதான். ஆங்கிலேயர் கேட்காத பேச்சு காட்டில் அழுகை போல் வீண்; அவர்கள் பார்க்காத பொருள் சாம்பலில் ஊற்றிய நெய் போல வீண்.

நாம் ஆங்கிலத்தையோ ஆங்கிலேயரையோ வெறுக்கவில்லை. ஆங்கி லேயர்களிடமிருந்து நம் நாட்டு மக்களுக்குக் கிடைத்த நன்மைகளில் முக்கிய மானது ஆங்கிலக்கல்வி என்று சொல்லலாம். சமூகத்தின் நன்மைக்கான சில காரியங்கள் ஆட்சியாளர்களின் மொழியிலேயே செய்யப்படவேண்டும் என்றும் சொல்லலாம். நாம் ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. அவை எல்லாவற்றையும் ஆங்கிலத்தில்தான் சொல்ல வேண்டும். வங்காளிகளுக்கு மட்டுமின்றி எல்லா இந்தியர்களுக்கும் தெரி விக்கப்பட வேண்டிய பல விஷயங்கள் உண்டு. அவற்றை ஆங்கிலத்தில் சொல்லாவிட்டால் அவர்கள் எப்படிப்புரிந்து கொள்வார்கள்? இந்தியாவில் வாழும் பல்வேறு இனத்தவரும் ஒரே கருத்து, ஒரே நோக்கம், ஒருமித்த முயற்சி இவற்றோடு செயல்படாவிட்டால் இந்தியா முன்னேறாது. இவையெல்லாம் ஆங்கிலம் மூலமே ஏற்படமுடியும்; ஏனென்றல் இப்போது சமஸ்கிருதம் அழிந்து விட்டது. வங்காளிகள், மராத்தியர், ஆந்திரர், பஞ்சாபிகள் முதலிய

எல்லோரும் சந்திக்கும் இடம் ஆங்கிலந்தான். இந்த மொழியாகிய கயிற்றால் இந்தியாவை ஒன்றாகப்பிணைக்க வேண்டும். (இங்கு சொல்லப்பட்டிருப்பதை இப்போது காங்கிரஸ் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.) ஆகவே அது எவ்வளவு தேவையோ அவ்வளவு பயன்படுத்தப்படட்டும். ஆனால் அதற்காக நாம் முற்றிலும் ஆங்கிலேயராகி விடக்கூடாது. வங்காளி ஒருபோதும் ஆங்கி லேயனாகி விடமுடியாது. ஆங்கிலேயன் வங்காளியை விட உயர்ந்த குணங்கள் வாய்ந்தவன், வங்காளியை விட இன்பமாக வாழ்பவன். இந்த மூன்று கோடி வங்காளிகளும் திடீரென்று மூன்று கோடி ஆங்கிலேயர்களாக ஆகிவிட முடிந்தால் அது நல்லது தான். ஆனால் அப்படி ஆக வாய்ப்பில்லை. நாம் எவ்வளவுதான் ஆங்கிலம் படித்தாலும் பேசினாலும் எழுதினாலும் அது நம் உடலின் மேல் போர்த்தப்பட்ட சிங்கத்தோல் மாதிரி தான் இருக்கும். நம் குரல் கேட்கும்போது நாம் அகப்பட்டுக் கொள்வோம். நம்மில் ஒரு சில ஆயிரம் பேர் போலி ஆங்கிலேயர்களாகலாம். மூன்று கோடிப் பேர் அசல் துரைமார் ஆகமுடியாது. தங்க முலாம் பூசப்பட்ட பித்தளையை விட அசல் வெள்ளி சிறந்தது. அழகியின் கற்சிலையைவிட அழகற்ற காட்டு மிராண்டிப் பெண் வாழ்க்கைத் துணையாக உதவுவாள். நகல் ஆங்கிலேயனைவிட அசல் வங்காளி விரும்பத்தக்கவன. ஆங்கிலம் எழுதுபவர்கள், படிப்பவர்களிலிருந்து போலி ஆங்கிலேயர்கள் பிறக்கலாம், அசல் வங்காளிகள் உண்டாக வாய்ப்பில்லை. படித்த, அறிவுள்ள வங்காளிகள் தங்கள் கருத்துக்களை வங்காளியில் வெளியிடும் வரையில் வங்காளி முன்னேற வாய்ப்பில்லை.

கல்வியறிவுள்ள வங்காளிகள் இதை ஏன் புரிந்து கொள்ளவில்லையென்று நமக்குப் புரியவில்லை. ஆங்கிலத்தில் பேசப்படும் பேச்சை எவ்வளவு வங்காளிகளால் புரிந்து கொள்ள முடியும்? அதுவே வங்காளியில் சொல்லபபட்டால் யாருக்குத்தான் புரியாது? 'நன்கு படித்தவர்களுடைய பேச்சு நன்கு படித்தவர்களுக்குப் புரிந்தால் போதும், அது மற்ற எல்லோருக்கும் புரிய வேண்டியதில்லை' என்று யாராவது நினைத்தால் இந்த எண்ணம் தவறு. எல்லா வங்காளிகளும் முன்னேறாவிட்டால் நாட்டுக்கு நன்மையில்லை. நாட்டு மக்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் புரியாது. என்றாவது ஒரு நாள் புரிந்து கொள்வார்கள் என்று நம்ப வழி இல்லை. ஆகையால் வங்காளியில் சொல்லப்படாத கருத்தை மூன்று கோடி வங்காளிகள் புரிந்து கொள்ள மாட்டார்கள், கேட்க மாட்டார்கள். நாட்டின் எல்லா மக்களுக்கும் புரியாத கருத்துக்களால் சமூகத்தில் சிறப்பான முன்னேற்றம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை.

கல்வி மேலேயிருந்து கீழே 'வடிந்து' வரும் என்று ஒரு கருத்து இருக்கிறது. (உயர்கல்வியை ரத்து செய்யும் பேச்சு வந்த போது இந்தக் கருத்துப் பிறந்தது உயர்கல்வியை ஆதரித்தவர்கள் இந்தக்கருத்தை வெளியிட்டனர்.) உயர் மட்டத்து மக்கள் உயர் கல்வி பெற்றால் கீழ் மட்டத்து மக்களுக்குத் தனியாகக்

கல்வி கற்பிக்க வேண்டியதில்லை; கீழ்மட்டத்தினர் தாங்களாகவே கல்வியறிவு பெற்று விடுவார்கள் என்பதுதான் இந்தக் கருத்தின் பொருள். உறிஞ்சும் தன்மையுள்ள ஒரு பொருளின்மேல் தண்ணீர் ஊற்றினால் அந்தத் தண்ணீர் கீழே வடிந்து வருவது போல் கல்வியாகிய நீரை வங்காளி இனமாகிய உறிஞ்சும் பொருள்மேல் ஊற்றினால் அது கீழ் மட்டத்து மக்கள் வரை இறங்கி வந்து விடுமாம்! இந்தக் கருத்தில் தண்ணீர் இருப்பதால் இது கொஞ்சம் பசையாகத்தான் இருக்கிறது! ஆங்கிலக் கல்வியோடு தண்ணீரும் சேரா விட்டால் நாடு முன்னேறும் என்று இவ்வளவு நம்பிக்கை ஏற்படாது. அளவற்ற தண்ணீர், உறிஞ்சும் பொருள்களுக்கும் கணக்கில்லை. இவ்வளவு காலமாக வறட்டுப் பிராமண பண்டிதர்கள் நாட்டைச் சீர் கெடச் செய்துகொண் டிருந்தார்கள்; இப்போது புதுமைவாதிகள் தண்ணீரைக் கொண்டு நாட்டைக் காப்பாற்றப் போகிறார்கள்! ஏனென்றால் அவர்களிடமுள்ள ஓட்டைகள் மூலம் தண்ணீர் கீழே ஒழுகிப் போய்க் கீழ்மட்டத்திலுள்ளவர்களையும் நனைத்துவிடும். ரெவின்யூ போர்டின் மொணி துரை இந்தத் தடவை கலால் இலாகாவின் அறிக்கையைத் தயாரிக்கும்போது இந்தத் தண்ணீர் விஷ யத்தையும் நினைவில் வைத்துக் கொள்வார் என்று நம்புகிறோம்.

ஆனால் இந்தக் கல்வியாகிய தண்ணீர் நம் நாட்டு மக்களிடையே இவ்வளவு தூரம் பரவும் என்று நாம் நம்பவில்லை. கல்வி என்பது மேலே கொட்டினால் கீழே வடியும் அளவுக்குத் தண்ணீரோ பாலோ அல்ல. என்றாலும் இனத்தின் ஒரு பகுதி கல்வியறிவு பெற்றால் அந்தப் பகுதியுடன் ஏற்படும் தொடர்பால் இன்னொரு பகுதிக்கும் நலன் ஏற்படலாம். ஆனால் இந்த இரு பகுதிகள் பயன்படுத்தும் மொழியில் இவ்வளவு வேற்றுமை இருந்தால், படித்தவனின் மொழியைப் படிக்காதவன் புரிந்து கொள்ள இயலாவிட்டால், இரு பகுதிகளிடையே தொடர்பு எப்படி ஏற்படும்?

முக்கியமான விஷயம் என்னவென்றால், உயர்மட்ட மக்களுக்கும் கீழ்மட்ட மக்களுக்குமிடையே நல்லுறவு இல்லை. மேல் மட்டத்திலுள்ள படித்தவர்கள் கீழ்மட்டத்திலுள்ளவர்களின் துன்பத்துக்காக வருந்துவதில்லை. கீழ்மட்டத் திலுள்ள படிக்காத ஏழைகள் கற்றறிந்த செல்வர்களின் இன்பத்தில் பங்கு பெறுவதில்லை. இத்தகைய ஒட்டாமைதான் நாட்டின் முன்னேற்றத்துக்கு இப்போது பெருந்தடையாக உள்ளது. இதன் காரணமாக இரு சாராருக்கு மிடையே வேற்றுமை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இந்த நிலையில் கீழ்மட்டத்து மக்கள் மேல்நிலையிலுள்ள மக்களுடன் தொடர்பு கொள்வது எவ்வாறு? வலிமையுள்ளவர்கள் வலிமை குறைந்தவர்களின் இன்ப துன்பங் களில் பங்கு கொள்ளாவிட்டால் வலிமை குறைந்தவர்களை யார் காப்பாற்று வார்கள்? சாதாரண மக்கள் முன்னேறாவிட்டால் மேல் மட்டத்து மக்களுக்குத் தான் முன்னேற்றம் ஏது? கீழ்நிலை மக்கள் கீழேயே இருக்க, மேல்மட்டத்து மக்கள் மேலும் மேலும் முன்னேறும் நிகழ்ச்சி எந்த நாட்டிலும் நடக்கவில்லை. மேல், கீழ் ஆகிய இருபிரிவினரும் ஒருவரோடொருவர் இணைந்திருக்கும்

சமூகந்தான் முன்னேற்றமடைகிறது. இரு பிரிவினருக்குமிடையே வேற்றுமை இருக்கும் வரையில் சமூகம் முன்னேறவில்லை. இருபிரிவினரிடையே ஒற்றுமை ஏற்பட்டதும் சமூகம் முழுவதும் முன்னேறத் தொடங்குகிறது. இதற்கு உதாரணம்— ரோம், ஏதென்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா. இந்த விஷயம் எல்லோருக்கும் தெரியும். சமூகத்தின் வெவ்வேறு பிரிவினர்களுக்கிடையே வேற்றுமையிருந்தால் சமூகம் முழுவதுமே சீர்கெடும் என்பதற்கு உதாரணம்— ஸ்பார்ட்டா, பிரான்ஸ், எகிப்து, இந்தியா. ஏதென்ஸுக்கும் ஸ்பார்ட்டாவுக்கு மிடையே எப்போதும் போட்டி. ஏதென்ஸில் எல்லோரும் சமம்; ஸ்பார்ட் டாவிலோ ஓரினம் ஆண்டான், இன்னோர் இனம் அடிமை. ஏதென்ஸிலிருந்து தான் உலக நாகரீகம் பிறந்தது. நவீன ஐரோப்பாவின் கௌரவத்துக்குக் காரணமான கல்வியின் பிறப்பிடம் ஏதென்ஸ். ஸ்பார்ட்டாவில் வாழ்ந்த இனங்கள் நசித்து ஸ்பார்ட்டா அழிந்தது. மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் காரணமாக 1789ம் ஆண்டில் தோன்றிய பிரெஞ்சுப் புரட்சி இன்னும் முடி வடையவில்லை. அதன் விளைவு நல்லதாயிருந்தாலும் ஏராளமான மக்களின் துன்பத்துக்குப் பிறகே அதன் நோக்கம் நிறைவேறியது. பிரெஞ்சுப் புரட்சி யால் ஏற்பட்ட சமூக நலனை ஒரு நோயாளியின் கைகால்களை அறுத்து அவனைக் குணப்படுத்துவதற்கு ஒப்பிடலாம். அந்தப் புரட்சியின் பயங்கரம் எல்லோருக்கும் தெரியும். எகிப்து நாட்டில் மதகுருமார்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையே இருந்த வேற்றுமை காரணமாக, வெகு விரைவில் சமூக முன்னேற்றம் நின்று போய்விட்டது. பண்டைய பாரதத்தில் வருணங்களின் அடிப்படையில் வேற்றுமை. இந்த வேற்றுமை காரணமாக மேல்சாதியின ருக்கும் கீழ்சாதியினருக்குமிடையே ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு போல வேறெந்த நாட்டிலும் நேரவில்லை. இதனால் ஏற்பட்ட தீங்கும் வேறெந்த நாட்டிலும் ஏற்படவில்லை. இது பற்றி இங்கு விரிவாக எழுதத் தேவையில்லை. இந்தச் சாதி வேற்றுமை இப்போது ஓரளவு குறைந்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாகக் கல்வி, செல்வம் இவற்றின் விளைவாக வேறொரு வகையான ஏற்றத் தாழ்வு தோன்றிக் கொண்டிருக்கிறது.

இந்த ஏற்றத்தாழ்வுக்கு ஒரு முக்கிய காரணம் மொழியில் வேற்றுமை. நல்ல கல்வியறிவுள்ள வங்காளிகளின் கருத்துக்கள் வங்காளி மொழியில் வெளிப் படுத்தப்படாவிட்டால் சாதாரண வங்காளிகளால் கல்வியறிவுள்ள மக்களைப் புரிந்துகொள்ள இயலாது. கல்வியறிவுள்ள வங்காளிகளுடன் தொடர்பு கொள்ள இயலாது. எழுத்தாளனுக்கும், வாசகனுக்குமிடையே, பேச்சாள னுக்கும் கேட்பவனுக்குமிடையே நல்லுணர்வு இருக்க வேண்டும். எழுத் தாளனோ பேச்சாளனோ தன் வாசகர்கள் அல்லது தன் பேச்சைக் கேட்பவர் களில் சாதாரண வங்காளிகள் இருக்க மாட்டார்கள் என்று நினைத்து விட்டால், அவனுக்கும் அவர்களுக்குமிடையே நல்லுணர்வு இருக்காது.

நல்ல கல்வுயறிவுள்ள வங்காளிகள் ஏன் வங்காளி மொழியிலேயே எழுத வேண்டும், பேச வேண்டும் என்று விளக்கினோம். ஆனால் கல்வியறிவுள்ள

வங்காளி, வங்காளி மொழியைக் கையாள்வதில் ஒரு தடை இருக்கிறது. கல்வியறிவு பெற்ற வங்காளி வங்காளி மொழியைப் படிப்பதில்லை என்பது தான் அந்தத் தடை. ஆகவே படித்த வங்காளிகள் வங்காளி மொழியில் எழுத விரும்புவதில்லை.

"அறிஞர்களால் போற்றப்பெற்றால்தான் பயிற்சி சிறப்படைகிறது"

(அபிக்ஞான சாகுந்தலத்தில் காளிதாசன்)

நாமெல்லோரும் தன்னலவிருப்பமுடையவர்கள். எழுத்தாளர்கள் புகழை விரும்புவர்கள். அறிஞர்களின் பாராட்டுதான் புகழ். மற்றவர்களுக்குத் தர மானது எது, தரமற்றது எது என்று பகுத்தறியத் தெரியாது. அவர்களுடைய பாராட்டுக்காகச் சிரமப்பட்டு எழுதுவதில் பொருளில்லை. மற்ற அறிஞர்கள் தங்கள் படைப்புகளைப் படிப்பதாயிருநதால்தான் அறிஞர்கள் எழுதுவார்கள்.

கல்வியறிவுள்ள ஒரு வங்காளியிடம் "ஐயா, நீங்கள் வங்காளியாயிருந்தும் வங்காளி மொழி நூல்களையும் பத்திரிகைகளையும் ஏன் மதிப்பதில்லை?" என்று கேட்டால் அவர் பதிலளிக்கிறார், "எந்த வங்காளி நூலை அல்லது பத்திரிகையைப் போற்றச் சொல்கிறீர்கள்? படிக்கத்தக்கதாயிருந்தால் கட்டாயம் படிக்கிறேன்." அவருடைய கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது என்பதைத் தயக்கமின்றி ஒப்புக் கொள்கிறோம். இப்போது கிடைக்கும் தரமான வங்காளி நூல்களை இரண்டு மூன்று நாட்களில் படித்து முடித்து விடலாம். அதற்குப் பின் இரண்டு மூன்று ஆண்டுகள் காத்திருந்தால்தான் இன்னொரு நல்ல வங்காளி மொழிப் படைப்பு படிக்கக் கிடைக்கும்.

இவ்விதமாக வங்காளி தன் மொழியிடம் அலட்சியமாக இருப்பதால்தான் இந்த நிலை வளர்கிறது. கல்வியறிவுள்ள வங்காளி தன் மொழியில் எழுதாம லிருப்பதால் கல்வியறிவுள்ள வங்காளிகள் வங்காளி மொழிப் படைப்பு களைப் படிப்பதில்லை. படித்த வங்காளிகள் தங்கள் மொழி நூல்களை படிப்ப தில்லையென்று, படித்த வங்காளிகள் வங்காளியில் எழுதுவதில்லை.

நாம் இந்தப் பத்திரிகையைக் கல்வியறிவுள்ள வங்காளிகள் படிப்பதற்கு ஏற்றதாக்க முயற்சி செய்வோம். 'முயற்சி செய்வோம்' என்று மட்டுந்தான் சொல்ல முடியும். முயற்சி பலிப்பது நம் திறனைப் பொருத்த விஷயம். இது நமது முதல் நோக்கம்.

நமது இரண்டாவது நோக்கம், அறிஞர்கள் இந்தப் பத்திரிகையைத் தங்கள் தூதனாகக் கொள்ள வேண்டும் என்பதாகும். அவர்களது கல்வித்திறன், கற்பனை, எழுத்துத் திறமை, உயர்ந்த மனப்போக்கு இவற்றை இந்தப் பத்திரிகை வழியே வங்காளி சமூகத்துக்கிடையே பரவச் செய்யட்டும். அவர் களுடைய கருத்துக்களைப் பரப்பி வங்க மக்களின் அறிவை வளர்க்கட்டும். பல வங்காளி அறிஞர்கள் இத்தகைய தூதன் இல்லாத குறையை உணர் கிறார்கள். இந்தக் குறையைத் தீர்ப்பது இப்பத்திரிகையின் நோக்கங்களில் ஒன்று. எந்த விஷயத்தைப் பற்றி இருந்தாலும் யார் எழுதியிருந்தாலும் தரமான படைப்புகளை நாம் அன்போடு ஏற்றுக் கொள்கிறோம். ஏதாவது ஒரு

கட்சியை ஆதரிக்கவோ ஒரு குறிப்பிட்ட குழுவின் நலத்துக்காகவோ இந்தப் பத்திரிகை தோற்றுவிக்கப்படவில்லை.

நாம் நன்கு படித்தவர்களை மகிழ்விக்க முயற்சி செய்வோம் என்பதால் சாதாரண மக்கள் படிப்பதற்கேற்ற விஷயங்களைத் தருவதில் அலட்சிய மாயிருப்போம் என்று பொருளல்ல. இந்தப் பத்திரிகை எல்லா மக்களாலும் படிக்கப்பட வேண்டும் என்பதே நமது முக்கிய நோக்கமாகும். சாதாரண மக்களின் முன்னேற்றம் இன்றி யாருடைய முன்னேற்றமும் சாத்தியமல்ல என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். இந்தப் பத்திரிகை சாதாரண மக்களை மகிழ்விக்கவில்லையென்றால் இதை வெளியிடுவது வீண் என்றே கருதுகிறோம்.

சிறுவர்கள் படிக்கத்தக்க மிக எளிய விஷயங்களைத் தவிர வேறெதையும் படித்துப் புரிந்து கொள்ள சாதாரண மக்களால் இயலாது என்று பலர் நினைக்கிறார்கள். இந்த எண்ணத்தோடு எழுதுபவர்களுடைய படைப்புகளை யாரும் படிக்க மாட்டார்கள். அறிஞர்களுக்கு ஒவ்வாத படைப்புகளை யாருமே படிக்க மாட்டார்கள். சிறந்த படைப்புகளை எல்லோருமே படிக்க விரும்புவார்கள்; அவற்றைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்வார்கள். இந்த முயற்சியே சாதாரண மக்களின் கல்விக்கு அடிப்படை. இந்த விஷயத்தை நாம் நினைவில் வைத்திருப்போம்.

மூன்றாவது, புதிய சமூகத்தினருடன் சாதாரண மக்களின் நல்லுறவு வளர நாம் நம்மாலியன்றவரை முயற்சி செய்வோம்.

இன்னும் பல காரியங்கள் செய்ய விருப்பமுண்டு. ஆனால் இடி இடிக்குமளவு மழை பெய்வதில்லை. இந்தக் கூற்று எல்லா முழங்குபவர்கள் விஷயத்திலும் பொருந்தும்; குறிப்பாக, வங்காளிப் பத்திரிகைகளுக்கு மிகவும் பொருந்தும். நம் கதையும் இப்படித்தான் ஆகிவிடுமா என்று இப்போது சொல்ல இயலாது. நமக்கு முன்னோர் பலர் இவ்வாறு முதலில் முழங்கிவிட்டுப் பிறகு மறைந்து விட்டார்கள். அந்தத் துரதிர்ஷ்டம் நமக்கும் ஏற்படாது என்று இப்போது அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அப்படியே நேர்ந்தாலும் நாம் அதை ஒரு நஷ்டமாகக் கருதமாட்டோம். இந்த உலகில் எதுவும் வீணாகப் போவதில்லை. ஒரு பத்திரிகையின் அற்பகால வாழ்வும் வீணாகாது. எந்த விதியின் அடிப்படையில் தற்கால சமூகத்தின் முன்னேற்றம் சாத்தியமாகிறதோ, அந்த விதியின் விளைவாகத்தான் இத்தகைய பத்திரிகைகளின் பிறப்பு, வாழ்வு, சாவு எல்லாமே நிகழ்கின்றன. இந்த விதி தவிர்க்க முடியாத ஒரு சமூக விதி. காலமாகிய நீர்ப் பெருக்கில் இவையெல்லாம் வெறும் நீர்க்குமிழிகள்தாம். காலப் பெருக்கில் விதிக்குட்பட்ட நீர்க்குமிழியாக இந்த 'வங்க தர்சன்' பத்திரிகையும் மிதக்கத் தொடங்கி விட்டது. விதிப்படியே இது மறையவும் செய்யும். ஆகையால் இது மறைந்தால் நாம் வருந்தப் போவதில்லை, கேலிக்குரியவர்களாகவும் ஆகமாட்டோம். இதன்பிறப்பு ஒரு போதும் வீணாகிவிடாது. இந்த உலகில் ஒரு நீர்க்குமிழிகூட பயனற்றுப் போவதில்லை

இந்தியாவின் களங்கம்

இந்தியா அடிமைப்பட்டிருப்பது ஏன்?

"இந்தியா ஏன் அடிமைப்பட்டிருக்கிறது?" இந்தக் கேள்விக்கு எல்லோரும் கூறும் பதில்—"இந்தியர்கள் வலிமையற்றவர்களாக இருப்பதால்தான்." ஐரோப்பியர்கள் இந்தியரை 'பெண்மைத் தன்மை வாய்ந்த இந்துக்கள்' என்ற சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்துகின்றனர். இதுதான் இந்தியாவின் களங்கம்.

ஆனால் ஐரோப்பியர்களே இந்திய சிப்பாய்களின் வலிமையையும் தைரியத்தையும் புகழ்வதையும் கேட்கிறோம். 'பெண்மைத் தன்மை வாய்ந்த' இந்துக்களின் வலிமையால்தான் காபூல் வெல்லப்பட்டது. பார்க்கப் போனால், 'பெண்மைத் தன்மை வாய்ந்த' இந்துக்களின் உதவியால்தான் ஐரோப்பியர்கள் இந்தியாவை வென்றார்கள். ஐரோப்பியர்கள் ஒப்புக் கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சரி, 'பெண்மைத் தன்மை வாய்ந்த' இந்துக்களான மராட்டியர்களும் சீக்கியர்களும் அவர்களைப் பல போர்களில் தோற்கடித்து விட்டார்கள்.

எனினும் தற்காலத்தில் இந்துக்களின் வலிமை பண்டைக்கால இந்துக்களின் வலிமையைவிடக் குறைந்துவிட்டது என்பதில் ஐயமில்லை. நூற்றுக் கணக்கான ஆண்டுகள் அடிமைகளாயிருந்ததால் அவர்களது வலிமை குன்றியிருக்க வேண்டும். பிற இனத்தவரால் வெல்லப்படுவதற்கு முன் பழங்காலத்தில் இந்துக்கள் மிகுந்த வலிமை படைத்திருந்தனர் என்று கருதக் காரணமுண்டு. அவர்கள் வலிமையின்மையால் அடிமைகளாகி விடவில்லை.

இந்தக் கருத்தை நிரூபிப்பது கஷ்டம், இதற்கான சான்றுகள் எளிதில் கிடைக்காது என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். பழைய வரலாற்றின் அடிப்படையில்தான் இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர இயலும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, மற்ற இனத்தாரைப் போல் இந்தியர்கள் தங்கள் பண்டைய வரலாற்றை எழுதிவைக்கவில்லை. பண்டைய பாரதத்தின் வரலாறு கிடைப்பதில்லை. ஆகவே பண்டைய பாரதமக்களின் வீரத்தின் புகழ் மறைந்துவிட்டது. புராணங்கள் என்று சொல்லப்படும் நூல்களில்

உண்மையான வரலாறு இல்லை. அவற்றிலடங்கியுள்ள கொஞ்ச நஞ்ச வரலாறும் இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகளில் மறைந்து போயிருப்பதால் உண்மை நடப்பு என்ன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள இயலாது.

நல்ல வேளையாக, பிற இனத்து வரலாற்று ஆசிரியர்களின் நூல்களில் இரண்டு இடங்களில் பண்டைய இந்தியர்கள் செய்த போர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. முதலாவது, மாசிடோனியாவைச் சேர்ந்த அலெக்சாந்தர் இந்தியாவில் நிகழ்த்திய போரை எழுத்துத் திறமை வாய்ந்த கிரேக்க எழுத்தாளர்கள் வருணித்திருக்கிறார்கள். இரண்டாவது, முஸ்லிம்கள் இந்தியாவை வெல்ல மேற்கொண்ட முயற்சிகளை முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் விவரித்திருக்கின்றனர்.

முதலில் ஒன்று சொல்ல வேண்டும். இத்தகைய நூல்கள் ஒருதலைப் பட்சமாக இருக்க நிறைய வாய்ப்புண்டு. மனிதன் ஓவியனாயிருப்பதால் அவன் தான் தீட்டும் சித்திரங்களில் சிங்கம் மனிதனிடம் தோல்வியுறுவதாகச் சித்திரிக்கிறான். சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, நம் இனத்தாரின் குறைகளை ஒப்புக் கொண்டு, எதிர்க்கட்சியினரின் புகழைக் கூறும வரலாற்று ஆசிரியர்கள் மிகவும் குறைவு. மற்றவர்களோடு ஒப்பு நோக்கில் மூடர்களும், தங்களைப் பற்றி உயர்வாக நினைத்துக் கொள்பவர்களுமான முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் பேச்சை விட்டுவிடுங்கள்; சத்தியத்தில் உறுதியானவர் களென்று தங்களைச் சொல்லிக் கொள்கிற ஐரோப்பிய வரலாற்றா சிரியர்கள் கூட இந்த வகையில் குற்றவாளிகள்தாம் சில சமயங்களில் அவர்களுடைய நூல்களைப் படிக்க வெறுப்பு ஏற்படுகிறது. ஆகவே, உள் நாட்டவர், வெளிநாட்டவர் ஆகிய இரு வகை வரலாற்றாசிரியர்களின் நூல்களைப் படிக்காமல் எந்த ஒரு நிகழ்ச்சியையும் சரியாக அறிந்து கொள்ள இயலாது. தற்பெருமை கொண்டவர்களும் பிற மதங்களை வெறுப்பவர்களும் உண்மை சொல்ல அஞ்சுபவர்களுமான முஸ்லிம் எழுத்தாளர்களின் கூற்றின் அடிப்படையில் பண்டைய பாரதமக்களின் போர்த்திறனைப் பற்றி ஒரு முடிவுக்கு வர இயலாது.

இருந்தாலும் கீழ்க்கண்ட இரண்டு விஷயங்கள் முஸ்லிம்கள் எழுதியுள்ள வரலாறுகளிலிருந்தே நிறுவப் படுகின்றன.

ஒன்று, அரேபியர்கள் ஒரு வகையில் திசைகளை வென்றவர்கள். அவர்கள் தாம படையெடுத்த நாடுகளையெல்லாம் வென்று உலகில் ஒப்பற்ற வலிமை பெற்றனர். ஆனால் அவர்கள் இரண்டு நாடுகளிடம் தோல்வியுற்றனர். ஒரு நாடு மேற்கில் பிரான்ஸ், மற்றது கிழக்கில் பாரதம். அரேபியர்கள் முகம்மதின் மறைவுக்குப் பின் ஆறு வருடங்களுக்குள் எகிப்தையும் சிரியா நாட்டையும், பத்தாண்டுகளுக்குள் பாரசீகத்தையும், ஓர் ஆண்டில் ஆப்பிரிக்காவையும், ஸ்பெயினையும், பதினெட்டு ஆண்டுகளுக்குள் காபூலையும், எட்டாண்டு களுக்குள் துர்க்கிஸ்தானையும் முழுமையாகக் கைப்பற்றி விட்டார்கள். ஆனால் முன்னூறு ஆண்டுகள் முயற்சி செய்தும் அவர்களால் பாரதத்தைக்

கைப்பற்ற முடியவில்லை. முகம்மதுபின் காசிம் சிந்து நாட்டைக் கைப் பற்றியது உண்மைதான்; ஆனால் அவர் ராஜபுத்திரர்களிடம் தோல்வியுற்று ராஜஸ்தானிலிருந்து விரட்டப்பட்டார். அவரது மறைவுக்குச் சிறிது காலத் துக்குபின் ராஜபுத்திரர்கள் சிந்துவை மீண்டும் கைப்பற்றினர். திசைகளை வென்ற அரேபியர்களால் பாரதத்தை மட்டும் வெல்ல இயலவில்லை. இந்துக் களுக்குத் தங்கள் மதத்தின் மேலிருந்த உறுதியான பற்றே அவர்கள் தோல்வி யடையாததற்குக் காரணம் என்கிறார் எல்பின்ஸ்டோன். உண்மையான காரணம் அவர்களது போர்த்திறமை என்று நாம் கூறுகிறோம்.

அப்படியானால் இந்துக்கள் ஏன் ஏழுநூற்றாண்டுகளாகப் பிற இனத்த வருக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்?

இரண்டாவது. வெற்றியில் ஆர்வங்கொண்ட, புதிய மறுமலர்ச்சி பெற்ற ஓரினம் ஒரு பழைய நாட்டுக்கருகில் தோன்றினால் அந்தப் பழைய நாடு புதிய இனத்துக்குப் பணிந்துவிடும். பண்டைய ஐரோப்பாவில் ரோமர்கள் இத்தகைய ஆர்வமிக்க, வலிமையுள்ள இனமாயிருந்தனர். ஆசியாவில் அரேபி யர்களும் துருக்கியர்களும் அத்தகையவர்கள். அவர்களோடு மோதிய மற்ற இனத்தார் அவர்களால் வெல்லப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டனர். ஆனால் வெற்றிகொண்ட இனத்தாருக்கு இந்துக்களை வெல்வது மற்ற இனத்தாரை வெல்வது போல் அவ்வளவு எளிதாக இல்லை. அரேபியர் எவ்வளவு குறுகிய காலத்துக்குள் எகிப்து, வட ஆப்பிரிக்கா. ஸ்பெயின், பாரசீகம், துருக்கி, காபூல் ஆகிய நாடுகளை அழித்தனர் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. இது தவிர ஒரு சில பேரரசுகளின் உதாரணங்களையும் பார்க்கலாம். ரோமர்கள் முதன்முதலில் கி.மு. 200ம் ஆண்டில் கிரீஸ் நாட்டைத் தாக்கினர். அதிலிருந்து 52 ஆண்டுகளுக்குள் கிரீஸ் முற்றிலும் கைப்பற்றப்பட்டுவிட்டது. புகழ் பெற்ற கார்த்தேஜ் நாடு கி.மு. 264ம் ஆண்டில் முதன்முதலில் ரோமர்களுடன் போரில் ஈடுபட்டது. கி.மு. 146ம் ஆண்டில், அதாவது நூற்று இருபது ஆண்டுகளுக்குள், அந்த் நாடு ரோமர்களால் அழிக்கப்பட்டுவிட்டது. கிழக்கு ரோமப் (அதாவது கிரேக்க) பேரரசு கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக் கியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு 1453ஆம் ஆண்டில், அதாவது ஐம்பது ஆண்டுகளுக்குள், துருக்கிய அரசன் இரண்டாவது முகம்மதால் அழிக்கப் பட்டு விட்டது. இன்னும் உலகத்தில் பராக்கிரமத்துக்கு உதாரணமாகக் கருதப் படும் மேற்கு ரோமப் பேரரசு கி.பி.286ஆம் ஆண்டில் முதன் முதலில் வட நாட்டுக் காட்டுமிராண்டி இனத்தாரால் தாக்கப்பட்டு கி.பி 476ஆம் ஆண்டில், அதாவது 190 ஆண்டுகளுக்குள், முற்றிலும் அழிந்துவிட்டது.

இந்தியா முதன் முறையாக கி.பி. 664ஆம் ஆண்டில் தாக்கப்பட்டது. அதற்கு 539 ஆண்டுகளுக்குப் பிறகு வட இந்தியா சகாபுத்தீன் கோரியால் கைப்பற்றப் பட்டது. சகாபுத்தீனோ அவரது படைகளோ அரேபிய இனத்தவர் அல்லர். கஜினி நகரத்தை நிறுவிய துருக்கியரும்அரேபியர் போலவே இந்தியாவைக்

கைப்பற்றும் முயற்சியில் தோல்வியுற்றனர். பிருதிவிராஜ், ஜயசந்திரன், சென் அரசன் போன்றவர்களிடமிருந்து வட இந்திய ராஜ்யங்களைக் கைப்பற்றிய வர்கள் பட்டாணியர் அல்லது ஆப்கானியர். அரேபியரின் பாரதப் படை யெடுப்புக்கு 529 ஆண்டுகளுக்குப் பின் பட்டாணியர் பாரதத்தைக் கைப் பற்றினர். பட்டாணியர்கள் அரேபியரைப் போலவோ துருக்கியரைப் போலவோ செல்வம் படைத்தவாகளோ வீரம் மிக்கவர்களோ அல்லர். அவர்கள் தஙகளுக்கு முற்பட்ட அரேபியரும் துருக்கியரும் தொடஙகி வைத்த காரியத்தைச் செய்து முடித்தனர்; அவ்வளவுதான். அரேபியர், துருக்கியர், பட்டாணியர் ஆகியோரின் தொடர்ந்த முயற்சிகளின் பலனாகப் பாரதம் ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தன் சுதந்திரத்தை இழந்தது.

முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்களின் சாட்சியம் இது. இந்துக்களுக்கு முஸ்லிம்களுடன் முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டபோது இந்துக்களின் பொற்காலம் அநேகமாக முடிந்து போயிருந்தது; அவர்களது ஆட்சிச் சிறப்பு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து போயிருந்தது என்பது நினைவு கூறத் தக்கது. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பு இந்துக்கள் மிகவும் வலிமை பெற்றிருந் தனர் என்பதில் ஐயமில்லை.

அந்தக் காலத்தில்தான் அவர்களுக்குக் கிரேக்கர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. கிரேக்கர்கள் ஒப்பற்ற வலிமை பொருந்தியவர்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பாரதவாசிகளின் தைரியத்தையும் போர்த்திறனையும் பாராட்டியுள்ளனர். அவர்கள் அலெக்சாந்தரின் போர்களை வருணிக்கும் போது ஆசியப் பிரதேசத்தில் இந்துக்கள போல் போர்த்திறன் கொண்ட வேறு இனம் இல்லை என்று அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். கிரேக்கப் படைக்கு இந்துக்களால் இழைக்கப்பட்ட அளவு சேதம் வேறெந்த இனத் தாலும் நேரவில்லை. பண்டைய பாரதவாசிகளின் போர்த்திறன் பறறி ஐயப்படுவர்கள் பாரத வரலாற்றை எழுதியுள்ள கிரேக்க எழுத்தாளர்களின் நூல் களைப் படித்துப் பார்க்கட்டும்.

பாரதம் செல்வச் செழிப்பு மிக்கது. ஆகவே பிற நாட்டினரின் பேரா சைக்கு இலககானது. அதனால்தான் காலங்காலமாக வெவ்வேறு இனத்தினர் வடமேற்கு மலைக் கணவாய்கள் வழியே பாரதத்துக்குள் நுழைந்து நாட்டைக் கைப்பற்ற முனைந்து வந்துள்ளனர். பாரசீகர், கிரேக்கர், பால்கன் இனத்தவர், சகர், ஹூணர், அரேபியர், துருக்கியர் ஆகிய பல்வேறு நாட்டினர் பாரதத் துக்கு வந்துள்ளனர். அவர்களில் சிலர் சிந்துநதியின் ஒரு கரையிலோ அல்லது இரு கரைகளிலுமோ சிறிது நிலத்தைக் கொஞ்ச காலத்துக்கு ஆக்கிரமித்து விட்டுப் பிறகு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆரியர்கள் பதினைந் தாம் நூற்றாண்டு வரை பிற இனத்தவரை விரைவிலோ அல்லது சற்றுக் காலந் தாழ்த்தியோ விரட்டிவிட்டுத் தங்களைக் காத்துக் கொண்டிருக்கின்றனர். பதினைந்து நூற்றாண்டுக்காலம் வலிமை மிக்க இனங்களால் தாக்கப்பட்டும்

தன் சுதந்திரத்தைப் காப்பாற்றிக் கொண்ட வேறு இனம் உலகத்தில் இல்லை. எப்போதாவது இருந்திருக்குமா என்பதும் சந்தேகந்நான். நீண்ட காலம் வரை இந்து இனத்தின் செல்வச் செழிப்பு குறையாமலிநததற்குக் காரணம் அவர்களது வலிமையே என்பதில் ஐயமில்லை. அதற்கு வேறு காரணமொன்றும் தெரியவில்லை.

இத்தகைய சான்றுகள் இருந்தபோதிலும் இந்துக்கள் எப்போதும் போர்த் திறனற்றவர்கள் என்று சொல்லப்படுகிறது. பார்வைத் தெளிவற்றவர்களால் பரப்பப்படும் இநத அவதூறுக்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று, இந்துக்கள் தங்கள் வரலாற்றை எழுதி வைத்துக் கொள்ளவில்லை. நம் பெருமையை நம்மைத் தவிர வேறு யார் சொல்வார்கள்? ஒருவன் தன்னைப் பெரிய மனிதன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளா விட்டால் மற்ற யாரும் அவனை மனிதன் என்றே கருதமாட்டான். இது உலக வழக்கு. எந்த இனமாவது வேறோர் இனத்தின் பெருமையைப் பேசிய துண்டா? ரோமர்களின் போர்த்திறனை ரோமர் வரலாறும், கிரேக்கர்களின் போர்த்திறனைக் கிரேக்கர்களின் வரலாறும் பாராட்டிப் பேசுகின்றன. முஸ்லிம்கள் போர்த்திறன் மிக்கவர்கள் என்பதை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களிலிருந்தே தெரிந்து கொள்கிறோம். இந்துக்களுக்கு இந்தப் பெருமை கிடைக்காததற்குக் காரணம் இதற்குச் சாட்சியாக இந்து வரலாறுகள் இல்லாமைதான்.

இரண்டாவது காரணம், சாதாரணமாக, பிற நாடுகளின் மேல் படை யெடுத்து அவற்றைக் கைப்பற்றும் இனத்தவர்தான் போர்த்திறன் கொண்ட வர்களாகக் கருதப் படுகிறார்கள். பிற நாடுகளைக் கைப்பற்றும் ஆசையின்றித் தங்கள் நாட்டை மட்டும் பிற இனத்தவரின் தாக்குதலிலிருந்து காத்துக் கொள் பவர்கள் இந்தப் புகழைப் பெறுவதில்லை. நேர்மையானவர்கள் யாரும் வலியவர்கள் என்று புகழ்பெறுவதில்லை. இப்போதும் நாம் நம் மொழியில் கோழை அல்லது சோம்பேறியை 'நல்ல மனிதன்' என்று குறிப்பிடுகிறோம். 'ஹரி ரொம்ப நல்ல மனிதன்' என்றால் அவன் ஒன்றுக்கும் உதவாதவன் என்று பொருள்.

பிறநாடுகளைக் கைப்பற்றுவதில் இந்துக்களுக்கு ஆசையே இருந்ததில்லை என்று நாம் சொல்லவில்லை. அவர்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டனர். இந்துக்கள் ஆட்சி செய்த காலத்தில் பாரதம் பல சிறு சிறு அரசுகளாகப் பிரிந்திருந்தது. பாரத நாடு பரந்து விரிந்திருந்ததால் இந்தச் சிறு சிறு பிரதேசங்களை ஆண்டவர்கள் பாரதத்துக்கு வெளியே சென்று பிற நாடுகளைக் கைப்பற்ற எண்ணவில்லை. எந்த இந்து அரசனாலும் பாரதம் முழுவதையும் தன் ஆட்சியில் கொண்டு வர இயலவில்லை. மேலும் இந்துக்கள் பிற மதங்களைச் சேர்ந்த கிரேக்கர், மிலேச்சர் ஆகியோரைத் தாழ்வாகக் கருதியதால் அவர்களுடைய நாடுகளைக் கைப்பற்ற விரும்பவில்லை. பாரதத்

துக்கு வெளியே போரிடச் சென்றால் தங்கள் மத, இனத் தூய்மை கெட்டுவிடும் என்று இந்துக்களுக்குப் பயம். ஆகவே அவர்கள் வலிமையுள்ளவர்களா யிருந்தாலும் பாரதத்துக்கு வெளியே படையெடுத்துப்போக வாய்ப்பில்லை. ஒரு காலத்தில் காபூல் ராஜ்யத்தின் பெரும்பகுதி இந்து அரசர்களின் ஆளுமை யிலிருந்தது உண்மையே. ஆனால் அந்தப் பிரதேசம் பாரதத்தின் ஒரு பகுதி யாகக் கருதப்பட்டது.

பண்டைய இந்துக்களுக்கு நேர்ந்த இந்த அவதூறுக்கு மூன்றாவது காரணம் அவர்கள் நெடுங்காலமாக அடிமைப்பட்டிருப்பதுதான். நெடுங் காலமாக அடிமைப் பட்டிருக்கும் இனத்துக்கு வீரர் என்ற பெருமை எப்படிக் கிடைக்கும்? ஆனால் தற்காலத்து இந்துக்களின் வீரியமின்மை முற்கால இந்துக் களின் வீரியமின்மைக்கு சாட்சியமாகிவிடாது. பண்டைய இனத்துக்கும் தற்கால இனத்துக்குமிடையே வேறுபாடுகள் இருப்பதை நாம் பல நாடுகளிலும் பார்க்கிறோம். இத்தாலியும் கிரீசும் இதற்கு உதாரணங்களாகும்; பாரதத்தின் நிலையும் இவ்வாறுதான். மத்தியகாலத்து இத்தாலியர், தற்காலக் கிரேக்கர் ஆகியோரின் தன்மையின் அடிப்படையில் பண்டைய ரோமர்களும் கிரேக் கர்களும் கோழைகள் என்று முடிவு செய்வது எவ்வளவு தவறோ அதைப் போலவே தற்கால இந்தியரின் அடிமை நிலையிலிருந்து பண்டைய பாரத வாசிகள் வலிமையற்றவர்கள் என்று தீர்மானிப்பதும் பெருந்தவறாகும்.

தற்கால இந்தியர்கள் மிகவும் கோழைகள்தான், அதனால்தான் அவர்கள் இவ்வளவு காலமாக அடிமைகளாயிருக்கிறார்கள் என்று கூட நாம் கூற வில்லை. நம் அடிமை நிலைக்கு வேறு காரணங்களும் உண்டு. அத்தகைய இரண்டு காரணங்களை இங்கு விரிவாக ஆராய்வோம்.

முதலாவது, பாரத நாட்டினர் இயல்பாகவே சுதந்திரத்தில் ஆர்வமற்ற வர்கள். நாம் நம் இனத்தவராலேயே ஆளப்பட வேண்டும், நம்மைப் பிற இனத்தவர் ஆளக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்றுவதே யில்லை. நம் இனத்தவரால் ஆளப்படுதல் நல்லது. நம்மைப் பிற இனத்தவர் ஆள்வது கெடுதல் அல்லது அவமானம் என்ற கருத்தை அவர்கள் ஏற்கவில்லை. பிற இனத்தவரால் ஆளப்படுவதைவிட நம் இனத்தவரால் ஆளப்படுவது மேல் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் இந்தக் கருத்து ஒரு தீவிர ஆர்வமாக வளரவில்லை. நாம் பல விஷயங்களை நல்லவையாகக் கருதி னாலும் இந்த உணர்வு தீவிர வேட்கையாக வலுப்பெறுவதில்லை. அரிச் சந்திரனின் கொடைத்தன்மையையும் கார்ஷியஸின் நாட்டுப் பற்றையும் யார்தான் பாராட்டுவதில்லை? ஆனால் அவர்களில் எவ்வளவு பேர் அரிச்சந் திரன் போல் எல்லாவற்றையும் தானம் செய்யவும் கார்ஷியஸ் போல் தம் உயிரையே தியாகம் செய்யவும் தயாராயிருக்கிறார்கள்? பண்டைய காலத் திலும் சரி, தற்காலத்திலும் சரி, ஐரோப்பியர்களிடையே சுதந்திர வேட்கை வலுப்பெற்றுள்ளது. ஒருவன் தன் சுதந்திரத்துக்காகத் தன் எல்லா உடைமை

களையும், ஏன் உயிரையுங்கூட, தியாகம் செய்ய வேண்டும் என்பது அவர்களது கருத்து. இந்துக்கள் அவ்வாறு நினைப்பதில்லை. இராமன் ஆண்டாலும் சரி, இராவணன் ஆண்டாலும் சரி, கவலையில்லை. அவர்களுக்கு நல்லாட்சி கிடைத்தால் போதும். நம் இனத்து அரசன் நல்லாட்சி செய்வான், பிற இனத்தான் செய்ய மாட்டான் என்று என்ன நிச்சயம்? இந்த நிச்சயமில்லாத போது நம்மினத்து அரசனுக்காக ஏன் உயிரைவிட வேண்டும்? ராஜ்யம் அரசனின் சொத்து. அவன் அதைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தால் காப்பாற்றிக் கொள்ளட்டும். யார் அரசனாயிருந்தாலும் தனக்குரிய ஆறில் ஒரு பங்கு வரியை வசூலிக்காமல் விடமாட்டான். திருடனுக்குப் பரிசு கொடுக்கவும் மாட்டான். யார் வேண்டுமானாலும் அரசனாகட்டும், அவனுக்காக நாம் கைவிரலைக் கூடப் புண்படுத்திக் கொள்ளப் போவதில்லை.

(சுதந்திர ஆர்வமுள்ள இனமொன்றும் பாரதத்தில் ஒருபோதும் இருந்ததில்லை என்று நாம் சொல்லவில்லை. மேவார் ராஜபுத்திரர்களைப் போல் சுதந்திர ஆர்வம் மிக்க இனம் உலகிலேயே என்றும் காணப்படவில்லை என்பதை டாட் (Todd) துரை எழுதிய அவர்களது வரலாற்றைப் படித்தவர்கள் அறிவார்கள். அவர்களது இந்த ஆர்வத்தின் விளைவும் வியக்கத்தக்கது. ஒரு சிறு நாடாயிருந்தும் முஸ்லிம் சாம்ராஜ்யத்துக்கு நடுவில் அறுநூறு ஆண்டுகள் வரை சுதந்திர இந்து நாடாகத் திகழ்ந்தது. அக்பர் சக்கரவர்த்தியின் வலிமை கூட மேவாரை அழிக்க முடியவில்லை. இப்போதும் உதயபூர் அரச குலம் உலகத்தின் மிகப் பண்டைய அரசகுலமாகப் புகழ் பெற்றுள்ளது. ஆனால் அந்தக் காலம் கழிந்துவிட்டது. இப்போது அந்த இராமனும் இல்லை, அந்த அயோத்தியும் இல்லை. நாம் மேலே கூறியிருப்பது இந்துக்கள் பற்றிய பொதுவான கருத்தாகும்.)

நாம் இப்போது ஆங்கிலேயரிடமிருந்து படிப்பினை பெற்று இந்துக்களின் பழைய மனப்போக்கின் தவறை உணர்கிறோம். ஆனால் இந்த மனப்போக்கு இயற்கையானதுதான், இதன் தவறை உணர்ந்து செ ,* வதும் எளிதல்ல. இயற்கையாகவே சில இனங்கள் நாகரீகமடைவதற்கு முன்னாலிருந்தே சுதந்திர ஆர்வமுள்ளவையாக இருக்கின்றன; சில இனங்கள் நாகரீகம் மிக்கவையாயினும் சுதந்திரத்தில் ஆர்வமின்றி இருக்கின்றன. இந்த உலகத்தில் விருப்பத்துக்குரிய பொருள்கள் பல உண்டு. ஆனால் எல்லோரும் அத்தகைய எல்லாப் பொருள்களிலும் ஆர்வங்காட்டுவதில்லை. செல்வம், புகழ் இரண்டுமே விரும்பத்தக்கவை. ஆனால் சில ர் புகழைப் பற்றி கவலைப் படாமல் பணம் சேர்ப்பதிலேயே குறியாயிருப்பதையும், வேறு சிலர் பொருளை அலட்சியம் செய்துவிட்டுப் புகழிலேயே ஈடுபாடு கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். இ[illegible]மன் பணம் சேர்க்கும் ஆசையில் கருமித்தனமாகவும் கீழ்த்தரமாகவும் நடந்து கொண்டு இகழ்ச்சிக்குள்ளாகிறான். யது தன் பெருஞ்செல்வத்தை வாரிக் கொடுத்துப் புகழ் சேர்க்கிறான். இந்த இருவரில் யார் முட்டாள் என்று தீர்மானிப்பது எளிதல்ல. ஒன்றுமட்டும் உறுதியாகச்

சொல்லலாம்; இந்த இருவரில் எவருடைய செய்கையும்இயற்கைக்கு விரோத மானதல்ல. இவ்வாறே கிரேக்கர்கள் சுதந்திரத்தை நேசிப்பவர்கள்; இந்துக்கள் சுதந்திரத்தைவிட அமைதியை விரும்புபவர்கள். இந்த வேற்றுமை அந்தந்த இனங்களின் இயற்கையைப் பொருத்தது; இதில் வியப்புக் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் பலர் இவ்வாறு நினைப்பதில்லை. இந்துக்கள் அடிமைகளாயிருக் கிறார்கள். அவர்களுக்கு சுதந்திரத்தில் அவ்வளவு ஆர்வமில்லை என்பதால், இந்துக்கள் வலிமையற்றவர்கள், கோழைகள், சுதந்திரம் பெறத் தகுதியற்ற வர்கள் என்று அவர்கள் எண்ணி விடுகிறார்கள். இந்துக்களுக்கு சுதந் திரத்தில் அவ்வளவு ஆர்வமில்லை. அதனால் அதற்காக முயற்சி செய்வதில்லை, முயன்றால் அவர்களாலும் சுதந்திரம் பெறமுடியும் என்று அவர்களுக்குத் தோன்றுவதில்லை.

சுதந்திரத்தில் ஆர்வமின்மை தற்கால இந்துக்களிடம் மட்டுமேயுள்ள தன்மை என்று நாம் கூறவில்லை. இது நெடுங்காலமாகவே இந்துக்களின் பொதுத் தன்மையாகத் தோன்றுகிறது. ஏழு நூற்றாண்டுக்கால அடிமைத்தனத்தால் தான் இந்துக்கள் தங்கள் சுதந்திர ஆர்வத்தை இழந்துவிட்டார்கள் என்று கருதுவது தவறு. பண்டைக் கால இந்துக்களை சுதந்திரத்தில் ஆர்வமும் முயற் சியும் உள்ளவர்களாகக் காட்டும் சாட்சியம் எதுவும் சம்ஸ்கிருத இலக்கியத்தில் கிடைக்கவில்லை. புராணங்கள், கிளைப்புராணங்கள், காவியங்கள், நாட கங்கள் எவற்றிலும் சுதந்திரத்தைப் புகழும் கூற்று எதுவும் இல்லை. மேவாரைத் தவிர வேறெந்த இந்து சமூகமும் சுதந்திர ஆர்வத்தால் உந்தப்பட்டுச் செயற் பட்டதாகத் தெரியவில்லை. அரசர்கள் தங்கள் ராஜ்யங்களைக் காப்பாற்ற மேற்கொள்ளும் முயற்சிகள், வீரர்களின் வீரம், சத்திரியர்களின் போர்கள் இவையெல்லாம் தாராளமாக வருணிக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் சுதந்திர ஆர்வம் இடம் பெறவில்லை. சுதந்திரம் என்பது இந்துக்களுக்கு ஒரு புதிய சொல்.

பாரத நாட்டு மக்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள இந்த சுதந்திர ஆர்வமின்மையின் காரணத்தைக் கண்டுபிடிப்பது கடினமல்ல. இதற்கு ஓரளவு காரணம் பாரதநாட்டு நிலத்தின் செழிப்பும் காற்றின் வெப்ப மிகுதியும் ஆகும். செழிப்பான நிலம், நாட்டில் எல்லா செல்வங்களும் நிறைந்துள்ளன, ஆகவே அதிகக் கஷ்டப்படாமல் வாழ்க்கை நடத்த முடியும். அதிக உழைப்புக்கு அவசியமில்லாததால் ஓய்வு நேரம் அதிகம் கிடைக்கிறது. இந்த நிலையில் உள்ளம் சிந்தனையில் ஈடுபாடு கொள்கிறது. அதிகச் சிந்தனையால் கவித் தன்மையும் தத்துவ அறிவும் வளர்கின்றன. ஆகவேதான் இந்துக்கள் சிறிது காலத்திலேயே பெரும் கவிகளாகவும் தத்துவ அறிஞர்களாகவும் ஆகிவிட் டார்கள். ஆனால் இந்த நிலையின் இன்னொரு விளைவு இன்பத்தில் ஆர்வ மின்மை. இந்த ஆர்வமின்மை காரணமாக செயலூக்கம் குறைகிறது இந்தச் செயலின்மையின் ஒரு வெளிப்பாடுதான் சுதந்திர ஆர்வமின்மை.

ஆரியர்களின் மதக் கொள்கைகளிலும் தத்துவ சாத்திரங்களிலும் இந்தச் செயலின்மை எங்கும் நிறைந்திருக்கிறது. வேத மதம், பௌத்த மதம், புராணங்கள் கூறும் மதம் எல்லாமே இந்தச் செயலின்மையைப் போற்று கின்றன. வேதாந்தம், சாங்கியம் போன்ற தத்துவங்கள் வேதங்களிலிருந்து பிறந்தவை. புலனின்பங்களைத் தவிர்ப்பதே மோட்சம், விருப்பமற்ற நிலையே புண்ணியம் என்பதுதான் இந்தத் தத்துவங்களின் படிப்பினை. 'துறவே விடுதலை' என்பதுதான் பௌத்த மதத்தின் சாரம்.

இந்துக்கள் நெடுங்காலமாகவே சுதந்திரத்தில் ஆர்வமற்றவர்களாக இருந் திருந்தால், முஸ்லிம்கள் பாரதத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னால் ஆயிரத் தைநூறு ஆண்டுகள் அவர்கள் ஏன் மீண்டும் மீண்டும் பாரதத்தின் மீது படை யெடுத்தவர்களுடன் போரிட்டு அவர்களை முறியடித்துத் தங்கள் சுதந் திரத்தைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்ற கேள்வி எழலாம். இந்துக்கள் மிகவும் முயற்சி செய்துதானே ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியிருக்க முடியும். அவர்களுக்கு இன்பத்தில் ஆர்வமில்லையெனில், அவர்கள் ஏன் இவ்வளவு சிரமப்பட்டுப் போரிட்டார்கள்?

இந்தக் கேள்விக்குப் பதில் இதுதான்—சகர்கள், கிரேக்கர்கள் இவர்களை விரட்டுவதற்கு இந்துக்கள் விசேஷ முயற்சி மேற்கொண்டார்கள் என்பதற்குச் சாட்சியம் ஏதுமில்லை. இந்து அரசர்கள் தங்கள் ராஜ்யங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தங்கள் படைகளின் உதவியோடு எதிரிகளுடன் போரிட் டார்கள். இயன்றபோது எதிரிகளை முறியடித்துத் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டார்கள். இதைத் தவிர, "வேற்று இனத்தவன் நம் நாட்டை ஆளக்கூடாது" என்ற எண்ணத்துடன் சாதாரண மக்கள் ஆர்வத்தோடு போரிட்டதாகச் சாட்சியம் எங்கும் இல்லை. நடப்பு இதற்கு மாறாகவே இருந்தது என்று தோன்றுகிறது. இந்து அரசனோ படைத்தலைவனோ போரில் இறந்துவிட்டால் உடனே படைவீரர்கள் போர்க்களத்திலிருந்து ஓடத் தொடங்கிவிடுவார்கள். காரணம், அவர்கள் யாருக்காகப் போரிட வேண்டும்? அரசன் போரில் இறந்துவிட்டால் அல்லது வேறு காரணத்தால் செயலிழந்து விட்டால் போர் முடிவடைந்துவிடும். அரசனின் இடத்தை வேறொருவன் எடுத்துக் கொண்டு நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற முயற்சி செய்ய மாட்டான். அரசனில்லாத ராஜ்யத்தைக் காப்பாற்ற சாதாரண மக்கள் முயற்சி செய்ய மாட்டார்கள். சகர்கள், கிரேக்கர்கள், பாரசீகர்கள் அல்லது பால்கன் இனத்தவர் ஓர் இந்து அரசனைப் போரில் வென்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டால் இந்துக்கள் புதிய அரசனை எதிர்க்கவில்லை; மாறாக, தங்கள் பழைய அரசனுக்கு அளித்து வந்த மதிப்பை அவனுக்கும் அளித்தார்கள். மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆரிய இனத்தவருக் குள்ளேயும், ஆரியருக்கும் பிற இனத்தினருக்கும், பிற இனத்தாருக் குள்ளேயும்—மகதத்தோடு கான்யகுப்ஜம், கான்யகுப்ஜத்தோடு டில்லி, டில்லி

யோடு லாகூர், இந்துவுடன் பட்டாணியன், பட்டாணியனோடு முகலாயன், முகலாயனோடு ஆங்கிலேயன் இவ்வாறு எல்லோரும் எல்லோருடனும் சண்டையிட்டு நாட்டைப் போர்த்தீயில் சுட்டு வந்திருக்கின்றனர். ஆனால் இந்தப் போர்களெல்லாம் அரசனுக்கும் அரசனுக்குமிடையே நிகழ்ந்தவை. சாதாரண மக்கள் இவற்றில் ஈடுபட்டதில்லை. இந்து அரசர்கள் பிற நாட்டு அரசர்களால் அடிக்கடி தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்து இனம் பிற இனத்தால் வெல்லப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஏனெனில் இந்து சமூகம் ஒரு போதும் பிற இனத்துடன் நேரடியாகப் போரிட்டதில்லை.

இந்து இனம் நெடுங்காலமாக அடிமைப்பட்டிருப்பதற்கான இரண்டாவது காரணம் இது தொடர்பாக எழுகிறது. இந்து சமூகத்தில் ஒற்றுமையின்மை, சமூக ஒருமைப்பாட்டு உணர்வு இல்லாமை, சொந்த இனத்தின் மீது பரிவின்மை இவைதான் அந்தக் காரணம்.

நான் இந்து, நீ இந்து, இராமன் இந்து, யது இந்து, இன்னும் லட்சக் கணக்கான இந்துக்கள் இருக்கின்றனர். இந்த லட்சக்கணக்கான இந்துக்களின் நலனே என் நலன். அவர்களுக்கு நலனளிக்காத எதுவும் எனக்கும் நலனளிக் காது. ஆகவே எல்லா இந்துக்களுடைய நலனுக்காகப் பாடுவடுவது என் கடமை. இந்துக்களுக்குத் தீமையான எதையும் நான் செய்யக் கூடாது. இந்த மாதிரி நான் செய்யத் தக்கதும் செய்யத் தகாததும் உனக்கும் இராமனுக்கும் யதுவுக்கும், ஏன் எல்லா இந்துக்களுக்குமே பொருந்தும். ஆகவே எல்லா இந்துக்களும் ஒரே கருத்து, ஒரே நோக்கத்துடன் செயற்பட வேண்டும் என்ற உணர்வு இனத்தின் ஆக்கத்துக்கு முதல்படி.

உலகத்தில் இந்து இனத்தைத் தவிர வேறு பல இனங்களும் உள்ளன. அவற்றுக்கு நலம் ஏற்படுவதாலேயே நமக்கும் நலம் ஏற்பட்டு விடாது. சில சமயங்களில் அவற்றின் நலம் நமக்குத் தீங்காக முடியும். அவற்றின் நலத்தால் நமக்குத் தீமை விளையுமானால் அந்த நலம் அவற்றுக்கு ஏற்படாமலிருக்க நாம் முயலவேண்டும். அதனால் பிற இனங்களுக்குத் தீங்கு நேர்ந்தாலும் நாம் அதைச் செய்யத்தான் வேண்டும். அவற்றின் நலத்தால் நமக்குத் தீமை ஏற்படுவதுபோல் நமது நலத்தால் அவற்றுக்குத் தீமையும் ஏற்படலாம். எனினும் நாம் நமது நலத்தை வளர்த்துக் கொள்ளத் தயங்க மாட்டோம். பிற இனத் தாருக்குத் தீங்கு செய்வதன் மூலம் நமக்கு நலம் விளையுமானால் அதுவும் செய்வோம். நமது இனத்தின் ஆக்கத்துக்கு இது இரண்டாவது படி.

இத்தகைய மனப்போக்கு குற்றமற்றது என்று சொல்ல இயலாது. இந்தப் போக்கில் இன்னும் கெடுதலான மாற்றம் ஏற்படலாம். இதன் விளைவாக ஓரினம் பிற இனங்களுக்கு நலம் பயப்பதெல்லாம் தனக்குக் கேடு, அவற் றுக்குக் கேடு விளைப்பதெல்லாம் தனக்கு நன்மை என்று தவறாகக் கருதக் கூடும். இந்தத் தவறுக்கு ஆட்பட்டு ஐரோப்பியர் அநேக இன்னல்களை எதிர் கொண்டிருக்கின்றனர். இதன் விளைவாக அவர்கள் பலதடவைகள் ஐரோப்பாவைப் போர்த்தீயால் சுட்டுப் பொசுக்கியிருக்கிறார்கள்.

ஓரினம் தன்னலத்துக்காகவே செயற்படுவது நல்லதோ கெடுதலோ, இப்படிச் செயற்படும் இனம் மற்ற இனங்களை விட வலிமை பெறுகிறது. இந்த உணர்வு ஐரோப்பாவில் வலுத்திருப்பதால் அங்கே பல அரசியல் குழப் பங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதன் விளைவாக இத்தாலி ஒரு நாடாகி விட்டது. ஒரு புதிய, வலிமை மிக்க ஜெர்மன் பேரரசு உருவாகிவிட்டது. இன்னும் என்னென்ன நேரும் என்று சொல்ல இயலாது.

பாரத நாட்டில் இனத்தை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சி ஒருபோதும் நடைபெறவில்லை என்று நாம் சொல்லவில்லை. ஆரிய இனத்தவர் எப்போதுமே பாரதத்தில் வாழ்ந்து வருபவர்களல்ல என்பது ஐரோப்பிய அறிஞர்களின் முடிவு. அவர்கள் வேறிடத்திலிருந்து பாரதம் வந்து இந்த நாட்டைக் கைப்பற்றினர். ஆரிய வெற்றியின் முதல் பருவத்தில் வேதங்கள் இயற்றப்பட்டன. இந்தப் பருவத்தை 'வேதகாலம்' என்று அறிஞர்கள் அழைக்கின்றனர். வேத காலத்திலும் அதற்குச் சிறிது காலத்துக்குப் பின்பும் ஆரியர்களின் இன ஆக்க உணர்ச்சி வலிமை பெற்றிருந்தது என்பதற்குப் பல சாட்சியங்கள் வேத மந்திரங்களில் உள்ளன. அக்காலத்து சமூகத்தை நெறிப் படுத்தியவர்கள் என்ற முறையில் பிராமணர்கள் விதித்திருந்த சமூக விதி களிலிருந்து இது தெரிகிறது. ஆரிய இனத்தவருக்கும் சூத்திரருக்குமிடையே கடுமையான வேற்றுமையை உண்டாக்கிய விதிகள் இந்த இன உணர்வின் விளைவேயாகும். ஆனால் ஆரிய இனம் மேலும் பரவப் பரவ இந்த இன உணர்வு மறைந்துவிட்டது. ஆரியர்கள் பரந்து கிடந்த பாரத நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களைக் கைப்பற்றி ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு சிறிய சமூகத்தை அமைத்தார்கள். இவ்வாறு நாடு பல சிறு சமூகங்களாகப் பிளவுபட்டது. இதன் விளைவாக மொழி வேறுபாடுகள், வாழ்க்கை முறை களில் வேறுபாடுகள், வேறு பல வேறுபாடுகள், இறுதியில் சாதிவேறு பாடுகள் தோன்றின. பால்கனிஸ்தான் முதல் பிண்டர நாடு (வடக்கு வங்காளம்) வரை, காஷ்மீரிலிருந்து சேர, சோழ நாடுகள் வரை பாரதநாடு தேனீக்கள் மொய்க்கும் தேன்கூடு போல் பல்வேறு இனங்களும், சமூகங்களும் நிறைந்த நாடாயிற்று. இறுதியில் கபில வஸ்துவின், அரசகுமாரனான புத்தர் ஒரு புதிய மதத்தை நிறுவிய வேளையில் வேறு பல வேற்றுமைகளோடு மத வேற்றுமையும் சேர்ந்து கொண்டது. வெவ்வேறு ராஜ்யங்கள், பல்வேறு மதங்கள், மொழிகள்... இதன்பின் ஓரினம் எப்படி நிலைக்கும்? பாரத மக்கள் கடலில் வாழும் மீன்கள் போல் ஒற்றுமையற்றவர்களாயினர். பிறகு முஸ்லிம்கள் வந்தனர். அவர்களது தொகையும் பெருகியது. காலஞ்செல்லச் செல்ல, கடலில் அலைமேல் அலைபோல் மேற்கத்திய மலைகளுக்கு அப்பா லிருந்து புதிய புதிய முஸ்லிம் குழுக்கள் வரத் தொடங்கின. முஸ்லிம் ஆட்சி யாளர்களின் தயவுக்கு ஆசைப்பட்டோ அல்லது அவர்களது கொடுமைக்குப் பயந்தோ உள் நாட்டவர் ஆயிரக்கணக்கில் முஸ்லிம் மதத்துக்கு மாறினர். இந்து, முஸ்லிம், மொகலாயர், பட்டாணியர், ராஜபுத்திரர், மராத்தியர் ஆகிய

பலரும் ஒரே இடத்தில் வாழத் தொடங்கினர். இந்த நிலையில் இன ஒற்றுமை எப்படி ஏற்படும்? ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி இருக்கும்?

இந்தப் பாரத நாட்டில் பல்வேறு இனங்கள் வாழுமிடம், மொழி, குலம், மதம் போன்ற வேற்றுமைகளால் பிளவுபட்ட மனிதர்கள். வங்காளி, பஞ்சாபி, ஆந்திரர், மராத்தியர், ராஜபுத்திரர், ஜாட் இனத்தவர், இந்து, முஸ்லிம் இவர்களில் யார் யாருடன் சேருவார்கள்? மதத்தில் ஒற்றுமையிருந்தால் குலத்தில் ஒற்றுமையில்லை, குலம் ஒன்றாகியிருந்தால் மொழி வேறு, மொழி ஒன்றாயிருந்தால் வசிக்குமிடம் வேறுவேறு. ராஜபுத்திரரும் ஜாட்டும் ஒரே மதத்தினர், ஆனால் வெவ்வேறு குலங்களைச் சேர்ந்தவர்கள். வங்காளியும் பிகாரியும் ஒரே இனத்தவராயினும் அவர்கள் பேசும் மொழிகள் வேறு. மிதிலைவாசியும் கன்னோசி வாசியும் ஒரே மொழி பேசினாலும் வெவ்வேறு இடங்களில் வசிக்கிறார்கள். இது மட்டுமல்ல. பாரதநாட்டின் துரதிருஷ்டம் என்னவென்றால் ஒரே மதம், ஒரே மொழி, ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரிடத்தில் வசித்தாலும் அவர்களிடையே ஒருமையுணர்வு இல்லை. எல்லா வங்காளிகளும் ஒன்று என்று வங்காளிகள் நினைப்பதில்லை. சீக்கியர்கள் எல்லோரும் ஒன்று என்று சீக்கியர் எண்ணுவதில்லை. இதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அதிக எண்ணிக்கையிலுள்ள பலவேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் நெடுங்காலம் ஒரு பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தால் அவர்களுக்குத் தங்கள் சொந்த இனம் பற்றிய உணர்வு கொஞ்சங்கொஞ்சமாக அழிந்து போய்விடும். பல்வேறு ஆறுகளின் நீர் கடலில் விழுந்தபிறகு அந்தந்த ஆற்று நீரின் தனித்தன்மை மறைந்து விடுவது போல் பேரரசுக்கு உட்பட்ட இனங்களுக்கும் நேரும். அந்த இனங்களிடையே வேற்றுமை மறையும், ஆனால் ஒற்றுமை தோன்றாது. ரோமப் பேரரசுக்கு அடிமைப்பட்ட இனங்களுக்கு இவ்வாறுதான் நேர்ந்தது. இந்துக்களின் நிலையும் இதுதான். இனத்துக்கு ஆக்கம் தரும் உணர்வு பல காரணங்களால் பாரதநாட்டில் வெகு காலத்துக்கு முன்பே மறைந்து விட்டது. ஆகவேதான் இந்து இனத்தால் இனத்துக்குப் பொதுவாக ஒரு செயலும் செய்யப்படவில்லை. ஆகவேதான் இந்துக்களின் நாட்டில் பிற இன அரசர்களும் எவ்வித எதிர்ப்புமின்றி சமூகத்தால் முடிசூட்டப் பெற்றனர். இதனால்தான் இந்து சமூகம் தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளச் சுட்டு விரலைக் கூட அசைக்கவில்லை.

வரலாறு கூறும் காலத்துக்குள் இந்து சமூகத்தில் தன் இனத்தின் ஆக்கம் வளர முயற்சி இரண்டே தடவைகள்தான் செய்யப்பட்டது. முதல் தடவை, மகாராஷ்டிரத்தில் சிவாஜி இந்தப் புனித மந்திரத்தை முழங்கினார். அவரது சிங்க நாதம் மகாராஷ்டிர நாட்டுக்கு விழிப்பூட்டியது. மராத்தியருக்கும் மராத்தியருக்குமிடையே சகோதர உணர்வு தோன்றியது. இந்த மந்திரத்தின் பயனாக, அதுவரை வெல்லப்படாதிருந்த மொகலாயப் பேரரசு அழிந்தது.

வெகுகாலமாக வெற்றிகளையே கண்டு வந்த முஸ்லிம் இனம் இந்துக்களால் வெல்லப்பட்டது. பாரத நாடு முழுவதும் மராத்தியரின் ஆட்சிக்குக் கீழ் வந்தது. இப்போதும் மராத்தியர் ஆங்கியேரோடு இந்தியாவை அனுபவித்து வருகிறார்கள்.

இரண்டாவது தடவை இந்த முயற்சி செய்தவர் மந்திர சக்தி வாய்ந்த ரஞ்சித் சிங். அவரது மந்திரம் 'கால்ஸா'. இன ஒற்றுமை உறுதியாகி, பட்டாணியர்களின் நாட்டின் ஒரு பகுதியும் இந்துக்களின் வசமாயிற்று. சத்லெஜ் ஆற்றங் கரையில் சீக்கியர்களின் முழக்கம் அச்சமற்ற ஆங்கிலேயர்களையும் நடுங்கச் செய்தது. ஆனால் இன்னும் தந்திரசாலியான மந்திரவாதி டல்ஹௌசியால் கால்ஸாவின் சக்தி அழிக்கப்பட்டது. இருந்தாலும் ராம் நகரும் சிலியன் வாலாவும் வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்டன.

நாட்டின் ஒரு சில பகுதிகளில் இன ஒற்றுமையுணர்வால் இவ்வளவு சாதிக்க முடிந்ததென்றால், நாடெங்கும் இத்தகைய உணர்வு ஏற்பட்டால் என்னதான் சாதிக்க இயலாது?

ஆங்கிலேயர் நம் நாட்டுக்குப் பெரிய உதவி செய்திருக்கிறார்கள். அவர்கள் நமக்குப் புதிய விஷயங்களைப் போதித்திருக்கிறார்கள்; நாம் ஒரு போதும் அறியாத செய்திகளைத் தெரிவித்திருக்கிறார்கள்; நாம் இதுவரை கண்டிராத, கேட்டிராத விஷயங்களைக் காட்டியிருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள்; நாம் இதுவரை நடந்திராத பாதையில் நடக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய போதனைகளில் பல விலைமதிப்பற்றவை. ஆங்கிலேயர்களின் உள்ளமாகிய கருவூலத்திலிருந்து நாம் பெற்றுள்ள பல ஒப்பற்ற ரத்தினங்களில் இரண்டை நாம் இக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறோம். விடுதலையார்வம், இன ஒற்றுமையுணர்வு, இவைதான் அந்த இரண்டு ரத்தினங்கள். இவை என்னவென்றே இந்துக்களுக்கு இதற்குமுன் தெரிந்திருக்கவில்லை.

(வங்காளி ஆண்டு 1279, பைசாக் மாதத்தில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது)

வங்க நாட்டு உழவர்

('வங்க நாட்டு உழவர்' என்ற இந்தக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள உழவர் நிலை இப்போது இல்லை. ஜமீந்தார்களின் அத்தகைய கொடுமை இல்லை. புதிய சட்டம் ஜமீந்தார்களின் வலிமையையும் குறைத்துவிட்டது. உழவர்களின் நிலையிலும் நிறைய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குடிமக்கள் கொடுமைக் காரர்களாகவும், ஜமீந்தார்கள் பலங்குறைந்தவர்களாகவும் இருப்பதைப் பல இடங்களில் பார்க்கிறோம். இந்தக் காரணங்களால் நான் இவ்வளவு காலம் இந்தக் கட்டுரையை மறுபடியும் வெளியிடவில்லை. நான் இப்போது இதைப் பதிப்பிக்கப் பல காரணங்கள் உண்டு:

1. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டின் நிலைமை எப்படி இருந்தது என்பது இக்கட்டுரையிலிருந்து தெரியும். எதிர்கால வரலாற்று அறிஞனுக்கு இந்தச் செய்தி உதவும்.
2. இந்தக் கட்டுரை வெளியான பிறகு உழவர்களின் நிலை சமூகத்தில் விவாதிக்கப்படத் தொடங்கியது. இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இக்கட்டுரையின் காரணமாகத்தான் தொடங்கியது என்பதால் இக் கட்டுரை மறுபடியும் பதிப்பிக்கத் தகுந்ததாகிறது.
3. இதில் விவரிக்கப்பட்டுள்ள உழவர்நிலை சில இடங்களில் இன்னும் மாறாமலிருக்கிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னல்கள் முழு மையாக ஓரிடத்திலும் மறைந்துவிடவில்லை.
4. முதலில் வெளியிட்ட போது இந்தக் கட்டுரை சிறிது புகழ் பெற்றது.
5. நான் 'வங்க தர்சன்' பத்திரிகையில் 'சமத்துவம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டு, பிறகு அதை மறுபடியும் பிரசுரித்தேன். 'வங்க நாட்டு உழவர்' என்ற இந்தக் கட்டுரையை மறுபடி வெளியிடும் எண்ணமில்லாததால் இந்தக் கட்டுரையின் சில பகுதிகளை 'சமத்துவம்' கட்டுரையில் சேர்த்திருந்தேன். இப்போது அந்த 'சமத்துவம்' கட்டு ரையை வெளியிடாதவாறு நிறுத்திக் கொண்டுவிட்டேன். இந்தக் கட்டுரையை மறுபடி வெளியிட இது இன்னொரு காரணம்.

இந்தக் கட்டுரையில் பொருளியல் தொடர்பாக நான் வெளியிட்டுள்ள சில

கருத்துக்கள் சரிதான் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் பொருளி யலில் எந்தக் கருத்து சரி, எந்தக் கருத்து தவறு என்று உறுதியாகக் கூறுவது கடினம். ஆகையால் அந்தக் கருத்துக்களைத் திருத்த நான் முயற்சி செய்ய வில்லை.)

முதலாவது இயல்

நாட்டின் செல்வச் செழிப்பு

நம்நாட்டில் நிறைய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக இப்போது பரவலாகப் பேசப்படுகிறது. இவ்வளவு காலம் நம்நாடு சீர்கெட்டுக் கொண்டிருந்ததாம். இப்போது ஆங்கிலேயரின் நிர்வாகத் திறமையால் நாம் நாகரீகம் அடைந் திருக்கிறோமாம். நம்நாட்டுக்கு நன்மை ஏற்பட்டு வருகிறதாம்.

என்ன நன்மை? பார்த்தால் தெரியவில்லையா? அதோ பார், இருப்புப் பாதையில் இரும்புக் குதிரை, உச்சை சிரவஸ் என்ற தெய்வீகக் குதிரை போல், கோடிக் குதிரைகளை வலிமையில் விஞ்சுவதாக ஒரு மாதப் பயணத்தை ஒரே நாளில் முடித்து விடுகிறது. அதோபார், முன்பு யானைகளையும் அடித்துச் செல்லும் அலைகளோடு ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த பாகீரதி ஆற்றை விளையாட்டாகக் கிழித்துக் கொண்டு நெருப்புப் பிழம்பு போல் ஒளிவீசும் கப்பல் வியாபாரப் பொருள்களைச் சுமந்தவாறு விரைகிறது. இன்று காலை யில் காசியில் உன் தந்தை கடுமையான நோய் வாய்ப்படுகிறார்; மின்சாரம் வானம் வழியே வந்து அந்தச் செய்தியை உனக்குத் தருகிறது; நீ இரவுக்குள் அங்கு போய்ச் சேர்ந்து அவருக்குப் பணிவிடை செய்யத் தொடங்கி விடுகிறாய். முன்பு குணமாக்க முடியாத அந்த நோயை மருத்துவர் புதிய மருத்துவ சாத்திரத்தின் துணை கொண்டு தீர்த்து விடுகிறார். தாரகைகள் நிறைந்த வானம் போல் மாளிகைகள் நிறைந்து ஒளிவீசும் இந்த நிலப்பகுதி முற்காலத்தில் புலியும் கரடியும் வசிக்குமிடமாயிருந்தது. அதோ பார்க்கிறாயே நெடுஞ்சாலை, அங்கே ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் சேற்றில் வழுக்கி விழுந்து காலை உடைத்துக் கொண்டிருப்பாய். இப்போது அங்கே காஸ் விளக்குகள் சந்திரன்கள் போல் ஒளிர்கின்றன. உன்னைப் பாதுகாக்கக் காவல்காரர்கள் இருக்கிறார்கள், உன்னை ஏற்றிக் கொண்டு செல்ல வண்டி நிற்கிறது. நீ உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தைத்தான் பாரேன்? முன்பு இங்கே ஒரு கிழிந்த சமுக்காளம் இருந்தது. இப்போது தரைக்கம்பளம், சோபா, லஸ்தர் விளக்கு, பளிங்குக் கல், வெள்ளைச் சலவைக்கல் இன்னும் எவ்வளவோ? இப்போது வியாழன் என்ற கோளின் துணைக் கோள்கள் பார்வையிலிருந்து மறைவதைத் தொலைநோக்கி மூலம் கவனித்துக் கொண் டிருக்கும் பாபு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பிறந்திருந்தால் வியாழக் கிரகத் துக்குத் தூபதீபம் காட்டி அரிசியும் வாழைக்காயும் அதற்கு நிவேதனம்

பண்ணிக் கொண்டிருப்பார். இப்போது நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு முழுநீள வெள்ளைக் காகிதத்தில் வங்கதர்களுக்காக சமூகவியல் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டசாலியான நான் ஒரு நூற்றாண்டுக்கு முன்பிறந்திருந்தால் தரையில் ஒரு விலங்கு போல் உட்கார்ந்து கொண்டு ஒரு கிழிந்து போன மட்டக் காகிதத்தை மூக்குக்கு நேரே வைத்துக் கொண்டு நவமி திதியில் சுரைக்காய் சாப்பிடலாமா கூடாதா என்ற குழப்பத்தில் தலையைப் பிய்த்துக் கொண்டிருப்பேன். இதிலிருந்தே தெரியவில்லையா, நாட்டுக்கு நன்மை உண்டாயிருக்கிறதென்று?

நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. நாட்டு முன்னேற்றத்துக்கு ; முறை வாழ்த்தொலி எழுப்புங்கள், பார்க்கலாம்!

இப்படி இறைந்து கிடக்கும் முன்னேற்றத்துக்கு நடுவில் எனக்கு ஒரு கேள்வி கேட்கத் தோன்றுகிறது. இந்த முன்னேற்றம் யாருக்கு ஏற்பட்டிருக்கிறது? நண் பகல் வெயிலில் வெறுந்தலையும் வெறுங்காலுமாக, இரவல் வாங்கப்பட்ட, கூர்மழுங்கிய ஏரில் எலும்புந்தோலுமான இரண்டு எருதுகளைப் பூட்டி முழங்காலளவு சேற்றில் நிலத்தை உழுதுகொண்டிருக்கிறார்களே ஹாசிம் ஷேக்கும், ராமா கைவர்த்தனும், அவர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக் கிறதா? இந்த ஆவணி வெயில் அவர்களது மண்டையைப் பிளக்கிறது, தாகத்தால் அவர்கள் நா வரளுகிறது. தாகத்தைத்தீர்த்துக் கொள்ள அவர்கள் சேற்றுத் தண்ணீரைக் கைகுவித்து எடுத்துக் குடிக்கிறார்கள். அவர்களுக்குப் பசியால் உயிர் போகிறது. ஆனால் இது உழ வேண்டிய பருவம். இப்போது சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போக முடியாது. அவர்கள் அந்தி வேளையில் வீடு திரும்பி, உடைந்த சட்டியில் பெரிய பெரிய பருக்கையாயிருக்கும் சிவப்புச் சோற்றைக் கொஞ்சம் உப்பு மிளகாயுடன் சேர்ந்து அரைவயிறு சாப்பிடு வார்கள். பிறகு மாட்டுக் கொட்டிலின் ஒரு பக்கத்தில் ஒரு கிழிந்த பாயிலோ தரையிலோ படுத்துக் கொள்வார்கள். அவர்களைக் கொசு கடிக்காது. மறு நாள் காலையில் அவர்கள் மறுபடியும் முழங்கால் சேற்றில் உழைக்க வேண்டும். அவர்கள் வேலைக்குப் போகும்போது வழியில் ஜமீந்தாரோ அல்லது லேவாதேவிக்காரனோ வரிபாக்கிக்காக அல்லது கடன் பாக்கிக்காக அவர்களைப் பிடித்துக் கொள்வான். பிறகு அந்த ஆண்டு பூராவும் அவர்கள் குடும்பத்தோடு பட்டினி கிடக்க வேண்டியதுதான்! மூக்குக் கண்ணாடி அணிந்திருக்கும் பாபுவே! இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லேன். நீ ஆங்கிலம் படித்து இவர்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறாய்? மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு ஒரு கையில் இறகுப் பேனாவுடன் பிரும்மாவின் படைப்பையே மாற்றிவிடக் கற்பனை செய்தவாறு மறு கையால் கரு கரு மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டிருக்கும் வெள்ளைத் திரையே, இந்த ஹாசிம்ஷேக்குக்கும் ராமா கைவர்த்தனுக்கும் உன்னால் என்ன உதவி கிடைத்திருக்கிறதென்று சொல்லு, பார்க்கலாம்!

ஒரு திவலைகூட, ஒரு துரும்புகூட நன்மை கிடைக்கவில்லை என்கிறேன் நான். ஆகையால் நீங்கள் பற்றிக் கொள்ளும் முன்னேற்றத்தை நான் வர வேற்கவில்லை. நாட்டுக்கு நன்மையா? நாட்டுக்கு நன்மையென்றால் யாருக்கு நன்மை? உனக்கும் எனக்கும் நன்மை ஏற்பட்டிருப்பது தெரிகிறது; ஆனால் நாடு என்பது நீயும் நானுந்தானா? நீயும் நானும் நாட்டின் மக்கள் தொகையில் எவ்வளவு பேர்? இந்த உழவர்கள் எவ்வளவு பேர்? அவர்களை ஒதுக்கி விட்டால் நாட்டில் மிஞ்சுவது எவ்வளவு பேர்? கணக்குப் பார்த்தால் அவர் களே நாட்டில பெரும்பான்மையினர், அவர்களே நாடு. உன்னாலும் என்னாலும் என்ன காரியம் செய்ய முடியும்? உழவர்கள் எதிர்த்து நின்றால் நாமெல்லோரும் எங்கே இருப்போம்? அவர்களுக்கு நன்மை இல்லை யென்றால் நாட்டுக்கும் நன்மையில்லை.

நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். நாட்டுக்கு எந்த வகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் இக்கட்டுரையில் முதலில் விளக்குவோம். பிறகு இந்த முன்னேற்றத்தில் உழவர்களுக்குப் பங்கு இல்லை என்பதைப் பிறகு விளக்குவோம்.

பிரிட்டிஷ் ஆட்சியில் நாடு நன்றாக ஆளப்படுகிறது. பிற இனத்தவர் நாட்டு மக்களைத் திடீரென்று தாக்கி அவர்களுடைய சொத்துக்களைப் பறித்துக் கொள்வதெல்லாம் வெகுகாலமாக நின்று போய்விட்டது. ஒரே இனத்துக் குள்ளேயே ஒருவன் மற்றவனுடைய சொத்தைப் பிடுங்கிக் கொள்வதும் மிகவும் குறைந்துவிட்டது. திருட்டுப் பயம், வலிமை குறைந்தவனின் சொத்தை வலிமை மிக்கவன் பறித்துக் கொள்வானென்ற பயம் இவையெல்லாம் மிகவும் குறைந்து விட்டன. அரசனும் அரசனுடைய ஊழியர்களும் மக்களின் சேமிப்பை வலுக்கட்டாயமாகவோ மோசடி செய்தோ பிடுங்கிக் கொள்வ தில்லை. இப்போது பணம் சேர்க்க விரும்பும் எவனுக்கும் அதைத் தானும் அனுபவிக்கலாம், தனக்குப் பிறகு தன் வாரிசுகளும் அனுபவிக்கலாம் என்ற உறுதி இருக்கிறது. இத்தகைய நம்பிக்கை ஏற்பட்டால் மக்களுக்குக் குடும்ப வாழ்வில் நாட்டம் ஏற்படும். குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமா என்ற சந்தேக மிருந்தால் மக்கள் குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளவிரும்பமாட்டார்கள். மக்களுக்குத் திருமணம் செய்து கொள்ளும் விருப்பம் அதிகரித்தால் மக்கள் தொகை வளரும். ஆகையால் பிரிட்டிஷ் ஆட்சியில் ஜனத்தொகை பெருகி யுள்ளது. இதன் விளைவாக உழவுத் தொழிலும் வளர்ந்துள்ளது. ஒரு லட்சம் ஜனத்தொகையுள்ள நாட்டுக்கு, உணவுப் பொருள் ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியமில்லாவிட்டால், அந்த நாட்டில் நாட்டு மக்களுக்குத் தேவையான தானியம் மட்டுந்தான் பயிரிடப்படும். காரணம், தேவைக்கு அதிகமாக விளையும் தானியம் வீணாகிவிடும். தேவையில்லாமல் ஏன் உழுது பயிரிட்டு சிரமப்படவேண்டும்? அந்த நாட்டில் நிறைய நிலம் பயன்படுத்தப்படாமல் தரிசாக அல்லது காடாக இருந்த நிலத்திலும் விவசாயம் தொடங்கும்.

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. நிலையான நில உரிமைச் சட்டம் (Permanent settlement) அமுலுக்கு வருவதற்கு முன் இருந்ததைவிட அதிக நிலத்தில் இப்போது விவசாயம் நடக்கிறது.

விவசாய முன்னேற்றத்துக்கு இன்னொரு காரணமும் உண்டு. அதுதான் வாணிப வளர்ச்சி. வாணிபம் என்பது பண்டமாற்றுதான். நமக்கு இங்கிலாந்தின் துணி வேண்டுமென்றால் அதற்குப் பதிலாக நாம் இங்கிலாந்துக்கு ஏதாவது கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நமக்குத் துணி கிடைக்காது. நாம் எதை அனுப்புவது? சிலர் 'பணம்' என்று சொல்வார்கள். இது தவறு. பாரதநாட்டின் பணம் இங்கிலாந்துக்குப் போவது உண்மைதான்; ஆனால் அந்தப் பணம் இங்கிலாந்து நம் நாட்டில் செய்த வியாபாரத்தில் அதற்குக் கிடைத்த லாபமாகும். அது இங்கிலாந்திலிருந்து நமக்குக் கிடைத்த பொருள்களின் விலையல்ல. நாம் அனுப்பும் பொருள்களில் பெரும்பான்மை—அரிசி, பட்டு, பருத்தி, சணல், நீலச்சாயம் போன்ற விவசாயப் பொருள்கள்தாம். நம் வர்த்தகம் வளர வளர இந்த விவசாயப் பொருள்களின் தேவையும் பெருகும். ஆகவே நாட்டில் விவசாயமும் வளரும். நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகு வர்த்தகம் வளர்ந்திருக்கிறது; ஆகவே விவசாயப் பொருள்களின் தேவை பெருகியுள்ளது; இதன் விளைவாக ஆண்டுதோறும் விவசாயம் வளர்ந்து வருகிறது.

விவசாய வளர்ச்சியின் பலன் என்ன? செல்வ வளர்ச்சி. 100 பீகா நிலத்தில் விவசாயம் செய்து 100 ரூபாய் லாபம் கிடைத்தால், 200 பீகா நிலத்தில் விவசாயம் செய்து ஏறக்குறைய 200 ரூபாய் லாபம் பெறலாம், 300 பீகாவில் விவசாயம் செய்தால் 300 ரூபாய் லாபம் கிடைக்கும். (இங்கே 'ஏறக்குறைய' என்ற சொல் ஏன் கையாளப்பட்டிருக்கிறது என்பது சமூகவியல் அறிஞர்களுக்குத் தெரியும், சாதாரண வாசகர்களுக்கு இதை விளக்க வேண்டிய அவசியமில்லை) வங்காளத்தில் நாளுக்கு நாள் விவசாய வளர்ச்சியால் செல்வம் பெருகிக் கொண்டு வருகிறது.

இன்னொரு செய்தி: இந்தக் காலத்தில் விலைவாசிகள் ஏறிவிட்டன, வாழ்க்கை நடத்துவது கடினமாகிவிட்டது என்று எல்லோரும் குறை கூறுகிறார்கள். இந்தக் காரணத்தைக் காட்டி, "பிரிட்டிஷ் ஆட்சி மக்களைக் கொடுமைப்படுத்துகிறது; கலியுகம் மிகவும் மோசமான காலம்; நாடு சீரழிந்து விட்டது" என்றெல்லாம் பலர் சொல்கிறார்கள். நல்ல கல்வியறிவுள்ளவர்கள் எல்லோருக்கும்இந்தக் கருத்து எவ்வளவு தவறு என்பது தெரியும். உண்மையில் பொருள்களின் விலையுயர்வு நாட்டின் சீரழிவின் அடையாளமல்ல, வளர்ச்சியின் அடையாளம். முன்பு எட்டணாவுக்கு ஒரு மணு அரிசி கிடைத்தது, இப்போது அதே அளவு அரிசிக்கு இரண்டரை ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு மூன்று சேராக இருந்த நெய் இப்போது ரூபாய்க்கு முக்கால்சேர். ஆனால் பொருள்கள் கிராக்கியாகி விட்டன என்பது சரியல்ல, உண்மை என்னவென்றால், பணம் மலிவாகிவிட்டது.

இதன் விளைவாக, விவசாயிக்கு முன்பு ஒரு ரூபாய் வருமானம் கொடுத்த நிலத்தில் அவனுக்கு இப்போது இரண்டு, மூன்று ரூபாய் கிடைக்கிறது. பத்து ரூபாய் கிடைத்த நிலத்திலிருந்து இப்போது 20, 30 ரூபாய் கிடைக்கிறது. வங்காளத்தின் பெரும்பாலான பகுதிகளில் இந்த நிலை ஏற்பட்டதால் விவசாய உற்பத்தியால் வருமானம் அதிகரித்துள்ளது.

விவசாயத்துக்கு உள்ளான நிலப்பரப்பும் பெருகியுள்ளது என்பது முன்பே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விவசாய வருமானம் பெருக இரண்டு காரணங்கள். ஒன்று, விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பின் பெருக்கம்; இரண்டு, விவசாயப் பொருள்களின் விலையுயர்வு. ஒரு பீகா நிலத்தில் விளையும் நெல்லால் முன்பு மூன்று ரூபாய் வருமானம் கிடைத்தது. இப்போது ஆறுரூபாய் கிடைக்கிறது. கூடவே தரிசாயிருந்த ஒரு பீகா நிலம் இப்போது பயிரிடப்படுவதால் இன்னோர் ஆறு ரூபாய் கிடைக்கிறது. ஆகவே மூன்று ரூபாய் வருமானத்துக்குப் பதிலாக இப்போது வருமானம் பன்னிரெண்டு ரூபாய்.

இவ்விதம் நிலையான நில உரிமைச் சட்டம் அமுலானதிலிருந்து வங்க நாட்டின் விவசாய வருமானம் நான்கு மடங்கு பெருகியுள்ளது என்று கூறுவது மிகையாகாது. இந்த உபரி வருமானம் யார் கைக்குப் போகிறது?

இந்தப் பணம் விவசாயத்திலிருந்து கிடைப்பதால் விவசாயிகளே இதைப் பெறுகிறார்கள் என்று வாசகர்கள் நினைக்கலாம். ஆனால் உண்மையில் இந்தப் பணம் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. யாருக்குக் கிடைக்கிறது என்பதை இப்போது நாம் விளக்குவோம்.

இந்தப் பணத்தில் ஒரு பகுதி அரசாங்கத்தைச் சேர்கிறது. கல்கத்தா ரெவின்யூ போர்டின் 1870-71ம் ஆண்டுக்கான அறிக்கையில் அதன் தலைவர் எழுதுகிறார்: "நிலையான நில உரிமைச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்தில் 1793ம் ஆண்டில் 2,85,87,722 ரூபாய் நிலவரியாக வசூலிக்கப்பட்ட அதே இடத்திலிருந்து இப்போது 3,50,41,248 ரூபாய் நிலவரி கிடைக்கிறது." இதைக் கேட்டுப் பலர் ஆச்சரியப்பட்டு, "நிலவரி விகிதம் ஒரு முறை கணக்கிடப்பட்ட பின் அந்தத் தொகை எப்படி அதிகரிக்கும்?" என்று கேட்கலாம். இந்தக் கேள்விக்கும் விடையளிக்கிறார் போர்டு தலைவர் ஷாக் துரை. முன்பு வரிவிலக்குப் பெற்றிருந்த நிலங்களுக்கு வரி, ஆற்றுப் படுகையில் மேடிட்டு ஏற்பட்ட புதிய நிலங்களுக்கு வரி, உழவனின் சொந்த நிலத்துக்கு வரி உயர்வு ஆகிய பல காரணங்களால் நிலவரி வருமானம் பெருகியுள்ளது. "வருமானம் பெருகியது சரிதான், இனிமேல் அதிகம் பெருகாது" என்று பலர் கூறலாம். ஆனால் இந்த வருமான வளர்ச்சி தொடர்ந்து நிகழ்வதாகக் காட்டியுள்ளார் ஷாக் துரை. இவ்வாறு அரசாங்கம் பெறும் அதிக வருமானமான 65 லட்ச ரூபாய் விவசாய் உற்பத்தியிலிருந்தே கிடைக்கிறது.

வேறு வழிகளிலும் அரசாங்கத்துக்கு விவசாய வருமானம் கிடைக்கிறது. அபினி மூலம் கிடைக்கும் கலால் வரியும் விவசாயத்திலிருந்து கிடைப்பது

தான். விவசாய உற்பத்தியிலிருந்து சுங்கவரி மூலமாகவும் வருமானம் பெறுகிறது அரசாங்கம்.

இந்த விவசாய வருமானத்தின் பெரும்பகுதி வியாபாரிகளுக்கும் லேவா தேவிக்காரர்களுக்குமே போய்ச் சேர்கிறது என்கிறார் ஷாக்துரை. இந்த வருமானத்தின் ஒரு பகுதியை அவர்கள் கைப்பற்றிக் கொள்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. உழவர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது; ஆகையால் லேவா தேவிக்காரர்களின் லாபமும் பெருகியுள்ளது. நிலத்தின் விளைச்சலை மொத்தமாக வாங்கி வந்து கடைகளில் வைத்துக் கொண்டு விற்கும் வியாபாரிகளுக்கும் இந்த விவசாய வருமானத்தின் ஒரு பகுதி லாபமாகக் கிடைக்கிறது. ஆனால் பெரும்பகுதி லேவாதேவிக்காரர்களுக்கும் வியாபாரிகளுக்குமே போய்ச் சேர்கிறது என்ற ஷாக் துரையின் கருத்து தவறு. இந்தத் தவறை அவர் மட்டும் செய்யவில்லை. 'எகானமிஸ்ட்' பத்திரிகையும் இப்படித்தான் நினைக்கிறது. 'எகானமிஸ்ட்'டின் கருத்து தவறு எ...பதை 'இந்தியன் அப் சர்வர்' நிரூபித்துவிட்டது. அந்த விவாதம் இங்கு வேண்டாம்.

விவசாய உற்பத்தியின் பெரும்பான்மை வருமானம் நிலச்சொந்தக் காரனுக்குப் போய்ச் சேர்கிறது. பெரும்பான்மையான உழவர்களுக்கு நிலத்தில் நிலையான உரிமை இல்லை. ஜமீந்தார் நினைத்தால் அவர்களை விரட்டிவிடலாம். நிலத்தில் உழுபவனுக்கு உரிமை என்பது ஆகாயத்தாமரை மாதிரி ஒரு கற்பனையாகத்தான் பல இடங்களில் இருக்கிறது. சட்டப்படி இந்த உரிமை இருக்கும் இடங்களிலும் செயற்படுத்தப்படுவதில்லை. உரிமை இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜமீந்தார் விரட்டினால் உழவன் வெளியேற வேண்டியதுதான். ஜமிந்தாரோடு தகராறு செய்து கொண்டு எந்த விவசாயி தான் தாக்குப் பிடிக்க முடியும்? ஆகையால் நிறைய வரிகட்ட சம்மதிப்பவனைத்தான் ஜமீந்தார் விவசாயியாக வைத்துக் கொள்வான்.

மக்கள் தொகை பெருகி வருகிறது என்று முன்னமே சொன்னோம். இதை நிரூபிக்க முடியாதென்றாலும் இது அனுபவத்தில் காணப்படுகிறது. (இந்தக் கட்டுரை எழுதப்படும்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முறை தொடங்கப்படவில்லை) மக்கள் தொகை பெருகினால் ஜமீந்தார் விதிக்கும் நிலவரியும் அதிகரிக்கும். ஏனென்றால் முன்பு ஒருவர் விவசாயம் செய்து வந்த நிலத்துக்கு இப்போது இருவர் போட்டி போடுவார்கள். அதிகவரி கொடுக்க இசைபவனுக்கு ஜமீந்தார் நிலத்தைக் கொடுப்பான். ராமா கைவர்த்தன் உழுது வரும் நிலம் நல்ல நிலம். அதற்கு அவன் ஒரு ரூபாய் விகிதத்தில் வரி கொடுக்கிறான். அதற்கு ஒன்றரை ரூபாய் விகிதத்தில் வரி கொடுக்கமுன் வருகிறான் ஹாசிம் ஷேக். ஜமீந்தார் ராமாவை வெளியேறச் சொல்கிறான். ராமாவுக்கு சட்டப்படி அந்த நிலத்தில் உரிமையில்லை. ஆகவே அவன் வெளியேற நேருகிறது. அவனுக்கு உரிமை இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அவன் என்ன செய்வான்? தண்ணீரில் வசிப்பவன் முதலையுடன் சண்டை போட முடியுமா? ராமா தன் உரிமையைக் கைவிட்டுவிட்டு நிலத்திலிருந்து வெளி

யேறுகிறான். ஜமீந்தாருக்கு இப்போத ஒரு பீகாவுக்கு எட்டணா வீதம் அதிக வருமானம்.

இவ்வாறு நிலையான நில உரிமைச் சட்டம் அமுலான பிறகு அவ்வப் போது ஏதாவதொரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் பெரும் பான்மையான நிலத்தின் மேல் வரி அதிகரித்திருக்கிறது. இந்த வரி உணர் வுக்குச் சட்டமும் நீதிமன்றமும் தேவையில்லை. காய்கறிக்கடையில் காய்கறி வாங்குபவர்கள் பெருகினால் காய்கறிகளின் விலை உயர்வது போல் மக்கள் தொகை பெருகினால் நில வரி உயர்வதும் இயற்கையே. இதனால் ஏற்படும் உபரி வருமானம் ஜமீந்தாரிடம் போய்ச் சேர்கிறது.

இந்தக் கருத்தைப் பலர் மறுக்கலாம். "வரிவிகிதத்தை நெறிப்படுத்த ஓர் அளவுகோல் இருக்கிறது. அதை அமுலாக்கச் சட்டம் இருக்கிறது. ஜமீந்தாரும் இரக்கம், பாவ புண்ணிய உணர்வு உள்ளவன்தான்" என்றெல்லாம் அவர்கள் சொல்லலாம். அளவுகோல்— வரி எப்படி உயர்கிறது என்பதைத்தான் பார்த் தோமே. சட்டம்,— அது ஓர் தமாஷ். பெரிய மனிதர்கள், பணக்காரர்கள் தாம் பணம் செலவு செய்து அந்த வேடிக்கையைப் பார்க்க இயலும். ஜமீந்தாரின் இரக்கம், பாவபுண்ணிய உணர்வு—திருகாணியை இன்னும் திருக முடியாது என்ற நிலையில்தான் ஜமீந்தாருக்கு இரக்கமும் பாவபுண்ணிய உணர்வும் தோன்றும். (எல்லா ஜமீந்தார்களும் இவ்வாறு கொடியவர்களல்லர் என்பதை நாம் தயக்கமின்றி ஒப்புக் கொள்கிறோம். பலஜமீந்தார்கள் இரக்க முள்ளவர்கள்) ஜமீந்தார்கள் திருகாணியைத் திருகித் திருகி வங்காளத்தின் உபரி வருமானத்தின் பெரும்பகுதியைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு விட்டார்கள். நிலையான நில உரிமைச் சட்டம் அமுலான போது அவர் களுக்குக் கிடைத்த வருமானம் இப்போது பல இடங்களில் மூன்று மடங்கு, நான்கு மடங்கு ஆகிவிட்டது; சில இடங்களில் பத்து மடங்கு பெருகிவிட்டது. வருமானம் பெருகாத ஜமீந்தார்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

கடவுளருளால் ஏற்பட்ட விவசாயச் செல்வ வளர்ச்சியில் ஒரு பகுதி அரசனுக்கும், ஒரு பகுதி வியாபாரி-லேவாதேவிக்காரர்களுக்கும், இன்னொரு பகுதி ஜமீந்தாருக்கும்போய்ச் சேர்வதைப் பார்த்தோம். இதில் எவ்வளவு பகுதி விவசாயிக்குக் கிடைக்கிறது?

விவசாயிக்குக் கொஞ்சங் கூடக் கிடைப்பதில்லை என்று நாம் சொல்ல வில்லை. ஆனால் அவனுக்குக் கிடைப்பது ஒரு துளிதான். அந்தத் துளியினால் அவனுடைய நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இப்போதும் விளைச் சலைக் கொண்டு அவனால் வாழ்க்கை நடத்த இயலவில்லை. ஆகையால் அவனுக்குக் கிடைப்பதும் கிடைக்காததும் ஒன்றுதான். அதாவது செல்வம் உற்பத்தி செய்பவனுக்கு அந்தச் செல்வத்தில் பங்கு கிடைப்பதில்லை. நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பவனுக்கு லாபமேதுமில்லை.

நாட்டின் செல்வம் பெருகியிருப்பதைக் காட்டினோம். விவசாயமாகிய லட்சுமி நம் நாட்டைக் கருணையோடு பார்க்கிறாள். அதன் விளைவாகச்

செல்வம் பெருகுகிறது. பெருகிய செல்வத்தை அரசனும், வியாபாரியும், லேவாதேவிக்காரனும், ஜமீந்தாரும் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆகவே நாட்டின் செல்வப் பெருக்கால் இவர்களுக்கெல்லாம் வருமான உயர்வு. விவசாயிக்கு மட்டும் வருமான உயர்வு இல்லை. அதாவது ஆயிரம் பேர்களில் 999 பேர்களுக்கு நாட்டின் செல்வ வளர்ச்சியில் பங்கு இல்லை. இத்தகைய வளர்ச்சியை வாழ்த்தி ஒலியெழுப்ப விரும்புபவர்கள் எழுப்பட்டும்; நான் எழுப்ப மாட்டேன். இந்த 999 மக்களின் செல்வம் பெருகாவிட்டால் நான் யாரையும் வாழ்த்திப் பாடப் போவதில்லை.

இரண்டாவது இயல்

ஜமீந்தார்

பிராணிக்கு எதிரி பிராணி; மனிதனுக்கு எதிரி மனிதன்; வங்காளி விவசாயிக்கு எதிரி வங்காளி நிலச் சொந்தக்காரன். புலி போன்ற பெரிய விலங்குகள் ஆடுபோன்ற சிறு விலங்குகளைத் தின்கின்றன. பெரிய மீன்கள் சிறிய மீன்களைச் சாப்பிடுகின்றன. ஜமீந்தார் எனப்படும் பெரிய மனிதன் உழவன் என்ற சிறிய மனிதனை விழுங்கி விடுகிறான். அவன் உண்மையில் உழவனைத் தின்று விடுவதில்லைதான். ஆனால் அப்படித் தின்றுவிட்டால் அவன் இப்போது உழவனை நடத்துவதை விட இரக்கம் மிக்க செயலாகத் தானிருக்கும். உழவர்கள் வேறு பல விஷயங்களில் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கலாம்; ஆனால் எல்லாச் செல்வங்களையும் வழங்கும் நிலத்தை உழுது பயிரிட்டு அவர்களால் வாழ்க்கை நடத்த முடியும். ஆனால் அவர்களால் இது இயலவில்லை. ஏனென்றால் உழவன் வயிறு நிறையச் சாப்பிட்டால் குவியல் குவியலாகப் பணம் சேர்க்க ஜமீந்தாரால் இயலாது. ஆகையால் ஜமீந்தார் உழவனை வயிறு நிறையச் சாப்பிட விடுவதில்லை.

நாம் ஜமீந்தார்களை வெறுக்கவில்லை. எந்த ஜமீந்தாரும் நமக்குக் கெடுதல் செய்யவில்லை. மாறாக, நாம் சில ஜமீந்தார்களைப் பாராட்டுக்குரியவர் களாகக் கருதுகிறோம். நாம் நம் நண்பர்களின் அன்பை வாழ்க்கையின் முக்கிய இன்பங்களில் ஒன்றாக நினைக்கிறோம். அந்த நண்பர்களில் சிலர் ஜமீந்தார்கள். ஜமீந்தார்கள் வங்காளி இனத்தின் சிகரங்கள். யார்தான் அவர் களது அன்பைப் பெற விரும்ப மாட்டார்கள்? ஆனால் நாம் இப்போது சொல்லப் போவதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத ஜமீந்தார்கள் நம்மை நேசிக்கப்போவதில்லை, மாறாக வெறுக்கப் போகிறார்கள். அவ்வாறு நேர்ந்தால் நமக்கு மிகவும் வருத்தமாயிருக்கும். இருந்தாலும் கடமை கருதி இந்த வருத்தத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான். வங்காளத்து உழ வர்கள் நாதியற்றவர்கள், மனிதர்களிலேயே மிகவும் பரிதாப நிலையிலுள்ள வர்கள்; தங்கள் துன்பத்தை சமூகத்துக்குத் தெரியப்படுத்தக்கூட அவர்களுக்குத்

தெரியாது. ஊமையாயிருப்பவர்களின் துன்பத்தைப் பார்த்துவிட்டு அதைப் போக்கும் நோக்கத்துடன் சில வார்த்தைகளாவது சொல்லாவிட்டால் அது பெரும் பாவமாகும். நமது இந்தக் கட்டுரைக்காக இந்தச் சமூகத்தில் மிகச் சிறந்தவர்களான ஜமீந்தார்களின் வெறுப்புக்கு ஆளாவோம்; அவர்களால் அதட்டப் படுவோம், கேலி செய்யப்படுவோம், அவமானப்படுத்தப்படுவோம்; நம் நண்பர்களின் வெறுப்புக்கும் இலக்காவோம். சிலர் நம்மை முட்டாள் என்பர், சிலர் பொறாமைக்காரன் என்பர், வேறு சிலர் பொய்யன் என்பர். இவையெல்லாம் நேரும், நேரட்டும்; இந்த விளைவுக்குப் பயந்து வங்க தர்சன் பத்திரிகை துன்புற்றவர்களுக்காக வருத்தம் தெரிவிக்காவிட்டால், இன்னல் படுவர்களின் இன்னலைத் தீர்க்க முயற்சி செய்யாவிட்டால், ஏதாவது ஒரு வகை வேண்டுகோளுக்கு இணங்கி உண்மை சொல்வதைத் தவிர்த்தால், அத்தகைய வங்க தர்சன் எவ்வளவு விரைவில் வங்க நாட்டிலிருந்து மறைகிறதோ அவ்வளவு நல்லது. இன்னலுற்றவனுக்காக வருத்தம் தெரிவிக்காத தொண்டை அடைபட்டுப் போகட்டும். துன்பப் படுபவனின் நன்மைக்காக எழுதாத எழுதுகோல் வீணாகப் போகட்டும். இழிந்தவர் நம்மைப் பற்றி என்ன சொன்னாலும் நமக்குக் கவலையில்லை. உயர்ந்தவர்கள் நம்மை அறிவற்றவனாகக் கருதி மன்னிக்கட்டும் என்பதே நமது வேண்டுகோள். நாம் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாக எதுவும் சொல்லப்போவதில்லை. நாம் சொல்வதில் ஏதாவது தவறு இருந்தால் அதைச் சுட்டிக்காட்டுபவர்களிடம் நாம் நன்றி பாராட்டுவோம். அதுவரையில் நாம் உண்மை என்று கருதுவதைத் தயக்கமின்றிச் சொல்லுவோம்.

நாம் குறிப்பாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நாம் சொல்லப் போவது எல்லாம் ஜமீந்தார் சமூகம் முழுவதுக்கும் பொருந்தாது. ஜமீந்தார்கள் எல்லோருமே கெட்டவர்கள், கொடுமைக்காரர்கள் என்பவன் பெரும் பொய்யன். பல ஜமீந்தார்கள் நல்லவர்களாக, குடிகளிடம் அன்புள்ளவர்களாக, உண்மை பேசுவதில் உறுதிமிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் அவர்களுக்குப் பொருந்தா. கொடுமைக் கார ஜமீந்தார்கள் மட்டுமே இந்தக் கட்டுரையின் இலக்கு. நாம் 'ஜமீந்தார்' என்று குறிப்பிடும் போதெல்லாம் இத்தகைய ஜமீந்தார்களையே குறிப்பிடுகிறோம். நாம் ஜமீந்தார் சமூகம் முழுவதையுமே குறிப்பிடுவதாக வாசகர்கள் நினைக்க வேண்டாம்.

வங்காளி உழவன் நிலத்தில் உற்பத்தி செய்யும் பொருள் அப்படியொன்றும் அதிகமில்லை. இதிலிருந்து அவன் விவசாயத்துக்கான செலவைச் செய்து கொள்ள வேண்டும். இந்தச் செலவு கொஞ்சமல்ல. விதைகளின் விலை, கூலிக் காரர்களுக்குக் கூலி, மாட்டுத்தீனி, மற்றும் பல செலவுகளும் உண்டு. இந்தச் செலவுகளைச் செய்த பின் மிஞ்சும் பொருளை முதலில் லேவாதேவிக்காரன் பிடித்து வைத்துக் கொள்கிறான். உழவன் மழைக்காலத்தில் கடன் வாங்கிக்

குடும்பம் நடத்தியிருக்கிறான். அந்தக் கடனை ஒன்றரை விகித வட்டியோடு திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆடி மாதத்தில் இரண்டு மூட்டை நெல் வாங்கியிருந்தால் மார்கழியில் மூன்று மூட்டை கொடுக்க வேண்டும். கொடுத்த பின் மிஞ்சுவது குறைவுதான். அதிலிருந்து ஜமீந்தாருக்கு வரி செலுத்த வேண்டும். அதற்குப் பின் மிஞ்சுவது மிகக் கொஞ்சம். குருணையில் குருணை, சப்பித் துப்பிய கரும்பின் சாறு, காய்ந்து போன குட்டையின் சேறு. இதைக் கொண்டு உழவன் மிகவும் கஷ்டத்தோடு வாழ்க்கை நடத்த வேண்டும், அல்லது நடத்த முடியாமல் தவிக்க வேண்டும்.

ஆனால் இந்த மிகக் கொஞ்ச தானியமாவது உழவனின் வீட்டுக்குப் போய்ச் சேர்கிறதா? வாசகரே, பாருங்கள்—

மார்கழி மாதம் அறுவடை செய்ததும் உழவர்கள் மார்கழித் தவணையில் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தினார்கள். சிலரால் வரி செலுத்த முடிந்தது, சிலரால் முடியவில்லை, பயிர்த்தாள்களைக் குவித்து, தாளடித்து, நெல்லை வீட்டுக்குக் கொண்டு போய், உரிய காலத்தில் சந்தையில் விற்று விட்டுப் பங்குனி மாதத்தில் ஆண்டுத் தவணை வரியைச் செலுத்த உழவர்கள் ஜமீந்தாரின் அலுவலகத்துக்கு வந்தார்கள்.

பராண் மண்டல் மார்கழித் தவணையில் கொடுக்க வேண்டிய வரி ஐந்து ரூபாய். உரிய காலத்தில் நான்கு ரூபாய் கொடுத்துவிட்டான், பாக்கி ஒரு ரூபாய். பங்குனித் தவணை மூன்று ரூபாய். ஆக மொத்தம் நான்கு ரூபாயைக் கொடுக்க வந்திருக்கிறான். ஜமிந்தாரின் குமாஸ்தா கணக்குப் போட்டுப் பார்த்து, "உன்னோட மார்கழித் தவணை மூணு ரூபா பாக்கி" என்றான். பராண் மண்டல் கத்தினான், கெஞ்சினான். அவனால் ரசீதைக் காட்ட முடிந்தது. அல்லது முடியாமல் போயிற்று. குமாஸ்தா மார்கழித் தவணை வாங்கிக் கொள்ளும்போது ரசீது கொடுக்கவில்லை, அல்லது நான்கு ரூபாயை வாங்கிக் கொண்டு ரசீதில் இரண்டு ரூபாய் என்று எழுதிக் கொடுத்து விட்டான். எப்படியிருந்தாலும் சரி, பழைய பாக்கி மூன்று ரூபாய் என்று ஒப்புக் கொள்வதைத் தவிர பராண்மண்டலுக்கு வேறு வழியில்லை. அவன் மூன்று ரூபாய் கொடுக்காவிட்டால் குமாஸ்தா பாக்கி வரி மூன்று ரூபாய்க்குப் பதிலாக பதின்மூன்று ரூபாய் என்று புகார் எழுதிவிடுவான். ஆகையால் பராண் மண்டல் பாக்கி வரி மூன்று ரூபாய் என்று ஒப்புக் கொண்டான். பிறகு குமாஸ்தா வரிபாக்கிக்கு வட்டியைக் கணக்கிட்டான். ஜமீந்தாரின் சட்டப்படி ரூபாய்க்கு நாலணா வட்டி. மூன்றாண்டு பாக்கியானாலும் நாலணாதான், ஒரு மாதமானாலும் நாலணாதான். ஆக மொத்தம் மூன்று ரூபாய் 12 அணா. பராண் பழைய பாக்கிக்காக 3 ரூபாய் 12 அணாவும், பங்குனித் தவணை மூன்று ரூபாயும் கொடுத்தான். பிறகு குமாஸ்தாவின் கூலி. கூலி விகிதம் ரூபாய்க்கு அரையணா. பரான் மண்டலின் மொத்த ஆண்டு வரி 32 ரூபாய். ஆகையால் குமாஸ்தாக் கூலியாக ஒரு ரூபாய் கொடுத்தான். அதன்

பிறகு 'பார்வணி'—அதாவது கிராமத்தார் ஜமீந்தாரின் சிப்பந்திகளுக்குத் திருவிழாக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டிய தொகை. ஜமீந்தாரின் குமாஸ்தா, ஏஜண்ட், கணக்கன், வரி வசூலிப்பவன், தடியாள், அடியாள் எல்லோருக்கும் இதில் பங்கு உண்டு. மொத்தமாகக் கிராமத்தார் கொடுக்க வேண்டிய தொகை கணக்கிடப்பட்டு அதில் பராண்மண்டலின் பங்கு இரண்டு ரூபாய் என்று முடிவாயிற்று. அவன் அந்தப் பணத்தையும் கொடுக்க வேண்டியதாயிற்று.

இந்தக் கொடுமையெல்லாம் ஜமீந்தாரின் சம்மதப்படி நடக்கிறது என்று நாம் சொல்லவில்லை. வரியும் அதற்குரிய வட்டியுந்தான் ஜமீந்தாருக்குக் கிடைக் கிறது. மிச்சமெல்லாம் அவனுடைய குமாஸ்தா, கணக்குப்பிள்ளை முதலிய சிப்பந்திகளின் பைக்குப் போகிறது. ஆனால் இது யாருடைய குற்றம்? ஜமீந்தார் தன் வீட்டுக் காவல்காரனுக்குக் கொடுக்கும் சம்பளத்தைத்தான் தன் ஏஜண் டுக்கும் கொடுக்கிறான். ஜமீந்தாரின் சமையல்காரனுக்குக் கிடைக்கும் சம்ப ளத்தைவிடக் குறைவான சம்பளந்தான் குமாஸ்தாவுக்குக் கிடைக்கிறது. ஆகை யால் இப்படியெல்லாம் பணம் பிடுங்காவிட்டால் அவர்கள் வாழ்க்கை நடத் துவது எப்படி? இந்தக் கொடுமையெல்லாம் ஜமீந்தாரின் உத்திரவுப்படி நிகழா விட்டாலும், இது அவனுடைய கஞ்சத்தனத்தின் விளைவுதான். சிப்பந்திகள் தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்ள விவசாயிகளிடமிருந்து பணம் பறித்தால் அவனுக்கென்ன நஷ்டம்? அவன் ஏன் இந்த விஷயத்தில் தலையிட வேண்டும்?

ஆனி மாதத்தில் புத்தாண்டு தினம் வந்துவிட்டது. இந்தத் தவணையில் பராண் இரண்டு ரூபாய் வரி கொடுப்பது வழக்கம். அவன் அதைக் கொடுத்தான். ஆனால் அது வரி. புத்தாண்டு நாளில் ஜமீந்தாருக்குக் காணிக்கை கொடுப்பது மரபு. ஜமீந்தாரியில் பங்காளிகள் பலபேர் இருந்தால், ஒவ்வொருவருக்கும் காணிக்கை கொடுக்க வேண்டும். அதுவும் கொடுத்தான் பராண். பிறகு ஏஜண்டுக்குக் காணிக்கை; பிறகு குமாஸ்தா முதலிய மற்ற சிப்பந்திகளுக்கு. வரியும் காணிக்கைகளும் கொடுத்தே பராண் மண்டலின் பணம் காலியாகிவிட்டது. கொஞ்சம் பணம் பாக்கி நின்றுவிட்டது.

பணத்தையெல்லாம் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு வீடு திரும்பினான் பராண். வீட்டில் சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லை. பயிரிடும் பருவம் வந்து விட்டது. அதற்குச் செலவு செய்யப் பணம் வேண்டும். பராண் பயந்துவிட வில்லை. இந்த நிலை ஒவ்வோராண்டும் ஏற்படுவதுதான். இப்போது ஒரே கதி லேவா தேவிக்காரன். அவன் லேவா தேவிக்காரனிடம் போய் ஒன்றரை வட்டியில் நெல் கடன் வாங்கிவந்தான். அடுத்த ஆண்டு வட்டிக்கும் முதலுக்கு மாய் நெல்லைக் கொடுத்துவிட்டு மறுபடி வெறுங்கையுடன் நிற்பான். சாப்பாட்டுக்குக் கடன் வாங்குவதும் கடனுக்கு ஒன்றரை வட்டி கொடுப்பதும் விவசாயியின் நெடுங்கால வழக்கம். இந்த மாதிரி கடன் வாங்கிச் சாப் பிட்டால் அரசனும் ஆண்டியாகிவிடுவான். ஏழை விவசாயி எம்மாத்திரம்!

சில இடங்களில் ஜமீந்தாரே லேவாதேவித் தொழிலும் செய்கிறான். கிராமத்திலேயே அவனுடைய நெல் களஞ்சியமும் நெல் கொடுக்கல் வாங்கலைக் கவனித்துக் கொள்ள அலுவலகமும் இருக்கிறது. பராண் அங்கிருந்தே நெல் கடன் வாங்கி வந்தான். இந்த மாதிரி ஜமீந்தார்களுக்கு நல்ல லாபம். முதலில் குடிமக்களின் பணத்தை வரியின் பெயரால் பறித்துக் கொள்வார்கள், பிறகு அவனுக்கு நெல் கடன் கொடுத்து ஒன்றரை வட்டி வாங்குவார்கள். குடிமகனின் பணத்தை எவ்வளவு விரைவில் பறிக்க முடியுமோ அவ்வளவு அதிக லாபம் ஜமீந்தார்களுக்கு.

எல்லா ஆண்டுகளிலும் விளைச்சல் ஒரே மாதிரி இருக்காது. சில ஆண்டுகள் நல்ல விளைச்சல் இருக்கும், சில ஆண்டுகள் விளைச்சலே இருக்காது. அதிக மழை, அகால மழை, வறட்சி, வெள்ளம், வெட்டுக்கிளி, புழு பூச்சிகளால் பயிருக்குச் சேதம், நோயால் கால்நடைகள் சாவு இப்படி எவ்வளவோ விபத்துக்கள். நல்ல விளைச்சலுக்கான அறிகுறி இருந்தால்தான் லேவாதேவிக்காரன் கடன் கொடுப்பான், இல்லாவிட்டால் கொடுக்க மாட்டான். ஏனென்றால், விளைச்சல் இல்லாவிட்டால் விவசாயியால் கடனைத் திருப்பித் தர இயலாது என்று அவனுக்குத் தெரியும். கடன் கிடைக்காவிட்டால் உழவன் கதி அதோகதிதான். பட்டினி கிடந்து குடும்பத்துடன் சாக வேண்டியதுதான். சாப்பிட லாயக்கில்லாத வேர்களையும் கிழங்குகளையும் சாப்பிடுவான், சில சமயம் சர்க்காரின் 'பஞ்ச நிவாரணம்' அல்லது 'வெள்ள நிவாரண'த்தை நம்பிக் கொண்டிருப்பான்; சில சமயம் பிச்சையெடுப்பான், இல்லாவிட்டால் சாமி மேலே பாரத்தைப் போட்டுவிட்டுக் கிடப்பான். நல்ல மனமுள்ள ஒரு சிலரைத் தவிர மற்ற ஜமீந்தார்கள் கஷ்ட காலத்தில் உழவனுக்கு உதவ மாட்டார்கள்.

பராணுக்கு நல்ல காலம் என்றே வைத்துக் கொள்வோம். அவனுக்குக் கடன் கிடைத்துவிட்டது. அவன் அதைக் கொண்டு அப்போதைக்குக் காலங் கடத்திவிட்டான். அடுத்து ஆவணித் தவணை வந்துவிட்டது. பராணிடம் காசில்லை. வரியைத் தண்டல் செய்ய ஜமீந்தாரிடம் சிப்பந்திகள்—பாயிக், பியாதா, நகதீ, வரி வசூலிப்பவன், கோட்டால் முதலிய பலர் உண்டு. அவர்களில் ஒருவன் வரி வசூலிக்க வந்தான். வந்தவன் நல்லவனாயிருந்தால் பராணிடம் பணமில்லையென்று திரும்பிப் போவான். அல்லது பராண் கடன் வாங்கி வரியைச் செலுத்தலாம். அல்லது, பராணுக்குக் கெட்ட எண்ணம் ஏற்பட்டு அவன் தண்டல்காரனோடு சச்சரவு செய்யலாம். தண்டல்காரன் ஜமீந்தாரின் குமாஸ்தாவிடம் போய், "பராண் மண்டல் எங்களைத் திட்டினான்" என்று சொல்லிவிடுவான். உடனே ஜமீந்தாரின் தடியாட்கள் மூன்று பேர் போய்ப் பராணைக்கட்டி இழுத்துக் கொண்டு வருவார்கள். ஜமீந்தாரின் அலுவலகத்தில் பராணுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டுக்களும் நிறைய அடிகளும் கிடைக்கும். பராண் கொடுக்க வேண்டிய வரித்தொகையின் ஐந்து

மடங்கு அவனுக்கு அபராதம் விதிக்கப்படும். அத்துடன் அவனைக் காவல் காக்கும் தடியாட்களின் தினசரிப்படியையும் அவன்தான் கொடுக்க வேண்டும். கொடுக்கும் வரையில் அவன் அந்த அலுவலகத்தில் அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதான். வசதியுள்ளவன் யாராவது பராணுக்கு வேண்டிய வனாயிருந்தால் அவன் பணத்தைக் கொடுத்துப் பராணை மீட்டுக் கொண்டு போவான். இல்லையென்றால் பராண் ஒரு நாள், இரண்டு நாள், ஐந்து நாள், ஒரு வாரம்.... அங்கேயே கிடப்பான்.

பராணின் அம்மாவோ தம்பியோ போலீஸ் நிலயத்தில் சென்று புகார் செய்வதாக வைத்துக் கொள்வோம். சப் இன்ஸ்பெக்டர் பராணை விடுவிக்க ஒரு கான்ஸ்டபிளை அனுப்புவார். கான்ஸ்டபிள் துரை உலகத்துக்கே எஜமான். அவர் ஜமீந்தாரின் கச்சேரிக்கு வந்து சம்பிரமமாக உட்கார்ந்து கொள்வார். பராண் அவரிடம் வந்து அழுவான். கான்ஸ்டபிள் கொஞ்சம் ஆர்ப்பாட்டம் செய்வார், ஆனால் பராணை விடுதலை செய்யும் பேச்சே இருக்காது. அவர் என்ன செய்வார்? அவரும் ஜமீந்தாரிடம் பணம் வாங்கு கிறவர்தானே! வருடத்தில் இரண்டு மூன்று தடவை அவருக்கு திருவிழாக் காணிக்கை கிடைக்கிறது. அன்றும் அவருக்கு சகல இன்பங்களும் தரும் ரூபாயின் தரிசனம் கிடைக்கும். இந்த உருவத்தைக் கண்டதுமே காண்பவர் மனதில் மகிழ்ச்சி பொங்கும், பக்தியும் அன்பும் பிறக்கும். கான்ஸ்டபிள் துரை குமாஸ்தாவின் நடத்தையில் மகிழ்ந்து போய்ப் போலீஸ் நலையத்துக்குத் திரும்பி, "ஜமீந்தாரின் கச்சேரியில் பராண் மண்டல் இல்லை. அவன் ஒரு போக்கிரி. அவன் குளத்தங்கரையிலே பனைமரத்துக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்கிட்டிருந்தான். நான் ஒரு தடவை கூப்பிட்டதும் ஓடி வந்தான்" என்று தெரிவித்து விடுவார். பராண்மண்டலின் சார்பாகச் செய்யப்பட்ட புகார் பிசுபிசுத்து விடும்.

விவசாயியைப் பிடித்துக் கொண்டு ஜமீந்தாரின் கச்சேரியில் அடைத்து வைப்பது, அவனை அடிப்பது, அவனிடமிருந்து அபராதம் வசூலிப்பது இதெல்லாம் வரி பாக்கிக்காக மட்டும் நிகழ்வதில்லை. எந்தக் காரணத்தாலும் நிகழலாம். இன்று கோபால் மண்டல் குமாஸ்தாவிடம் போய் அவனுக்குச் சிறிது பணம் காணிக்கை கொடுத்து விட்டு, "பராண் மண்டல் எனக்குச் சேறு போடமாட்டேங்கறான்" என்று புகார் செய்கிறானென்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே பராணைக் கட்டியிழுத்துக் கொண்டு வந்து விடு வார்கள். நேபாள் மண்டல் இதே மாதிரி குமாஸ்தாவைத் திருப்திப் படுத்தி விட்டு, "பராண் என் தங்கச்சிமேலே ஆசை வச்சிருக்கான்" என்று புகார் செய்தால் உடனே பராண் கைதாகிக் குமாஸ்தாவின் முன்னால் ஆஜராக்கப் படுவான். பராணின் விதவை அண்ணி கர்ப்பிணியாகிவிட்டாள் என்ற செய்தி வந்தால் பராணைக் கட்டியிழுத்து வர ஆள் போவான். பராண் ஜமீந் தாரின் சார்பில் பொய் சாட்சி சொல்ல மறுக்கிறானா? உடனே அவனைப் பிடித்து வர ஆள் ஓடுவான்.

இறுதியில், பராணிடமிருந்து வரி வசூல் செய்தோ, அல்லது அவன் சார்பில் ஜாமீன் பெற்றோ, அல்லது வேறு தவணைகளில் பணத்தைக் கொடுக்க உத்திரவிட்டோ, அல்லது பின்னால் ஏதாவது ஏற்பாடு செய்யும் எண்ணத்தாலோ, போலீஸ் உபத்திரவம் மறுபடி ஏற்படலாம் என்று பயந்தோ, அலலது பராணை அடைத்து வைத்திருந்து பிரயோசனமில்லை என்றோ அவனை விடுதலை செய்யலாம். அப்படியானால் பராண் வீடு திரும்பி, மறுபடி பயிர்த்தொழிலில் ஈடுபடுவான்.

கார்த்திகை மாதத்தில் ஜமீன்தாரின் பேத்திக்குக் கலியாணம் அல்லது தம்பி பிள்ளைக்குச் சோறூட்டு விழா வருகிறது. அதற்கு 2000 ரூபாய் செலவாகும். குடிமக்கள் தாங்கள் கொடுக்கும் வரித்தொகைக்கேற்ப ரூபாய்க்கு நாலணா விகிதத்தில் காணிக்கை செலுத்தும்படி உத்திரவாயிற்று. மொத்த வசூல் 5000 ரூபாய். ஜமீந்தார் சோறூட்டு விழாவுக்கு 2000 ரூபாயைச் செலவு செய்து விட்டு மிச்சம் 3000 ரூபாயைத் தன் பெட்டியில் போட்டுக் கொள்கிறார்.

கொடுக்க முடிந்தவர்கள் காணிக்கை கொடுத்தார்கள், முடியாதவர்கள் கொடுக்கவில்லை. எதிர்பார்த்தபடி ஐயாயிரம் ரூபாய் வசூலாகவில்லை என்று வைத்துக் கொள்வோம். இதைக் கேட்டு ஜமீந்தார் தானே ஜமீந்தாரிக்கு விஜயம் செய்யத் தீர்மானிக்கிறான்.

ஜமீந்தாரின் வரவால் ஜமீந்தாரி கிராமங்கள் புனிதமாயின. பராண் மண்டலும் அவன் போன்ற மற்ற குடிமக்களும் விருந்தோம்பலில் ஈடுபடு கிறார்கள். ஜமீந்தாரின் கச்சேரி அலுவலகத்துக்கு முன்னால் பெரிய பெரிய கருப்பு வெள்ளாடுகள் கொண்டுவந்து கட்டப் படுகின்றன. உயிருள்ள பெரிய பலவகை மீன்கள்—ரூயி, காத்லா, மிருகால் முதலியன—கச்சேரி முற்றத்தில் துள்ளிக் குதிக்கின்றன. பெரிய பெரிய கத்தரிக்காய், உருண்டை உருளைக் கிழங்கு, பூக்கோசு, முட்டைக் கோசு, பச்சைப் பட்டாணி அறையை நிறைத்து விடுகின்றன. பால், தயிர், வெண்ணெயைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை.

குடிமக்களின் ஜமீந்தார் பக்தி அளவற்றது. ஆனால் ஜமீந்தாரின் வயிறு அப்படியல்லவே. கொண்டு வரப்பட்ட உணவுப் பண்டங்களை அவ னென்ன, அவனுடைய சிப்பந்திகள் எல்லோரும் சாப்பிட்டும் அவை தீர வில்லை. சிப்பந்திகளுக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டுவிட்டது.

இது போகட்டும். முக்கியமான விஷயமென்னவென்றால், ஜமீன்தாரின் வருகையை முன்னிட்டுக் குடிமக்கள் அவனுக்குப் பல வகைக் காணிக் கைகள்— நஜர், ஆகமனி, சலாமி முதலியன கொடுக்க வேண்டுமே! ஆகவே அவர்களது வரித்தொகைக்கேற்ப ரூபாயில் இரண்டணா விகிதம் வசூலிக்கப் படுகிறது. இதைக் கொடுக்க முடிந்தவர்கள் கொடுக்கிறார்கள். முடியாதவர்கள் கச்சேரிக்குக் கட்டியிழுக்கப்படுகிறார்கள் அல்லது அவர்கள் கொடுக்க வேண்டிய தொகை அவர்களுடைய வரித் தொகையோடு சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

பராண் மண்டலால் காணிக்கை கொடுக்க இயலவில்லை. ஆனால் அவனுடைய நிலத்தில் நல்ல விளைச்சல். இது குமாஸ்தாவின் கண்ணில்பட்டு விடுகிறது. அவன் எட்டணாவுக்கு ஸ்டாம்பு காகிதம் வாங்கி நீதிமன்றத்தில் ஒரு மனு கொடுக்கிறான். மனுவின் வாசகம் இதுதான். "பராண் மண்டலிடமிருந்து வரி பாக்கிக்காக வயலிலுள்ள அவனது நெல்லை ஜப்தி செய்ய விரும்புகிறோம். ஆனால் அவன் ஒரு போக்கிரி. ஜப்தி செய்தால் கலகம் செய்து எங்களைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தி ஆட்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறான். ஆகையால் கோர்ட்டார் பயிரைக் காவல் காக்க ஆட்களை நியமிக்க வேண்டும்." குமாஸ்தா பரம சாது, பராண் மண்டல் தான் அயோக்கியன்! ஆகவே நீதிமன்றம் காவலாட்களை நியமிக்கிறது. அவர்கள் குமாஸ்தா கொடுத்த ரூபாயின் கவர்ச்சியில் மயங்கி விடுகிறார்கள். அவர்களது மேற்பார்வையில் பயிர் அறுவடை செய்யப்பட்டு நெல் ஜமீந்தார் வீட்டுக் களஞ்சியத்துக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது.

இப்போது பராணுக்கு எல்லாம் போய்விட்டது. அவனால் இனி லேவாதேவிக்காரனின் கடனையும் திருப்பிக் கொடுக்க முடியாது, ஜமீந்தாருக்கு வரியும் கொடுக்க முடியாது. வயிற்றுக்குச் சாப்பிடவும் முடியாது. தண்ணீரில் இருந்து கொண்டு முதலையோடு சச்சரவு செய்யக் கூடாது என்று அவன் இவ்வளவு காலம் அடங்கியிருந்தான். இனி அவனால் பொறுக்க முடியாது. இதற்கு நீதி மன்றத்தில் வழக்குப் போடலாம் என்று கேள்விப்படுகிறான் அவன். ஆனால் வழக்குத் தொடுப்பது சாதாரண விஷயமல்ல. நீதிமன்றமும் வேசிவீடும் ஒன்றுதான். காசில்லாமல் இரண்டிலும் நுழைய முடியாது. ஸ்டாம்புக் காகிதத்துக்குக் காசு வேண்டும்; வக்கீல்பீசுக்குக் காசு வேண்டும்; வாதி தரப்பு சாட்சிகளுக்குப் படிச்செலவு கொடுக்க வேண்டும்; அவர்களைத் திருப்திப் படுத்தத் தனியாக ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும். அமீனுக்குக் காசு, நீதிமன்ற சிப்பந்திகளுக்குக் காசு.... பராண் பரம ஏழை. இருந்தாலும் அவன் கலப்பை, மாடு, பாத்திரம் பண்டங்களை விற்றுப் பணம் சேர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கிறான். இதைச் செய்வதைவிட அவன் கழுத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு செத்திருக்கலாம்.

உடனே ஜமீந்தாரின் தரப்பிலிருந்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவாகி விடுகிறது—பராண் மண்டல் ஜப்தி உத்திரவை மீறித்தன் பயிரை அறுவடை செய்து நெல்லை விற்றுவிட்டானென்று. சாட்சிகள் எல்லோரும் ஜமீந்தாரின் குடிமக்கள். அவர்களுக்கு ஜமீந்தாரிடம் அன்பு இல்லை, பயம். ஆகையால் அவர்கள் ஜமீந்தாருக்கு ஆதரவாகவே சாட்சியமளிக்கிறார்கள். நீதி மன்றம் அனுப்பிய காவலாளியும் ஜமீந்தாரிடம் வாங்கிக் கொண்ட லஞ்சத்துக்காக அவன் சார்பிலேயே சாட்சியம் சொல்கிறான். விளைவு, ஜமீந்தார் பக்கமே தீர்ப்பாகிறது. பராணின் புகார் தள்ளுபடி செய்யப்படுகிறது. பராண் இப்போது ஜமீந்தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும், வழக்குச் செலவையும்

கொடுக்க வேண்டும். அதாவது இரண்டு வழக்குகளுக்குமான செலவு அவன் தலைமேல்தான்.

பராணிடம் காசில்லை. அவன் எங்கிருந்து இவ்வளவு பணம் கொடுப் பான்? நிலத்தை விற்றுப் பணம் புரட்டமுடிந்தால் கொடுப்பான், அல்லது சிறைக்குப் போவான், அல்லது ஊரைவிட்டே ஓடிப்போய் விடுவான்.

இந்த மாதிரி எல்லாக் கொடுமைகளும் ஒரு விவசாயிக்கு ஒரே ஆண்டில் நேர்கின்றன என்றோ, எல்லா ஜமீந்தார்களும் இந்த மாதிரி கொடுமைக் காரர்கள் என்றோ நாம் கூறவில்லை. அப்படியிருந்தால் நாடே அழிந்து போயிருக்கும். பராண் மண்டல் ஒரு கற்பனைப் பாத்திரம். கொடுமைக்கார ஜமீந்தார்கள் தங்கள் குடிமக்களை எவ்வளவு வகைகளில் தன்புறுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதை விளக்கவே இந்த வர்ணனை. இன்று ஒரு விவசாயி ஒரு வகைக் கொடுமைக்கு ஆளாவான், நாளை இன்னொரு விவசாயி வேறொரு வகையில் துன்புறுத்தப்படுவான்.

ஆனால் ஜமீந்தார்கள் குடிமக்களுக்கு இழைக்கக் கூடிய எல்லா வகைக் கொடுமைகளும் இங்கு விவரிக்கப்படவில்லை. ஜமீந்தார்கள் சில இடங்களில் அவ்வப்போது எவ்வளவு முறைகளில் குடிமக்களிடமிருந்து பணம் பறிக் கிறார்களென்பதைப் பட்டியலிட்டுச் சொல்ல இயலாது. எல்லா இடத்திலும் ஒரே விதி இல்லை. ஓரிடத்திலேயே எல்லாக் குடிமக்களுக்கும் பொதுவான ஒரே விதியும் இல்லை. பல ஜமீந்தார்கள் எந்த விதியையும் மதிப்பதில்லை, முடிந்த வரையில் பணம் பறிப்பார்கள்.

உதாரணமாக நாம் ஓர் உண்மை நிகழ்ச்சியை விவரிக்கலாம். சென்ற ஆண்டு (அதாவது 1871ம் ஆண்டு) கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு கிராமத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி இது. கிராமத்தின் பெயரைத் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் ஆகஸ்ட் 31ம் தேதியிட்ட 'அப்சர்வரி'ன் 131ஆம் பக்கத்தைப் பார்க்கவும். கடும் வெள்ளம். கிராமம் கடலுக்கு நடு விலுள்ள தீவுபோல் தண்ணீரில் மிதந்தது. விவசாயிகளின் பயிரெல்லாம் நீரில் மூழ்கிவிட்டது. ஆடுமாடுகள் உணவின்றி இறந்தன. இந்த விபத்துக் காலத்தில் குடிமக்களுக்குப் பண உதவி, உணவு உதவி செய்து அவர்களைக் காப்பாற்று வது ஜமீந்தாரின் கடமை. அது இல்லாவிட்டாலும், வரி வஜா செய்தாவது குடிமக்களுக்கு உதவியிருக்கலாம். அதுதான் வேண்டாம், வரி வசூல் செய்வதையாவது சற்று ஒத்திப் போட்டிருக்கலாம். மாறாக, குமாஸ்தாக்கள் தண்டத் தீர்வைகள் வசூல் செய்யத் தடியாட்கள், அடியாட்கள் சகிதம் கிராமத் துக்கு வந்து விட்டார்கள். கிராமத்தில் வரிகொடுத்து விவசாயம் செய்பவர்கள் 12-14 பேர்தான். இன்னும் 12-14 பேர் கூலிக்கு வேலை செய்பவர்கள். குமாஸ் தாக்கள் விவசாயிகளிடம் ரூபாய் 54-2-0க்கு ஒரு பட்டியல் போட்டுக் கொடுத்து அந்தத் தொகையை வசூலித்துத் தரும்படி சொன்னார்கள்.

பட்டியலின் விவரம் பின்வருமாறு:

ஜமீந்தாரின் ஏஜெண்ட் வீட்டுத் திருவிழாவுக்குக் காணிக்கை	ரூ	6-0-0
ஜமீந்தாரியின் ஐந்து பங்காளிகளுக்குக் காணிக்கை	ரூ	5-0-0
குமாஸ்தாக்களுக்குக் காணிக்கை	ரூ	2-0-0
ஜமீந்தாரின் வேலையாளுக்குத் திருவிழாப்படி	ரூ	1-0-0
கோபால நகரில் மூங்கில் தூக்கி வரக்கூலி	ரூ	1-0-0
ஆனிமாத வரித் தவணையில் வேலைக்காரன்படி	ரூ	15-0-0
ஆவணித் தவணையில் வேலைக்காரன்படி	ரூ	1-5-0
படகு வாடகை	ரூ	1-8-0
தலைமை ஆபீஸ் அதிகாரிகளுக்குத் துர்க்கா பூஜைக் காணிக்கை	ரூ	6-8-0
கச்சேரி ஜமாதாருக்கு	ரூ	1-0-0
கச்சேரி வரி வசூலிப்பவனுக்கு	ரூ	1-0-0
ஐந்து ஜமீந்தாரிப்பங்காளிகளுக்கு திருவிழாச் சந்தா	ரூ	5-0-0
தலைமைக் குமாஸ்தா ராம் சென்னுக்கு	ரூ	1-0-0
ஜமீந்தாரின் புரோகிதனுக்குக் காணிக்கை	ரூ	2-0-0
மற்ற குமாஸ்தாக்களுக்கு	ரூ	12-0-0
கணக்கர்களுக்கு	ரூ	3-0-0
காவல்காரர்களுக்கு டோல் திருநாள் சந்தா	ரூ	1-0-0
தபால்வரி	ரூ	3-0-0
மொத்தம்	ரூ	54-2-0

மேற்கண்ட தொகையை வசூலிக்க விவசாயிகளிடமிருந்து அவர்கள் செலுத்தும் வரிக்கேற்ப ரூபாய்க்கு 3 அணா வசூலிக்க உத்திரவாயிற்று. அவர்களிடமிருந்து இவ்வளவு பணம் வசூலிப்பது முடியாத காரியம். ஆனால் ஜமீந்தாரின் குமாஸ்தாக்கள் இத்தகைய முடியாத காரியங்களையும் சாதித்துக் காட்டும் திறமையுள்ளவர்கள். விவசாயிகள் எப்படியோ திண்டாடி, மண்டை கலங்கி, கடன் வாங்கி, சொத்துக்களை விற்று, புரோநோட் எழுதிக் கொடுத்து அந்தத் தொகையைக் கொடுத்தார்கள். இது மனிதனால் பொறுக்க முடியாத கொடுமை என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் குமாஸ்தாக்கள் அப்படி நினைக்கவில்லை. ஒவ்வொரு விவசாயியும் ஒரு குபேரன் என்பது அவர்களது எண்ணம். இவ்வாறு ரூபாய் 54-2-0 வசூல் செய்து கொண்டு போய் ஐந்தாறு நாட்களுக்குள் அவர்கள் மறுபடியும் வந்துவிட்டார்கள். ஜமீந்தார் வீட்டுப் பெண்ணுக்குக் கலியாணமாம். அதற்குக் கிராமத்தார் 40 ரூபாய் சந்தா வசூல் செய்து கொடுக்க வேண்டுமாம்!

வேறு வழியில்லை விவசாயிகளுக்கு. அவர்கள் வாடகைக்குப் படகை எடுத்துக் கொண்டு நீலச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலையின் முதலாளியிடம் கடன் வேண்டினார்கள். அங்கே கடன் கிடைக்காமல் லேவாதேவிக்காரனிடம் வந்தார்கள். அவனும் தர மறுத்துவிட்டான்.

இப்போது விவசாயிகள் வேறு வழியின்றி ஜமீந்தாரி குமாஸ்தாக்கள் மேல் கிரிமினல் வழக்குத் தொடர்ந்தார்கள். மாஜிஸ்திரேட் குமாஸ்தாக்களுக்குத் தண்டனையளித்தார். தண்டனை பெற்றவர்கள் உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்தார்கள். ஜட்ஜ் துரை தம் தீர்ப்பில் கூறினார், "விவசாயிகளுக்குக் கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நான் சட்டப்படி குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு விடுதலையளிக்கிறேன்."

சரியான தீர்ப்பு! தீர்ப்பின் நோக்கமே குற்றவாளிகளை விடுதலை செய்வது தான் போலும்!

மேலே கூறப்பட்டுள்ளது ஒரு கற்பனைக் கதையல்ல, 'இந்தியன் அப்சர்வர்' பத்திரிகையில் விவரிக்கப்பட்ட நிகழ்ச்சி. எல்லா இனத்தாரிலும் கெட்டவர்கள் உண்டு. ஓரிரு கெட்டவர்களின் உதாரணத்தைக் கொண்டு அவர்கள் சார்ந்துள்ள இனத்தையே கெட்டதாக வர்ணிப்பது தவறு. மேலே குறிப்பிடப் பட்ட நிகழ்ச்சி அபூர்வமாக நேர்வதாயிருந்தால் நாம் அதைப்பற்றிச் சொல்லி யிருக்க மாட்டோம். ஆனால் இவ்வகை நிகழ்ச்சிகள் அடிக்கடி நேர்ந்து கொண்டு இருக்கின்றன. இதை மறுப்பவர்களுக்குக் கிராமங்களின் உண்மை நிலை தெரியவில்லை.

மேலே தரப்பட்டுள்ள பட்டியலின் கடைசி அயிட்டத்தைப் பாருங் கள்—'தபால் வரி'.

அரசாங்கம் பலவரிகள் விதிக்கிறதுது என்று ஜமீந்தார்கள் புகார் செய் கிறார்கள். அவர்கள் என்ன, தங்கள் சொந்தப் பணத்திலிருந்தா அந்த வரிகளைச் செலுத்துகிறார்கள்? இந்தத் 'தபால்வரி' ஒரு உதாரணம். கிராமங் களில் தபால் நிலையங்களை நிறுவுவதென்றும் அதற்கான செலவை ஜமீந் தார்கள் தர வேண்டுமென்றும் அரசாங்கம் முடிவு செய்தது. ஜமீந்தார்கள் நினைத்தார்கள், "சரி, செலவைக் கொடுப்போம். ஆனால் நம் பணத்திலிருந்து கொடுக்காமல் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து விடுவோம். வசூல் செய்யும் போது கொஞ்சம் கூடவே வசூலித்து அதிலும் லாபம் சம்பாதிப் போம்." அவர்கள் அவ்வாறே செய்தார்கள். விவசாயிகளின் செலவில் தபால் வசதி ஏற்பட்டது. இந்த வாய்ப்பில் ஜமீந்தார்களுக்கும் கொஞ்சம் லாபம் கிடைத்தது.

அரசாங்கம் ஒரு வரியை விதிக்கும்போது அதன் சுமை யார் மேல் விழு கிறது என்று யோசித்துப் பார்க்கட்டும்.

வருமான வரி விஷயமும் இப்படித்தான். விவசாயிகள் தாம் ஜமீந்தார்களின் வருமான வரியையும் செலுத்துகிறார்கள். இடையில் ஜமீந்தார்களுக்கும் கொஞ்சம் லாபம் கிடைக்கிறது.

நில உடமைக்காரர்களான ஜமீந்தார்கள் 'ரஸ்தாவரி' செலுத்த வேண்டும். ஆனால் இந்த வரியையும் அவர்கள் குடிமக்களிடமிருந்து வசூலித்து விடு கிறார்கள்.

ரஸ்தாவரி சட்டத்தில் இடம் பெற்றுவிட்டாலும் இக்கட்டுரை எழுதப்படும் நேரம் வரை அரசாங்கம் இன்னும் இந்த வரியை வசூலிக்கவில்லை. ஆனால் சில ஜமீந்தார்கள் தங்கள் குடிமக்களிடமிருந்து இதை வசூலிக்கத் தொடங்கி விட்டார்கள். சட்டப்படி அவர்களுக்கு வசூலிக்க உரிமை உண்டு. ஆனால் வரி விகிதம் ஒரு ரூபாய்க்குக காலணாவுக்கு மேலிருக்கக் கூடாது. ஆனால் ஒரு மாவட்டத்தில் ஒரு ஜமீந்தார் ரூபாய்க்குக் நாலணா விகிதத்தில் வரி வசூலிக்கத் தொடங்கிவிட்டான். ஒரு விவசாயி இந்த வரியைக் கொடுக்க மறுத்து, ஜமீந்தாரின் கொடுமைக்கு உள்ளானான். விவசாயி புகார் செய்தான். இந்தத் தடவை நீதி மன்றத்தில் 'சட்டப்படி' ஜமீந்தார் விடுதலை பெறவில்லை. அவன் இப்போது சிறை வாசம் செய்து கொண்டிருக்கிறான்.

'மருந்தக வரி' விஷயம் எல்லாவற்றையும் விட வேடிக்கையானது. மாவட்ட உட்கோட்ட அதிகாரிகளுக்கு பள்ளிகள், மருந்தகங்கள் அமைப்பதில் நிறைய உற்சாகம். 24 பர்கானாவில் ஒரு துணை மாஜிஸ்திரேட் தம் அதிகார வரம்புக்குட்பட்ட கிராமங்களின் ஜமீந்தார்களையழைத்து, "நாம் ஒரு மருந்தகம் அமைப்போம். அதற்கு நீங்கள் சந்தா கொடுங்கள்," என்றார். மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுப்பதாக ஜமீந்தார்கள் ஒப்புக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன் வீடு திரும்பியதும் அறிவித்தான்—"நான் மருந்தகத்துக்காக மாதாமாதம் பணம் தர வேண்டும். அந்தப் பணத்தை விவசாயிகள்தாம் கொடுக்க வேண்டும். அவர்கள் இனி ரூபாய்க்கு ஓரணா வீதம் 'மருந்தக வரி' கொடுக்க வேண்டும்." குமாஸ்தாக்கள் இந்த வரியை வசூலிக்கத் தொடங்கி விட்டார்கள்.

என்ன காரணத்தாலோ மருந்தகம் அமைக்கப்படவில்லை. ஆனால் வரி மட்டும் மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு ஜமீந்தாரின் பணப்பையை நிரப்பியது. சில ஆண்டுகளுக்குப் பிறகு ஜமீந்தார் 1859ஆம் ஆண்டின் பத்தாவது சட்டப்படி வரி உயர்த்த அனுமதி வேண்டினான். இந்தக் கோரிக்கையை எதிர்த்த குடிமக்கள் "நிலையான நில உரிமைச்சட்டம் அமுலானது முதல் எங்கள் வரி மாற்றப்படவில்லை. நாங்கள் ஒரே வரிதான் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகையால் இப்போது வரியை உயர்த்த ஜமீந்தாருக்கு உரிமையில்லை" என்று சொன்னார்கள். "குடிமக்கள் இன்ன ஆண்டிலிருந்து மருந்தக வரியாக ரூபாய்க்கு ஓரணாவீதம் அதிகத் தொகை செலுத்தி வருகிறார்கள். ஆகையால் வரியை உயர்த்த எனக்கு உரிமையுண்டு" என்றான் ஜமீந்தார்.

இந்தத் தருணத்தில் ஜமீந்தார்களின் சார்பாகவும் சற்றுக் கூற வேண்டும்.

முதலாவது, எல்லா ஜமீந்தார்களும் கொடியவர்களல்லர் என்று முன்னமே கூறியிருக்கிறோம். கொடுமைக்கார ஜமீந்தார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. கல்கத்தாவில் வசித்து வரும், கல்வியறிவுள்ள ஜமீந்தார்கள் கொடுமை செய்வதில்லை. அவர்களுக்குத் தெரியாமலும் அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாகவும் அவர்களுடைய சிப்பந்திகள்தாம்

குடிகளுக்குக் கொடுமையிழைக்கிறார்கள். கல்வியறிவுள்ள ஜமீந்தார்கள் பலர் கிராமங்களிலும் இருக்கிறார்கள். அவர்களும் பொதுவாக நல்லவர்கள்தாம். பெரிய பெரிய ஜமீந்தார்கள் அதிகம் கொடுமை செய்வதில்லை. பல பெரிய ஜமீந்தார்கள் முற்றிலும் நல்லவர்கள். சிறு சிறு ஜமீந்தார்களால்தான் அதிகக் கொடுமை நிகழ்கிறது. ஆண்டுக்கு லட்சரூபாய் வருமானம் பெறும் ஜமீந் தாருக்குக் குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து அவர்களிடமிருந்து இன்னொரு 25 ஆயிரம் ரூபாய் பறிக்க அவ்வளவு தோன்றாது. ஆண்டுக்கு 1200 ரூபாய் மாத்திரம் வருமானமுள்ள ஜமீந்தாரோ தன் அந்தஸ்தைக் காட்டிக் கொண்டு படாடோபமாகச் செலவு செய்யக் குடிகளிடமிருந்து பணம் பறிக்க விரும்பு வான். தவிர, ஜமீந்தார் தன் நேரடிக் குடிகளிடமிருந்து அவ்வளவு பணம் பறிக்க மாட்டான். ஜமிந்தாரிடமிருந்து நிலத்தைக் குத்தகை எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்குப் பயிரிட அந்த நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் குத்தகைக் காரர்கள்தாம் விவசாயிகளை அதிகம் துன்புறுத்துவார்கள். நாம் இந்தக் குத்தகைக் காரர்களையும் சேர்த்துதான் 'ஜமீந்தார்' என்ற சொல்லைப் பயன் படுத்துகிறோம். இங்கு 'ஜமீந்தார்' என்ற சொல் விவசாயியிடமிருந்து வரி வசூலிப்பவனைக் குறிக்கும். குத்தகையெடுப்பவர்கள் ஜமீந்தாருக்கு அவனுக் குரிய வரியைக் கொடுத்தபின் அதிக பட்ச லாபம் சம்பாதிக்க விரும்புவதால் குடிமக்களுக்குத் துன்பம் நேர்கிறது. ஜமீந்தாருக்கும் குடிமக்களுக்குமிடையே யுள்ள இந்த இடைத்தரகர்கள் தாம் குடிகளுக்குக் கேடு செய்கிறார்கள்.

இரண்டாவது, ஜமீந்தார்களுக்குத் தெரியாமல் அல்லது அவர்களது விருப் பத்துக்கு மாறாக அவர்களுடைய சிப்பந்திகளால் குடிமக்களுக்குத் துன்பம் நேர்கிறது.

மூன்றாவது, குடிகளில் சிலர் நல்லவர்களில்லை. துன்புறுத்தப்பட்டாலன்றி அவர்கள் வரி செலுத்த மாட்டார்கள். ஒவ்வொருவர்- மேலும் சட்டப்படி வழக்குத் தொடுத்து வரி வசூலிப்பது ஜமீந்தாரால் இயலாத காரியம். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் சொல்லத்தான் வேண்டும்— ஜமீந்தார் முதலில் கொடுமை செய்யாவிட்டால் அவனுடன் தகராறு செய்யும் மனநிலை குடிமக்களுக்கு ஏற்படாது.

ஜமீந்தார்களை மட்டும் தாக்குபவர்களை நாம் எதிர்க்கிறோம். ஜமீந்தார் களால் பல நல்ல காரியங்கள் நடக்கின்றன. அவர்களால்தான் இப்போது கிராமத்துக்குக் கிராமம் பள்ளிகள் ஏற்பட்டுள்ளன. கிராமவாசிகள் தங்கள் கிராமங்களிலிருந்து கொண்டே கல்வி பெறுகிறார்கள். 'ஜமீந்தார்கள் பல இடங்களில் பள்ளிகள், சாலைகள், பயணிச் சாவடிகள் அமைத்துப் பொது மக்களுக்கு நன்மை செய்திருக்கிறார்கள். பிற இனத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளிடம் நம் நாட்டு மக்களின் சார்பில் வாதாடக்கூடிய ஒரே அமைப்பு ஜமீந்தார்களின் நிறுவனமான 'பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷன்' ஆகும். இந்த சங்கத்தின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மை வேறெந்த

அமைப்பாலும் கிடைக்கவில்லை, கிடைக்க வாய்ப்பும் இல்லை. ஆகையால் ஜமீந்தார்களை மட்டும் குறை கூறுவது நியாயமல்ல. அவர்களது இனத்தைச் சேர்ந்த சிலரால் குடிமக்களுக்குத் தீங்கிழைக்கப்படுவது அந்த இனத்துக்கே இழுக்காகும். இந்த இழுக்கைப் போக்குவதும் அவர்களது கையில்தான் இருக்கிறது. ஐந்து சகோதரர்கள் கொண்ட ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் கெட்டவர்களாயிருந்தால் மற்ற மூவரும் அவர்களைத் திருத்த முயற்சி செய்கிறார்கள். ஜமீந்தார்களும் இவ்வாறு செய்ய வேண்டும் என்றுதான் நாம் கூறுகிறோம். அதற்காகத்தான் இந்தக் கட்டுரை. நம்முடைய புகாரை நாம் அரசாங்க அதிகாரிகளிடமோ பொதுமக்களிடமோ கூறவில்லை. ஜமீந்தார் களிடமே தான் கூறுகிறோம். தப்பு செய்யும் தங்கள் இனத்தவரைத் திருத்துவது ஜமீந்தார்களால் முடியாததல்ல. தன் இனத்தால் வெறுக்கப்படுவதும் இகழப் படுவதுமே எல்லா தண்டனைகளையும் விடப் பெரிய தண்டனையாகும். அதனால் நல்ல பலன் ஏற்படும். திருட ஆசையிருந்தும் திருட்டில் ஈடுபடா மலிருக்கும் பலர் தங்கள் அக்கம்பக்கத்தாரின் இகழ்ச்சிக்கு அஞ்சியே அவ்வாறு திருட்டைத் தவிர்க்கிறார்கள். இந்த அச்சம் சட்டத்தைவிட வலிமை யானது. இந்த ஆயுதம் ஜமீந்தார்களிடம் இருக்கிறது. தாம் குடிமக்களைக் கொடுமைப்படுத்தினால் மற்ற ஜமீந்தார்களின் வெறுப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஆளாவோம், ஜமீந்தார் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படுவோம் என்ற பய மிருந்தால் பல கொடிய ஜமீந்தார்கள் தங்கள் கொடுமையை விட்டுவிடுவார்கள். இந்த யோசனையை ஆராயுமாறு நாம் பிரிட்டிஷ் இந்தியன் அசோசி யேஷனைக் கேட்டுக் கொள்கிறோம். அவர்கள் கொடுமைக்கார ஜமீந்தார் களைக் கண்டித்துத் திருத்தினால் நாட்டுக்கு நன்மை; அவர்களுடைய பெருமையும் நெடுங்காலம் வரலாற்றில் பாராட்டிப் பேசப்படும். நாடு இன்னும் சிறந்த நாகரீக நிலைக்கு உயரும். இதைச் செய்யாவிட்டால் வங்காளம் நலம் பெற வாய்ப்பில்லை. இந்தக் காரியத்தைத் தொடங்குபவர் வங்காளிகளில் சிறந்தவராகப் புகழப்படுவார். இந்த யோசனையைச் செயல்படுத்துவது கடினந்தான், ஆனால் முயன்றால் முடியாததல்ல. மேலே குறிப்பிடப்பட்ட சங்கத்தின் நிர்வாகிகள் இதைச் செயற்படுத்த இயலாதவர்களென்று நாம் நம்பவில்லை. அவர்கள் கல்வியறிவும், தொலைநோக்கும், செயல்திறனும் படைத்தவர்கள். அவர்கள் ஒருமனதாகச் செயற்பட்டால் இந்தக் காரியத்தை செய்து முடிப்பதற்கான வழி புலப்படும். இந்த விஷயத்தில் சரியான வழியை நம்மைவிட அவர்களே கண்டு பிடிக்க முடியும் என்றுதான் செயற்பட வேண்டிய முறையை நாம் கூறாமல் அவர்களிடமே விட்டுவிட்டோம். எனினும் தேவைப்பட்டால், நம் சாதாரண அறிவுக்கு எட்டக்கூடிய வழிமுறை களைத் தெரிவிக்கத் தயாராயிருக்கிறோம். இப்போதைக்கு நாம் கூற விரும்பு வது இதுதான்—அவர்கள் இந்த விஷயத்தில் அக்கறை காட்டா விட்டால் அவர்களுக்கும் அவமானந்தான்.

மூன்றாவது இயல்

இயற்கை விதி

நாம் ஜமீந்தாரைக் குற்றஞ்சாட்டினாலும் சரி, அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டினாலும் சரி, வங்காள நாட்டு உழவனின் தாழ்நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல என்பதைக் கட்டாயம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பாரத நாட்டின் கீழ்மட்டத்து மக்களின் வீழ்ச்சி வெகுகாலமாகத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சியாகும். அநேதமாக நாட்டில் நாகரீகம் தோன்றியது முதலே விவசாயிகளின் கெட்டகாலமும் தொடங்கி விட்டது. ரோம் நகரம் ஒரு நாளில் அமைக்கப்படவில்லை என்று சொல்வதுண்டு. இந்த நாட்டு உழவர்களின் வீழ்ச்சியும் ஓரிரண்டு நூற்றாண்டுகளில் ஏற்பட்டுவிடவில்லை. இந்து அரசர்கள் நாட்டையாண்டபோது அவர்கள் மக்களைத் துன்புறுத்தவில்லை என்று முன்பு சொன்னோம். ஆனால் மக்கள் நல்ல நிலைமையில் இருந்தார்களென்று இதற்குப் பொருளல்ல. இப்போது ஜமீந்தார்கள் அரசனின் பிரதிநிதிகளாயிருந்து கொண்டு மக்களைத் துன்புறுத்துகிறார்கள். அந்தக் காலத்தில் வேறோர் இனத்தினர் மக்களைக் கொடுமைக்குள்ளாக்கினர். அவர்கள் யார் என்பதைப் பிறகு கூறுவோம். நம்நாட்டு சாதாரண மக்கள் ஏன் வெகுகாலமாக முன்னேறவில்லை என்பதை இப்போது ஆராய்வோம். வங்காள நாட்டு உழவனின் நிலையை ஆராய்வதே நமது முக்கிய நோக்கம் என்றாலும், நாம் கூறப் போகும் வரலாற்று விவரங்கள் வங்காள நாட்டுக்கு மட்டுமின்றி, பாரத நாடு முழுவதுக்குமே பொருந்தும். பொது மக்களுக்கு வங்காளத்தில் நேர்ந்த கதி தான் பாரதநாடு முழுவதும் நேர்ந்திருக்கிறது. காரணம், வங்காளம் பாரத நாட்டின் ஒரு பகுதிதான். நாம் விவரிக்கும் நிலை உழவர்களுக்கு மட்டுமல்ல, பாட்டாளிமக்கள் யாவருக்கும் பொருந்துவதாக எடுத்துக் கொள்ள வேண்டும். இருந்தாலும் பாட்டாளி மக்களின் மொத்தத் தொகையில் மிகப் பெரும் பான்மையினர் உழவர்கள்தாம்.

நாகரீகத்தின் வேரும் அளவுகோலும் அறிவு வளர்ச்சியே என்பதைப் பக்கின் துரை ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கிறார். அறிவு வளர்ச்சியின்றி ஒழுக்கம் வளராது என்று அவர் கூறுகிறார். இந்தக் கருத்தை நாம் ஏற்கவில்லை. ஆனால் அறிவு வளர்ச்சி நாகரீக வளர்ச்சிக்குக் காரணம் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அறிவு தானாகத் தோன்றுவதல்ல, உழைப்பால்தான் அதைப் பெறலாம். எவரும் கல்விப் பயிற்சியில் ஈடுபடாவிட்டால் சமூகத்தில் அறிவு பிறக்காது. ஆனால் கல்விப் பயிற்சிக்கு அவகாசம் தேவை. முதலில் பசியைத் தீர்த்துக் கொண்டுதான் பிறகு கல்விப் பயிற்சியில் ஈடுபடலாம். வெறும் வயிற்றில் யாரும் அறிவுத் தேட்டையில் இறங்க மாட்டார்கள். சமூகத்தில் எல்லோருமே உணவு தேடுவதில் மும்முரமாயிருந்தால் யாருக்குமே கல்வியறிவு சம்பாதிக்க நேரமிருக்காது. ஆகவே சமூகத்தில் ஒரு பிரிவு உட

லுழைப்பின்றியே தனக்குத் தேவையான உணவைப் பெறுவது நாகரீகம் தோன்றுவதற்கான கட்டாயத் தேவையாயிற்று. அதாவது சமூகத்தில் மற்ற வர்கள் உழைப்பார்கள், அந்தக் குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் உழைக்காமல் கல்விப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பார்கள். உழைப்பவர்கள் தங்களுக்குத் தேவையான உணவை மட்டும் உற்பத்தி செய்தால் இந்த ஏற்பாடு நிலைக்காது. ஏனென்றால் உழைப்பவர்களே உற்பத்தியான உணவைச் சாப்பிட்டு விடு வார்கள், மிச்சமேதும் இருக்காது. உழைப்பவர்கள் தங்கள் தேவைக்கு அதி கமாக உணவு உற்பத்தி செய்தால், அந்த அதிகப்படி உணவைக் கொண்டு கல்விப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பிரிவினருக்கு உணவிடலாம். இவ்வாறு உழைப்பவர்களின் தேவைக்கு அதிகப்படியான உணவை அல்லது பொருளை சேமிப்பு என்று சொல்லலாம். ஆகவே நாகரீகம் தோன்றுவதற்கு முதல் தேவை சமூக சேமிப்பு.

சமூக சேமிப்பு சில நாடுகளில் இருக்கிறது, சில நாடுகளில் இல்லை. அது இருக்கும் நாடு நாகரீகமாகவும், இல்லாத நாடு நாகரீகமற்றும் இருக்கிறது. என் னென்ன காரணங்களால் சில நாடுகளில் செல்வச் சேமிப்பு ஏற்படுகிறது? சுருக்கமாக இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒரு காரணம் நிலத்தின் செழிப்பு. செழிப்பான நிலமுள்ள நாட்டில் சிறிது உழைப்பாலேயே நிறையப் பயிர் விளையும். உழைப்பவர்களின் தேவை பூர்த்தியான பிறகும் உணவு தானியங்களும் பிற பொருள்களும் மிஞ்சும். இரண்டாவது காரணம், நாட்டின் வெப்ப தட்ப நிலை. இதன் விளைவுகள் இருவகைப்படும். ஒன்று, வெப்ப நாட்டில் மக்களுக்குக் குறைந்த உணவு போதும்; குளிர்மிக்க நாட்டில் மக்களுக்கு நிறைய உணவு தேவைப்படும். இதற்குச் சில இயற்கையான காரணங்கள் உண்டு. அவற்றை விவரிக்க இந்தச் சிறிய கட்டுரையில் இட மில்லை. பக்கின் துரையின் நூலைப் பின்பற்றி நாம் இக்கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். எந்த நாட்டில் உணவின் தேவை குறைவோ அந்த நாட்டில் விரை வில் சமூகச் சேமிப்பு வளர்கிறது. இரண்டாவது விளைவாகப் பக்கின் குறிப்பிடுவது—வெப்பமிக்க நாட்டில் உடலுக்கு வெப்பம் தரக்கூடிய உணவு அதிகம் தேவைப்படாது; குளிர் மிக்க நாட்டில் இந்த உணவு நிறையத் தேவைப்படும். நாம் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றிலுள்ள பிராண வாயுவுடன் நாம் உட் கொள்ளும் உணவிலுள்ள கரிமம் ரசாயன முறையில் சேர்வதால் உடலில் வெப்பம் ஏற்படுகிறது. ஆகவே கரிமம் அதிகமாக உள்ள உணவே அதிக வெப்பம் தரும். இறைச்சி போன்ற உணவில் அதிகக் கரிமம் இருப்பதால் குளிர் மிக்க நாடுகளின் மக்களுக்கு இறைச்சியுணவு அவசியம். வெப்ப நாடுகளில் இறைச்சியைவிடத் தாவர உணவுகளே அதிகம் தேவை. தாவர உணவு எளிதில் கிடைப்பது; விலங்குகளைக் கொன்று இறைச்சியைப் பெறுவது கடினம், இறைச்சிக்கேற்ற விலங்கும் எளிதில் கிடைக்காது. ஆகவே வெப்ப நாட்டில் உணவு எளிதில் கிடைக்கும்; ஆகையால் அங்கே செல்வச் சேமிப்பும் விரைவில் நிகழும்.

பாரதம் வெப்ப நாடு. நிலமும் செழிப்பானது. ஆகையால் இந்த நாட்டில் செல்வச் சேமிப்பு விரைவில் ஏற்படுவது சாத்தியம். ஆகையால் தான் நம் நாட்டில் வெகுமுன்பே நாகரீகம் தோன்றிவிட்டது. நாட்டில் செல்வம் சேர்ந்த தால் சமூகத்தில் ஒரு பிரிவினர் உடலுழைப்பில் ஈடுபடாமல் அறிவை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கினர். அவர்களுடைய அறிவு வளர்ச்சியால்தான் நாட்டில் நாகரீகம் வளர்ந்தது.

நாம் குறிப்பிடும் பிரிவு பிராமணர்கள்தாம் என்பதை வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் இந்த நாகரீக வளர்ச்சியே பொதுமக்களின் இழிநிலைக்குக் காரணம். எந்தக் காரணங்களால் நாட்டில் நாகரீகம் விரைவில் வளர்ந்ததோ அதே காரணங்களால்தான் அந்த நாகரீகம் மேலும் வளரவில்லை, சாதாரண மக்களின் நிலையும் சீர்கெட்டது. காலையிலேயே வானத்தில் மேகங்கள் கவிந்து கொண்டன.

சமூகத்தில் செல்வம் சேர்ந்ததும் சமூகம் இரண்டாகப் பிளவுபட்டது. ஒரு பிரிவு உழைத்தது, இன்னொரு பிரிவு உடலால் உழைக்கவில்லை. முதல்பிரிவு உற்பத்தி செய்த அதிகப்படி உணவை இரண்டாவது பிரிவினர் எடுத்துக் கொண்டனர். உழைக்காதவர்களுக்குத்தான் அவகாசம் கிடைத்தது. ஆகையால் கல்வியும் சிந்தனைத்திறனும் அவர்களது ஏகபோக உரிமை யாயிற்று. கல்வி கற்றவன், சிந்திக்கிறவன், அறிவுடையவன். இவையற்ற மற்ற வர்களை விட வலிமையுள்ளவனாயிருக்கிறான். ஆகையால் அவனுக்கே சமூகத்தில் முதலிடம் கிடைக்கிறது. உழைப்பாளிகள் இத்தகைய அறிவு ஜீவிகளுக்குக் கீழ்ப் படிகிறார்கள். அறிவு ஜீவிகளின் அறிவால் உழைப் பாளிகள் பயன் பெறுகிறார்கள். ஆகையால் அறிவு ஜீவிகள் தங்கள் சேவைக்கு உதியமாக உழைப்பவர்கள் உற்பத்தி செய்த செல்வத்தின் ஒரு பகுதியை எடுத்துக் கொள்கிறார்கள். உழைப்பாளிகளின் தேவைக்கு மேல் மிஞ்சிய செல்வமெல்லாம் அறிவு ஜீவிகளிடம் போய்ச் சேர்கிறது. ஆகவே நாட்டில் உற்பத்தியாகும் செல்வம் இரண்டு பிரிவுகளாகப் பிரிகிறது—ஒன்று, உழைப்பாளியின் 'கூலி'; மற்றது, தொழிலின் 'லாபம்' (நிலவரியும் வட்டியும் இந்த லாபத்தில் அடக்கம். விரிவஞ்சி நாம் இவற்றைத் தனியாகக் குறிப்பிட வில்லை). நாம் கூலி, லாபம் இந்த இரண்டு சொற்களையே பயன்படுத்து வோம். லாபம் அறிவு ஜீவிகளிடம் போய்ச் சேரும். அதன் ஒருபகுதியும் உழைப் பாளிகளுக்குக் கிடைக்காது; அவர்களுக்குக் கிடைப்பது கூலி மட்டுமே. உழைப்பாளிகள் எண்ணிக்கையில் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு லாபத்தில் ஒரு பகுதியும் கிடைக்காது.

நாட்டின் உற்பத்தி கோடி ரூபாய், அதில் பாதி கூலி, பாதி லாபம் என்று வைத்துக் கொள்வோம். நாட்டில் 25 லட்சம் உழைப்பாளிகள் இருந்தால், அவர் களுக்கிடையே கூலி சமமாகப் பங்கிடப்பட்டால், ஒவ்வொரு உழைப் பாளிக்கும் இரண்டு ரூபாய் கூலி கிடைக்கும். திடீரென்று அந்த நாட்டுக்கு

இன்னும் 25 லட்சம் உழைப்பாளிகள் வந்துவிட்டார்களென்று வைத்துக் கொள்வோம். இப்போது நாட்டில் 50 லட்சம் உழைப்பாளிகள். இப்போதும் அவர் களுக்கிடையே பங்கிடப்படக்கூடியது அதே 50 லட்சம் ரூபாய்தான். ஏனென்றால் லாபத்தில் ஒரு பங்கும் உழைப்பாளிகளுக்குக் கிடைக்காது. இப்போது உழைப்பாளி ஒவ்வொருவனுக்கும் ஒரு ரூபாய்தான் கிடைக்கும். ஆனால் முன்பு ஓர் உழைப்பாளி வாழ்க்கை நடத்த இரண்டு ரூபாய் தேவை என்ற அடிப்படையில்தான் அவனுக்கு இரண்டு ரூபாய் கிடைத்தது. இப்போது அவன் ஒரு ரூபாயில் வாழவேண்டிய கட்டாயம். ஆகையால் அவனது நிலை சீர்கெடுகிறது.

உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நாட்டில் உற்பத்தி யாகும் செல்வமும் இன்னும் ஒரு கோடி அதிகமானால் அதில்பாதி உழைப் பாளிகளுக்குக் கூலியாகக் கிடைக்கும். இப்போது ஒவ்வொரு உழைப் பாளிக்கும் முன்போல் இரண்டு ரூபாய் கிடைக்கும்.

ஆகையால் உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் அவர் களுக்குத் துன்பமுண்டாகும் என்பதைக் காண்கிறோம். ஆனால் இந்த எண்ணிக்கையின் உயர்வுக்கேற்ப நாட்டின் செல்வமும் வளர்ந்தால் உழைப் பாளிகளுக்குத் துன்பமில்லை. உழைப்பாளிகளின் எண்ணிக்கை உயரும் விகிதத்தைவிட அதிகமாக நாட்டின் செல்வம் பெருகினால் உழைப்பாளிகள் இன்னும் வசதியாக வாழ்வார்கள். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இதனால்தான் உழைப்பாளிகள் நல்லநிலையில் இருக்கிறார்கள். உழைப் பாளிகளின் எண்ணிக்கை உயர்வின் விகிதத்தைவிடச் செல்வ வளர்ச்சி விகிதம் குறைவாயிருந்தால் உழைப்பாளிகளின் துன்பம் பெருகும். இந்த நிலை தான் பாரத நாட்டில் முதல் கட்டத்திலேயே ஏற்பட்டுவிட்டது.

ஜனத்தொகை வளர்ச்சி இயற்கை நியதி. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து பல குழந்தைகள் பெறுகிறார்கள். அந்தக் குழந்தைகளில் ஒவ் வொருவரும் வளர்ந்ததும் இன்னொருவருடன் சேர்ந்து வேறு பல குழந்தை களைப் பெறுகிறார்கள். ஆகவே மனிதனின் தாழ்நிலைக்கு ஒரு காரணம் இயற்கையே எனலாம். எல்லா சமூகங்களிலும் இந்தக்கேடு நிகழ வாய்ப்பு உள்ளது. இந்தக் கேட்டைத் தடுக்கப் பல வழிகள் உள்ளன. ஒரு வழி செல்வத்தைப் பெருக்குவது. ஆனால் ஜனத் தொகை வளர்ச்சிக்கேற்பச் செல்வத்தைப் பெருக்குவது கடினம். ஆகவே வேறு வழிகளை மேற்கொள்ள வேண்டியதுதான். அத்தகைய வழிகள் இரண்டு உண்டு. ஒரு வழி, மக்களுக்குப் போதுமான உணவு உற்பத்தியாகாத நாட்டிலுள்ளவர்களில் ஒரு பகுதி வேறு நாட்டுக்குச் சென்று குடியேறுவது. ஜனத்தொகைக்குத் தேவையான அளவுக்கு மேலே உணவு உற்பத்தி செய்யும் நாட்டுக்கு அவர்கள் குடியேறிச் சென்றால் முதல் நாட்டின் பிரச்னை தீரும். ஜனத்தொகைப் பெருக்கத்தால் இரண்டாவது நாட்டுக்கும் தீமை நேராது. இந்த முறையால் இங்கிலாந்துக்குப் பெரும் நன்மை

கிடைத்துள்ளது. இங்கிலாந்தின் மக்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பல நாடுகளில் குடியேறியுள்ளனர். இதனால் இங்கிலாந்துக்கும் நன்மை, குடியேற்றம ஏற்பட்ட நாடுகளுக்கும் நன்மை.

இரண்டாவது வழி, திருமணங்களைக் குறைப்பது. எல்லோரும் திருமணம் செய்து கொண்டால் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு எல்லையிருக்காது. சிலர் திருமணம் செய்து கொள்ளாமலிருந்தால் ஜனத்தொகைப் பெருக்கம் ஓரளவு குறையும். ஒரு நாட்டு மக்கள் வசதியான வாழ்க்கைக்குப் பழகியவர்களாயிருந்து, அந்த வாழ்க்கை வசதிகளைச் சம்பாதிப்பது கடினமாயிருந்தால் அந்த மக்கள் திருமணம் செய்து கொள்ளும் விருப்பத்தை அடக்கிக் கொள்கிறார்கள். தங்களுக்குத் தேவையான வசதிகள் கிடைக்கும் வரை அவர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை.

பாரத நாட்டில் இந்த இரண்டு வழிகளுமே கையாளப்படவில்லை. வெப்பம் உடலைத் தளரச் செய்யும்; கடின உழைப்புக்கு ஊக்கமளிக்காது. வேறு நாடுகளில் குடியேறுவதற்கு உற்சாகம், உழைப்பு, முயற்சி இவையெல்லாம் தேவை. நம் நாட்டு இயற்கையும் இந்த முயற்சிக்கு இடையூறாக அமைந்து விட்டது. பாரதநாடு கடக்கவியலாத மலைகளுக்கும் அடிக்கடி புயல்கள் வீசும் கடல்களுக்குமிடையே இருக்கிறது. யவத்தீவு, பாலித்திவு தவிர வேறு எந்த நாட்டிலும் இந்துக்கள் குடியேறியதாகத் தெரியவில்லை. பாரதத்தில் பெரும் பரப்பைக் கருத்தில் கொண்டால் இந்த இரண்டு குடியேற்றங்களும் குறிப்பிடத் தக்கவையல்ல.

திருமண ஆசையைத் தடுத்துக் கொள்ளும் விஷயத்தில் பாரதத்தின் நிலை இன்னும் மோசம். மண்ணைக் கிளறினாலே இங்கு பயிர் விளைகிறது. உற்பத்தியான உணவில் சிறிது உண்டால் உடல் நலம் ஏற்படுகிறதோ இல்லையோ, பசி தீர்கிறது. உயிர் வாழ முடிகிறது. காற்றில் வெப்பம் மிகுந்திருப்பதால் அதிக உடைகள் தேவையில்லை. ஆகவே எளிய முறையில் வாழ்க்கை நடத்துவது சுலபம். இந்த நிலையில் யாரும் குடும்பத்தைப் பராமரிக்க முடியாதோ என்று அஞ்சுவதில்லை. ஆகவே யாரும் திருமண ஆசையைத் தவிர்ப்பதில்லை. கருத்தடை முறையெதுவும் கடைப்பிடிக்கப்படாததால் ஜனத் தொகை தடையின்றி வளர்ந்துவிட்டது. இதன் விளைவாக நாட்டில் நாகரீகம் தோன்றிச் சிறிது காலத்திலேயே உழைப்பாளிகளின் கெட்ட காலமும் தொடங்கிவிட்டது. நாகரீகம் தோன்றக் காரணங்களாயிருந்த நிலச்செழிப்பும் வெப்பக் காற்றுமே பொதுமக்களின் தாழ்நிலைக்கும் காரணங்களாகி விட்டன. ஆகவே நாகரீக வளர்ச்சி, உழைப்பாளி மக்களின் தாழ்வு இரண்டுமே இயற்கை விதிகளின் விளைவுகள்.

இவ்வாறுதான் உழைப்பாளிகளின் வீழ்ச்சி தொடங்கியது. வீழ்ச்சி ஒரு முறை தொடங்கிவிட்டால் அந்த வீழ்ச்சியின் விளைவாகவே இன்னும் வீழ்ச்சி நேரும். உழைப்பாளிகளின் வீழ்ச்சியின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க,

அவர்களுக்கும் சமூகத்தின் மற்ற பிரிவினருக்குமிடையே வேற்றுமையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. முதலில், செல்வத்தால் வேற்றுமை ஏற்பட்டது. பிறகு உரிமைகளில் வேற்றுமை ஏற்பட்டது. உழைப்பாளிகள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டு அறிவு ஜீவிகள் அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்கள். இந்த ஆதிக்கம் வளர்ந்து கொடுமை ஆகியது. இதன் அடிப்படையில்தான் சூத்திரர்களைத் துன்புறுத்தும் சாத்திரங்கள் தோன்றின.

நாம் மேலே கூறியுள்ள கருத்துக்களின் சுருக்கம் பின்வருமாறு:

1. உழைப்பாளிகளின் தாழ்நிலைக்கான காரணங்களின் விளைவுகள் மூன்று.

முதல்விளைவு, உழைப்புக்கான கூலி அளவில் குறைவு. இதன் மறுபெயர் வறுமை.

இரண்டாவது விளைவு, கூலி குறைவாயிருந்தால் அந்தக் குறைவைச் சரிப் படுத்த இன்னும் அதிகம் உழைக்க வேண்டும். இதனால் ஓய்வு நேரம் குறைவு. ஓய்வுக் குறைவால் கல்வி கற்க வாய்ப்பும் குறைகிறது. ஆகவே இரண்டாவது விளைவு கல்வியறிவின்மை.

மூன்றாவது விளைவு, உழைப்பாளிகளின் மேல் அறிவு ஜீவிகளின் அதிகார வளர்ச்சி, அதாவது கொடுமை வளர்ச்சி. இதற்கு மறுபெயர் உழைப் பாளிகளின் அடிமைத்தனம்.

2. வறுமை, கல்வியறிவின்மை, அடிமைத்தனம் இவை ஒரு முறை தோன்றி விட்டால், நாட்டில் இயற்கை விதிகளின் விளைவாக, நிலைத்துப் போய் விடுகின்றன.

செல்வச் சேமிப்பே நாகரீகத்தின் முதல் அடிப்படை என்பது முன்னமே காட்டப்பட்டிருக்கிறது. பண ஆசையே நாகரீக வளர்ச்சியின் நிலையான காரணம் என்று சொன்னாலும் மிகையாகாது. மனித மனத்தின் இரண்டு தூண்டுதல்கள் சமூக முன்னேற்றத்துக்குக் காரணமாகின்றன. ஒன்று பண ஆசை, மற்றது அறிவுத்தாகம். இவற்றில் அறிவுத் தாகம் போற்றத்தக்க தென்றும் பண ஆசை சுயநலத்தைப் பேணுவதால் இகழ்ச்சிக்குரியதென்றும் கருதப்படுகிறது. ஆனால் லேக்கி துரை 'History of Rationalism in Europe' என்ற தம் நூலில், பண ஆசையே அறிவுத் தாகத்தைவிட அதிகமாக மனித இனத்தின் நலனைச் சாதித்திருப்பதாகக் கூறுகிறார். அறிவுத்தாகம் சிலருக்கே ஏற்படு கிறது. பண ஆசையோ எல்லோருக்கும் பொதுவானது; ஆகையால் அதனால் அதிகப் பலன் கிடைக்கிறது. நாட்டில் உற்பத்தியாகும் செல்வத்தால் மக்களின் உணவு, உடைத் தேவைகள் தீர்க்கப்பட்டாலும் சமூகத்தின் பண ஆசை குறைவதில்லை. இன்னும் பல புதிய வசதிகளைப் பெற ஆசை உண்டாகிறது. முன்பு தேவையற்றதாகக் கருதப்பட்ட வசதிகள் பின்னர் மிக அவசியமாகத் தோன்றுகின்றன. அவையும் கிடைத்துவிட்டால் வேறு சில

வசதிகள் அவசிய மாகிவிடுகின்றன. ஆசை ஏற்பட்டால் முயற்சி தோன்று கிறது. முயற்சியால் வெற்றி. இவ்வாறு இன்பங்களும் நலனும் பெருகுகின்றன. ஆகவே வசதி களைப் பெருக்கிக் கொள்வதில் ஆசை,-நாகரீக வளர்ச்சிக்கு இன்றியமையாதது. புற இன்பங்களுக்கான ஆசைகள் தீர்க்கப்பட்ட பின்னர் அறிவுக்காக ஆசை, அழகுக்காக ஆசை, இலக்கியத்தில் ஈடுபாடு, பிற கலைகளில் நாட்டம் ஆகியவை பிறக்கின்றன. மேலும் மேலும் வசதிகளடைய ஆசையில்லா விட்டால் உழைத்துப் பாடுபட விருப்பமிருக்காது; வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற ஊக்கமிருக்காது, அதற்கான முயற்சியும் இருக்காது. ஆகவே உணவு எளிதில் உற்பத்தியாகும் நாட்டில் ஜனத்தொகைப் பெருக் கத்தைத் தடுக்கும் சூழ்நிலை இருக்காது. ஆகையால் எளிதில் திருப்தியடைந்து விடும் மனப்பான்மை கவிகளால் பெரிதும் புகழப்பட்டாலும் அது சமூகத்தின் முன்னேற்றத்துக்குப் பெருந்தடையாகும்.

நம் நாட்டில் இயற்கைக் காரணங்களால் இந்த மனப்பான்மை எளிதில் உண்டாகிவிட்டது. அதிக வெப்பங்காரணமாக இந்த நாட்டில் வெகுநேரம் தொடர்ந்து உழைப்பது கடினம். இதன் விளைவாக உழைப்பில் ஆர்வமின்மை மக்களுக்குப் பழக்கமாகிவிட்டது. இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. வெப்பமிக்க நாட்டில் உடலைச் சூடாக்க வேண்டிய அவசியமில்லாததால் அந்த நாட்டு மக்கள் வேட்டை போன்ற தொழில்களில் அவ்வளவு ஈடுபடுவ தில்லை என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. காட்டு மிருகங்களை வேட்டை யாடிக் கொன்று உண்பவர்களுக்கு உழைப்பு, துணிவு, வலிமை, சுறுசுறுப்பு ஆகிய தன்மைகள் பழக்கமாகிவிடுகின்றன. முன் காலத்தில் ஐரோப்பாவில் இந்தத் தன்மைகள் வளர்ந்தது ஐரோப்பிய நாகரீகத்தின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். நம் நாட்டிலோ உழைப்பின் தேவை குறைவாயிருப்பதால் அதிக உழைப்பில் ஆர்வமின்மை, அதிலிருந்து சோம்பல் முதலியவை தோன்றுகின்றன. இந்த ஆர்வமின்மையையும் சோம்பலையுந்தான் நாம் 'திருப்தி' என்று சொல்லிக் கொள்கிறோம். நம்நாட்டு மக்கள் ஒரு முறை வீழ்ச்சியடைந்தபின் அந்த நிலையிலேயே திருப்தியடைந்து விட்டார்கள். அவர்கள் மேலும் உழைக்காததால் அவர்களது நிலை உயரவில்லை. தூங்கிக் கொண்டிருக்கும் சிங்கத்தின் வாயில் அதன் உணவு தானாக வந்து விழாது.

பாரதத்தின் பழைய வரலாற்றை ஆராய்ந்தால் 'திருப்தி'யைப் பற்றிப் பல்வகைக் கருத்துக்களைக் காணலாம். இந்து மதம், பௌத்தமதம் இரண்டுமே உலக இன்பங்களில் பற்றின்மையைப் போதிக்கின்றன. பிராமணர், பௌத்தர், ஸ்மார்த்தர், தத்துவவாதி எல்லோருமே உலக இன்பம் விரும்பத் தக்கதல்ல என்று பாரத மக்களுக்குத் தீவிரமாக அறிவுறுத்தி வந்திருக் கிறார்கள். ஐரோப்பாவிலும் மதப் பிரசாரகர்களால் இந்தக் கருத்து போதிக் கப்பட்டது. அங்கே ரோமானிய நாகரீகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆயிரம் ஆண்டுகள் மக்களின் வாழ்க்கை நிலை தாழ்ந்திருந்ததற்கு இந்தப் பிரச்சாரமே காரணம். இத்தாலி நாட்டில் பண்டைய கிரேக்க இலக்கியமும் தத்துவமும்

மறுமலர்ச்சி பெற்றபோது அதன் விளைவாக ஏற்பட்ட கல்வி வளர்ச்சி இந்தத் துறவு மனப்பான்மையைக் குறைத்துவிட்டது. கூடவே நாகரீகமும் வளர்ந்தது. ஆகையால் ஐரோப்பாவில் துறவு மனப்பான்மை வேரூன்ற இயலவில்லை. பாரதத்திலோ இது மனித இயற்கையாகிவிட்டது. ஒவ்வொரு தாவரமும் தனக்கேற்ற நிலத்தில்தான் வேரூன்றும். நம் நாட்டின் இயற்கை நிலை காரண மாகத்தான் இங்கு துறவு மனப்பான்மைப் பிரசாரம் வலுப்பெற்றுவிட்டது. மக்களிடம் இயற்கையாகவேயிருந்த ஆர்வமின்மை இந்தப் பிரசாரத்தால் இன்னும் உறுதியாகிவிட்டது.

3. மேலே கூறப்பட்ட காரணங்களால் உழைப்பாளிகளின் வீழ்ச்சி மட்டுமே நிலையாகி விட்டது என்பதில்லை. சமூகத்தின் மற்ற பிரிவினரும் வீழ்ச்சி யடைந்தனர். ஒரு குடம் பாலில் ஒரு சொட்டு அமிலம் விழுந்தால் பால் முழு வதும் திரிந்து விடுவது போல் கீழ்மட்டத்து மக்களின் தாழ்நிலை மேல் மட்டத்து மக்களையும் பாதித்தது.

(அ) பண்டைக்கால ஆரியர் தொழிலுக்கேற்ப நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்—பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர். கீழ்மட்டத் திலுள்ளவர் சூத்திரர்; அவர்களது பரிதாபநிலை பற்றித்தான் நாம் இதுவரை கூறினோம். வைசியர் வியாபாரிகள். ஒரு நாட்டின் வாணிபம் அந்த நாட்டில் உழைப்பாளிகளால் உள்நாட்டுத் தேவைக்கதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் அளவைப் பொருத்தது. உபரி உற்பத்தி இல்லாத நாட்டின் வாணிபம் வளராது. வாணிபம் வளராவிட்டால் வியாபாரிகள் செழிக்க மாட்டார்கள். தேவைப்பெருக்கந்தான் வியாபாரத்துக்கு வேர். நமக்குப் பிற நாட்டுப் பொருள்களை வாங்கவிருப்பமில்லாவிட்டால் வியாபாரிகள் பிற நாட்டுப் பொருள்களை நம்மிடம் விற்கக் கொண்டு வரமாட்டார்கள். ஆகவே உள்நாட்டுப் பொருள்களோடு திருப்தியடைந்துவிடும் நாட்டில் வியாபாரி களுக்கு வளர்ச்சி ஏற்படாது. அப்படியானால் பாரதநாட்டில் வர்த்தகம் இல்லையா என்ற கேள்வி எழலாம். இருந்தது; ஆனால் பெரும் நிலப்பரப்பும், செழிப்பான நிலமும், மற்ற செல்வங்களும் வாய்ந்த பாரதநாட்டில் வர்த்தகம் எவ்வளவு வளர வேண்டுமோ அவ்வளவு வளரவில்லை. வளர்வதற்கான வாய்ப்பு பண்டைய காலத்திலேயே பாரதநாட்டில் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாகத்தான் வர்த்தகம் தொடங்கியிருக்கிறது. வர்த்தகத்தின் இழி நிலைக்கு, சாத்திரங்களின் தடை, சமூகத்தின் ஆர்வமின்மை வேறு பல காரணங்களும் உண்டு. இவற்றையெல்லாம் இக்கட்டுரையில் விவரிக்கத் தேவையில்லை.

(ஆ) சத்திரியர்கள் நாட்டை ஆள்பவர்கள், அரசர்கள். உலக வரலாற்றை ஆராய்ந்தால் அதிலிருந்து தெரியவரும் மிக உறுதியான உண்மை இது தான்—சாதாரணமக்கள் துணிவுள்ளவர்களாகவும் அரச இனத்துடன் போட்டி போடுபவர்களாகவுமில்லாவிட்டால் அரச இனத்தாரின் தன்மையில் உயர்வு ஏற்படாது, அந்த அரச இனம் நசித்துப் போகும். குடிமக்கள் தட்டிக் கேட்காம

லிருந்தால் ஆள்பவர்கள் தான்தோன்றித்தனமாக ஆட்சி நடத்தத் தொடங்கு வார்கள். இதன் விளைவாக அவர்கள் தங்கள் சொந்த இன்பத்தில் கருத்துள்ள வர்களாகவும், சோம்பேறிகளாகவும் கெட்டவர்களாகவும் ஆகிவிடுவார்கள். குடிமக்கள் வறுமையில் உழன்று கொண்டு, எப்போதும் வயிற்றுப் பாட்டுக்கே கவலைப்பட்டுக்கொண்டு, அதே சமயம் கொஞ்சம் கிடைத்தாலும் திருப்தி யடைந்து விடுபவர்களாக இருந்தால், அவர்கள் துணிவோ உற்சாகமோ அற்ற வர்களாக, அடிமைத்தனம் கொண்டவர்களாக விளங்குவார்கள். இந்த நிலைதான் பாரதநாட்டில் இருந்தது. அதனால்தான் மகாபாரதத்தில் வலிமை மிக்கவர்களாகவும் அறத்தில் பற்றுள்ளவர்களாகவும் புலனடக்கமுள்ளவர் களாகவும் வருணிக்கப்பட்ட அரச குலத்தினர் பிற்காலத்தில் சம்ஸ்கிருத காவியங்களிலும் நாடகங்களிலும் சித்திரிக்கப்பட்டாற்போன்று வலிமை யற்றவர்களாக, புலன்களுக்கு அடிமைகளாக, பெண்ணாசை கொண்ட வர்களாக, சோம்பேறிகளாகத் தாழ்ந்து போய்க் கடைசியில் முஸ்லிம்களால் அழிக்கப்பட்டார்கள். ஆண்மை மிக்க குடிமக்கள் வாழும் நாட்டில்அரச இனத் துக்கு இத்தகைய வீழ்ச்சி ஏற்படாது. ஏனென்றால் அரசர்கள் தீங்கு செய்ய முற்பட்டால் குடிமக்கள் சீறியெழுந்து அவர்களை எதிர்ப்பார்கள். இந்த எதிர்ப்பால் இருபாலருக்குமே உயர்வு ஏற்படும். அரசர்கள் குடிமக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி எப்போதும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். எதிர்ப்பால் ஏற்படுவது இந்த ஒரு நன்மை மட்டுமல்ல. தினம் சண்டையிட்டால் உடல் வலிமை அதிகரிக்கும். எதிர்ப்பு இருந்தால் நல்ல தன்மைகள் வளரும். எதிர்ப் பின்றேல் அவை நசியும். பாரதத்தில் சூத்திரனின் அடிமைத் தனத்தால் சத்திரி யனின் செல்வமும் அறமும் அழிந்தன. ரோமாபுரியில் 'பிளெபியன்' எனப் படும் பொதுமக்களும் இங்கிலாந்தில் 'காமன்ஸ்' எனப்படும் பொது மக்களும் அரசர்களின் தான்தோன்றித்தனத்தை எதிர்த்ததால் அந்த நாடுகளில் அரசர்களுடைய நிலையும் உயர்ந்தது.

(இ) கீழ்மட்டத்து மக்களின் வீழ்ச்சியால் சத்திரியர்கள் வீழ்ச்சியடைந்தது போல் பிராமணர்களும் வீழ்ச்சியடைந்தார்கள். முதலில் மற்ற மூன்று வருணத் தாரின் வீழ்ச்சியில் பிராமணர்களின் அதிகாரம் வலுத்தது. இந்த வருணங்கள் மனவலிமையிழந்து கிளைமதங்களின் ஆதிக்கத்துக்குள்ளாயின. வலிமை குறைந்தால் பயம் வளரும். கிளை மதங்கள் பயத்திலிருந்து பிறப்பவை. உலகத்தில் மனிதருக்குத் தீங்கு செய்யும் வலிமை மிக்க தேவதைகள் மிகுந் துள்ளன என்ற அச்சமே கிளைமதங்கள் தோன்றக் காரணம். மற்ற மூன்று வருணத்தாரும் இந்தக் கிளை மதங்களுக்கு அடிமைப்பட்டபோது அவற்றின் பூசாரிகளாகத் திகழ்ந்த பிராமணர்களின் செல்வாக்கும் அதிகரித்தது. பிராமணர்கள் சாத்திரங்கள், கருமங்கள் என்ற வலைகளால் மற்ற வருணத் தாரைக் கட்டிப் போட்டார்கள். சிலந்தி வலையிலகப்பட்ட ஈக்களால் நகரக் கூட முடியாது. இப்போதும் சிலந்தி வலை பின்னுவது நிற்கவில்லை. ஆட்சி யாளர்கள் குடிமக்களைப் பேணுதல், குற்றவாளிகளைத் தண்டித்தல், பிற

அரசர்களுடன் போர் அல்லது சமாதானம் செய்து கொள்ளுதல் போன்ற முக்கியமான அலுவல்களைக் கைவிட்டு உணவு, உடை, தூக்கம், பேச்சு, அழுகை, சிரிப்பு போன்ற விஷயங்களில் கூடப் பிராமணர்கள் விதித்த முறைகளைக் கடைபிடிக்கத் தொடங்கினர். "நாங்கள் சொல்கிறபடிதான் நீங்கள் உட்கார வேண்டும், உண்ண வேண்டும், நடக்க வேண்டும், பேச வேண்டும், அழவேண்டும், சிரிக்க வேண்டும். உங்கள் பிறப்பு முதல் இறப்பு வரை நாங்கள் வகுத்திருக்கும் விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மீறினால் எங்களுக்குத் தட்சிணை கொடுத்துப் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்" இவ்வாறு விரிந்தது வலை. (இந்த நிலையால் வேறொரு நல்ல விளைவும் உண்டு. அதை நாம் 'தர்ம தத்துவம்' என்ற கட்டுரையில் விளக்கியுள்ளோம்.)

ஆனால் பிறரைக் குழப்பத்தில் ஆழ்த்துபவன் இறுதியில் தானும் குழம்பி விடுவான். குழப்பத்தைக் கையாள்பவனுக்கு அது பழக்கமாகிவிடும். ஒரு விஷயத்தில் பிறருக்கு நம்பிக்கையூட்ட முயல்பவன் தானும் அதை நம்புவதாகக் காட்டிக் கொள்ள வேண்டும். பிறகு அவனே அதை நம்பத் தொடங்கி விடுவான். பிராமணர்கள் மற்றவர்களைக் கட்டிப் போடப் பின்னிய வலை யில் தாங்களே அகப்பட்டுக் கொண்டனர். மனிதனின் சுதந்திர நடத்தைக்கு தேவையற்ற தடைகள் ஏற்பட்டால் சமூகம் வீழ்ச்சியுறும் என்பது வரலாற்றின் படிப்பினை. இந்து சமூகத்தின் வீழ்ச்சிக்குக் கூறப்பட்ட காரணங்களில் மிகவும் முக்கியமானது இது. இப்போதும் இதே நிலைதான். தடுப்பவனும் தடுக்கப்பட்டவனும் ஒரே மாதிரி பாதிக்கப்படுகிறார்கள். விதிமுறைகளின் வலையிலகப்பட்ட பிராமணர்களின் அறிவுத்திறன் குறைந்தது. இராமா யணம், மகாபாரதம், பாணினியின் இலக்கணம், சாங்கிய தத்துவம் ஆகிய வற்றை இயற்றிய பிராமணன் இப்போது வாசவதத்தை, காதம்பரி போன்ற காவியங்கள், நாடகங்கள் இயற்றுவதில் பெருமைப்படத் தொடங்கினான். இறுதியில் காவியம் இயற்றும் திறனும் அழிந்தது. பிராமணனின் மனமாகிய நிலம் வறண்ட பாலைவனமாயிற்று.

நிலத்தின் செழிப்பு, காற்றின் வெப்பம் இவ்விரண்டையும் பாரதநாட்டு உழைப்பாளிகளின் நெடுங்கால இழிநிலைக்குக் காரணங்களாகக் குறிப் பிட்டோம். இந்த இரு காரணங்களால்தான் நம் நாட்டில் நாகரீகம் மிகப் பண்டைய காலத்தில் தோன்றியது. ஆனால் இதே காரணங்களால் உழைப் பாளிகளின் கூலித்தொகை மிகவும் குறைந்துவிட்டது. இதனால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு வளர்ந்தது. இதன் விளைவுகள்: முதலாவது—உழைப்பாளிகளின் (1) வறுமை; (2) அறிவின்மை; (3) அடிமைத்தனம்; இரண்டாவது— இந்த நிலைகள் ஒருமுறை தோன்றியபின் இயற்கை விதிப்படி நிலைத்துவிட்டன; மூன்றாவது—இந்த வீழ்ச்சி சமூகத்தின் மற்ற பிரிவினரையும் பாதித்தது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எல்லாருமே ஒரே வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு பள்ளத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

இவையெல்லாம் மீற முடியாத இயற்கை விதிகள் என்றால் வங்காளநாட்டு விவசாயிகளுக்காகக் கூச்சல் போட்டு என்ன பயன் என்ற கேள்வி எழலாம். அரசன் நல்ல சட்டமியற்றினால் பாரதநாடு குளிர்நாடாகிவிடுமா, ஜமீந்தார் குடிமக்களைத் துன்புறுத்தாமலிருந்தால் நிலம் செழிப்பற்றதாக ஆகிவிடுமா? இந்தக் கேள்விக்கு இது தான் பதில்—நாம் குறிப்பிட்ட விளைவுகள் எல்லாம் நிலையானவையல்ல; அல்லது, மாறுபட்ட சக்திகளால் தடுக்கப்படாம லிருந்தால்தான் இந்த விளைவுகள் நேரும். இந்த விளைவுகளை வேறு வழி களால் தடுக்க முடியும். இந்த வழிகள் அரசன், சமூகம் ஆகியவற்றின் வசத்திலுள்ளவை. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பிறகு இத்தாலியில் கிரேக்க இலக்கியம் முதலியவை கண்டுபிடிக்கப்படா விட்டால் ஐரோப்பாவின் நிலைமை இப்போதுள்ள நிலைமையிலிருந்து மாறு பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அப்போதும் நாட்டின் வெப்ப தட்ப நிலையிலோ நிலத்தின் தன்மையிலோ வேறு இயற்கை நியதிகளிலோ மாற்றமெதுவும் ஏற்பட்டிருக்காது.

நான்காவது இயல்

சட்டம்

வங்கநாட்டு உழவர்கள் உணவும் உடையுமின்றி வறுமையுற்று இருப்பதற்கு ஜமீந்தார்கள் மட்டும் காரணமல்ல, இயற்கை விதிகள் மட்டும் காரணமல்ல. ஜமீந்தார் செய்யும் கொடுமைகளும் இயற்கையின் விளைவுகளும் சட்டத்தின் மூலம் சீர்திருத்தப்படலாம். வலிமையற்றவனைத் துன்புறுத்துவது வலியவனின் இயற்கை. இந்தத் துன்புறுத்தலைத் தடுக்கவே அரசாட்சி. அரசன் வலியவனிட மிருந்து எளியவனைக் காப்பான் என்பதற்காகத்தான் மனிதன் அரசாட்சியின் கட்டுப்பாட்டுக்கு அடங்குகிறான். ஒரு நாட்டில் வலியவன் எளியவனைத் துன்புறுத்தினால் அதற்குப் பொறுப்பு அரசனே. அந்த நாட்டில் அரசன் தன் கடமையில் அலட்சியமாக இருக்கிறான், அல்லது கடமையைச் செய்யும் வலு வற்றிருக்கிறான். நம் நாட்டில் ஜமீந்தார் விவசாயியைக் கொடுமைப்படுத்துவது உண்மையானால் அது ஆங்கிலேய ஆட்சியாளர்களின் குற்றம். அவர்கள் தங்கள் கடமையை எப்படி நிறைவேற்றுகிறார்களென்று பார்ப்போம்.

பண்டைய இந்து ராஜ்யங்களில் ஜமீந்தார்கள் இல்லை. குடிமக்கள் தங்கள் உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கை அரசனுக்குக் கொடுத்துவிட்டுக் கவலை யின்றி இருந்தார்கள். யாரும் அவர்களை இந்தக் காணிக்கை கொடு, அந்தக் காணிக்கை கொடு என்று துன்புறுத்தவில்லை. இந்துக்கள் தங்கள் நாடுகளின் வரலாறுகளை எழுதாவிட்டாலும் வேறுபல நூல்களை எழுதியுள்ளார்கள். அந்த நூல்களிலிருந்து பண்டைக்கால பாரதத்தின் சமூக நிலையை நன்றாக அறிந்து கொள்ள இயலும். இந்துக்கள் நாட்டை ஆண்ட காலத்தில் குடிமக்கள்

கொடுமைப்படுத்தப்படவில்லை என்று அந்த நூல்களிலிருந்து தெரிகிறது. முஸ்லிம், மராத்திய அரசர்கள் ஆண்ட காலங்களில் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களையும் மக்கள் பட்ட துன்பங்களையும் பார்த்து, இந்து அரசர்களும் இவர்கள் மாதிரியே கொடியவர்களாயிருந்தார்களென்று நினைப்பது தவறு. எண்ணற்ற சம்ஸ்கிருத நூல்களில் எங்கும் மக்கள் அரசனால் துன்புறும் செய்தி இல்லை. இலக்கியம் என்பது சமூகத்தின் சித்திரம். பண்டைக்காலத்தில் குடிமக்கள் அரசனால் துன்புறுத்தப்பட்டிருந்தால் அக்கால இலக்கியத்தில் அதன் பிரதிபலிப்பு இருந்திருக்கும். மாறாக, இந்து அரசர்கள் மக்களைப் பேணுபவர்களாக இருந்தார்களென்பதைப் பண்டைய நூல்களில் காண் கிறோம். அரசன் தந்தைபோல் குடிமக்களைப் பேணுகிறான் என்ற செய்தி சம்ஸ்கிருத நூல்களில் அடிக்கடி இடம் பெறுகிறது. இந்த விஷயத்தில் இந்து அரசர்கள் மற்ற அரசர்களைவிடப் போற்றத்தக்கவர்கள். கிரேக்க நாட்டில் அரசனின் பெயரே 'tyrant'. இந்தச் சொல்லுக்கு இப்போது 'கொடுங்கோலன்' என்று பொருள். இங்கிலாந்தின் அரசர்கள் குடிமக்களைத் துன்புறுத்தியதால் அவர்களுக்கும் மக்களுக்குமிடையே போராட்டங்கள் நிகழ்ந்தன. மக்கள் ஓர் அரசனைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டார்கள்; இன்னோர் அரசனைக் கொன்று விட்டார்கள். பிரான்ஸ் கொடுங்கோன்மைக்குப் பெயர் பெற்றி ருந்தது. பொறுக்க முடியாத கொடுமை காரணமாகத்தான் மக்கள் அங்கே புரட்சி செய்தார்கள். வடபாரதத்தில் முஸ்லிம், மராத்திய ஆட்சியாளர்கள் இழைத்த கொடுமைகளை விவரிக்கத் தேவையில்லை. இந்த விஷயத்தில் பண்டைக்கால இந்து அரசர்கள் பெருமைக்குரியவர்கள். அவர்கள் மக்களிட மிருந்து ஆறில் ஒருபங்கு உற்பத்தியைப் பெற்று அத்துடன் திருப்தியடைந்தனர்.

முதன்முதலில் ஜமீந்தார்கள் தோன்றியது முஸ்லிம் ஆட்சிக்காலத்தில்தான். முஸ்லிம்கள் ஆட்சி செய்வதில் தேர்ந்தவர்களல்லர். இந்து அரசர்கள் தங்களுக் குரிய வரியை மக்களிடமிருந்து சிரமமில்லாமல் வசூல் செய்தார்கள். முஸ்லிம் களால் இது இயலவில்லை. அவர்கள் ஒவ்வொரு பர்கானாவிலும் வரிவசூ லிக்க ஆட்களை நியமித்தார்கள். இந்த ஆட்கள் ஒரு வகையில் வரிவசூல் கண்டிராக்டர்கள்தாம். இவர்கள் மக்களிடமிருந்து பணம் வசூலித்து அதில் ஒரு பகுதியை அரசனுக்கு வரியாகக் கொடுத்தார்கள், மிச்சத்தைத் தாங்களே வைத்துக் கொண்டார்கள். இவ்வாறுதான் ஜமீந்தார் இனம் பிறந்தது. வங்க நாட்டில் குடிமக்களின் துன்பமும் தொடங்கியது. இந்தக் காண்டிராக்டர்கள் தாம் நாளடைவில் ஜமீந்தார்களானார்கள். அரசனுக்குச் சேர வேண்டிய வரித் தொகைக்கு மேல் எவ்வளவு அதிகமாக மக்களிடமிருந்து வசூலிக்க முடியுமோ அவ்வளவு இந்த ஜமீந்தார்களுக்கு லாபம். இந்த நிலையில் குடிமக்களுக் கேற்பட்ட துன்பத்தை விவரிக்கத் தேவையில்லை.

முஸ்லிம்களுக்குப் பின் ஆங்கிலேயர் அரசர்களானார்கள். அப்போது மக்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தது. அவர்களது துன்பத்தைப் போக்க ஆட்சியாளர்கள் விரும்பியது உண்மைதான். ஆனால் கவர்னர் ஜெனரல்

கார்ன் வாலிஸ் துரை தாமறியாமல் ஒரு தவறு செய்து மக்களைப் பெருந் துன்பத்திலாழ்த்திவிட்டார். ஜமீந்தார்களுக்குத் தம் ஜமீந்தாரி நிலத்தில் நிலை யான உரிமை இல்லாததால்தான் அவர்களுக்கு ஜமீந்தாரியைப் பராமரிப்பதில் அக்கறையில்லாமலிருக்கிறது, அவர்களுக்கு நிலத்தில் நிலையான உரிமை கொடுத்தால் அவர்கள் அதைப் பேணுவார்கள், குடிமக்களையும் நன்றாக நடத்துவார்கள் என்று நினைத்தார் அவர். இந்த எண்ணத்தில்தான் அவர் நிலையான நிலஉரிமைச் சட்டத்தை இயற்றி வரிவசூல் காண்டிராக்டர்களை நிலச் சொந்தக்காரர்களாக்கினார்.

இதனால் என்ன விளைவு ஏற்பட்டது? ஜமீந்தார்கள் முன்போலவே கொடுமைக்காரர்களாகத் தொடர்ந்து இருந்தார்கள். குடிமக்கள் தங்கள் நில உரிமையை இழந்துவிட்டார்கள். எப்போதும் குடிமக்கள்-உழவர்கள்தாம் நிலச் சொந்தக்காரர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ஜமீந்தார்கள் வெறும் வரி தண்டல்காரர்கள்தாம். கார்ன்வாலிஸ் நில உடைமையாளரிடமிருந்து நிலத்தைப் பறித்து இந்த வரி வசூலிப்பவர்களிடம் கொடுத்துவிட்டார். ஆங்கி லேய ஆட்சி இவ்வாறு முதன்முதலாக வங்காளத்தில் குடிமக்களைத் துன்பத்தில் வீழ்த்திவிட்டது. 'நிலையான நில உரிமைச் சட்டம்' வங்காளத்தின் நிலையான வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. இந்த நிலை என்றும் மாறாது. இந்தச் சட்டம் 'நிலையான' ஏற்பாடாகையால் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் இந்தக் களங்கமும் நிலையானது.

கார்ன்வாலிஸ் உழவர்களின் கைகால்களைக் கட்டி அவர்களை ஜமீந்தார் களிடம் ஒப்படைத்துவிட்டார். ஜமீந்தார்கள் குடிகளைக் கொடுமைப்படுத்தாம லிருக்க எந்தவித விதியோ ஏற்பாடோ செய்யவில்லை. "குடிமக்களின் பாது காப்புக்காகவும் நன்மைக்காகவும் விதிகள் இயற்றப்பட வேண்டுமென்று கவர்னர் ஜெனரல் கருதினால் அவர் உரிய சமயத்தில் அத்தகைய விதிகளை இயற்றுவார். இதற்கிடையில் ஜமீந்தார்கள் குடிமக்களிடமிருந்து வரிவசூலிக்கத் தடையில்லை" என்று 1793ஆம் ஆண்டின் முதல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் சொல்லப்பட்டது.

"விதிகளை இயற்றுவதாக" நம்பிக்கையளிக்கப்பட்டதே தவிர அவை இயற்றப்படவேயில்லை. குடிமக்கள் தலைமுறை தலைமுறையாக ஜமீந்தார் களால் துன்புறுத்தப்பட்டனர். ஆனால் ஆட்சியாளர்கள் அவர்களைக் காப் பாற்ற ஒரு முயற்சியும் செய்யவில்லை. இது குடிமக்களுக்கு ஏற்பட்ட இரண் டாவது துன்பம். "நில உரிமைச்சட்டம் அமுலாகி இவ்வளவு ஆண்டுகள் கழிந்துவிட்டன. எனினும் குடிமக்களின் உரிமைகளைத் தெளிவாக்கி விதிகள் இயற்றும் அதிகாரத்தை நாம் இன்னும் பயன்படுத்தவில்லை" என்று இயக்கு நர்கள் குழு (Court of Directors) 1819ம் ஆண்டில் வருத்தந் தெரிவித்து விட்டுச் சும்மா இருந்துவிட்டது. காம்பெல் என்ற ஒரு தேர்ந்த அதிகாரி 1832ம் ஆண்டில் எழுதினார்—"விதிகளை இயற்றுவதற்கான வாக்குறுதி இப்போதும் சட்டப் புத்தகத்தின் தொடக்கத்திலேயே இடம்பெற்றுள்ளது. ஆனால் அரசாங்கம்

நிலத்தின் உரிமையாளர்களான உழவர்களுக்கு முன்னால் ஜமீந்தார்களை நிறுத்தி வைத்துவிட்டு, உழவர்களுடன் தன் நேரடித் தொடர்பைத் துண்டித்துக் கொண்டுவிட்டது; தன் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை."

அதுமட்டுமல்ல, அரசாங்கம் பலவீனர்களை இன்னும் பலவீனராக்கி வலியவர்களை இன்னும் வலியோராக்கியது. 1812ஆம் ஆண்டின் 5ஆம் சட்டத்தின் மூலம் குடிமக்களிடம் கொஞ்ச நஞ்சமிருந்த நில உரிமைகளும் பறிக்கப்பட்டன. ஜமீந்தார் தன்னிச்சையாக விலை பெற்று உழவனுக்குப் பட்டா கொடுப்பதை இந்தச் சட்டம் அனுமதித்தது. அதாவது ஜமீந்தார் உழவனிடமிருந்து எவ்வளவு வரி வேண்டுமானாலும் வசூலிக்கலாம். இயக்குநர்களே இவ்வாறுதான் இந்தச் சட்டத்துக்குப் பொருள் கொண்டார்கள் (Revenue Letter to Bengal;, 9-5-1821, 54ஆம் பாரா). ஆகவே உழவனை நிலத்தில் உழவிடுவதும் விடாததும் ஜமீந்தாரின் விருப்பத்துக்கு விடப்பட்டது. நிலத்துடன் உழவனுக்குத் தொடர்பு அற்றுப் போயிற்று. உழவன் கூலியாளாக மாறினான். இது அவனுக்குக் கிடைத்த மூன்றாவது அடி.

இந்தச் சட்டத்தைத்தான் முன்காலத்தில் 'அஞ்சாவது' என்று சொல்வார்கள். குடிமகனின் உரிமைகளைப் பறிக்க விரும்பும் ஜமீந்தார் இந்த 'அஞ்சாவதை'த்தான் பயன்படுத்துவான். அந்தச் சட்டம் இப்போதும் இருக்கிறது, 'அஞ்சாவது' என்ற பெயர் மட்டும் இல்லை. 'ஜப்தி' என்பது எவ்வளவு பிரமாதமான விஷயம் என்பதை நாம் இரண்டாவது இயலிலேயே விளக்கியிருக்கிறோம். இந்த 'அஞ்சாவது' சட்டங்கூட ஜப்தியை அனுமதிக்கும் முதல் சட்டமல்ல. ஜமீந்தாரை நிலஉடைமையாளனாக்கிய அதே ஆண்டிலேயே ஜப்தியை அனுமதிக்கும் சட்டமும் வந்துவிட்டது (1793ஆம் ஆண்டின் 18ஆம் சட்டத்தின் இரண்டாவது பிரிவு) விவசாயிகள் பயிரிட்ட தானியத்தைப் பறித்துக் கொள்வது ஜமீந்தார்களின் நெடுங்கால வழக்கம். இப்போது ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தக் கொள்ளையைச் சட்டபூர்வமாக ஆக்கிவிட்டார்கள். இப்போதும் இந்தக் கொள்ளைத் தொழில் சட்டத்தால் அனுமதிக்கப்படுகிறது. குடிமக்களுக்கு இது நான்காவது அடி.

1812ஆம் ஆண்டின் 18ஆம் சட்டம் 'அஞ்சாவது' சட்டத்தை இன்னும் தெளிவாக்கியது. ஜமீந்தார்கள் கேட்கும் வரித் தொகையைக் கொடுக்க மறுக்கும் குடிமக்களை அவர்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வரும் நிலத்திலிருந்து ஜமீந்தார்கள் இந்தச் சட்டத்தின் துணையால் வெளியேற்றலாம் என்று இயக்குநர்கள் எழுதினர் (Revenue Letter to Bengal, 9-5-1821, 54ஆம் பாரா)

இதன்பிறகு 1855ஆம் ஆண்டுவரை எந்த மாற்றமும் இல்லை. 1859ஆம் ஆண்டில் புகழ்பெற்ற 'பத்தாவது' சட்டம் இயற்றப்பட்டது. குடிமக்களின் நன்மைக்காக ஆட்சியாளர் இயற்றிய முதல்விதி இதுதான். 1793ஆம் ஆண்டில் கார்ன்வாலிஸ் அளித்த வாக்குறுதியை, அதற்கு சுமார் எழுபது ஆண்டுகளுக்குப்பின் போற்றற்குரிய கானிங்துரை ஓரளவு மட்டும் நிறைவேற்றினார். அத்தோடு சரி. (இந்தக் கட்டுரை எழுதப்பட்டபோது புதிய குடிவாரச் சட்டம்

இயற்றப்படவில்லை) அதன்பிறகு வேறொரு முன்னேற்றமும் இல்லை. 1869ஆம் ஆண்டின் எட்டாவது சட்டம் முன்பு குறிப்பிடப்பட்ட பத்தாவது சட்டத்தின் காப்பிதான். (இந்த விஷயம் பற்றி விரிவாக அறிந்து கொள்ள விரும்புவோர் சஞ்சீவ் சந்திர சட்டோபாத்தியாய் அவர்களின் 'வங்காளி விவசாயி' என்ற நூலைப் படிக்கவும். நாம் இந்தக் கட்டுரைக்கான சில செய்திகளை அந்த நூலிலிருந்தே எடுத்துக் கொண்டிருக்கிறோம்)

1859ஆம் ஆண்டின் பத்தாவது சட்டங்கூட விவசாயிகளுக்குப் பெரிய நன்மையளித்துவிட்டதாகச் சொல்லமுடியாது. விவசாயிகள் முன்பு அனுபவித்த உரிமைகளைத் திரும்பப் பெறவில்லை. அவர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களைத் தடுக்க எந்த ஏற்பாடும் இந்தச் சட்டத்தாலோ வேறெந்த சட்டத்தாலுமோ செய்யப்படவில்லை. ஐப்தி என்ற பெயரில் கொள்ளையை அனுமதிக்கும் சட்டம் முன்போலவே இருக்கிறது. விவசாயிகள் செலுத்த வேண்டிய வரியை உயர்த்த வசதி ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் உதவியால் வரியை உயர்த்த முடியாது என்ற பாதுகாப்புப் பெறும் விவசாயிகள் வங்காளத்தில் மிகக் குறைவு.

அப்படியும் குடிமக்களை வெறுப்பவர்களும் சுயநலக்காரர்களுமான சில ஜமீந்தார்கள் குடிகளுக்கு ஓரளவு நன்மை செய்யும் இந்தச் சட்டத்துக்கெதிராக என்ன ஆர்ப்பாட்டம் செய்தார்கள், இன்னும் செய்து கொண்டிருக்கிறார்கள்!

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் நிலம் சம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டங்களால் குடிமக்களுக்குத் தீங்குக்கு மேல் தீங்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டினோம். ஒவ்வொரு சட்டமும் விவசாயியின் வலிமையைக் குறைத்து ஜமீந்தாருக்கு வலுவூட்டியுள்ளது. இந்த நிலையில் ஜமீந்தார் ஏன் குடிமக்களைத் துன்புறுத்தமாட்டான்?

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் வேண்டுமென்றே குடிமக்களுக்குத் தீங்கிழைக்கவில்லை. அவர்கள் குடிகளின் நன்மையை விரும்புபவர்கள். முகலாய அரசர்களிடமிருந்து வரிவசூல் உரிமையைப் பெற்ற காலத்திலிருந்து அவர்களின் குடிகளுக்கு நன்மை செய்ய விரும்பியிருக்கிறார்கள், முயன்றிருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் வெளிநாட்டவர்; அவர்களுக்கு இந்த நாட்டின் நிலைமை சரியாகத் தெரியாது. ஆகையால் அவர்கள் திரும்பத் திரும்பத் தவறு செய்துவிட்டார்கள். அறியாமை காரணமாக மக்களுக்குப் பெருந்தீங்கிழைக்கும் இந்தச் சட்டத்தை இயற்றிவிட்டார்கள். எனினும் ஆட்சியாளரின் அறியாமையாலோ அல்லது வேறு காரணத்தாலோ மக்களுக்குத் தீங்கு நேர்ந்தால் அதற்கான பொறுப்பு ஆட்சியாளர்களையே சேரும்.

இதைவிட முக்கியமான இன்னொரு விஷயம்— ஆங்கிலேயர் பெரும் வல்லமையுள்ளவர்கள். ஆசியா கண்டமே அவர்களிடம் பயந்து நடுங்குகிறது. இந்த அற்ப ஜமீந்தார்களை அடக்க அவர்களால் ஏன் முடியவில்லை? வெகு தொலைவிலிருக்கும் அபிசீனிய நாட்டின் அரசன் ஒரு சில ஆங்கிலேயர்களைத் துன்புறுத்தியதற்காக அவனுடைய ராஜ்யமே அழிந்துவிட்டது.

வைசிராயின் மாளிகையின் நிழலில் லட்சக்கணக்கான மக்கள் துன்புறு கிறார்களே, இதற்கு ஏன் பரிகாரம் செய்யப்படவில்லை? ஜமீந்தார்கள் குடி மக்களைக் கட்டியிழுத்து வருகிறார்கள்; அவர்களுடைய விளைச்சலைக் கொள்ளையடிக்கிறார்கள்; நிலங்களைப் பறித்துக் கொண்டு அவர்களை ஓட்டாண்டிகளாக்குகிறார்கள். இவற்றையெல்லாம் தடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? "அரசாங்கத்தான் சட்டம் இயற்றியிருக்கிறதே, நீதி மன்றம் அமைத்திருக்கிறதே, அதன் மேல் என்ன குற்றம்?" என்று சிலர் கேட்கலாம். நாமும் அதையே கேட்கிறோம்—சட்டம் இருக்கிறதே, குற்றம் செய்யும் ஜமீந்தார்கள் ஏன் அந்தச் சட்டத்தால் தண்டிக்கப்படுவதில்லை? நீதி மன்றங்கள் உள்ளனவே அவற்றில் ஏன் எப்போதும் ஜமீந்தார்களே வெற்றியடைகிறார்கள்? இந்த அக்கிரமத்தைத் தவிர்க்க வேறு வழியில்லையா? எப்போதும் பலவானுக்கு சாதகமாயிருந்து கொண்டு பலங்குறைந்தவனையே தண்டிக்கும் சட்டம் என்ன சட்டம்? வலிமையுள்ளவனை விட்டுவிட்டு வலிமை யற்றவன்மேலேயே ஆதிக்கம் செலுத்தும் நீதிமன்றம் என்ன நீதிமன்றம்? ஆட்சித் திறன் வாய்ந்த ஆங்கிலேயரால் ஒரு நல்ல ஏற்பாடு செய்ய இயலாதா? இயலாதென்றால் தங்கள் ஆட்சித் திறமை பற்றி ஏன் பெருமைப் படுகிறார்கள்? இயலுமென்றால் தங்கள் முக்கிய கடமையை நிறைவேற்றுவதில் இந்த அலட்சியம் ஏன்? நாம் இந்த எளிய ஆறுகோடி வங்காளி விவசாயிகளுக்காகக் கைகூப்பி இறைஞ்சுகிறோம்—"உங்களுக்கு நன்மை உண்டாகட்டும்! உங்கள் ஆட்சி எப்போதும் நிலைத்திருக்கட்டும்! நீங்கள் இந்த உழவர்களிடம் கருணை காட்டுங்கள்!"

சட்டத்தாலும் நீதிமன்றத்தாலும் விவசாயிக்கு ஏன் நன்மையில்லை என்பதைச் சுருக்கமாக விளக்குகிறோம்.

முதலாவதாக, வழக்குத் தொடுப்பதில் செலவு அதிகம். எப்படி இந்தச் செலவு நேர்கிறதென்பதை நாம் முன்பே இரண்டாவது இயலில் விளக்கி யுள்ளோம். ஏழை உழவனால் இவ்வளவு செலவு செய்ய இயலாது. ஆகவே வழக்குத் தொடுக்கும் விவசாயிக்கு நன்மையைவிடத் தீமையே அதிகம் நேர்கிறது. ஜமீந்தார் பணக்காரன். அவன் விரும்பினால் நீதிமன்ற விளை யாட்டு விளையாடலாம். உழவன் குற்றம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அவனை நீதிமன்றத்துக்கு இழுத்துவரலாம். அங்கே பணக்காரனுக்குத்தான் வெற்றி. உழவனுக்கு இழப்புதான். ஆகவே சட்டமும் நீதிமன்றமும் பணக் காரனின் கையில் ஏழை மக்களைத் துன்புறுத்த உதவும் கருவிகள்தாம்.

இரண்டாவதாக, நீதிமன்றங்கள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்து தொலைவிலுள்ளன. தொலைவிலுள்ள எதுவும் உழவனுக்கு உதவி செய்யாது. அவன் வீடு, வாசல், விவசாயத்தை விட்டுவிட்டுத் தொலைவில் நீதிமன்ற மிருக்கும் இடத்துக்கு வந்து வழக்குத் தொடரமுடியாது. பணச்செலவு இருக் கட்டும்; அவன் கிராமத்தைவிட்டு வெளியே வந்துவிட்டால் அவனுக்கு எவ்வளவோ கஷ்ட நஷ்டம். அவன் வழக்குப் பதிவு செய்ய நகரத்துக்குப்

போனால் அந்தச் சமயத்தில் ஜமீந்தாரின் குமாஸ்தா தன் ஆட்களைவிட்டு அவனுடைய பயிரை அறுத்துக் கொண்டுபோய்விடுவான், அல்லது வேறோர் ஆள் குமாஸ்தாவிடமிருந்து பட்டா வாங்கிக் கொண்டு அவனுடைய நிலத்தைக் கைப்பற்றிக் கொள்வான். தவிர, நம் நாட்டு மக்கள், குறிப்பாகக் கீழ்மட்டத்து மக்கள் மிகவும் சோம்பேறிகள். அவர்கள் எளிதில் அசைய மாட்டார்கள், எந்தக் காரியத்திலும் சுறுசுறுப்பாயிருக்க மாட்டார்கள். வெகு தொலைவில் பயணம் செய்ய அவர்களுக்குப் பிடிக்காது. அவர்கள் ஜமீந் தாரின் கொடுமைகளைக் கூடப் பொறுத்துக் கொள்வார்கள், அதைப் போக்கிக் கொள்ளத் தொலைவுப் பயணம் செய்ய விரும்ப மாட்டார்கள். நீதி மன்றத்துக்கு அருகிலுள்ள இடங்களிலிருந்துதான் பெரும்பாலான வழக்குகள் வருகின்றன; தொலைவிலுள்ள கிராமங்களிலிருந்து வழக்குகள் அதிகம் வருவ தில்லை என்பது நீதிமன்ற அலுவலர்களுக்குத் தெரியும். ஆகவே நீதி மன்றத் துக்கு அருகில் நேரும் கொடுமை தண்டிக்கப்படுகிறது; தொலைவில் இழைக் கப்படும் கொடுமை தண்டனை பெறுவதில்லை. இதன் விளைவு என்ன வென்றால், கொடுமைக்கார ஜமீந்தாரின் குமாஸ்தாவே நீதிபதியின் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டான். ஒரு விவசாயி இன்னொருவனுக்குத் தீமை செய்தால் தீங்குக்குள்ளானவன் குமாஸ்தாவிடம் போய் புகார் செய்கிறான். குமாஸ்தாவே கொடுமை செய்தால் யாரிடம் புகார் செய்வது? தானே கொடிய வனாயிருப்பவனும் இரண்டு காசுக்காகப் பிறரைக் கொடுமைப் படுத்தத் தயாராயிருப்பவனுமான ஒருவன் நீதிபதியாயிருந்தால் நாட்டுக்கும் மக்க ளுக்கும் எவ்வளவு தீங்கு நேரும் என்பதை அறிவாளிகள் ஊகித்துக் கொள்ளலாம்.

மூன்றாவதாக, வழக்குகளில் தீர்ப்புக் கூறுவதில் நேரும் தாமதம். எல்லா நீதி மன்றங்களிலும் இந்தத் தாமதம் நேர்கிறது. தாமதமாகக் கிடைக்கும் பரிகாரத்தைப் பரிகாரம் என்றே சொல்ல இயலாது. ஒரு குமாஸ்தா ஒரு விவ சாயியின் நெல்லைப் பறித்துக் கொண்டு போகிறான் என்றும் விவசாயி வழக்குத் தொடுக்கிறான் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். விவசாயிக்கு அதிர்ஷ்டமிருந்தால் அவனுக்கு ஆதரவாகத் தீர்ப்பு ஆகும். ஆனால் தீர்ப்பு வெளியாக ஓராண்டு ஆகிவிடும். குமாஸ்தா மேல்கோர்ட்டுக்கு அப்பீல் செய்வான். அதில் தீர்ப்பு வர இன்னும் ஓராண்டு ஆகும். அதிர்ஷ்ட வசமாக இந்தத் தீர்ப்பும் விவசாயிக்குச் சாதகமாக இருந்தாலும், தீர்ப்பை அமுல் படுத்திப் பணம் வசூல் செய்வதற்குள் இன்னும் ஓராண்டு கழிந்து விடும். வாதிக்கு 20 ரூபாய் மதிப்புள்ள நெல் இழப்பு. அதற்கு வழக்குப் போட்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு கோர்ட்டுச் செலவுகள் போக அவனுக்கு மிஞ்சுவது ஐந்துரூபாய்! இத்தகைய பரிகாரத்துக்காக எந்த விவசாயிதான் ஜமீந்தாருக் கெதிராக வழக்குத் தொடுப்பான்?

இந்தத் தாமதத்துக்கு நீதிபதி பொறுப்பில்லை. நீதிமன்றங்களின் எண்ணிக்கை குறைவு. அவற்றிலும் மூன்று நீதிபதிகள் இருக்க வேண்டிய

இடத்தில் ஒருவர்தான் இருக்கிறார். ஆகவே தீர்ப்பளிப்பதில் தாமதம் நேர்கிறது. தவிர, சட்டங்களும் மிகவும் சிக்கலானவை. சட்ட நிர்வாகத்திலும் நிறைய ஆவணங்களும் நிறைய நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன. ஒரு நாள் ஒரு வழக்கில் எதிர்க்கட்சி வக்கீல் குறுக்கு விசாரணைக்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டு விடுகிறார். அந்த வழக்கில் ஒரே ஒரு சாட்சி மட்டுந்தான் விசாரணை செய்யப்படுகிறான். இதன் விளைவாக அன்று விசாரிக்கப்பட வேண்டிய வேறு ஐந்து வழக்குகள் விசாரணைக்கு வரவில்லை. அவை ஒரு மாதத்துக்குத் தள்ளிப் போடப்படுகின்றன. மறுநாள் தீர்ப்பளிக்கப்படக்கூடிய ஒரு வழக்கில் அவ்வளவு முக்கியமில்லாத ஒரு சாட்சி வரவில்லை. அவனுக்கு சம்மன் அனுப்பப்படுகிறது; வழக்கு ஒரு மாதத்துக்குத் தள்ளி வைக்கப்படு கிறது. இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் வழக்கு சட்டப்படி நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழும்; தீர்ப்பு மேல் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்படும். தீர்ப்பில் நியாயம் வழங்கப்பட்டாலும் சரி, அநீதி நேர்ந்தாலும் சரி, விதிக்கப்பட்ட நடைமுறைகள் மீறப்படலாகா. இதுதான் பிரிட்டிஷ் சட்டத்தின் தத்துவம்.

நாம் நாளுக்குநாள் நாகரீகமாகிக் கொண்டிருக்கிறோம், நம்நாடு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். முன்பு நம் நாட்டில் நல்ல சட்டம் இல்லை. இப்போது மேலைநாட்டிலிருந்து அது வந்திருக்கிறது. அது கப்பலில் வந்திறங்கி, சாந்த்பால் படகுத் துறையிலிருந்து கல்கத்தா நகரத் துக்குள் கொண்டு வரப்பட்டு, இயந்திரத்தில் போடப்பட்டு, உபயோகத்துக்குத் தயாராகி நாடெங்கும் அதிக விலைக்கு விற்பனையாகிறது. அதன்மூலம் நீதிபதி, வக்கீல், அலுவலர் போன்ற புதிய தொழில்கள் பல தோன்றி யிருக்கின்றன. சட்ட வியாபாரிகள் தங்கள் சரக்குகளைப் புகழ்ந்து பிரசாரம் செய்கிறார்கள். முன்பு சோறு கிடைக்காமல் திரிந்தவர்கள் இப்போது தங்கள் குரலின் பலத்தால் பெரிய மனிதர்களாகிவிட்டார்கள். நாட்டின் வளர்ச்சிக்கு எல்லையில்லை; எங்கும் சட்டப்படி தீர்ப்பு அளிக்கப்படுகிறது. சட்ட விரோத மாக நடந்து கொண்டு யாரும் தப்பமுடியாது. ஏழை எளியவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டந்தான். சட்டத்தின் மகிமை தெரியாமல் அவர்கள் நியாயம் வேண்டுகிறார்கள்! இது அவர்களது முட்டாள்தனந்தான்.

ஒரு ஜமீந்தாரின் குமாஸ்தா ஒரு விவசாயிக்கு மிகவும் துன்ப மிழைத்துவிட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். கீழ்க்கோர்ட்டில் அவன் குற்றவாளியாகக் கருதப்பட்டு செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பப்படுகிறான். ஆனால் செஷன்ஸ் கோர்ட்டில் தீர்ப்பு ஜூரர்கள் கையில் இருக்கிறது. ஜூரர்கள் இந்த வேலைக்குப் புதியவர்கள். குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டதா இல்லையா என்றுகூட அவர்களுக்குத்தெரியாது. சாட்சி சாட்சியம் சொல்லும் போது அவர்களில் சிலர் உத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; சிலர் தங்கள் வியாபாரத்தின் வரவு செலவுகளைக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்; வேறு சிலர் அரைத் தூக்கத்திலிருக்கிறார்கள். வக்கீல்

பேசிக் கொண்டிருக்கும்போது அவர்களுக்குப் பசி ஏற்பட்டு விடுகிறது. வீட்டில் மனைவி என்ன சிற்றுண்டி தயாரித்திருக்கிறாள் என்று யோசிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். நீதிபதி பிரதிவாதியின் மேலுள்ள குற்றச் சாட்டுகளைத் தொகுத்துச் சொல்லும்போது அவர்கள் நீதிபதியின் தாடி யிலுள்ள நரைத்த முடிகளை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நீதிபதி கடைசியில் "சந்தேகமிருந்தால் அதைப் பிரதிவாதிக்கு சாதகமாகப் பயன் படுத்த வேண்டும்" என்று கூறியது மட்டும் அவர்களுடைய காதுகளில் விழு கிறது. அவர்களுக்கு எல்லாமே சந்தேகந்தான். வழக்கு சம்பந்தமாக அவர்கள் எதையும் சரியாகக் கேட்கவுமில்லை, புரிந்து கொள்ளவுமில்லை. அவர் களுக்குப் புரிந்து கொள்ளும் வழக்கமில்லை, ஒரு வேளை புரிந்து கொள்ளும் திறமையும் இல்லாமலிருக்கலாம். ஆகையால் அவர்கள் தங்கள் சந்தேகத்தைப் பிரதிவாதிக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். குமாஸ்தா விடுதலை யாகிப் பழையபடி தன் அலுவலகத்தில் உட்கார்ந்து கொள்கிறான். அவனுக் கெதிராக வழக்குத் தொடுத்தவன் குடும்பத்தோடு ஊரைவிட்டு ஓடிவிடுகிறான். குமாஸ்தா தனக்கெதிராக சாட்சியம் கூறியவர்களில் வீடு வாசலை இடித்துத் தள்ளிவிடுகிறான்.

நமக்குப் பரமதிருப்தி—ஜூரர்கள் மூலம் வழக்கு தீர்ப்பாகியிருக்கிறது. மேலைநாட்டுச் சட்ட விதிப்படி வழக்கு நடந்திருக்கிறது. ஆகா, நாம் எவ்வளவு நாகரீகமாகிவிட்டோம்!

எளியவர்களுக்குக் கொடுமை நேர்வதற்கு நான்காவது காரணம்-தற்காலச் சட்ட முறையின் பொருத்தமின்மையும் சிக்கலுந்தான்.

ஐந்தாவது காரணம், நீதிபதிகளின் தகுதியின்மை. நம் நாட்டில் பெரிய நீதிபதிகளெல்லோரும் ஆங்கிலேயர்கள். அவர்கள் சாதாரணமாக அறிவுள்ள வர்கள், செயல்திறன் மிக்கவர்கள், நல்லவர்கள். ஆனால் அவர்கள் தீர்ப்புக் கூறும் பணிக்குத் தகுந்தவர்களல்லர். ஏனென்றால் அவர்கள் வெளிநாட்டினர். நம்நாட்டின் நிலையும் நாட்டு மக்களின் குணமும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு நம் நாட்டு மக்களிடம் அனுதாபமில்லை. அவர்களில் பலருக்கு நம் மொழியும் சரியாகத் தெரியாது. தீர்ப்புக் கூறும் பணிக்குத் தேவையான பயிற்சியே அவர்களில் பலருக்கு இல்லை. ஆகவே அவர்களால் சரியாகத் தீர்ப்பளிக்க இயலாது.

பெரும்பாலான வழக்குகள் கீழ்மட்டத்திலுள்ள நீதிபதிகளாலேயே விசாரிக்கப்படுகின்றன, கீழ்மட்டத்து நீதிபதிகளில் பெரும்பாலோர் நம் நாட்டவர்தாம்; ஆகையால் ஒரு சில வெளிநாட்டு நீதிபதிகளால் அதிகத் தீங்கு ஏற்படாது என்று சிலர் சொல்லலாம். இதற்குப் பதில்—முதலாவது, வங்காளி நீதிபதிகள் எல்லோருமே தீர்ப்பளிக்கத் தகுதியுள்ளவர்களல்லர். அவர்களில் பலர் கல்வியற்றவர்கள், அறிவிலிகள் அல்லது கெட்ட நடத்தையுள்ளவர்கள். நல்ல வேளையாக, மோசமான வங்காளி நீதிபதிகளின் எண்ணிக்கை கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. எனினும் நல்ல தகுதிபெற்ற

வங்காளிகள் நீதிபதிகளாக இல்லை. காரணம், வங்காளி நீதிபதிகளுக்குப் பதவி உயர்வு கிடைப்பதில்லை. வக்கீல் தொழிலில் நிறைய சம்பாதிப்பவர்கள் நீதிபதிகளாக விரும்புவதில்லை. ஆகையால் நடுத்தரமான அல்லது திறமை யற்றவர்களே நீதிபதிகளாக நியமயிக்கப்படுகிறார்கள். இரண்டாவது, கீழ்க் கோர்ட்டில் சரியான தீர்ப்பு வழங்கப்படுவதால் லாபம் என்ன? மேல் கோர்ட்டின் தீர்ப்பு ஆங்கிலேயரின் கையில்தானே! கீழ்க்கோர்ட்டில் நல்ல தீர்ப்பு கிடைத்தாலும் மேல்கோர்ட்டில் தவறான தீர்ப்புதான் கிடைக்கும். அந்தத் தவறான தீர்ப்புதான் இறுதித் தீர்ப்பு. ஆகவே நல்ல தீர்ப்பு அளிக்கும் திறமையுள்ள கீழ்க்கோர்ட்டு நீதிபதிகள்கூட மேல் கோர்ட்டில் எப்படிப்பட்ட தீர்ப்பு நிலைக்குமோ அந்தத் தீர்ப்பையே கீழ்க்கோர்ட்டிலும் கொடுத்து விடு கிறார்கள். இந்த விஷயத்தில் தலைமை நீதிமன்றத்தால் சில சமயங்களில் பெருந் தீங்கு நேர்கிறது. தலைமை நீதிபதிகள் கீழ்க்கோர்ட்டு நீதிபதிகள் சட்டத்தை எப்படிப்புரிந்து கொள்ள வேண்டும், எப்படித் தீர்ப்புக் கூற வேண்டும் என்றெல்லாம் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் விதிக்கும் விதிகளில் சில தவறானவை, சில நகைப்புக்குரியவை. எனினும் கீழ்க்கோர்ட்டு நீதிபதிகள் அவற்றைத்தான் பின்பற்ற வேண்டியிருக்கிறது. தலைமை நீதிமன்ற நீதிபதிகளைவிட விஷயமறிந்த துணை நீதிபதிகள், முன்சீப்புகள், துணை மாஜிஸ்திரேட்டுகள் கீழ்மட்டத்தில் நிறைய இருக்கிறார்கள். ஆனால் அவர் களும் தங்களைவிட அறிவிற் குறைந்த தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் கட்டளைக்கிணங்க நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தக் கட்டுரையை எழுதிய பின்னர் 'சமாஜ் தர்ப்பண்' என்ற ஒரு புதிய பத்திரிகையைப் பார்த்தோம். அதில் 'வங்கதர்சனும் ஜமீந்தார்களும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. நமது கட்டுரையின் முன்பகுதி யின் அடிப்படையில் எழுதப்பட்ட கட்டுரை அது. அந்தக் கட்டுரையா சிரியரைப் போல் வேறு பலரும் நினைக்கலாம். ஆகையால் அந்தக் கட்டுரை யிலிருந்து ஒரு சில விஷயங்களைக் குறிப்பிடவிரும்புகிறோம்.

கட்டுரையாசிரியர் கூறுகிறார்— "ஏற்கனவே பத்தாண்டு ஏற்பாட்டைச் சுற்றிலும் குழி தோண்டப்பட்டுவிட்டது. இந்த நிலையில் வங்கதர்சன் போன்ற சில கௌரவமான வங்காளி அறிஞர்களும் அதை எதிர்த்தால் அதன் கதி அதோகதிதான்."

பத்தாண்டு ஏற்பாட்டை அழிப்பது நம் நோக்கமல்ல என்பதைத் தெளி வாகத் தெரிவித்துக் கொள்கிறோம். 1793ம் ஆண்டில் நேர்ந்த பிழையை இப்போது திருத்த இயலாது. அந்தப் பிழையின் மேல்தான் தற்கால வங்காளி சமூகம் அமைக்கப்பட்டிருக்கிறது. நிலையான நில உரிமைச் சட்டம் அழிந்தால் வங்காளி சமூகத்தில் பயங்கரக் குழப்பம் நேரும் அபாயம் உள்ளது. நாம் சமூகப் புரட்சியை ஆதரிக்கவில்லை. ஆங்கிலேயர் நிலையாயிருக்கும் என்று உறுதிமொழியளித்துச் செய்துள்ள ஏற்பாட்டை அவர்களே மாற்றினால் நாடு முழுவதும் பொய்யர்களாகக் கருதப்படுவார்கள்; குடிமக்களின் நம்பிக்கையை

இழப்பார்கள். ஆகையால் நாம் அவர்களுக்கு இத்தகைய கெட்ட யோசனையைக் கூறமாட்டோம். ஆங்கிலேயர்க்கும் நம் சமூகத்துக்கும் கேடு நேர வேண்டுமென்று நாம் விரும்பினால் அப்போது அவர்களுக்கு இந்த யோசனை கூறுவோம். இகழத்தக்கதும் கேடுவிளைவிப்பதுமான இத்தகைய செயலைச் செய்யுமளவுக்கு ஆங்கிலேயரும் முட்டாள்களல்லர். இந்தச் சட்டத்தால் விளையும் தீமைகளை, முடிந்தவரையில் நல்ல விதிகள் இயற்றித் தீர்க்க வேண்டுமென்பதே நம் விருப்பம்.

கட்டுரையாசிரியர் கூறுகிறார்— "பத்தாண்டு ஏற்பாட்டுக்கு எந்த வகையிலும் ஊறு செய்யாமல், அதே சமயத்தில் ஜமீந்தார், விவசாயி இருதரப்பினருக்கும் நன்மையளித்து அதன்மூலம் நாட்டையும் முன்னேற்றக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்." இதுவேதான் நமது கருத்தும்.

கார்ன்வாலிஸ் இயற்றிய சட்டம் தவறானது, அநியாயமானது, மக்களுக்குத் தீங்கு செய்வது என்றெல்லாம் நாம் கூறுவது உண்மையே. எனினும் ஆங்கிலேயர் எல்லா நிலத்தையும் தாங்களே எடுத்துக் கொள்ளாமல் வங்காளிகளுக்கே நில உரிமையை அளித்ததையும் வரியை உயர்த்தும் உரிமையை விட்டுக் கொடுத்ததையும் நாம் கண்டனத்துக்குரியதாகக் கருதவில்லை. இவை புத்திசாலித்தனமான, நியாயமான, சமூகத்துக்கு நன்மை தரும் செய்கைகளே. இந்த நில உரிமை ஏற்பாட்டை அரசாங்கம் ஜமீந்தார்களுடன் செய்து கொள்ளாமல் விவசாயிகளுடன் செய்து கொண்டிருக்க வேண்டும் என்றுதான் நாம் சொல்கிறோம். அவ்வாறு செய்யாததால் தவறும், அநீதியும் தீமையும் நேர்ந்துள்ளன.

கட்டுரையாசிரியர் மேலும் கூறுகிறார்— "வங்காள நாடு முற்றிலும் வறியதாகிவிட்டது என்பதைக் காண்கிறோம்... 'நம் நாட்டுச் செல்வம் நம் நாட்டில் இருப்பதில்லை, அதைப் பிறநாட்டு வணிகர்களும் ஆட்சியாளர்களும் எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள், பெருந்தன்மையுள்ள கார்ன்வாலிஸ் ஜமீந்தார்களின் செழிப்புக்கான ஏற்பாட்டைச் செய்திராவிட்டால் நாடு இதற்குள் இன்னும் ஏழையாயிருக்கும்; நாட்டிலுள்ள கொஞ்சம் செல்வம் இப்போது ஜமீந்தார்களிடத்தான் இருக்கிறது' என்று எல்லோரும் சொல்கிறார்கள்."

பலர் இவ்வாறு கூறுவது உண்மைதான். ஆகையால் இந்தக் கருத்திலுள்ள சில தவறுகளைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது:

1. சில ஐரோப்பிய நாடுகளோடு ஒப்பிட்டால் வங்காள நாடு ஏழைதான். ஆனால் அது முன்னைவிட வறியதாயிருக்கிறது என்று கருதக் காரணமில்லை. முன்காலத்தில் வங்காளம் இப்போதிருப்பதைவிடச் செழிப்பாயிருந்தது என்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை. மாறாக, முன்னைவிட இப்போது நாட்டின் செழிப்பு வளர்ந்துள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இந்தக் கட்டுரையின் முதல் இயலில் நாம் சில சான்றுகளைக் குறிப்பிட்டிருக்கிறோம். இதற்கு மேல் எதுவும் சொல்ல வேண்டியதில்லை.

2. பிற நாட்டு வணிகர்களும் ஆட்சியாளர்களும் நம்நாட்டுச் செல்வத்தை எடுத்துச் செல்வதால் நாட்டில் செல்வம் தங்கவில்லை என்ற கருத்தை ஆராய, முதலில் பிற நாட்டு வணிகர்களின் விஷயத்தைக் கவனிப்போம்.

இந்தக் கருத்தை வெளியிடுபவர்கள் சொல்ல விரும்புவது இது தான்—வணிகர்கள் இந்த நாட்டில் வியாபாரம் செய்து பணம் சம்பாதிக் கிறார்கள். ஆகையால் அவர்கள் நம் நாட்டுப் பணத்தை எடுத்துச் செல் கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் நம்நாட்டுப் பணந்தான்.

பிற நாட்டு வணிகர்கள் லாபம் பெறுவது இரண்டு வகைகளில். ஒன்று ஏற்றுமதி மூலம், இன்னொன்று இறக்குமதி மூலம். அதாவது இந்த நாட்டுப் பொருள்களை வேறுநாடுகளுக்குக் கொண்டுபோய் விற்பதன் மூலமும், பிற நாட்டுப் பொருள்களை இங்கு கொண்டு வந்து விற்பதன் மூலமும் அவர் களுக்குக் கொஞ்சம் லாபம் கிடைக்கிறது. இதைத் தவிர வேறு லாபம் இல்லை.

அவர்கள் இந்த நாட்டுப் பொருள்களை வேறுநாடுகளுக்குக் கொண்டு போய் விற்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் இந்த நாட்டு மக்களிட மிருந்து பெறப்படுவதல்ல; எந்த நாட்டில் பொருள்கள் விற்கப்படுகின்றனவோ அந்த நாட்டு மக்களிடமிருந்து பெறப்படுவதாகும். வணிகர்கள் நம் நாட்டில் அரிசி மணு மூன்று ரூபாய்க்கு வாங்கிக் கொண்டுபோய் வேறு நாட்டில் ஐந்து ரூபாய் விலைக்கு விற்றால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் இரண்டு ரூபாய் அரிசியை வாங்கும் மக்களிடமிருந்து கிடைக்கிறது. அது மட்டுமல்ல; நம் நாட்டில் அரிசியின் சராசரி விலை இரண்டரை ரூபாயாக இருக்கும் போது அதை இந்த வியாபாரிகளுக்கு மூன்று ரூபாய்க்கு விற்றதால் இந்த நாட்டு மக்களுக்கும் சிறிது லாபம் கிடைத்திருக்கிறது. ஆகவே இந்த வியாபாரத்தில் பிறநாட்டு வியாபாரிகள் நம்நாட்டுக்குச் சிறிது பணம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

அவர்கள் பிற நாட்டுப் பொருள்களை நம்நாட்டுக்குக் கொண்டு வந்து விற்கும் போதுதான் அதில் லாபமாக நம் நாட்டுச் செல்வத்தை எடுத்துச் செல்கிறார்கள். அவர்கள் வெளிநாட்டில் நான்கு ரூபாய்க்குத் துணி வாங்கி அதை நம் நாட்டில் ஆறு ரூபாய்க்கு விற்றால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் இரண்டு ரூபாய் நம்நாட்டு மக்களிடமிருந்து கிடைக்கிறது. நம்நாட்டுப் பணம் வெளியே போவதால்நம்நாட்டில் செல்வம் குறைகிறது என்று தோன்று கிறது. இது ஒரு தவறான கருத்து. இந்தத் தவறான கருத்து நம் நாட்டில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலும் மக்களின் மனதை நீண்ட காலம் ஆக்கிரமித்திருந்தது. அங்கு நன்கு கற்றவரைத் தவிர மற்ற சாதாரண மக்களிடம் இன்னும் இந்தக் கருத்து நிலைபெற்றிருக்கிறது. இது ஒரு மிகவும் சிக்கலான விஷயம். சிறிது காலத்துக்கு முன்வரை பெரிய பண்டிதர்களால்கூட இதைப் புரிந்து கொள்ள இயல வில்லை. ஆட்சியாளர்கள் அறியாமை காரணமாக வேறுநாடுகளி லிருந்து தம் நாட்டுக்குள் பொருள்கள் இறக்குமதியாவதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் செய்தார்கள். அத்தகைய இறக்குமதியின் மேல் அதிக சுங்கவரி விதித்தார்கள்.

இந்தத் தவறான கொள்கைக்கு ஐரோப்பாவில் 'காப்புக் கொள்கை' (Protection) என்று பெயர். பிரைட், காப்டென் என்ற இரு அறிஞர்கள் இந்தக் கொள்கையைத் தகர்த்துத் தடையற்ற வாணிகத்தைப் (free trade) பரப்பியதன் மூலம் அழியாப் புகழ் பெற்றுவிட்டனர். மூன்றாவது நெப்போலியன் பிரான்சில் புதிய முறையை நிலைநாட்டிப் பெருமை பெற்றுள்ளார். இருந்தாலும் ஐரோப்பாவில் இன்றும் பழைய தவறான கருத்து மறைய வில்லை. ஆகவே நம் நாட்டின் பொதுமக்களிடையே இந்தக் கருத்து பரவி யிருப்பதில் வியப்பில்லை. காப்புக் கொள்கையால் ஐரோப்பாவுக்கு நேர்ந்த தீங்கு பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்கள் பக்கின் அவர்களின் நூலைப் படித்துப் பார்க்கலாம்; மில்லின் நூல்களைப் படிக்கலாம். இவ்வளவு சிக்கலான விஷயத்தை ஆராய இந்தச் சிறு கட்டுரையில் இடமில்லை. நாம் நம்நாட்டுக்குப் பொருத்தமான ஒரு சில கருத்துக்களைக் கூறுவதோடு நிறுத்திக் கொள்வோம்.

நாம் வெளிநாட்டுத் துணியை ஆறு ரூபாய்க்கு வாங்கினோம். இந்த ஆறு ரூபாயைச் சும்மாவா கொடுத்தோம்? அதற்குப் பதிலாக ஒரு பொருள் வாங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் அந்தப் பொருளின் உரிய விலைக்கு மேல் ஒரு காலணா அதிகம் கொடுத்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். ஆறு ரூபாய்க்குக் குறைந்த விலையில் அந்தத் துணி நமக்குக் கிடைக்காது. கிடைத்தால் நாம் ஆறு ரூபாய் கொடுத்து அதை வாங்கியிருக்கமாட்டோம். ஆறு ரூபாய்க்கு குறைந்த விலையில் அது நம் நாட்டில் கிடைக்காத நிலையில் ஆறு ரூபாய் அதன் சரியான விலைதான். ஆகையால் நாம் துணிக்குச் சரியான விலைதான் கொடுத்திருக்கிறோம். சரியான விலை கொடுத் திருந்தால் நமக்கு நஷ்டமேது? வெளிநாட்டு வியாபாரி எந்த விதத்தில் நம் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான்? அவனுக்கு இரண்டு ரூபாய் லாபம் கிடைத்தது உண்மைதான், ஆனால் துணி வாங்கியவர்களுக்கு நஷ்ட முண்டாகவில்லையே? அதனால் நாட்டுக்கு என்ன நஷ்டம்?

இந்தக் கருத்தை எதிர்ப்பவர்கள் சொல்லலாம்– "உள் நாட்டு நெசவாளர் களிடம் துணி வாங்கினால் அந்தப்பணம் நாட்டிலேயே இருக்குமே!" உண்மை தான். ஆனால் நம் நாட்டு நெசவாளர்களிடம் இந்த மாதிரி துணி ஏது? இருந் திருந்தால் நாம் வெளிநாட்டு வியாபாரிகளிடமிருந்து அதை வாங்காமல் உள் நாட்டு நெசவாளர்களிடமே வாங்கியிருப்போமே? வியாபாரிகளும் அதை வெளிநாட்டிலிருந்த அதே விலைக்கு உள் நாட்டில் கிடைத்தால் வெளிநாட்டு வியாபாரிகளும் அதைக் கொண்டு வந்து விற்பதில் என்ன லாபம்?

மேற்கண்ட கருத்து சமூகவியலின் ஒரு சிக்கலான தத்துவத்தின் அடிப் படையில் அமைந்துள்ளது. அதை இங்கு ஆராயத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்வதென்றால் இந்த வியாபாரத்தால் யாருக்கும் நஷ்டமில்லை. வாங்கு பவர்க்கு நஷ்டமில்லையென்பது முன்பே விளக்கப்பட்டுள்ளது. நெச வாளர்களும் நஷ்டமில்லை. ஏனென்றால் அவர்கள் அந்த ரகத் துணியை

நெய்வதில்லை. அவர்கள் வேறு வகைத் துணிகள்தான் நெய்கிறார்கள்; அந்தத் துணிகளும் விற்பனையாகி விடுகின்றன. ஆகவே அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைத்து விடுகின்றது. அந்தக் குறிப்பிட்ட ரகத் துணியே நெய்வதால் அவர்களுக்கு அதிகப்படி வருமானம் கிடைக்காது. ஏனென்றால் அந்தத் துணி நெய்வதென்றால் அவர்கள் வேறுவகைத் துணிகளை நெய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அந்த வேறு வகைத் துணிகளை விற்பதால் ஏற்படும் வருமானம் அவர்களுக்குக் கிடைக்காது.

வாதிடுபவர்கள் சொல்லலாம்–"இந்த வியாபாரத்தால் நம் நாட்டு நெசவாளர்களுக்கு நஷ்டம்தான். ஏனென்றால் அவர்கள் வெறுந்துணி நெய்வதில்லை. வேஷ்டிதான் நெய்கிறார்கள். வெறுந்துணி வேஷ்டியை விட மலிவு. ஆகையால் ஜனங்கள் வேஷ்டி வாங்காமல் துணியையே வாங்குகிறார்கள். இதனால் நம் நாட்டு நெசவாளர்களுக்கு நஷ்டம் மேற்பட்டு விட்டது".

இந்த வாதம் உண்மைதான். நெசவாளர்களுக்கு நெசவுத் தொழிலில் நஷ்டமென்றால் அவர்கள் வேறு தொழிலில் இறங்கட்டுமே! வேறு தொழில் செய்யத் தடையேதுமில்லையே! அவர்கள் விவசாயத்தில் ஈடுபடலாமே! எந்தத் தொழில் செய்தாலும் கிடைக்கும் லாபம் ஒன்றுதான் என்று சமூகவியல் அறிஞர்கள் நிரூபித்திருக்கிறார்கள். நெசவுத் தொழிலில் முன்பு மாதம் ஐந்து ரூபாய் கிடைத்தது என்றால், இப்போது பயிர்த் தொழிலில் அதே லாபத்தை பெறலாமே!

இந்த கருத்துக்கும் ஒரு மறுப்பு எழலாம்–"நெசவில் லாபமில்லாவிட்டால் விவசாயம் செய்யலாமே என்கிறீர்கள். ஆனால் ஏற்கனவே நிறையப் பேர் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களும் அதில் நுழைந்தால் அந்தத் தொழிலிலும் லாபம் குறைந்துவிடும். ஏனெனில் அதிகம் பேர் விவசாயம் செய்வதால் விளைச்சல் அதிகமாகி நெல் விலை குறைந்து விடும். விவசாயிகளின் லாபம் குறைந்தால் நாட்டின் செல்வம் குறைந்ததாகத்தானே பொருள்!"

இதற்குப் பதில்– வர்த்தகம் என்பது பண்டமாற்றுதான். ஒரு தரப்பில் வர்த்தகம் நிறைவடையாது. நாம் வெளிநாடுகளிலிருந்து சில பொருள்களை வாங்கிக் கொள்வது போல் வெளிநாட்டவரும் நம்மிடமிருந்து சில பொருள் களை வாங்கிக் கொள்கிறார்கள். நாம் வெளி நாட்டிலிருந்து சில பொருள்களை வாங்கும் போது நம் நாட்டில் அந்த பொருள்களின் தேவை குறைகிறது. ஆனால் நம் நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டில் ஏற்றுமதியாகும் போது நம் நாட்டில் அந்தப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய நேரிடுகிறது. உதாரணமாக, நம் நாட்டில் வேஷ்டியின் தேவை குறைந்தால் அதற்கேற்ப நெல்லின் தேவை அதிகரிக்கிறது. ஆகவே நெசவுத் தொழிலின் வீழ்ச்சிக்கு பதிலாக பயிர்த் தொழில் வளர்கிறது. நிறைய மக்கள் விவசாயத்தில் ஈடுபட நேர்கிறது. ஆகையால் விவசாயிகளின் தொகை வளர்வதால் விவசாயத்தில் லாபம் குறைவதில்லை.

ஆகவே வர்த்தகத்தின் விளைவாக ஒரு தொழில் நசிப்பதால் ஏற்படும் நஷ்டத்தை இன்னொரு தொழிலின் வளர்ச்சி ஈடு செய்து விடுகிறது. எனவே வெளிநாட்டுத் துணி வாங்குவதால் நம் நெசவாளர்களுக்கு நஷ்டமில்லை. வாங்குபவர்களுக்கும் நஷ்டமில்லை. யாருக்கும் நஷ்டமில்லை. ஆகையால் வெளிநாட்டு வியாபாரிகள் நம்மிடம் துணி விற்று நம் நாட்டுச் செல்வத்தைப் பறித்துக் கொண்டு விட்டார்களென்று எப்படிச் சொல்வது? அவர்களுக்கு லாபம் கிடைத்தால் நம் நாட்டுச் செல்வம் எங்கே குறைந்தது?

நாம் நம் கட்சியை எடுத்துச் சொல்ல நெசவாளர்களை உதாரணமாக எடுத்துக் கொண்டோம். ஆனால் இந்த உதாரணத்தில் ஒரு பிழை இருக்கிறது. நெசவுத்தொழிலில் லாபம் குறைந்தாலும் பல நெசவாளர்கள் நெசவுத் தொழிலை விட்டு வேறு தொழிலில் இறங்கவில்லை. ஏனெனில் நம் நாட்டினர் தம் குலத் தொழிலைக் கைவிட எளிதில் விரும்புவதில்லை. இது நெசவாளர்களது துரதிர்ஷ்டம். ஆனால் இதனால் நாட்டுக்கு நஷ்டமில்லை. ஏனென்றால் வெளிநாட்டுத் துணிக்கு பதிலாக நாம் ஏற்றுமதி செய்யும் அரிசியால் நம் நாட்டின் விவசாய வருமானம் அதிகரிக்கதான் செய்கிறது. ஆனால் இந்த உபரி வருமானம் நெசவாளர்களுக்கு கிடைக்காமல் வேறு சிலருக்குக் கிடைக்கிறது. நெசவாளி வறுமைப்பட்டாலும் நாட்டின் செல்வம் குறையவில்லை.

வெளிநாட்டு வியாபாரிகள் நம் நாட்டில் வியாபாரம் செய்து கிடைக்கும் வருமானத்தை அப்படியே மூட்டைகளில் கட்டிக் கொண்டு கப்பலேறி ஓடிப் போய் விடுவதாகப் பலர் நினைக்கிறார்கள். அவர்களுக்கு நாம் சொல்வது இதுதான்–

முதலாவதாக, ரொக்கப் பணம் ஒரு நாட்டிலிருந்து வெளியே போவதால் அந்த நாட்டுக்கு நஷ்டமேற்பட்டுவிடுவதில்லை. செல்வம் என்பது ரொக்கப் பணம் மட்டுமல்ல. எல்லா வகை சொத்துக்களும் செல்வந்தான். ரொக்கப் பணமும் ஒரு வகைச் செல்வம். நாம் ரொக்கப் பணத்தைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக வேறொரு பொருள் பெற்றால், ரொக்கப் பணத்தைக் கொடுத்ததற்காக ஏழையாகிவிட மாட்டோம்.

ரொக்கப்பணம் மட்டுமே செல்வமல்ல என்பதைப் புரிய வைப்பது கடினமல்ல. ஒருவன் நூறு ரூபாய்க்கு நெல் வாங்கித் தன் களஞ்சியத்தில் போட்டுக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இப்போது அவனுடைய ரொக்கப்பணத்தில் நூறு ரூபாய் குறைந்து விட்டது. ஆனால் அவனது களஞ்சியத்தில் நூறு ரூபாய் மதிப்புள்ள நெல் கூடியிருக்கிறது. இப்போது அவன் முன்னைவிட ஏழையாகிவிட்டானா?

இரண்டாவதாக, வெளிநாட்டு வணிகர்கள் ரொக்கப் பணத்தைக் கப்பலில் எடுத்துச் செல்வதில்லை. பண்டங்களை விற்பதும் வாங்குவதும் உண்டிப் பத்திரங்கள் மூலமே நடைபெறுகிறது. குறைந்த தொகையே ரொக்கமாக வெளிநாட்டுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

மூன்றாவதாக, ரொக்கப்பணம் நாட்டைவிட்டுப் போவதால் நமக்கு

நஷ்டம் என்று வைத்துக் கொண்டால், இந்த வெளிநாட்டு வியாபாரத்தால் நமக்கு பணம் அல்லது வெள்ளியை விட நம் நாட்டுக்குள் வரும் வெள்ளியின் அளவு அதிகம்; இந்த வெள்ளியைக் கொண்டு நாணயங்கள் செய்யப் படுகின்றன. ரொக்கப் பணமே செல்வமென்றால் நாம் மற்ற நாடுகளை ஏழை களாக்கி நம் நாட்டுச் செல்வத்தை வளர்த்துக் கொள்கிறோம், நாம் ஏழையாக வில்லை.

இந்தக் கருத்துக்களைப் புரிந்து கொள்பவர்கள், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தால் வெளிநாட்டு வணிகர்கள் நம் நாட்டுச் செல்வத்தை எடுத்துக் கொண்டு போய்விடுவதில்லை, அதனால் நம் நாட்டுச் செல்வம் குறைவ தில்லை என்பதைக் காண்பர். மாறாக, வெளிநாட்டு வியாபாரத்தால் நம் நாட்டுச் செல்வம் வளர்வதையும் தெரிந்து கொள்வர். வெளிநாட்டிலிருந்து எவ்வளவு பணம் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டுச் செலவு செய்யப் படுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். நிறையச் செலவில் ரயில் பாதைகள் அமைக்கப்படுகின்றனவே, அந்தப் பணம் யாருடையது?

வெளிநாட்டு வணிகர்கள் சம்மந்தமாக நாம் கூறியிருப்பது ஓரளவு வெளி நாட்டு ஆட்சியாளர்களுக்கும் பொருந்தும். ஆனால் அவர்கள் காரணமாக நம் நாட்டுச் செல்வம் கொஞ்சம் நாட்டை விட்டுப் போகிறது, அதற்குப் பதிலாக நாம் மாற்றுப் பொருள் எதுவும் பெறுவதில்லை என்பதை ஒப்புக் கொள்ள தான் வேண்டும். ஆனால் இந்தச் செல்வத்தின் அளவு குறைவுதான். (இந்தக் கருத்து ஒரு பெருந்தவறு. இந்தக் கட்டுரைக் கருத்துக்கள் சிலவற்றில் நான் தவறு செய்து விட்டேன் என்பதைத் தொடக்கத்திலேயே ஒப்புக் கொண்டிருக் கிறேன்.) வணிகத்தால் நம் நாட்டில் ஏற்படும் செல்வ வளர்ச்சியாலும், முதலா வது இயலில் குறிப்பிடப்பட்டது போல் விவசாயத்தில் ஏற்படும் வளர்ச்சி யாலும் இந்த நஷ்டம் ஈடு செய்யப்பட்டு அதற்கு மேலும் செல்வம் மிஞ்சுகிறது. ஆகவே நம் செல்வம் ஆண்டுக்காண்டு வளர்கிறதே தவிரக் குறையவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரையாசிரியர் எழுதுகிறார்–" பெருந்தன்மை யுள்ள கார்ன்வாலிஸ் ஜமீன்தார்களின் தற்போதைய செழிப்புக்கு ஏற்பாடு செய்யமலிருந்தால் நம் நாடு இன்னும் ஏழையாகியிருக்கும். நம்நாட்டிலுள்ள கொஞ்ச நஞ்ச செல்வம் இப்போது ஒரு சில ஜமீந்தார்களிடந்தான் இருக்கிறது".

பலரும் இவ்வாறு நினைக்கிறார்கள். இந்தக் கருத்து தவறு. நம் கேள்வி– ஜமிந்தார்களுக்கு நில உரிமை கொடுத்ததால்தான் நம் நாட்டில் செல்வம் இருக்கிறது என்று சொன்னால், விவசாயிகளுக்கு நில உரிமை கொடுத்தால் அந்தச் செல்வம் நாட்டில் இருக்காதா? ஜமிந்தார்களிடம் இப்போது இருக்கும் செல்வம் அப்போது நாட்டிலில்லாமல் வேறெங்கே போய்விடும்?

நிலத்தின் உற்பத்தியை ஜமீந்தார்கள் அநுபவிப்பதால்தான் அவர்களிடம் செல்வம் இருக்கிறது. விவசாயிகளுக்கும் நில உரிமை கிடைத்தால் செல்வம் ஒரு சிலரிடம் முடங்கிக் கிடக்காமல் லட்சக்கணக்கான மக்களிடம் பரவி யிருக்கும். கார்ன் வாலிஸின் ஏற்பாட்டை ஆதரிப்பவர்கள் இங்குதான் தவறு

செய்கிறார்கள். செல்வம் ஒரு சில இடங்களில் குவிந்திருந்தால்தான் அது செல்வம் என்பது அவர்களது கருத்து. பணக்குவியலில்லாவிட்டால் பண மில்லையென்று அவர்கள் நினைக்கிறார்கள். லட்சக்கணக்கான பணம் ஒரி டத்தில் குவிந்திருந்தால் பார்வையிடப்படுகிறது. அதுவே மைலுக்கு ஒரு ரூபாயாகச் சிதறிவிட்டால் அது கண்ணுக்குத் தெரியாது. பணம் ஒரிரு இடங்களில் குவிந்திருப்பது நாட்டுக்கு நல்லதா, அல்லது பல இடங்களில் பரவி யிருப்பது நல்லதா என்று இப்போது ஆராய வேண்டும். பணம் சாணம் மாதிரி; அது ஒரிடத்தில் குவிந்திருந்தால் நாற்றமெடுக்கும், அதை நிலத்தில் பரவலாகத் தெளித்தால் அது உரமாகி நல்ல விளைவைத் தரும் என்று பண்டைக்கால அறிஞர்கள் கூறுவார்கள். சமூகவியல் அறிஞர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். செல்வம் சாதாரணமாக மக்களிடையே பரவலாக இருப்பதே சமூக முன்னேற்றத்தின் அடையாளம் என்பதை அவர்கள் ஆராய்ச் சியின் மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இக்கருத்து ஏற்றத் தக்கதே. ஏழெட்டு பேர் பணக் குவியலில் புரள ஆறு கோடி மக்கள் சோறின்றிச் சாவதைவிடக் கொடுமை வெறன்ன இருக்க முடியும்?

ஆகையால் கார்ன்வாலிஸ் செய்த ஏற்பாடு தவறானது. நிலம் விவசாயி களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் இப்போது வங்காளத்தில் ஏழெட்டுப் பெரும் பணக்காரர்களுக்குப் பதிலாக ஆறு கோடி மக்கள் இன்பமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். நாட்டு மக்கள் சோற்றுக்கு தவித்துக் கொண்டிருக்க ஏழெட்டு பேர் தங்கள் சொத்தைச் செலவு செய்து தீர்க்க முடியாமல் தவிப்பது நல்லதா, எல்லோரும் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள், யாரிடமும் தேவைக்கு மேல் பணமில்லை என்ற நிலை நல்லதா? இரண்டாவ தாகக் கூறப்பட்ட நிலையே சிறந்தது என்பதை எந்த அறிவாளியும் மறுக்க மாட்டான். முதலில் கூறப்பட்ட நிலையில் யாருக்கும் நன்மையில்லை. பணக் குவியலில் புரள்பவன் கழுதை மாதிரி வாழ்கிறான். சோற்றுக்கும் துணிக்கும் தவிப்பவர்கள் சீவனின்றி இருக்கிறார்கள். ஒரு சிலர் பெரிய மனிதர் களாகாமல் எல்லோரும் வசதியாக வாழ்ந்தால் எல்லாரும் மனிதத் தன்மை யோடிருப்பார்கள். நாட்டின் முன்னேற்றத்துக்கும் எல்லையிருக்காது. இப்போது ஐந்தாறு பேர் பிரிட்டிஷ் இந்திய சங்கத்தில் அமர்ந்து கொண்டு கிசுகிசுப்பதற்குப் பதிலாக ஆயிரக்கணக்கான மக்கள் கடலோசை போல முழங்கி கொண்டிருப்பார்கள்.

ஜமீந்தார்கள் நம் நாட்டுக்குத் தேவையானவர்கள், உபகாரிகள் என்று நினைப்பவர்களின் நம்பிக்கைக்கு ஆதாரமில்லை என்பதை நாம் விளக்கி யிருக்கிறோம்.

(வங்க ஆண்டு 1279–பாத்ர–கார்த்திக்–பால்குன் மாத 'வங்கதர்சன்' இதழ்களில் முதலில் வெளியான இந்தக் கட்டுரை 'விவத பிரபந்த்' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

இந்தியாவின் சுதந்திரமும் அடிமைத்தனமும்

மனிதனிடம் நல்லது எதுவுமே காணமுடியாதபடி அவன் ஒரு போதும் அவ்வளவு வீழ்ச்சியடைந்துவிட மாட்டான். நமது மிக மோசமான இழி நிலையிலும் கொஞ்சம் நன்மையைக் கண்டு பிடிக்க இயலும். துன்பத்திலும் ஓரளவு இன்பத்தைக் காண்பவன் அறிஞன். துன்பம் முழுவதும் துன்பமல்ல என்று துன்ப காலத்தில் உணர்வதில் சிறிது ஆறுதல் கிடைக்கும்.

பாரத நாடு முன்பு சுதந்திரமாயிருந்தது. இப்போது பல நூற்றாண்டுகளாக அடிமையாயிருக்கிறது. புதிய நோக்குள்ள நம் நாட்டவர் இந்த நிலையை மிகப் பெரிய துன்பமாகக் கருதுகிறார்கள். நமது பண்டைய சுதந்திரத்தையும் தற்கால அடிமைத்தனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க நமக்கு விருப்பம். எது இன்பம், எது துன்பம் என்றுதான் ஆராய்ந்து பார்ப்போமே!

முதலில் சுதந்திரம் என்ன, அடிமைத்தனம் எது என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நாம் பண்டைய பாரதத்துடன் தற்கால பாரதத்தை ஒப்பிட்டு பார்க்க இருக்கிறோம். இவற்றிற்கு இடையே உள்ள ஒற்றுமையை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் எந்த விஷயத்தில் வேற்றுமையை ஆராய வேண்டும்? பழைய பாரதம் சுதந்திரமாயிருந்தது, இன்றைய பாரதம் அடிமைப்பட்டுள்ளது என்று சொல்வதில் என்ன பயன்? பண்டைய பாரதத்தில் மக்கள், மிகவும் இன்பமாயிருந்தார்களா, இன்றைய பாரதத்தில் மிகவும் இன்பமாக இருக்கிறார்களா என்பதை ஆராய்வதே நம் நோக்கமாயிருக்க வேண்டும்.

இதைக் கேட்டதும் பலர் நம்மோடு சண்டைக்கு வருவார்கள். "சுதந்திரமே ஓர் இன்பம். இதை சந்தேகிப்பவன் பாவி, இழிந்தவன்" என்றெல்லாம் அவர்கள் சொல்வார்கள். நாம் இக் கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சுதந்திரம் அடிமைத்தனத்தைவிட ஏன் சிறந்தது என்ற கேள்விக்கு விடையளிப்பது எளிதல்ல.

வங்காளிகள் ஆங்கிலம் படித்துவிட்டு இரண்டு சொற்களைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்–'liberty', 'independence'. இவற்றை மொழிபெயர்த்தால் 'சுதந்திரம்', 'தன்னிஷ்டபடி நடத்தல்' என்ற சொற்கள் கிடைக்கும். இந்த இரண்டு சொற்களுக்கும் பொருள் ஒன்று என்று பலர் எண்ணுகிறார்கள். தம்

இனத்து அரசனால் ஆளப்படுவதை சுதந்திரம் என்று மக்கள் பொதுவாக கருது கிறார்கள். பிற இனத்து அரசனால் ஆளப்படுவது அடிமைத்தனம் எனக் கருதப்படுகிறது. ஆகையால் மொகலாய ஆட்சிக்குட்பட்ட பாரதமும் சிராஜ் உத்தெளலாவின் ஆட்சியில் வங்காளமும் அடிமை நாடுகளாகக் கருதப்படு கின்றன. இந்தக் கருத்து எவ்வளவு தூரம் சரி என்பதை ஆராய்வோம்.

விக்டோரியா மகாராணியைப் பிரிட்டிஷ்காரியாகக் கருதலாம். ஆனால் அவருடைய முன்னோரான முதல், இரண்டாம் ஜார்ஜ் மன்னர்கள் பிரிட்டிஷார் அல்லர். அவர்கள் ஜெர்மானியர். மூன்றாவது வில்லியம் ஹாலந்துக்காரர். நெப்போலியன் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கார்சிகாவில் பிறந்தவர். ஸ்பெயின் நாட்டை முற்காலத்தில் ஆண்ட போர்பன் வம்சத்தினர் பிரெஞ்சுக்காரர்கள், பார்பர் இனத்தைச் சேர்ந்த பலர் ரோமானியப் பேரரசை ஆண்டிருக்கிறார்கள். இவ்வாறு நூற்றுக்கணக்கான உதாரணங் கள் சொல்ல முடியும். ஆகவே, பல நாடுகள் பல சமயங்களில் பிற இனத்து அரசர்களால் ஆளப்பட்டுள்ளன. இந்தக் காரணத்துக்காக அந்த நாடுகள் அடிமைப் பட்டிருந்ததாகக் கூற முடியுமா? கூற முடியுமென்று யாரும் சொல்ல மாட்டார்கள். முதலாவது ஜார்ஜின் ஆட்சியில் பிரிட்டனையும் ட்ரேஜனின் ஆட்சியில் ரோமாபுரியையும் அடிமை நாடுகளாகக் கருதாவிட்டால் ஷாஜஹான் காலத்துப் பாரதத்தையும் அலிவர்திகானின் ஆட்சியில் வங்காளத் தையும் ஏன் அடிமை நாடுகளாகக் கருத வேண்டும்?

ஆகவே, அரசன் பிறஇனத்தைச் சேர்ந்தவனாக இருப்பதாலேயே நாடு அடிமைப்பட்டதாகி விடாது என்று தெரிகிறது. அதே போல மக்களின் இனத்தைச் சேர்ந்த அரசனால் ஆளப்படுவதால் மட்டும் ஒரு நாடு சுதந்திரமாகி விடாது என்பதற்கும் பல உதாரணங்கள் காட்டலாம். ஜார்ஜ் வாஷிங்டன் நடத்திய போருக்கு முன்னால் அமெரிக்காவை ஆண்டவர்கள் அங்கு வாழ்ந்த மக்களின் இனத்தினரே. ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் தொடக்கத்தில் அரசன் மக்களின் இனத்தைச் சேர்ந்தவனாகவே இருப்பான். ஆனால் அதற்காக அந்த நாடுகளைச் சுதந்திர நாடுகளாகக் கருத இயலாது.

அடிமை நாடு என்று எதைக் கூறுவது?

பிரிட்டிஷாரால் ஆளப்படும் தற்கால பாரதம் அடிமை நாடு என்பது உறுதி. பிரிட்டன் முதல் சிரியா வரையில் ரோமானியர்களால் கைப்பற்றபட்ட நாடுகள் யாவும் அடிமை நாடுகளே. ஆல்ஜியர்சும் ஜமைக்காவும் அடிமை நாடுகள்தாம். ஏனென்றால் இவை ஒவ்வொன்றும் தனித்தனி ராஜ்யமல்ல, வேறோர் நாட்டில் வசிக்கும் அரசனின் ராஜ்யத்தின் பகுதிகள் தான். பாரத நாட்டின் அரசன் அல்லது அரசி பாரதத்தில் வசிக்கவில்லை. வேறு நாட்டில் வசிக்கிறார். ஒரு நாட்டின் அரசர் வேறு நாட்டு வாசியாயிருந்தால் அந்த நாடு அடிமை நாடு.

ஓர் அரசனின் ஆட்சியில் இரண்டு நாடுகள் இருந்தால் எந்த நாட்டில் அவன் வசிக்கிறானோ அந்த நாடு சுதந்திர நாடு, மற்றது அடிமை நாடு.

இந்த விளக்கத்துக்குச் சில ஆட்சேபங்கள் எழலாம். ஸ்காட்லாந்தைச் சேர்ந்த முதலாம் ஜேம்ஸ், ஸ்காட்லாந்து, இங்கிலாந்து ஆகிய இரண்டு நாடுகளுக்கும் அரசனாகி ஸ்காட்லாந்தைவிட்டு இங்கிலாந்துக்கு வந்து வாழத் தொடங்கினார். இதனால் ஸ்காட்லாந்து அடிமையாகி விட்டதா? பாபர் பாரதத்தை வென்றபிறகு பாரதத்தில் இருந்து கொண்டு தம் முன்னோரின் நாட்டையும் ஆண்டார். ஆகையால் அந்த நாடு பாரதத்துக்கு அடிமையாகி விட்டதா? முதலாம் ஜார்ஜ் இங்கிலாந்திலிருந்து கொண்டு தம் முன்னோர் நாடான ஹனோ வரையும் ஆண்டதால் ஹனோவர் அடிமை நாடாகுமா?

முதலாவது ஜேம்ஸ், முதலாவது ஜார்ஜ், முதல் மொகலாய அரசரான பாபர் ஆகியோர் முதலில் ஆண்ட நாடுகள் பிற நாடுகளைச் சார்ந்திருக்க நேர்ந்தது, ஆனால் அவை தங்கள் சுதந்திரத்தை இழக்கவில்லை. நாம் 'independence' என்ற சொல் பிறரைச் சார்ந்திராத தன்மையைக் குறிப்பதாகவும், 'liberty' என்ற சொல் சுதந்திரத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

இந்த இரண்டுக்கும் என்ன ஒற்றுமை?

பிரிட்டனில் 'அரசியல் சுதந்திரம்' என்ற சொற்றொடர் ஒரு குறிப்பிட்ட பொருளில் கையாளப்படுகிறது. நாமும் அதையே பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஏனென்றால் நம்முடைய ஆராய்ச்சிக்கு அது பொருந்தாது. பாரத நாட்டினர் புரிந்து கொள்ளும் வகையில் நாம் இந்த விஷயத்தை ஆராய்வோம்.

வேறொரு நாட்டு அரசனால் ஆளப்படும் நாட்டில் கொடுங்கோன்மை நிகழ்கிறது. அரசனின் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆளப்படும் நாட்டினரைவிட அதிக செல்வாக்குப் பெறுகிறார்கள். ஆகவே நாட்டு மக்கள் பிற நாட்டு மக்களால் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நிலையில் ஆளப்படும் நாட்டை சுதந்திரமற்றது எனக் கூறலாம். இந்த நிலை இல்லாவிட்டால் நாடு சுதந்திரமானதாகும்.

ஆகவே பிறநாட்டைச் சார்ந்திருக்கும் நாட்டைக் கூட சுதந்திர நாடாக கருதலாம். முதலாம் ஜார்ஜ் காலத்து ஹனோவரும் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் காபூலும் சுதந்திர நாடுகள்தாம். அதேபோல் பிறநாட்டைச் சார்ந்திராத நாட்டைக் கூட சுதந்திரமற்றதாக கருதலாம். உதாரணம்– நார்மன்களால் ஆளப்பட்ட இங்கிலாந்து, ஔரங்கசீப் காலத்து பாரதம். குதுபுதீன் காலத்தில் வட இந்தியா பிற நாட்டைச் சார்ந்து இருந்தது. அடிமையாகவும் இருந்தது. அக்பர் காலத்திலோ பாரதம் பிற நாட்டைச் சார்ந்திராமல், சுதந்திரமாக இருந்தது.

பிறநாட்டைச் சார்ந்திருப்பதற்கும் சாரதிருப்பதற்கும் இடையேயுள்ள வேற்றுமையை முதலில் ஆராய்வோம், பிறகு சுதந்திரத்துக்கும் அடிமைத்தனத்துக்குமிடையேயுள்ள வேற்றுமையை ஆராயலாம். அரசன் வேற்று நாட்டானாயிருந்தால் இரு வகையான தீமைகள் நேர வாய்ப்பு உண்டு. ஒன்று, அரசன் தொலைவில் வசித்தால் நாட்டின் ஆட்சி சரியாக நடைபெறாது.

இரண்டு, அரசன் தான் வசிக்கும் நாட்டையே அதிகம் நேசிப்பான். அதன் நலத்திற் காகத் தொலைவிலுள்ள நாட்டுக்குத் தீங்கு செய்வான். இப்போது நம் நாட்டில் இவ்விருவகைத் தீமைகளும் நிகழவில்லை என்று சொல்ல முடியாது. மகாராணி விக்டோரியாவின் அரியணை டில்லியிலோ கல்கத்தாவிலோ இருந்தால் பாரதத்தின் ஆட்சிமுறை நன்றாக இருந்திருக்கும் என்பதில் ஐய மில்லை. ஏனெனில் அரசன் வாழும் நாட்டினிடம் அதிகாரிகளுக்கு அதிக அக்கறை இருக்கும். இரண்டாவது வகைத் தீமையும் நம் நாட்டில் நிகழ்கிறது. பிரிட்டனின் கௌரவுத்துக்காக அது அபிசீனியாவில் செய்யும் போருக்கான செலவு இந்தியாவின்மேல் சுமத்தப்படுகிறது. 'ஹோம் சார்ஜஸ்' என்ற தலைப்பில் இந்திய அரசின் பட்ஜெட்டில் இடம் பெறும் செலவினங்கள் பல இந்த வகையைச் சேர்ந்தவையே. இன்னும் பல உதாரணங்களும் சொல்லலாம்.

அரசன் தொலைவிலிருப்பதால் இந்தியாவில் நல்லாட்சிக்கு தடை ஏற் பட்டாலும், அரசன் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதால் ஏற்படும் தீமைகள் நம் நாட்டில் நேர்வதில்லை. அரசன் புலனின்பங்களில் ஈடு பட்டவனாய்ப் பெண்களுடனே பொழுதைக் கழித்தால் நாட்டுக்கு கேடு. அரசன் கொடுமையானவனாகவோ, பேராசைக்காரனாகவோ இருந்தாலும் நாடு துன்புறும். இத்தகைய துன்பங்கள் பண்டைக் காலத்தில் நேர்ந்திருக் கின்றன. தொலைவில் வாழும் அரசன் அல்லது அரசியின் கெட்ட குணம் அல்லது நடத்தையில் நம் நாட்டுக்குத் துன்பம் நேரும் ஆபத்து இல்லை.

இரண்டாவதாக, பிரிட்டனின் நன்மைக்காக இப்போது இந்தியாவிற்குத் துன்பம் நேர்வது போல், பண்டைய இந்தியாவில் அரசனின் சொந்த இன்பத் துக்காக நாட்டுக்குத் துன்பம் நேர்வதுண்டு. பிருதிவிராஜன் ஜயசந்திரனின் பெண்ணை அபகரித்துச் சென்றதின் விளைவாக இருவரின் நாடுகளுக்கு மிடையே போர் மூண்டு இரு நாடுகளும் முஸ்லிம்களால் கைப்பற்றப் பட்டன. தற்கால இந்தியாவில் அரசனின் சொந்த நன்மைக்காக நாட்டுக்குத் தீங்கு நேரும் அபாயமில்லை.

ஆனால் நாம் மேலே கூறியிருப்பது பிறநாட்டை நம் நாடு சார்ந்திருப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றியது. நாம் இந்த நிலைக்கும் அடிமைத் தனத்துக்கும் வேற்றுமை காண்கிறோம். பாரத நாட்டில் பிரிட்டிஷாருக்குச் செல்வாக்கு அதிகம்; இந்தியர்கள் அவர்களைவிடக் கீழ் நிலையில் இருக்கிறார்கள். பிரிட்டி ஷாரின் நன்மைக்காக ஓரளவு இந்தியர்களின் நலம் பாதிக்கப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஓரினத்தின் மீது வேறோர் இனத்தின் இத்தகைய ஆதிக்கம் பண்டைய இந்தியாவில் இல்லை. ஆனால் அதற்கு சம அளவில் சாதி ஆதிக்கம் இருந்தது. நெடுங்காலமாகவே பாரதத்தில் சூத்தி ரர்கள் பெரும்பான்மையோராகவும் மற்ற மூன்று உயர் சாதியினர் சிறு பான்மையோராகவும் இருந்தார்கள் என்பதையும் மறுக்க இயலாது. நாட்டின் ஆட்சியதிகாரமோ பிராமணர்கள், சத்திரியர்கள் ஆகியோரிடம் இருந்தது.

இந்த விஷயத்தைச் சற்று விரிவாக ஆராய்வது அவசியம்.

பண்டைய காலத்தில் சத்திரியர்களே இந்தியாவையாண்டனர் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. உண்மையில் ஆட்சிப் பொறுப்பு இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. போர் செய்யும் பொறுப்பு சத்திரியர்களுக்கு அளிக்கப்பட்டது. நிர்வாக முறை, நீதித்துறை இவையிரண்டும் பிராமணர்களின் பொறுப்பிலிருந்தன. தற்காலத்தில் உள்ள சிவில் துறை, ராணுவத்துறை போன்ற பிரிவுகள் இவை. பிராமணர்கள் சிவில் துறையையும் சத்திரியர்கள் ராணுவத்துறையையும் கவனித்துக் கொண்டார்கள். இப்போது சிவில் அதிகாரிகளுக்கு ராணுவ அதிகாரிகளைவிட அதிகச் செல்வாக்கு இருப்பது போல் முன்காலத்திலும் இருந்தது. சத்திரியர்களுக்கே அரசர் பட்டம் கிடைத்தாலும் நடைமுறையில் அவர்களுக்கு மேல் பிராமணர்களின் ஆதிக்கம் இருந்தது. ஆனால் பண்டைய பாரதத்தில் சத்திரியர்கள் எப்போதும் அரசர்களாயிருக்கவில்லை. தொடக்கக் காலத்தில் சத்திரியர்களே அரசர்களாயிருந்தாலும் பௌத்த காலத்தில் மௌரியர் போன்ற கலப்புச் சாதியினரும் அரசர்களாயிருந்தனர். சீனப்பயணி ஹுயேன் சாங் சிந்து நதிக் கரையில் பிராமணர் அரசராயிருப்பதைக் கண்டார். வேறு சில இடங்களிலும் பிராமண அரசர்கள் இருந்தனர். மத்திய காலத்தில் பெரும்பான்மையான அரசர்கள் ராஜபுத்திரர்கள். இவர்கள் சத்திரியரிடமிருந்து தோன்றிய கலப்புச் சாதியினர். பண்டைய பாரதத்தில் சத்திரியரின் செல்வாக்கு அவ்வப்போது தடைபட்டது. ஆனால் பிராமணர்களின் செல்வாக்கு ஒரு நாள் கூட மங்கவில்லை. வேதத்தை மறுத்த பௌத்த அரசர்களின் காலத்தில் கூட ஆட்சிப் பொறுப்பு பிராமணர்களின் கையில்தான் இருந்தது. ஏனெனில் அவர்கள் தாம் கல்வியறிவு பெற்றவர்களாகவும் செயல் திறமை வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். ஆகவே பண்டைய பாரதத்தில் பிராமணர்களையே உண்மையில் ஆட்சியாளர்களாகக் கருதலாம். பிராமணர்களே பண்டைய பாரதத்தின் பிரிட்டிஷார் என்று சிறந்த எழுத்தாளர் பாபு தாராப்பிராசாத் சட்டோபாத்தியாய் 'பெங்கால் மெகசின்' என்ற பத்திரிக்கையில் வெளியான ஒரு கட்டுரையில் கூறியுள்ளது சரியே.

இப்போது ஒரு கேள்வி எழுகிறது–தற்கால இந்தியாவில் பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்குமிடையேயுள்ள வேற்றுமை முற்காலத்தில் பிராமணருக்கும் சூத்திரருக்குமிடையேயிருந்த வேற்றுமையை விட அதிகமா?

அரசன் வேற்றினத்தானாயிருந்தால் நாட்டுக்கு நேரும் தீமை இருவகைப்பட்டது. ஒன்று, நிர்வாக முறையால் ஏற்படுவது. ஆதாவது அரசனின் இனத்தைச் சேர்ந்தவருக்கு ஒரு சட்டம், நாட்டு மக்களுக்கு வேறு சட்டம் இருக்கும். மற்றது, அரசனின் விருப்பத்தால் நிகழ்வது. அரசன் தன் இனத்துக்கு சலுகை காட்டுவான், தன் இனத்தாரையே அரசாங்கப் பணியில் அமர்த்துவான்.

பிரிட்டிஷாரால் ஆளப்படும் தற்கால இந்தியாவிலும் பிராமணர்களால் ஆளப்பட்ட பண்டைய இந்தியாவிலும் இந்த இரு வகைத் தீமைகளும் எந்த அளவில் இருந்தன என்று பார்ப்போம்.

1. பிரிட்டிஷாரால் அமைந்துள்ள நிர்வாக முறையில் உள் நாட்டுக் குற்ற வாளிகளை விசாரிக்க ஒரு நீதிமன்றம், ஐரோப்பியக் குற்றவாளிகளை விசாரிக்க வேறு நீதிமன்றம். இந்தியக் குற்றவாளியை ஆங்கிலேய நீதிபதி தண்டிக்கலாம். ஐரோப்பிய குற்றவாளியை இந்திய நீதிபதி தண்டிக்க முடியாது. இதைத் தவிர வேறு வித்தியாசம் இல்லையென்று சொல்லலாம். ஆனால் பிராமணர் ஆட்சியில் இதை விட மோசமான வேற்றுமை இருந்தது. ஐரோப்பியனை விசாரிக்கத் தனி நீதிமன்றம் இருந்தாலும், ஐரோப்பி யனையும் இந்தியனையும் நெறிப்படுத்தும் சட்டம் ஒன்றுதான். ஓர் இந்தியன் ஐரோப்பியனைக் கொன்றால் அவனுக்கு மரண தண்டனை கிடைக்கும். அது போல் இந்தியனைக் கொல்லும் ஐரோப்பியனுக்கும் மரண தண்டனைதான். ஆனால் பிராமணர் ஆட்சியில் சூத்திரனைக் கொல்லும் பிராமணனுக்குக் கிடைக்கும் தண்டனைக்கும் பிராமணர்களைக் கொல்லும் சூத்திரனுக்கு கிடைக்கும் தண்டைனைக்குமிடையே எவ்வளவு வேறுபாடு! இந்த விஷ யத்தில் தற்கால இந்தியா பண்டைய பாரதத்தைவிட இழிந்த நிலையிலுள்ளது என்று சொல்ல முடியுமா?

பிரிட்டஷ் ஆட்சியில் இந்தியன் ஆங்கிலேயனைத் தண்டிக்க முடியாது. அது போல் பண்டைய இந்தியாவிலும் சூத்திரன் பிராமணனைத் தண்டிக்க முடியாது. பாபு துவாரகாநாத் மித்ரா நம் நாட்டின் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்துகொண்டு நம் நாட்டுக்கே கௌரவமளித்திருக்கிறார். 'ராம ராஜ்யத்தில்' அவர் எங்கே இருப்பார்'?

பிரிட்டிஷ் ஆட்சியில் பெரும்பாலும் பிரிட்டிஷாரே அரசாங்க ஆதரவைப் பெறுகிறார்கள். எனினும் ஒரு சில இந்தியர்கள் உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள். பிராமண ஆட்சியில் சூத்திரர்களுக்கு இத்தகைய பதவிகள் கிடைத்திருக்குமா என்பது சந்தேகம்தான். பண்டைய பாரதத்தைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ஆகையால் இந்த விஷயத்தில் உறுதியாக எதுவும் கூற முடியாது. அந்தக் காலத்தில் கிராம சமூகமே பெரும்பாலும் நீதி வழங் கியதாகத் தெரிகிறது. ஆயினும் உயர்பதவி, சேனைத் தலைவன் பதவி போன்ற உயர்ந்த பதவிகளை பிராமணர்களும் சத்திரியர்களுமே வகித்தனர் என்று பண்டைக்கால நூல்களிலிருந்து தெரிய வருகிறது.

பிராமணரும் சத்திரியரும் சூத்திரர் மேல் ஆதிக்கம் செலுத்தினாலும் அவர்கள் நம்மினத்தவர். பிரிட்டிஷார் வேற்றினத்தவர்; ஆகையால் பிராமண, சத்திரியரின் ஆதிக்கத்தையும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தையும் ஒன்றாகக் கருதக் கூடாது என்று பலர் கூறலாம். துன்புறுத்துபவன் தன் இனத்தை சேர்ந்த வனாயினும் பிற இனத்தைச் சேர்ந்தவனாயினும் துன்புறுபவனின் துன்பம் ஒன்றுதான். தன் இனத்தினால் நேரும் துன்பம் இதமாயிருக்கும், பிற

இனத்தான் செய்யும் துன்பம்தான் கசப்பாயிருக்கும் என்று தோன்றவில்லை. இவ்வாறு நாம் பதில் அளிக்கலாம் எனினும் நாம் அவ்வாறு செய்யப் போவதில்லை. யாராவது தம் இனத்தார் மூலம் துன்புற ஆசைப்பட்டால் அதில் நமக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. நாம் சொல்ல விரும்புவது இதுதான்- தற்காலத்தில் ஓர் இனத்துக்கு செல்வாக்கு கிடைக்கிறது, முற்காலத்தில் சில சாதிகளுக்குச் செல்வாக்கு இருந்தது. பெரும்பான்மையான மக்களுக்கு இந்த இரண்டும் ஒன்றே.

எனினும் தற்கால அடிமை இந்தியாவில் மக்கள் தங்கள் அறிவு, கல்வி, சமூக நிலை இவற்றுக்கேற்ற உயர்பதவிகளை அடைய முடிவதில்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். கல்வியும் அறிவுமுள்ள ஒருவனுக்கு தன் கல்வியையும் அறிவையும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படாவிட்டால் அது அவனுக்கு பெருங் கொடுமை செய்வதாகும். தற்கால இந்தியாவில் இவ்வாறுதான் நடக்கிறது. பண்டைய பாரதத்தில் இந்தக் கொடுமையும் இருந்தது. ஆனால் இப்போதுள்ள அளவில் இல்லை. இப்போது அரசாங்கப் பணி முழுவதும் பிரிட்டிஷாரின் கையில். நாமாக எந்தப் பணியும் செய்ய இயலவில்லை. இதன் விளைவாக நமக்கு ஆட்சிக் கலையை கற்க முடிய வில்லை. மக்களின் நிர்வாகத் திறன் வளரவில்லை. ஆகவே நாம் இப்போது ஐரோப்பிய இலக்கியம், அறிவியல் ஆகியவற்றைக் கற்று வருகிறோம். ஐரோப்பிய ஆட்சிக்கு உட்படாமல் இருந்திருந்தால் நமக்கு அந்த அரிய வாய்ப்பு கிட்டியிருக்காது. ஆகையால் நமது அடிமைத்தனத்தால் நமக்கு ஒரு பக்கம் நஷ்டமும் இன்னோரு பக்கம் லாபமும் ஏற்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்வதானால், பண்டைய இந்தியாவில் உயர் சாதியினர். சுதந்திரத்தால் சில நன்மைகளை அனுபவித்தனர். அவை இப்போது அவர் களுக்கு இல்லை. ஆனால் பெரும்பான்மை மக்களின் நிலை அப்போதும் இப்போதும் ஏறக்குறைய ஒரே மாதிரிதான். தற்காலத்தில் அவர்கள் சற்று நலம் பெற்றிருக்கிறார்கள்.

எல்லோரும் புரிந்து கொள்ளும் வசதிக்காக இக்கட்டுரையின் கருத் துக்களை கீழே தொகுத்து அளிக்கிறோம்.

1. வேற்றினத்தான் அரசனாயிருப்பதாலேயே ஒரு நாடு அடிமையாகி விடாது. அத்தகைய நாடுகூட சுதந்திர நாடாகக் கருதப்படலாம்.
2. தன்னையே சார்ந்திருத்தல், சுதந்திரம் இவற்றுக்கும் பிறநாட்டைச் சார்ந்திருத்தல், அடிமைத்தனம் இவற்றுக்கும் நாம் வெவ்வேறு பொருள் கொள்கிறோம்.

பிறநாட்டில் வசிக்கும் அரசனால் ஆளப்படும் நாடு பிறநாட்டைச் சார்ந்த தாகும். ஒரு நாட்டில் வேற்று நாட்டினர் செல்வாக்குப் பெற்றிருந்தால் அந்த நாடு அடிமை நாடு. ஆகவே ஒரு நாடு பிறநாட்டைச் சார்ந்திருந்தும் சுதந்திர மாயிருக்கலாம்; ஒரு நாடு பிற நாட்டைச் சார்ந்திராவிட்டாலும் அடிமையா யிருக்கலாம். ஒரு நாடு பிறநாட்டைச் சார்ந்தும் அடிமையாயிருக்கலாம்.

3. எந்த நாட்டு மக்கள் இன்பமாயிருக்கிறார்களோ, அந்த நாடு உயர்ந்த நாடு. துன்புற்ற மக்கள் கொண்ட நாடு இழிந்தது. பண்டைய சுதந்திர நிலையிலும் தற்போதைய அடிமை நிலையிலும் இந்திய மக்களின் துன்பம் எவ்வளவு என்பதே ஆராய்ச்சிக்குரியது.

4. இந்தியா பிற நாட்டைச் சார்ந்திருப்பதால், அதாவது அரசன் வெளி நாட்டிலிருப்பதால் நம் நாட்டின் நல்லாட்சிக்குத்தடை ஏற்பட்டிருக் கிறதா? ஆட்சியாளர்கள் தங்கள் நாட்டின் நலனுக்காக இந்த நாட்டுக்குத் தீங்கு செய்கிறார்களா? இந்தக் காரணங்களால் இந்திய நாட்டின் நல்லாட்சி தடைப்படுகிறது என்பதையும் இந்திய நாட்டுக்குத் தீமை ஏற் படுகிறது என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

   ஆனால் அரசனின் ஒழுக்கக் குறைவால் நாட்டுக்கு ஏற்படும் தீமைகள் தற்காலத்தில் இந்தியாவுக்கு நேர்வதில்லை. இவ்விஷயத்தில் பண்டைய பாரதத்துக்கும் இன்றைய இந்தியாவுக்குமிடையே அதிக வேற்றுமை இல்லை.

5. சுதந்திரம், அடிமைத்தனம் என்ற நோக்கில் ஆராய்ந்தால் தற்கால இந்தி யாவில் ஆட்சியாளர் கொடுமை உள்ளது. ஆனால் முற்காலத்தில் பிராமணர்களின் கொடுமை இருந்தது. இந்த விஷயத்தில் அதிக வேற்றுமையில்லை, ஆனால் முற்காலத்தில் பிராமணரும் சத்திரியரும் சற்று சுகமாக வாழ்ந்தனர்.

6. தற்கால இந்தியாவில் நிர்வாகக் கலையில் செயல்முறைப் பயிற்சி மக்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் அறிவியல், இலக்கியப் பயிற்சி யில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

"அப்படியானால் சுதந்திரமும் அடிமைத்தனமும் ஒன்றா? ஒன்றாயிருந்தால் உலக நாடுகள் யாவும் சுதந்திரத்துக்காக ஏன் இவ்வளவு பாடுபடுகின்றன" என்று சிலர் கோபத்துடன் கேட்கலாம். நாம் இப்போது இப்பிரச்சினையை ஆராயவில்லை என்பதுதான் அவர்களுக்கு நமது பதில். நாம் இப்போது அடிமைகள், இன்னும் நெடுங்காலம் இந்நிலை தொடரும். ஆகவே இந்தப் பிரச்சினையை இப்போது ஆராயத் தேவையில்லை. பண்டைய பாரதம் சுதந் திரமாயிருந்ததால் அக்காலத்து மக்கள் தற்கால இந்தியரைவிட அதிக இன்பமாக வாழ்ந்தார்களா என்பதே இப்போது நாம் ஆராயும் விஷயம். தற்கால இந்தியாவில் பிராமணர், சத்திரியர் ஆகிய உயர் சாதியினரின் நிலை தாழ்ந்து விட்டது. சூத்திர அதாவது சாதரண மக்களின் நிலை சற்று உயர்ந் திருக்கிறது என்பதே இந்த ஆராய்ச்சி மூலம் நாம் பெற்றுள்ள உண்மையாகும்.

(இந்தக் கட்டுரை முதலில் 'வங்கதர்சன்' பத்திரிகையின் 1280 ஆம் ஆண்டு பாத்ர மாத இதழில் வெளியாயிற்று. இப்போது 'விவித பிரபந்த' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

தனிமை

"அங்கே பாடுவது யார்?"

அந்த இனிய கீதம் நீண்ட காலமாக மறந்துபோன இன்பக் கனவின் நினைவு போலக் காதுகளில் புகுந்தது. அது இவ்வளவு இனிமையாகத் தோன்றுவது ஏன்? அந்த கானம் அப்படியொன்றும் அவ்வளவு இனிமையானதல்ல. வழிப் போக்கன் ஒருவன் தன்னை மறந்து பாடியவாறு போய்க்கொண்டிருக் கிறான். நிலாக்காயும் இரவில் அவனுள்ளத்து உவகை கரைபுரண்டு பெருகு கிறது. அவனது குரல் இயற்கையாகவே இனிமையானது. அவன் இந்த வசந்த காலத்தில் தன் இனிய குரலில் தன் மனதில் தோன்றும் மகிழ்ச்சியை அள்ளித் தெளித்துக் கொண்டு போகிறான். பல தந்திகள் கொண்ட இசைக் கருவியில் விரல்கள் பதிந்தால் எழும் ஒலி போன்ற இந்த இசை என் உள்ளத்தில் கிளுகிளுப்பு உண்டாக்குவது ஏன்?

ஏன் என்று யாருக்குத் தெரியும்? நிலா இரவு. ஆற்று மணலில் நிலவு சிரித்துக் கொண்டிருக்கிறது. அழகியொருத்தியின் உடம்பை அரைகுறையாக மறைக்கும் நீல ஆடைபோல் நீல நிற நீராகிய மெலிந்த உடல் கொண்ட ஆற்றுக் கன்னி மணலைத் தழுவியவாறு போய்க்கொண்டிருக்கிறாள். நெடுஞ்சாலை யில் எங்கும் மகிழ்ச்சி—சிறுவன், சிறுமி, யுவன், யுவதி, நடுவயதினர், முதியோர் யாவரும் தூய நிலவில் திளைத்து மகிழ்கிறார்கள். நான் ஒருவன் தான் மகிழ்ச்சியின்றி இருக்கிறேன். அதனால்தானோ என்னவோ அந்த இசை என் இதய வீணையை மீட்டுகிறது.

நான் தனியன். ஆகையால்தான் இந்த இசை என்னை மகிழ்ச்சியடையச் செய்கிறது. மக்கள் நிறைந்த இந்த நகர்த்தில், மகிழ்ச்சியில் திளைக்கும் இந்த மக்கள் திரளில் நான் மட்டும் தனியன். நான் மட்டும் ஏன் இந்த எல்லையற்ற மக்கள் பெருக்கில் கலந்துவிடவில்லை? எல்லையற்ற இந்த மகிழ்ச்சிப் பெருகு கின்ற குமிழிகளுள் இன்னொரு குமிழியாக ஆகிவிடவில்லை? துளி துளி நீர் சேர்ந்துதானே கடல்! நீர்த்துளியாகிய நான் ஏன் இந்தக் கடலில் ஒன்றி விடவில்லை?

காரணம் தெரியாது எனக்கு. நான் தனியன் என்பது மட்டும் தெரியும். யாரும் தனியாக இருக்காதீர்கள். உன் அன்பைப் பகிர்ந்து கொள்ள யாருமில்லாவிட்டால் உன் மனிதப்பிறவி வீண். மலருக்கு நல்ல மணமுண்டு. ஆனால் அந்த மணத்தை முகர யாருமில்லாவிட்டால் அந்த மணம் வீண். முகரும் புலன் இல்லையேல் மணம் இல்லை. மலர் தனக்காக மட்டும் மலர்வதில்லை. பிறருக்காக உன் மனமாகிய மலரை மலரச் செய்!

ஆனால் நான் ஒரு தடவை மாத்திரம் கேட்ட இந்த இசை எனக்கு ஏன் இவ்வளவு இனிமையாக ஒலித்தது என்பதை நான் இன்னும் சொல்லவில்லை. நான் மகிழ்ச்சியிலிருந்து பிறக்கும் இசையைக் கேட்டு, மகிழ்ச்சியான அனுபவத்தில் திளைத்து வெகு காலமாகிவிட்டது. என் இளமையில் உலகம் அழகாகத் தோன்றியது. ஒவ்வொரு மலரிலும் மணத்தை நுகர்ந்தேன், இலைகளின் சலசலப்பு இனிய இசையாக ஒலித்தது. ஒவ்வொரு நட்சத்திரத்திலும் சித்திரை, ரோகிணி போன்ற நட்சத்திரங்களின் அழகைக் கண்டேன். ஒவ்வொரு மனிதனின் முகத்திலும் எளிமை தென்பட்டது. அப்போது எனக்கு மகிழ்ச்சி கிடைத்தது. உலகம் இப்போதும் முன்போலத்தானிருக்கிறது. வாழ்க் கையும் மாறவில்லை. மனிதனின் குணமும் மாறவில்லை. ஆனால் என் உள்ளம் முன்போல இல்லை. முன்பு இசை காதில் விழுந்தால் மகிழ்ச்சி ஏற்படும். இன்று இந்த இசையைக் கேட்டுப் பழைய மகிழ்ச்சி நினைவுக்கு வந்தது. முன்பு எனக்கு மகிழ்ச்சியுண்டாக்கிய அந்த நிலை, அந்தப் பழைய இன்ப உணர்வு ஞாபகம் வந்தது. ஒரு சிறிது காலத்துக்கு, பழைய இளமையை மீண்டும் பெற்றேன். மனத்தளவில் முன்போல மறுபடியும் நண்பர் குழாத்தில் அமர்ந்து கொண்டேன்; மறுபடியும் காரணமின்றி உரக்கச் சிரித்தேன்; நான் இப்போது தேவையற்றவை எனக்கருதிப் பேசாத விஷயங்களை, முன்புதேவையற்றவையென்று அறிந்தும் பரபரப்பில் பேசிய விஷயங்களை, மறுபடி பேசத் தொடங்கினேன்; பிறரது அன்பை உண்மையானதாகக் கருதித் திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டேன். ஒரு கண நேர மயக்கத்தில் இந்த இசை இனிமையாக ஒலித்தது. அந்தக் காலத்தில் இசை எனக்குப் பிடித்திருந்தது. இப்போது பிடிக்கவில்லை. அப்போது இசையை இனியதாக எனக்குத் தோன்றச் செய்த மனமலர்ச்சி இப்போது எனக்கில்லாததால், இப்போது அதே இசை பிடிக்காமல் போய்விட்டது. நான் என் மனதின் ஆழத்தில் புகுந்து அந்தப் பழைய இளமையின் இன்பத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்போது இந்த இசை காதில் விழுந்ததால் இவ்வளவு இனிமையாக இருக்கிறது.

அந்தப் பழைய மனமலர்ச்சி இப்போது ஏனில்லை? இன்பந்தரும் பொருள்கள் குறைந்து விட்டனவா? வளர்ச்சியும் இழப்பும் உலக நியதி. ஆனால் இழப்பை விட வளர்ச்சி அதிகம் என்பதும் உலக நியதிதான். நாம் வாழ்க்கைப் பாதையைக் கடக்கக் கடக்க நமக்கு இன்பந்தரும் பொருள்களையும் சேர்த்துக் கொண்டே போகிறோம். அப்படியானல் வயது வளர வளர, உற்சாகம் ஏன்

குறைகிறது? உலகம் ஏன் முன்போல் அழகாகத் தோன்றுவதில்லை? ஆகாயத்துத் தாரகைகள் ஏன் முன்போல் பிரகாசமாக ஒளிர்வதில்லை? வானத்தின் நிலத்தில் முந்தைய பளபளப்பு ஏனில்லை? முன்பு இளம்புல்லால் போர்த்தப்பட்டு, மலர்களின் மணம் நிறைந்து, ஆற்றின் தெளிந்த நீர்த்துளிகளால் நனைக்கப்பட்டு, வசந்த காலத் தென்றல் வீசிய நிலம். இப்போது வெறும் மணல் நிறைந்த பாலைவனமாகத் தோன்றுவது ஏன்? நம்பிக்கை என்ற அந்த வர்ணக் கண்ணாடி இல்லாததுதான் காரணம். இளமையில் ஈட்டப்பட்ட இன்பம் கொஞ்சந்தான். ஆனால் இன்பம் இன்னும் கிடைக்குமென்ற நம்பிக்கை எல்லையில்லாமல் இருந்தது. இப்போது நிறைய இன்பத்தை ஈட்டுகிறேன். ஆனால் உலகெங்கும் பரவியிருந்த பழைய நம்பிக்கை இப்போது இல்லை. எது எப்படி நேரும் என்று தெரியாத நிலையில் நிறைய நம்பிக்கை வைத்தேன். வாழ்க்கையாகிய சக்கரத்திலேறி முன்பு புறப்பட்ட இடத்துக்கே இறுதியில் திரும்பி வரவேண்டுமென்று இப்போது தெரிகிறது. நான் முன்னேறுவதாக நினைக்கிறேன். ஆனால் உண்மையில் இருந்த இடத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறேன். வாழ்க்கையாகிய கடலை நீந்திக் கடக்க முயற்சித்தால் அலைமேல் அலை எழுந்து நம்மை மறுபடி கரையில் கொண்டு வந்து தள்ளிவிடுமென்று இப்போது புரிகிறது. வாழ்க்கையாகிய இந்தக் காடடில் பாதை இல்லை; இந்த வானில் நட்சத்திரம் இல்லை என்று இப்போது தெரிகிறது. மலரில் புழு உண்டு, தளிரில் முள் உண்டு, வானத்தில் மேகமுண்டு, தெளிந்த நீர் ஓடும் ஆற்றில் சுழல் உண்டு, பழத்தில் நஞ்சு உண்டு, பூங்காவில் பாம்பு உண்டு என்று தெரிகிறது இப்போது. ஒவ்வொரு மரத்திலும் பழம் பழுப்பதில்லை, ஒவ்வொரு மேகமும் மழை பொழிவதில்லை, ஒவ்வொரு காட்டிலும் சந்தனம் வளர்வதில்லை, ஒவ்வொரு சிப்பியிலும் முத்து இருப்பதில்லை என்று இப்போது தெரிந்து கொண்டேன். கண்ணாடியும் வைரம் போல் பளபளக்கும், பித்தளையும் பொன்போல மின்னும், சேறும் சந்தனம் போல்குளிர்ச்சியாயிருக்கும், வெண்கலமும் வெள்ளிபோல கணீரென்று ஒலிக்கும் என்று இப்போது தெரிகிறது...நான் என்ன சொல்ல வந்தேன் என்பதை மறந்து போய்விட்டேன்!...ஓ, அந்த இசையொலி! அது கேட்க இனிமையாகத்தானிருந்தது, ஆனால் அதை மறுபடி கேட்க எனக்கு விருப்பமில்லை. அது மனிதக் குரலில் பிறந்த இசை. அது போல் வாழ்க்கையில் இன்னொரு வகை இசை இருக்கிறது. வாழ்க்கைச் சுவையை அனுபவிக்கத் தெரிந்த ரசிகர்களால்தான் அந்த இசையைக் கேட்க இயலும். அந்த இசையைக் கேட்கத் தவிக்கிறது என் உள்ளம். அந்த இசையை இனி கேட்க மாட்டேனா? கேட்பேன்; என்றாலும் பல்வேறு இசைக் கருவிகளும் பல்வேறு மனிதக் குரல்களும் சேர்ந்திசைக்கும் அந்தப் பழைய வாழ்க்கையிசையை இனி கேட்க இயலாது என்னால். காரணம் அப்போது பாடியவர்கள் இப்போது

இல்லை. எனக்கும் அந்த வயது இல்லை. முன்பிருந்த நம்பிக்கை இல்லை. எனினும் அதற்குப் பதிலாக நான் இப்போது கேட்பது எனக்கு இன்னும் அதிக இன்பமளிக்கிறது. வேறு கருவிகளின் உதவியின்றி ஒலிக்கும் வெறுங்குர லிசை காதை நிறைக்கிறது. வாழ்க்கையில் எங்கும் பரவியிருப்பது அன்பே. அன்பே கடவுள். அந்த அன்பே இப்போது என் காதுகளுக்கு வாழ்க்கை யிசை. மனித உள்ளமாகிய வீணை காலங்காலமாக அந்தப் பேரிசையை ஒலித்துக் கொண்டிருக்கட்டும். மனித இனத்தின் மேல் எனக்கு அன்பு நிலைத் திருந்தால், வேறு இன்பம் எனக்கு வேண்டாம்.

ஸ்ரீகமலா காந்த சக்கரவர்த்தி

(வங்க ஆண்டு 1280, பாத்ர மாத 'வங்கதர்சன்' இதழில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

வித்தியாபதியும் ஜயதேவரும்

வங்காளி இலக்கியத்தில் வேறு என்ன குறையிருந்தாலும் இசைக் காவியத்துக்கு மட்டும் பஞ்சமில்லை. பார்க்கப்போனால் மற்ற இலக்கியங்களைவிட வங்காளி இலக்கியத்தில் இசைக் காவியம் அதிகம். பெரும்பாலான இசைக் காவியம் வைணவக் கவிகளின் படைப்பு. வங்காளத்தின் பழங்கவி ஜயதேவர் இசைக் காவியம் படைத்தவர். பின்னால் வந்த வைணவக் கவிகளில் வித்தியாபதி, கோவிந்த தாஸ், சண்டிதாஸ் ஆகியோரே பிரபலமானவர்களெனினும் வேறு பல கவிகளும் உண்டு. அவர்களில் நாலைந்து பேர் சிறந்த கவிகளாகக் கருதப்படத்தக்கவர். பாரத் சந்திரரின் 'ரசமஞ்சரி' இவ்வகைக் காவியமே. ராமப் பிரசாத் சென் இன்னொரு பிரபலமான இசைக் கவிதைப் படைப்பாளி. இவர்களுக்குப் பிறகு 'கவிவால்ா' எனப்படும் பாடல்புனைபவர்கள் தோன்றினர்; அவர்களில் பலருடைய பாடல்கள் மிகச் சிறந்தவை. ராம் போஸ், ஹருடாகுர், நிதாயிதாஸ் ஆகியோரின் சில பாடல்களைப் போன்ற அழகான பாடல்களைப் பாரத் சந்திரரின் படைப்புகளிலும் காண இயலாது. எனினும் கவி வாலாக்களின் பெரும்பாலான பாடல்கள் தரங்கெட்டவை, ஆபாசமானவை என்பதில் ஐயமில்லை.

இலக்கியம் உட்பட எல்லாமே விதிக்குட்பட்டதுதான். சில குறிப்பிட்ட காரணங்களால், சில குறிப்பிட்ட விதிகளுக்கேற்ப, சில குறிப்பிட்ட விளைவுகள் உண்டாகின்றன. தண்ணீர், மேலேயுள்ள காற்றாலும் கீழேயுள்ள மண்ணாலும் பாதிக்கப்பட்டு, மீற இயலாத சில விதிகளுக்குட்பட்டுச் சில இடங்களில் நீராவி, சில இடங்களில் மழைத்துளி, சில இடங்களில் பனி, சில இடங்களில் பனிக்கட்டி, சில இடங்களில் மூடுபனி என மாறுகிறது. அதே மாதிரி இலக்கியமும் நாட்டுக்கு நாடு, அந்தந்த நாட்டின் நிலைக்கேற்ப, எண்ணற்ற விதிகளுக்குட்பட்டு உருப்பெறுகிறது. இந்த விதிகள் சிக்கலானவை, புரிந்து கொள்ள முடியாதவை. இதுவரை யாரும் இவற்றின் தன்மையைக் கண்டுபிடிக்க இயலவில்லை. கோமத் விஞ்ஞான விதிகளைக் கண்டுபிடித்தது போல் யாரும் இலக்கியம்பற்றிய விதிகளைக் கண்டுபிடிக்கவில்லை. இலக்கியம் அந்தந்த நாட்டின் நிலையையும் நாட்டு மக்களின்

குணத்தையும் பிரதிபலிக்கும் என்று மட்டும் கூறலாம். நாட்டுக்கு நாடு சில விதிகளுக்கேற்ப அரசியல் சூழல் வேறுபடுகிறது, சமூக நிலை வேறுபடுகிறது, மத வேறுபாடுகள் ஏற்படுகின்றன. அதே விதிகளுக்கேற்ப, அதே காரணங் களால் நாட்டுக்கு நாடு இலக்கியமும் வேறுபடுகிறது. ஒரு சில ஐரோப்பிய எழுத்தாளர்கள் சமூக நிலையுடன் இலக்கியத்தின் தொடர்பை விளக்க முயன்றுள்ளனர். பக்கிங் அவர்களைத் தவிர வேறு யாரும் இத்துறையில் அதிக முயற்சி செய்யவில்லை. 'நலக் கொள்கை'யில் நம்பிக்கை கொண்ட வரான அவருக்கும் இலக்கியத்துக்கும் அதிகத் தொடர்பில்லை. அவர் மனித குணத்திலிருந்து மத நம்பிக்கையையும் ஒழுக்க உணர்வையும் துடைத்தெறிந்து விட்டு சமூகத்தின் தன்மையை ஆராய்கிறார். வெளி நாடுகளில் எப்படி இருந் தாலும் நம் நாடடில் யாரும் இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட்டதாக எனக்குத் தெரியவில்லை. சம்ஸ்கிருத இலக்கியம் பற்றி மாக்ஸ்முல்லர் எழுதியுள்ள நூல் மிகச் சிறந்ததுதான்; ஆனால் உண்மை இலக்கியத்துக்கும் அந்த நூலுக்கு மிடையே அதிகத் தொடர்பு இல்லை.

இந்திய இலக்கியத்தின் உண்மையான போக்கு என்ன? எனக்குத் தெளி வாகத் தெரியாது; எனினும் எளிதில் காணக் கூடிய சில அடையாளங்கள் இருக்கின்றன. தொடக்கத்தில் ஆரியர்கள் ஆரியரல்லாத இனத்தாருடன் போரில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்கள் பயமற்றவர்களாக, ஆரிய ரல்லாதாரை வெல்லும் வீரமுடையவர்களாகத் திகழ்ந்தனர். அவர்களது இந்த குணங்களின் எதிரொளிதான் ராமாயணம். பின்னர் ஆரியரல்லாதோர் ஆரியரால் வெல்லப்பட்டு நாட்டின் தொலைவுப் பகுதிகளுக்குத் துரத்தப் பட்டனர். வளம் மிக்க பாரத நாடு ஆரியர்களின் வசத்தில் வந்து விட்டது. வெளியிலிருந்து எதிரிகள் தாக்குவார்கள் என்ற பயமின்றி ஆரியர்கள் நாட்டை இன்னும் வளப்படுத்துவதில் ஈடுபட்டனர். பிறகு இந்த வளத்தைப் பகிர்ந்து கொள்வதில் அவர்களுக்குள்ளேயே போட்டி தோன்றியது. அவர் களது வீரம் உச்ச நிலையிலிருந்தது. வெளி எதிரி இல்லாத நிலையில் அவர் களது வீரம் தங்களுக்குள் சண்டையிடுவதில் வெளிப்பட்டது. இந்தக் கால கட்டத்தின் காவியந்தான் மகாபாரதம். வலிமை மிக்கவன் பாரத நாட்டைக் கைப்பற்றினான். நீண்ட கால இரத்த மழை ஓய்ந்தது. சிறந்த குணங்கள் பொருந்திய ஆரியர்கள் அமைதியின் நலன்களை நாடினர். நாட்டில் செல்வமும் செழிப்பும் நாகரீகமும் வளர்ந்தன. ரோமாபுரியிலிருந்து சீனா, ஜாவா வரையில் பாரதத்தின் வாணிபம் பரவியது. ஆற்றங்கரைகளில் மாட மாளிகைகள் கொண்ட பெருநகரங்கள் எழும்பின. ஆரியர்கள் இன்பமாக, திறமை மிக்கவர்களாக வாழ்ந்தனர். இந்த இன்பமும் திறமையும் பக்தி நூல் களிலும் தத்துவ நூல்களிலும் வெளிப்பட்டன. காவியத்தில் அவ்வளவாக வெளிப்படவில்லை.

ஆனால் லட்சுமியோ சரஸ்வதியோ ஒரே இடத்தில் வெகுகாலம் தங்குவ தில்லை. இருவருமே நிலையற்றவர்கள். பாரதநாடு மதமாகிய சங்கிலியால்

பிணைக்கப்பட்டது. காவியத்தை ரசிக்கும் தன்மை கூட மத ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டுவிட்டது. இயற்கைக்கும் இயற்கைக்கு மாறானதற்கும் வேற்றுமை மறைந்துவிட்டது. இலக்கியம் மதத்தைப் பின்பற்றத் தொடங்கியது. அதுமட்டு மல்ல; ஆய்ந்துணரும் திறன் கூட மதத்தின் பாதிப்பால் கெட்டுப் போய்விட்டது. இயற்கைக்கு மாறான விஷயங்களில் நாட்டம் பிறந்தது. மதமே ஆராய்ச்சிக் குரிய, இலக்கியத்துக்குரிய பொருளாயிற்று. இந்த மதமயக்கத்தின் விளைவு புராணங்கள். இவ்வாறு ஒரு பக்கம் மத உணர்ச்சி பெருக, இன்னொரு பக்கம் உல்லாச வாழ்க்கைப் போக்கு வளர்ந்தது. இந்த உல்லாச வாழ்க்கையின் விளைவு காளிதாசன் போன்றோரின் காவியங்கள், நாடகங்கள்.

ஆரியர்கள் இறுதியில் குடியேறி வசித்த நிலப்பகுதியின் தட்பவெப்ப நிலை காரணமாக அவர்களது இயற்கையான வீரம மறையத் தொடங்கியது. அங்கு பொறுக்கவியலாத வெப்பம், காற்றில் நீராவி மிகுதி, தாழ்வான நிலப்பரப்பு, செழிப்பான மண்; ஆனால் அதில் உற்பத்தியாகும் தானியம் சத்துக் குறைந்தது, வீரியத்துக்கு ஊறு செய்வது. இதன் விளைவாக ஆரியர்கள் வீரியத்தையிழந்து மென்மையானவர்களாயும், சோம்பேறிகளாயும் இல்லற வாழ்க்கையில் மட்டும் நாட்டமுள்ளவர்களாகவும் ஆகிவிட்டனர். இங்கு நாம் வங்காளத்தைத் தான் குறிப்பிடுகிறோமென்பது வாசகர்களுக்குப் புரியும். பெரும் இலட்சி யங்களோ முயற்சிகளோ அற்ற, வீட்டு வாழ்க்கையிலேயே திருப்தியடைந்த, சோம்பேறி மக்களைப் பற்றி ஒரு வகை இசைக்காவியம் பிறந்தது. இந்தக் காவியமும் உயர்ந்த இலட்சியங்களற்றது, சோம்பல் தன்மை வாய்ந்தது, புலனின்பங்களில் விருப்பங்கொண்டது. இல்லற இன்பத்தில் திருப்தி யடைந்தது. இந்தக் காவிய வகை மிகவும் மென்மையானது, மிக இனிமை யானது, இல்லறக் காதலைப் போற்றுவது. இந்த வகை இலக்கியம் மற்றவகை இலக்கியங்களைப் பின் தள்ளிவிட்டு சுமார் ஏழெட்டு நூற்றாண்டுக்காலம் வங்காளத்தின் தேசிய இலக்கியமாகத் திகழ்ந்தது. இதனால்தான் வங்காளியில் இவ்வளவு அதிகமான இசைக் காவியங்கள் உள்ளன.

வங்காளி இசைக் காவியப் படைப்பாளிகளை இருவகைகளாகப் பிரிக் கலாம். ஒருவகையினர் இயற்கையழகின் பின்புலத்தில் மனிதனை நிறுத்தி வைத்து அவனை வருணிக்கின்றனர். இரண்டாவது வகையினர் இயற் கையைத் தொலைவில் ஒதுக்கிவைத்துவிட்டு மனிதனை மட்டுமே சித்தரிக் கின்றனர். முதல் வகையினர் இயற்கையாகிய விளக்கின் ஒளியில் மனித உள்ளத்தைப் புரிந்து கொள்ள முனைகிறார்கள். இரண்டாம் வகையினரோ மனிதனாகிய சுரங்கத்தில் புதைந்து கிடக்கும் ரத்தினங்களை வெளிப்படுத்த வேறு விளக்கு அவசியமில்லை, தங்கள் கவித்திறனே போதும் என்று கருது கின்றனர். முதல் வகைக் கவிஞர்களில் முக்கியமானவர் ஜயதேவர்; இரண்டாம் வகையைச் சேர்ந்தவர் வித்தியாபதி. ஜயதேவரின் கவிதையில் வசந்த கால இரவு, மலயமாருதம், மென்மை வாய்ந்த கொடி, தாமரையிதழ் வரிசை, மலர்ந்த மலர், சரத்கால சந்திரன், தேனீக்கூட்டம், குயிலிசை

யொலிக்கும் பூங்கா, புதிய மேகம்இவற்றுடன் காதலியின் முகம், அவளுடைய கொடிபோன்ற புருவங்கள், தோள்கள், கோவையிதழ்கள், தாமரைக் கண்கள், மெதுவாக மூடித்திறக்கும் இமைகள் ஆகியவையும் சித்திரிக்கப்பட்டுக் காற்றில் எழும் ஆற்றின் அலைகள் போல் மின்னிப் பளபளக்கின்றன. இந்தக் கவி களின் படைப்புகளில் வெளிப்புற இயற்கைக்கு முக்கியத்துவம் உண்டு. வித்தியாபதி போன்ற கவிகளின் படைப்புகளில் இயற்கை வருணனையே இல்லையென்று கூற இயலாது. இயற்கைக்கும் மனித உள்ளத்துக்குமிடையே யுள்ள உறவு நிலையானது. ஆகவே காவியத்திலும்இந்த உறவு சித்திரிக்கப் படும். ஆனால் வித்தியாபதி போன்றோரின் கவிதைகளில் இயற்கையின் சித்திரிப்பு சற்று தெளிவின்றி இருக்கிறது. அதற்கு மாறாக மனித இதயத்தின் ஆழத்தில் புதைந்துள்ள உணர்ச்சிகள் விரிவாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஜயதேவர் போன்றோரின் படைப்புகளில் வெளி இயற்கையும், வித்தியாபதி போன்றோரின் கவிதைகளில் மனித உள்ளமும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஜயதேவர், வித்தியாபதி இருவரும் ராதை, கிருஷ்ணன் ஆகியோரின் காதலை வருணிக்கிறார்கள். ஆனால் ஜயதேவரின் கவிதைகளில் காதல் வெளிப்புற இயற்கையைப் பின்பற்றுகிறது. வித்தியாபதியின் படைப்புகளில், குறிப்பாக சண்டிதாசின் கவிதைகளில் காதல் வெளிப்புற இயற்கையின் தாக்கத்துக்கு அப்பாற்பட்டது. வெளிப்புற இயற்கை உடலுடன் நெருங்கிய தொடர்புள்ளது. ஆகையால் இயற் கையின் தாக்கம் அதிகமானால் கவிதையில் புலன்களின் நுகர்வு அதிக முக்கியத்துவம் பெறும். வித்தியாபதி போன்ற கவிகள் மனித உள்ளத்துக்கு இயற்கையின் தாக்கத்திலிருந்து விடுதலையளிக்கிறார்கள், மனித உள்ளத்திலேயே கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே அவர்களது கவிதை புலன்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, காம உணர்ச்சியற்ற, புனிதமாக ஆகிறது. ஜயதேவரின் கவிதையில் காமச் சுவை மிகுதி; வித்தியாபதியின் கவிதையிலோ புலன் இன்பத்துக்கு அப்பாற்பட்ட தூய காதலே இடம் பெறுகிறது. ஜய தேவரில் புலனின்பம்; வித்தியாபதியில் தூய காதல்வேட்கை நினைவு. ஜயதேவர் இன்பத்தை வருணிக்கிறார், வித்தியாபதி பிரிவுத் துன்பத்தைச் சித்திரிக்கிறார். ஜயதேவர் வசந்த காலம் என்றால் வித்தியாபதி கார்காலம். ஜயதேவரின் கவிதை தாமரை மலர்கள் நிறைந்த, பறவைகளின் இசையொலிக்கும், தெளிந்த நீர் கொண்ட தடாகம்; வித்தியாபதியின் கவிதை சீறிப் பாயும் காட்டாறு. ஜயதேவரின் கவிதை ஒரு பொன்மாலை; வித்தியா பதியின் கவிதை ருத்திராட்ச மாலை. ஜயதேவரின் கவிதை வீணையின் நாதத்தோடும் மிருதங்கத்தின் தாளத்தோடும் இசைந்தொலிக்கும் பெண்குரல்; வித்தியாபதியின் பாடலோ மாலை நேரக்காற்றின் மூச்சொலி.

நாம் ஜயதேவர், வித்தியாபதி ஆகியோரைப் பற்றிக் கூறியதெல்லாம் அந்த இருவகைக் கவிஞர்கள் எல்லோருக்கும் பொருந்தும். ஜயதேவரைப் பற்றிக் கூறப்பட்டது கவி பாரதச்சந்திரருக்கும் பொருந்தும். ஆனால் வித்தியாபதியைப் பற்றிச் சொல்லப்பட்டது. வித்தியாபதியைவிட சண்டிதாஸ், கோவிந்த தாஸ் போன்ற வைணவக் கவிகளுக்கு இன்னும் அதிகமாகப் பொருத்தமாயிருக்கும்.

தற்கால வங்காளி இசைக் கவிதைப் படைப்பாளிகளை மூன்றாவது வகையாகக் கொள்ளலாம். இவர்கள் ஆங்கில இசைக் கவிஞர்களைப் பின்பற்றுபவர்கள், தற்கால ஆங்கிலக் கவிகளும் இந்த வங்காளிக் கவிகளும் நாகரீக வளர்ச்சி காரணமாக ஒரு தனி வழியில் செல்கின்றனர். பண்டைய கவிகள் தங்களையும் தங்களுக்கு அண்மையில் இருப்பவற்றையுமே அறிந்திருந்தனர். தங்கள் உள்ளுணர்வுகளையும் தங்களுக்கு நெருக்கமான விஷயங்களையும் மிக விரிவாக அறிந்து அவற்றை ஒப்பற்ற சித்திரங்களாகத் தீட்டினர். தற்காலக் கவிஞர்களோ அறிஞர்கள், அறிவியல் நிபுணர்கள், வரலாற்றுப் பண்டிதர்கள், ஆன்மதத்துவ நிபுணர்கள். பற்பல நாடுகள், காலங்கள், விஷயங்களைப் பற்றிய அறிவு அவர்களுடைய உள்ளங்களில் இடம் பெற்றுள்ளது. இவர்கள் பல துறைகளில் அறிவு பெற்றிருப்பதால் இவர்களுடைய கவிதைகளும் பல்வேறு விஷயங்களைச் சித்திரிக்கின்றன. இவர்களது அறிவு தொலைவிலுள்ள பொருள்களையும் தழுவியிருப்பதால் இவர்களது கவிதையும் தொலைவிலுள்ள விஷயங்களையும் பேசுகிறது. ஆனால் இந்த விரிவு கவிதையின் ஆழத்துக்கு ஊறு செய்துள்ளது. வித்தியாபதி போன்றவர்களின் கவிதையின் கரு சிறிது தான், ஆனால் அதன் கவிதைத் தன்மை ஆழமானது. மதுசூதன் அல்லது ஹேம சந்திரரின் கவிதையின் உள்ளடக்கம் விரிந்ததுதான், ஆனால் அதன் கவிதைத் தன்மை அவ்வளவு ஆழமாக இல்லை. அறிவு வளர வளரக் கவித்துவம் குறையும் என்ற பழமொழியே இந்த நிலையை உறுதிப்படுத்துகிறது. குறுகலான கிணற்றில் ஆழமாயிருக்கும் தண்ணீரைப் பரந்த குளத்தில் பாய்ச்சினால் தண்ணீரின் ஆழம் குறையத்தானே செய்யும்!

உட்புற இயற்கையும் வெளிப்புற இயற்கையும்பரஸ்பரம் கவிதையில் பிரதிபலிப்பதே அவற்றுக்கிடையேயுள்ள தொடர்பு. அதாவது வெளி இயற்கையின் தன்மை மன உணர்ச்சிகளைப் பாதிக்கும்; அவ்வாறே மனநிலைக்கேற்றவாறு இயற்கை இன்பமோ துன்பமோ அளிக்கும். வெளி இயற்கை வருணிக்கப்படும் போது அது உள்ளத்தில் உண்டாக்கும் தாக்கமும் கூடவே சித்திரிக்கப்படவேண்டும். அதே போல் உள்ளத்து உணர்ச்சிகளுடன் வெளி இயற்கையில் அவற்றால் ஏற்படும் பாதிப்பும் வருணிக்கப்பட வேண்டும். இதைச் செய்ய முடிந்தவனே சிறந்த கவி. இந்தத் திறமையில்லாத கவியின் கவிதை ஒன்று, வெறும் புலனுணர்ச்சிகளை வருணிப்பதாக இருக்கும், அல்லது வறட்டுத் தத்துவத்தைப் பேசுவதாக இருக்கும். 'புலனுணர்ச்சி' என்றும் போது நாம் வெறும் உடலின்பத்தை மட்டும் குறிப்பிடவில்லை. கண் போன்ற புலன்களால் பெறும் இன்பத்தையும் சேர்த்தே குறிப்பிடுகிறோம். புலனுணர்ச்சிகளின் மிகைக்கு உதாரணம் ஜயதேவரின் கவிதை; வறட்டுத் தத்துவத்தின் மிகைக்கு உதாரணம் வேர்ட்ஸ்வொர்த்.

(வங்க ஆண்டு 1280, பௌஷ் மாத 'வங்க தர்சன்' இதழில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

வங்காளியின் உடல் வலிமை

இப்போது வங்காளிக்கு முன்னேற வேண்டுமென்ற ஆசை தீவிரமாகி விட்டது. அவன் முன்னேற்றத்துக்கான முயற்சிகளில் எப்போதும் ஈடுபட்டிருக் கிறான். பலருக்கு அவன் முன்னேறுவானென்ற நம்பிக்கை இல்லை. ஏனென்றால் வங்காளியிடம் உடல் வலிமை இல்லை. உடல் வலிமையில்லாமல் முன்னேற்றம் ஏற்படாது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

வங்காளிக்கு உடல் வலிமையில்லை என்பது உண்மையே. எப்போதாவது அவன் வலிமை பெறுவானா இல்லையா என்பது வேறோரிடத்தில் ஆராயப் பட்டுள்ளது. அது போகட்டும். மௌரிய அரசர்களும் குப்த அரசர்களும் இமய மலையிலிருந்து நர்மதை வரையிலுள்ள பரந்த நிலப் பரப்பை ஆண்டனர் என்று நமக்குத் தெரியும். நாற்றிசைகளையும் வெற்றி கண்ட கிரேக்கரால் இந்தியாவில் சட்லெஜ் ஆற்றைக் கடக்க இயலவில்லை. அவர்கள் ஆசியா வாசிகளில் பாரத நாட்டவரின் வீரத்தையே மிகவும் புகழ்ந்தனர். சந்திர குப்தன் அவர்களைப் பாரத நாட்டிலிருந்து விரட்டிவிட்டான் என்பதும் யாவரும் அறிந்ததே. ஹர்ஷ வர்த்தனனுக்குக் கீழே நூற்றுக்கணக்கான சிற்றரசர்கள் இருந்தனர். பல நாடுகளை வென்ற அராபியர்களால் முன்னூறு ஆண்டுகள் வரை பாரதத்தைக் கைப்பற்ற முடியவில்லை என்பதும் வேறு பல வரலாற்றுச் செய்திகளும் நாமறிந்தவைதாம். மேற்கு பாரத வாசிகளின் வீரத்தின் பல அடையாளங்கள் இன்னும் நம் நாட்டில் உள்ளன.

வங்காளியின் பழங்கால வீரம் அல்லது கௌரவத்தைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? மேற்குப் பாரதத்தில் வேதங்கள் இயற்றப்பட்டுப் பயிலப்பட்ட போது, உபநிடதங்கள் படைக்கப்பட்ட போது, அயோத்தி போன்ற செல்வச் செழிப்புள்ள பல நகரங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் வங்காளநாடு ஆரியர் கள் வசிக்கத்தகுதியற்ற நாடாகக் கருதப்பட்டது. வட இந்தியாவில் ஆரிய வீரர்கள் குருட்சேத்திரப் போரில் வெல்லப்பட்ட ராஜ்யங்களைப் பங்கு பிரித்துக் கொண்டிருந்த காலத்தில், மேற்குப் பகுதியில் மனு முதலியோர் அழி வற்ற தரும நூல்களை இயற்றிக் கொண்டிருந்தபோது, வங்களாத்தில் பௌண்ட்ரர் முதலிய ஆரியரல்லாத இனத்தார் வசித்து வந்தனர். பண்டைய

காலத்தை விட்டு விடுவோம். இடைக்காலத்தில் சீனப் பயணி ஹுயேன் சாங் வங்காளத்துக்கு வந்த போது வங்காளம் சிறு சிறு அரசுகளாகப் பிளவு பட்டிருந்ததைக் கண்டார். ஆகவே வங்காளத்துக்குப் பழைய பெருமை ஏது?

எனினும் இந்தக் காலத்துக்குப் பிறகு பால் வம்ச அரசர்களும் சென் வம்ச அரசர்களும் பெரிய ராஜ்யங்களை ஸ்தாபித்ததாகவும் கௌட நகரம் மிகுந்த செல்வச் செழிப்போடு விளங்கியதாகவும் கேள்விப் படுகிறோம். எனினும் இந்த அரசர்கள் உடல் வலிமையற்ற வங்காளிகளையும் அவர்களுக்கு அருகாமையில் வாழ்ந்து வந்த, வலிமையற்ற ஆரியரல்லாத இனத்தவரையும் தவர வேறு எவரையும் வென்றதாகத் தெரியவில்லை. இவர்களது ஆட்சி முங்கேர் (பீகாரில் உள்ள ஒரு நகரம், வரை பரவியிருந்ததற்கு ஆதாரமுள்ளது. இவர்களது ஆட்சி பிற இடங்களில் பரவியிருந்தது பற்றி மூன்று செய்திகள் வழங்குகின்றன. இம்மூன்றுமே ஆதாரமற்றவை.

முதலாவது: வள்ளாள சென்னின் ஆட்சி டில்லியில் பரவியிருந்ததாக வழங்கும் வதந்தி. இந்தச் செய்தி உள் நாட்டு நூலொன்றில் இடம் பெற்றிருந்தாலும் இதற்கு ஆதாரமில்லையென்பதை ஜெனரல் கன்னிங்ஹாம் நிரூபித்து விட்டார். வள்ளாள சென்னின் ஆட்சி டில்லி வரை பரவியிருந்தால் இத்தகைய முக்கியமான ஒரு செய்தி ஒரேயொரு சாதாரண நூலில் மட்டும் சொல்லப்பட்டிருக்காது. இதற்கு வேறு பல ஆதாரங்களும் கிடைத்திருக்கும், வங்காளத்திலிருந்து டில்லி வரை உள்ள பரந்த நிலப்பரப்பில் வங்க ஆட்சி பற்றிய செவி வழிச் செய்திகள், குறிப்புகள், வேறு அடையாளங்கள் கிடைத்திருக்கும். ஆனல் அப்படிப்பட்ட அடையாளங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டாவது:-கௌட அரசன் மகிபாலனின் சாசனம் ஒன்று 1794-ஆம் ஆண்டில் காசியில் கண்டு பிடிக்கப்பட்டது. இதைக்கண்டு சிலர் காசி மகிபாலனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்று ஊகித்தனர். இந்த ஊகம் இப்போது கைவிடப்பட்டுள்ளது. (ஷெரிப் எழுதிய 'Saved city of the Hindus' என்ற நூலுக்கு F.E. ஹால் எழுதியுள்ள முன்னுரையைப் பார்க்கவும்–பக்கம் XXXV, குறிப்பு-2))

மூன்றாவது: லட்சுமண சென்னின் ஓரிரண்டு தாமிர சாசனங்களில் அவனை சகல நாடுகளையும் வென்றவன் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தக் கூற்று வெறும் புகழ்ச்சி என்பது சாசனங்களின் வாசகங்களிலிருந்து தெரிகிறது.

ஆகவே பண்டைக் காலத்தில் வங்காளிகள் வலிமையுள்ளவர்களாயிருந்தார்கள் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. பழங்கால பாரதத்தில் மற்ற இனத்தவர் வலிமை பெற்றிருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. ஹுயேன் சாங் சமவெளிப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இந்தியர்களைப்பற்றி எழுதியுள்ள வர்ணனைகளிலிருந்து வங்காளிகள் பழங்காலத்திலும் இப்போது போலவே குட்டையாகவும் பலமற்றவர்களாவும் இருந்தார்களென்று தோன்றுகிறது.

வங்காளிகளுக்கு ஒரு போதும் வலிமை இருந்ததில்லை. இனி எதிர் காலத்தில் உண்டாகுமா?

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நேர்ந்தால், பிற் காலத்தில் அதே சூழ்நிலை ஏற்படும் போது அந்த நிகழ்ச்சி மறுபடி நேரும் என்பது அறிவியல் விதி. வங்காளிகள் வலிமையற்றிருப்பதற்கான காரணங்கள் இருக்கும் வரை அவர்கள் தொடர்ந்து வலிமையற்றே இருப்பார்கள். அந்தக் காரணங்கள் யாவை?

எல்லாமே வெளிப்புற இயற்கையின் விளைவு என்று தற்கால அறிவியல் வாதிகளும் தத்துவ அறிஞர்களும் கருதுகிறார்கள். வங்காளியின் வலியின் மையும் இத்தகைய விளைவுதான். நிலத்தின்தன்மை, தட்ப வெட்ப நிலை, வாழ்க்கை முறை இவை காரணமாகத்தான் வங்காளிகளின் வலிமையற்றிருப் பதாகப் பல கருத்துக்கள் பரவியுள்ளன. இக்கருத்துக்களைச் சுருக்கமாக ஆராய்வோம்.

சிலரது கருத்து-வங்காள நிலம் மிகவும் செழிப்பானது. ஆகையால் அதிக உழைப்பின்றியே தானியம் விளைகிறது. ஆகவே வங்காளி அதிகம் உழைக்க நேருவதில்லை. உழைக்காவிட்டால் உடலுக்கு வலிமை ஏற்படாது. ஆகையால் வங்க நிலத்தின் செழிப்பே வங்காளியின் பலமின்மைக்குக் காரணமாகும்.

மேலும், தானியம் எளிதில் விளைவதால் உணவுக்காக மிருகங்களை வேட்டையாடும் அவசியமேற்படுவதில்லை. விலங்குகளை வேட்டையாடிக் கொல்லத் துணிவு, பலம், முயற்சி முதலிய குணங்கள் தேவைப்படுகின்றன. இந்தக் குணங்களைப் பயிலும் மனிதன் பலம் பெறுகிறான். இவற்றைப் பயிலத் தேவையில்லாதவன் வலிமை குறைந்தவனாயிருக்கிறான்.

ஆனால் வங்காளத்தைத் தவிர வேறு பல நாடுகளிலும் நிலம் செழிப்பா யிருக்கிறது. ஐரோப்பா, அமெரிக்காவின் பல பகுதிகள் செழிப்பில் வங்காளத்துக்குக் குறைந்தவையல்ல. அங்கு வாழும் மக்கள் வலிமையற்ற வர்களாக இல்லையே!

வங்காளத்தின் தட்ப வெப்ப நிலை காரணமாக வங்காளிகள் பலவீனர் களாயிருப்பதாகப் பலர் கருதுகின்றனர். காற்றில் ஈரமும் வெப்பமும் மிகுந் திருந்தால் அந்த நாட்டு மக்கள் பலவீனர்களாயிருப்பார்களாம். இது ஏன் என்று உடலியல் நிபுணர்கள் விளக்கவில்லை. கீழே தரப்பட்டுள்ள வாச கத்தைப் படித்தால் இந்தக் கருத்து தவறு என்று புரியும். மேலும் அரேபி யர்களின் வீரத்தைப் பற்றியறிந்தவர்கள் அதிக வெப்பம் மனிதனைப் பலவீன மாக்குகிறது என்ற கருத்தை ஏற்கமாட்டார்கள்.

'வங்காளத்தில்—குறிப்பாக, அதன் கிழக்குப் பகுதிகளில் காற்றிலுள்ள ஈரப்பசையின் அளவு அதிகம் என்று கருதப்படுகிறது. காற்றிலுள்ள நீராவியின் இறுக்கத்தோடு அதன் அளவை ஒப்பிட்டால் இந்தக் கருத்து சரி தான். ஆனால் காற்றிலுள்ள நீராவியின் அளவுடன் முற்றிலும் காற்றால்

உறிஞ்சப்படக்கூடிய நீராவியின் அளவைக் கணக்கிட்டால் வங்காளத்தின் பெரும்பகுதியில் இந்த விகிதம் இங்கிலாந்தில் உள்ளதைவிடக் குறைவு.

கல்கத்தாவில் காற்றிலுள்ள ஈரப்பசையின் சராசரி வருடாந்தர அளவு லண்டனைவிட இருமடங்கு. ஆனால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஈரப்பசை விகிதம் மழைக்காலத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டுந்தான் லண்டனை ஒத்திருக்கிறது. இந்த மூன்று மாதங்களும் ஐரோப்பாவில் மிகவும் உலர்ந்த மாதங்களாகும்.

(வங்காள நிர்வாக அறிக்கை 1872-73, புள்ளி விவரச் சுருக்கம், பக்கங்கள் 5-6)

ஈரப்பசை கலந்த, வெப்பமான காற்று உடல் நலத்துக்குக் கேடு விளை விப்பது; இது காரணமாக வங்காளிகள் எப்போதும் நோயுற்றிருக்கிறார்கள். இதுவே அவர்களது பலவீனத்துக்குக் காரணம் என்று பலர் சொல்கிறார்கள்.

இந்த இழி நிலைக்குக் காரணம் உணவுதான் என்பது பலரது கருத்து. அரிசி விளையும் நாட்டில் பொது மக்கள் அரிசிச்சோறு உண்பது இயற்கையே. சோற்றில் சத்து குறைவாக இருப்பதால் வங்காளிக்கு உடல்வலிமை ஏற்படுவ தில்லையாம். ஆகையால்தான் வங்காளிகளைச் 'சோறு தின்பவர்கள்" என்று மற்றவர்கள் கேலி செய்கிறார்கள்.

உணவை ரசாயனப் பரிசோதனை செய்து பார்த்தால் அதில் மாவுப் பொருள், க்ளூட்டேன் போன்ற சத்துக்கள் இருப்பது தெரியும். க்ளூட்டேன், நைட்ரஜன் போன்றவை வலிமை தருபவை. தசை நரம்புகள் பலம் பெற இந்தச் சத்துக்கள் இன்றியமையாதவை. இவை அரிசியில் குறைவாகவும் இறைச்சி யிலும் கோதுமையிலும் அதிகமாகவும் உள்ளன. ஆகவே இறைச்சி, கோதுமை உண்பவர்கள் பலசாலிகளாகவும் சோறுண்ணும் வங்காளிகள் பலவீனர் களாகவும் இருக்கின்றனர். மைதாமாவில் க்ளூட்டேன் பத்து சதவிகிதமும், இறைச்சியில் பன்னிரண்டு சதவிகிதமும் உள்ளது; அரிசியிலோ அது ஏழு அல்லது எட்டு சதவிகிதந்தான். (ஆதாரம்—ஜான்ஸ்டனின் 'Chemistry of Common life' முதல்பாகம்)

சிறுவயதுத் திருமணங்களே வங்காளியின் பலவீனத்துக்குக் காரண மென்று சிலர் கூறுகின்றனர். உரிய வயதுக்கு முன்னாலேயே தாய் தந்தையர் பெறும் குழந்தைகள் நோஞ்சான்களாகத் தானிருப்பார்கள். சிறுவயதிலேயே உடலின்பத்தில் ஈடுபடுபவர்கள் வலிமை பெற வாய்ப்பு ஏது?

வங்காளி மனிதர்கள் மட்டுமல்ல, வங்காளத்துக்கால் நடைகளின் பலவீனங் கூட வங்காளத்தின் தட்ப வெப்பம், நிலம், நீர் இவற்றின் விளைவுதான் என்பது எளிதில் புரிகிறது. ஆனால் இவற்றிலுள்ள எந்தக் குறையால் இந்த விளைவு நேர்கிறதென்பதை இதுவரை எந்த அறிஞரும் விளக்கவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களைக் கவனித்தால் அவை சிறிது காலத்தில் அகன்றுவிடுமெனத் தோன்றவில்லை. ஆனால் அதே சமயத்தில் அவை ஒரு போதும் மறையா என்றும் உறுதியாகச் சொல்ல இயலாது.

சிறுவயதுத் திருமணம். வங்காளியின் பலவீனத்துக்குக் காரணமாயிருந்தால், சமூக சீர்திருத்தத்தால் இந்தக் கெட்ட பழக்கம் மறைந்து, வங்காளி பலசாலி யாகலாம். பலவீனத்துக்குக் காரணம் அரிசியென்றால் வங்காளத்தில் கோது மையை அதிகம் பயிர் செய்யலாம். வங்காளி நிறைய மைதா சாப்பிட்டுத் தன் பலத்தை வளர்ந்துக் கொள்ளலாம். நாளடைவில் தட்ப வெப்ப நிலை கூட மாறக் கூடும். தற்காலத்தில் மனித வாசத்துக்குத் தகுதி இல்லாத சுந்தரவனக் காடுகளில் ஒரு காலத்தில் கணிசமாக மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதார முண்டு. முன்னொரு காலத்தில் ஐரோப்பாவின் பல பகுதிகள் இப்போதை விட வெப்பமாயிருந்ததாயும், சிங்கம் யானை போன்ற வெப்பப் பிரதேச விலங்குகள் அங்கு வாழ்ந்ததாகவும் புவியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். ஒரு காலத்தில் அந்தப் பிரதேசங்கள் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தன. ஆனால் இத்தகைய மாற்றங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ் பவை. எனினும் குறுகிய வரலாற்றுக் காலத்துக்குள் தட்ப வெப்ப நிலையில் மாற்றங்கள் நேர்ந்துள்ளமைக்குப் பல உதாரணங்கள் உண்டு. முன் காலத்தில் ரோமாபுரியின் கீழ்ப்பகுதியில் டைபர் ஆற்று நீர் பனியாக உறைந்துவிடும். ஒரு சமயம் தொடர்ந்து நாற்பது நாட்கள் அது உறைந்து போயிருந்தது. அபித் என்ற கவி வாழ்ந்த காலத்தில் கருங்கடலில் ஒவ்வோராண்டும் குளிர்காலத்தில் நீர் நன்றாக உறைந்து போகும். அந்தச் சமயத்தில் ரைன், ரோன் ஆறுகளின் நீர் நன்றாக உறைந்து போய் அதன்மேல் பார வண்டிகள் செல்லுமாம். இப்போது ரோமாபுரியிலோ, கருங்கடலிலோ, ரைன், ரோன் ஆறுகளிலோ பெயருக்குக் கூடப் பனி உறைவதில்லை. விவசாய வளர்ச்சி, காடுகளின் அழிவு, பாறைகள் உடைக்கப்படுதல், ஏரி, குளங்கள் தூர்க்கப்படுதல் போன்ற கார ணங்களால் இந்த மாறுதல்கள் நேர்ந்ததாகச் சிலர் கூறுகின்றனர். விவசாய வளர்ச்சியால் குளிர்ப்பிரதேசம் வெப்பமாகமானால், வெப்பப் பிரதேசம் குளிர்ச்சியடையக் காரணமென்ன? ஒரு காலத்தில் கிரீன்லாந்து வெப்ப நாடாயிருந்தது; அங்கே தாவரங்கள் மிகுதியாக வளர்ந்திருந்ததால் அதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. இப்போது அதே கிரீன்லாந்து எப்போதும் எங்கும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கிறது! இத்தீவின் கிழக்குக் கரையில் பல செழிப்பான குடியிருப்புகள் இருந்தன. இப்போது அவற்றின் அடையாளங் கூட இல்லை, அப்பகுதிகள் பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளன. இப்போது லாப்ரடார் குளிர்மிகுதிக்காகப் புகழ்பெற்றிருக்கிறது. ஆனால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நார்மானியர் அங்கு சென்றபோது அங்கு குளிர் குறைவா யிருப்பது கண்டு மகிழ்ந்தார்கள், அங்கு திராட்சை நன்றாக விளைவதால் அதற்குத் 'திராட்சை நிலம்' என்று பெயரிட்டார்கள். (ஆதாரம்— 'The Scientific American')

இத்தகைய மாறுதல்கள் ஏற்பட வாய்ப்பு குறைவு; வாய்ப்பு இல்லை யென்றே சொல்லலாம். வங்காளியின் பலவீனம் மறைவதற்கான அறிகுறி

களைக் காணோம். ஆகவே அவனது பலவீனம் தொடர்ந்து இருக்கும் என்று வைத்துக் கொள்ளலாம்.

அப்படியானால் வங்காளி முன்னேற வழியே இல்லையா?

இந்தக் கேள்விக்கு இரண்டு பதில்கள் கூறலாம்.

முதல் பதில்— உடல்வலிமையே இப்போதும் உலகை ஆள்கிறது என்பது உண்மைதான். ஆனால் உடல்வலிமை என்பது விலங்கின் தன்மை. மனிதன் இப்போதும் பெருமளவில் விலங்குத் தன்மை கொண்டவனாயிருப்பதால்தான் உடல்வலிமை முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆனால் உடல் வலிமை மட்டுமே முன்னேற்றமல்ல, முன்னேற்றத்துக்கான ஒரு கருவிதான் அது. இவ்வுலகில் முன்னேற உடல்வலிமை தவிர வேறுவழி இல்லையா?

பார்க்கப் போனால், உடல்வலிமையை முன்னேற்றத்துக்கான கருவியாகக் கூடக் கருதக் கூடாது. உடல்வலிமையால் மட்டும் யாரும் முன்னேறுவதில்லை. ஐரோப்பாவைத் தாக்கிக் கைப்பற்றிய தாத்தாரிகள் ஒரு போதும் முன்னேற்ற மெய்தவில்லை. ஆனால் ஒரு விஷயம்—முன்னேற்றத்துக்கு எதிரான சக்திகள் தலையெடுக்கும் போது அவற்றிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள உடல் வலிமை தேவைப்படுகிறது. முன்னேற்றத்துக்கு எதிரான சக்திகள் தோன்றாத வரையில் உடல் வலிமையின்றியே முன்னேற்றம் சாத்தியம்தான்.

இரண்டாவது பதில்— இப்போது நாம் கூறப் போவதை வங்காளம் முழு வதிலுமுள்ள வங்காளிகள் தங்கள் உள்ளங்களில் ஆழப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். "வங்காளி உடல் வலிமை குறைந்தவன். அவன் வலிமை வளர வாய்ப்பில்லை. அப்படியானால் அவனுக்கு முன்னேற்றமே கிடையாதா?" என்ற கேள்விக்கு நமது பதில், "உடல் வலிமை உண்மையான வலிமை அல்ல" என்பதே.

விலங்குகளோடு ஒப்பிடுகையில் மனித பலம் மிகக் குறைவுதான். இருந் தாலும் அவன் யானை, குதிரை போன்ற விலங்குகளை அடக்கி வைத்திருக் கிறான். மனிதனை மனிதனோடே ஒப்பிட்டுப் பார்ப்போம். இமயமலையின் மேற்குப் பகுதியில் மலைகளிலும் காடுகளிலும் வசிக்கும் மக்களைவிட உடல் வலிமை மிக்கவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்? உலர்ந்த திராட்சை, பிஸ்தா இவற்றை விற்கும் ஆப்கன் குடிமகன் ஓர் அறை அறைந்தால் வெள்ளை மாலுமிகள் பலருக்குத் தலை சுற்றும், அவர்கள் உலர்ந்த திராட்சை, பிஸ்தா சாப்பிடும் ஆசையையே விட்டு விடுவார்கள். ஆனால் வெள்ளையன் கடல் கடந்து வந்து பாரதத்தைக் கைப்பற்றிவிட்டான். காபூலிக்காரன் பாரதத்தில் வெறும் திராட்சை, பிஸ்தா விற்பவனாகவே இருக்கிறான். பிரிட்டிஷ் காரர்கள் பல இந்திய இனங்களைவிட உடல்வலிமை குறைந்தவர்கள். சீக்கியர்கள் ஆங்கிலேயரைவிடப் பலசாலிகள். இருந்தாலும் சீக்கியர்கள் இப்போது ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டவர்கள். ஆகவே உடல்வலிமை மட்டும் உண்மை வலிமையாகாது.

ஊக்கம், ஒற்றுமை, துணிவு, தொடர்ந்த முயற்சி இந்த நான்குடன் உடல் வலிமையும் சேர்ந்து கொண்டால் ஏற்படும் விளைவே உண்மையான வலிமை யாகும். இந்த நான்கும் வாய்ந்த இனம் உடல் வலிமையில் எப்படியிருந்தாலும் அது உண்மை வலிமை பொருந்தியது. இந்த நான்கும் வங்காளிக்கு ஒரு காலத்திலும் இருந்ததில்லை; ஆகவே அவன் என்றுமே வலிமையுள்ளவனாக இல்லை.

ஆனால் சமூக முன்னேற்றத்தின் விளைவாக வங்காளிக்கு இந்த நான்கு தன்மைகளும் ஏற்பட வாய்ப்பில்லாமல் போகவில்லை.

உள்ளத்தில் தீவிரமான ஆர்வம் பிறந்தால் ஊக்கம் ஏற்படும். வெறும் ஆர்வத்தால் ஊக்கம் உண்டாகிவிடாது. ஆர்வம் தீவிரமானால் அந்த ஆர் வத்தைப் பூர்த்தி செய்யும் வரை மனிதனுக்கு நிம்மதி இருக்காது. அந்த நிலையில் அவன் தன் ஆர்வத்தை நிறைவேற்றிக் கொள்ள ஊக்கம் பெறு கிறான். ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு மனிதன் உழைக்க வேண்டும், சிரமப்படவேண்டும். சும்மாவிருப்பதால் அல்லது சோம்பேறித்தனத்தால் ஏற்படும் சுகத்தை விஞ்சுவதாக அந்த உழைப்பு இருக்க வேண்டும் இத்தகைய தீவிர ஆசை வங்காளியின் உள்ளத்தில் தோன்றினால் அவன் ஊக்கம் பெறு வான். நாமறிந்த வரலாற்றுக் காலத்தில் வங்காளிக்கு இத்தகைய ஆர்வம் ஏற்பட்டதில்லை.

எல்லா வங்காளிகளுடைய உள்ளங்களிலும் இந்த ஆசை தோன்றி, சோம பலின் சுகத்தை விஞ்சுமளவுக்கு அது தீவிரமாகும்போது அவர்களிடையே ஒற்றுமை பிறக்கும்.

துணிவு ஏற்பட இன்னும் ஒன்று வேண்டும். முழு இனத்தின் முன் னேற்றத்துக்கான ஆர்வம் இன்னும் தீவிரமாக வேண்டும். இந்த முன்னேற்றத் துக்காக உயிரையே தியாகம் செய்யுமளவுக்கு இந்த ஆர்வம் வலுக்க வேண்டும். அபிபோது துணிவு பிறக்கும்.

இந்தத் தீவிர ஆர்வம் சிறிது காலத்துக்கு நிலைத்திருந்தால் முயற்சி தோன்றும்.

ஆகவே (1) வங்காளிக்குத் தன் இனத்தின் முன்னேற்றத்தில் தீவிர ஆர்வம் ஏற்பட்டால்; (2) அத்தகைய ஆர்வம் எல்லா வங்காளிகளிடமும் பரவினால்; (3) அந்த ஆசை நிறைவேற அவர்கள் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாரானால்; (4) அந்த ஆர்வம் நிலைத்திருந்தால்—வங்காளி நிச்சயம் உண்மையான வலிமை பெறுவான்.

இத்தகைய மனநிலை வங்காளிக்கு ஒருபோதும் ஏற்படாது என்று சொல்ல முடியாது. அது எந்த சமயத்திலும் ஏற்படலாம்.

(வங்க ஆண்டு 1281, சிராவண் மாத 'வங்க தர்சன்' இதழில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

அன்பின் கொடுமை

நம் எதிரிகள், அல்லது நம்மிடம் அன்பு இரக்கம் இல்லாதவர்களே நம்மைக் கொடுமைப்படுத்துவார்கள் என்று நாம் சாதாரணமாக நினைக்கிறோம். ஆனால் வேறொரு வகை மக்களால் நாம் அதிகமாகத் துன்புறுத்தப்படுகிறோ மென்பதை மறந்து விடுகிறோம். நம்மிடம் அன்பு காட்டுபவன்தான் நமக்கு அதிகக் கொடுமையிழைக்கிறான். நம்மால் நேசிக்கப்படுபவனுக்குக் கொடுமை செய்யும் உரிமை நமக்குக் கிடைத்துவிடுகிறது. நான் உன்னை நேசித்தால் நீ என் கொள்கையை ஏற்க வேண்டும், என் சொற்படி நடக்க வேண்டும், என் வேண்டுகோளை ஏற்க வேண்டும். உன்னை நேசிப்பவன் வேண்டுமென்றே உனக்குத் தீமையான காரியம் செய்யும்படி உன்னைத் தூண்டமாட்டான். ஆனால் எந்தச் செயல்நன்மை தரும், எது தீமை பயக்கும் என்று முடிவு செய்வது கடினம். இந்த விஷயத்தில் உன் கருத்தும் உன்னை நேசிப்பவனின் கருத்தும் பெரும்பாலும் ஒத்திருக்காது. இந்த நிலையில் எவன் செயலின் விளைவை அனுபவிக்கப் போகிறானோ அவனுக்கே தான் செய்ய வேண்டிய காரியத்தை முடிவு செய்யும் உரிமை உண்டு. அவனுடைய விருப்பத் துக்கு மாறான செயலைச் செய்யும்படி அவனைக் கட்டாயப்படுத்த அரசன் ஒருவனைத் தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை. அரசனுக்கு மட்டும் இந்த உரிமை ஏன் என்றால் அவன் சமூகத்தின் நன்மை தீமைக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறான். சமூகத்துக்கு எது நன்மை, எது தீமை என்று முடிவு செய்வதில் அவனது நோக்கு சரியானதாக இருக்கும் என்ற அடிப்படையில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களைக் கட்டாயப்படுத்தும் உரிமை அரசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமையை அவன் பயன்படுத்தும் போது அவன் யாருக்கும் கொடுமையிழைப்பதாகக் கருதப்படுவதில்லை. ஆனால் அரசனுக்குக் கூட எப்போதும் எல்லா விஷயங்களிலும் நம்மை நம் விருப்பத்துக்கு மாறாகக் கட்டாயப்படுத்த உரிமையில்லை. நம் செயலால் பிற ருக்குத் தீங்கு ஏற்படும் என்று அவன் கருதினால்தான் அவன் நம் விருப்பத்துக்கு மாறாக நம்மைக் கட்டாயப்படுத்தலாம். நம்மால் நமக்கு மட்டுமே தீங்க விளை விக்கக் கூடிய செயலை நாம் செய்ய முனைந்தால் அதைத் தடுக்க அரசனுக்குக்

கூட உரிமையில்லை. (இந்த உரிமையும் அரசனுக்கு உண்டென்று வைத்துக் கொண்டால், தனக்கு உரிய மருத்துவம் செய்து கொள்ளாத நோயாளியையும், மிகச் சிறிய வயதிலோ கிழப்பருவத்திலோ திருமணம் செய்து கொள்பவ னையும்அரசன் தண்டிக்கலாம். அரசனுக்கு இந்த உரிமை இல்லையென்றால் 'சடக்' திருவிழாவில் பக்தர்கள் தங்கள் உடம்பை வருத்திக் கொள்வதை தடுக்கும் சட்டத்தையும் உடன்கட்டையேறும் வழக்கத்தைத் தடைசெய்யும் சட்டத்தையும் இதுபோன்ற தடைகளையும் நாம் ஆதரிக்க முடியாது) நமக்குத் தீங்கு செய்யக்கூடிய ஒரு செயலைச் செய்யாதிருக்கும்படி எவரும் நமக்குப் புத்தி மதி சொல்லலாம். அரசனும் சொல்லலாம், நம்மை நேசிப்பவனும் சொல்லலாம். ஆனால் புத்திமதி சொல்லலாமே தவிரக் கட்டாயப்படுத்த முடி யாது. பிறருக்குக் கேடு செய்யாமல் தத்தம் விருப்பப்படி செயற்பட சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. பிறருக்குத் தீங்கு நேரும்படி ஒருவன் நடந்து கொண்டால் அது தான்தோன்றித்தனம். பிறருக்குத் தீங்கு செய்யாமல் நடந்து கொள்வது சுதந்திரம். பிறருக்குத் தீமையில்லாத ஒரு செயலை ஒருவன் செய்யும் போது அதைத் தடுத்து அவனுடைய விருப்பத்துக்கு மாறாகச் செயல்படத் தூண்டுபவன் அவனுக்குக் கொடுமை செய்தவனாகிறான். அரசன், சமூகம், நேசிப்பவன் இம்மூவரும் இத்தகைய கொடுமையைச் செய்வதுண்டு.

அரசனின் கொடுமையிலிருந்து விடுபடுவதற்கான வழி வெகுகாலம் முன்பே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. முற்காலத்தில் சில பெரியவர்கள் சமூகம் இழைக்கும் கொடுமையை நீக்க முனைந்திருக்கிறார்கள். இவ்விஷ யத்தில் ஜான்ஸ்டுவர்ட்மில் அவர்களின் முயற்சியும் ஆராய்ச்சித்திறனும் அவரது பெருமைக்குச் சான்றாகும். ஆனால் அன்பின் கொடுமையை ஒழிக்க யாரும் முயன்றதாக நமக்குத் தெரியவில்லை. கவிகள் எல்லாத் தத்து வங்களையும் அறிந்தவர்கள், எல்லையற்ற அறிவு படைத்தவர்கள். எந்த விஷ யமும் அவர்களிடமிருந்து தப்புவதில்லை. கைகேயியின் கொடுமையால் தசரதன் ஆணைப்படி ராமன் காட்டுக்கு அனுப்பப்பட்டது, தருமனின் சூதாட்ட ஆசையால் அவனும் அவனுடைய சகோதரர்களும் காடு செல்ல நேர்ந்தது, இன்னும் இது போன்ற பல நிகழ்ச்சிகளில் கவிகள் தங்கள் நீதி யுணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கவிகள் நீதி நிபுணர் களல்லர். நீதி நிபுணர்கள் இவ்விஷயத்தில் வெளிப்படையாகத் தலை யிடவில்லை. உலக வாழ்க்கையைக் கவனமாக ஆராய்ந்து வரும் எவரும் அன்பின் கொடுமையைக் கண்டிக்க வேண்டிய அவசியத்தை ஐயமின்றி உணர்வார்கள். ஏனென்றால் சமூகத்தில் இந்தக் கொடுமையிழைப்பவர் பலர். நேசிப்பவர் ஒவ்வொருவரும் தந்தை, தாய், சகோதரன், சகோதரி, பிள்ளை, பெண், மனைவி, கணவன், உறவினன், நண்பன், ஊழியன் என்ற பல நிலைகளில் தம் நேசத்துக்குரியவருக்குக் கொடுமை செய்கிறார்.

நல்ல அழகும் நல்லொழுக்கமும் வாய்ந்த, நற்குடிப்பிறந்த பெண்ணொருத் தியை மணந்து கொள்ள நீ விரும்புகிறாய். உன் தந்தையோ வேறொரு

பணக்காரப் பெண்ணை உனக்கு மணம் செய்து வைக்க விரும்புகிறார். நீ வயது வந்தவனாயிருந்தால் உன் தந்தையின் கட்டாயத்துக்கு இணங்க வேண்டியதில்லை. இருந்தாலும் தந்தையின் அன்புக்கு வசப்பட்டு உனக்கு நஞ்சாகத் தோன்றும் அந்தப் பணக்காரப் பெண்ணை மணந்து கொள்கிறாய். வறுமையில் உழன்ற ஒருவனுக்கு அதிர்ஷ்ட வசமாகத் தொலைவிலுள்ள ஓர் ஊரில் நல்ல வேலை கிடைக்கிறது. அவன் அந்த ஊருக்குப் போக ஏற்பாடு செய்கிறான். ஆனால் அவனுடைய தாய்க்கு அவனை விட்டுப் பிரிந்து வாழ மனமில்லை. அவள் அழத் தொடங்குகிறாள். அவனும் தாயின் அன்புக்குக் கட்டுப்பட்டு சொந்த ஊரிலேயே தங்கி நீங்காத வறுமையில் உழல்கிறான். திறமை மிக்க ஒருவன் உழைத்து நிறையப் பணம் சம்பாதிக்கிறான். அவனுடைய சோம்பேறி சகோதரன் அந்தப் பணத்தை நாசம் செய்கிறான். இத்தகைய நிகழ்ச்சி இந்து சமூகத்தில் சர்வ சாதாரணம். தற்கால வங்காளிகளுக்கு மனைவியின் அன்பால் நேரும் கொடுமைகளுக்கு உதாரணம் கொடுக்க வேண்டிய அவசியமுண்டா? மனைவிக்குக் கணவனால் நேரும் கொடுமை ஔவளவு அன்பால் நேர்வதுதான்; எனினும் இக்கொடுமையில் பெரும்பகுதி கணவனின் உடல் வலிமையால் நேர்வதாகும்.

ஆகவே மனித வாழ்க்கையில் அன்பால் நேரும் கொடுமை மிகுதி. நெடுங் காலமாகவே மனிதன் கொடுமைக்குள்ளாகி வந்திருக்கிறான். மனித வரலாற்றின் முதல் கட்டத்தில் உடல்வலிமையின் கொடுமை. நாகரீகமற்ற இனங்களிடையே வலிமையுள்ள இனம் மற்ற இனங்களைத் துன்புறுத்தியது. பிற் காலத்தில் இந்தக் கொடுமை அரசனின் கொடுமையாக, செல்வத்தின் கொடுமையாக மாறியது. எந்தச் சமூகத்திலும் இது முற்றிலும் மறையவில்லை. இரண்டாவது கட்டத்தில் மதத்தின் கொடுமை. மூன்றாவது கட்டத்தில் சமூகக் கொடுமை. இந்த மூன்று கட்டங்களிலும் அன்பின் கொடுமை எப்போதும் உண்டு. இந்த நான்கு வகைக் கொடுமைகளில் அன்பின் கொடுமை மற்றவைகளைவிடச் சற்றும் வலிமை குறைந்ததல்ல; தீங்கிலும் குறைந்ததல்ல. பார்க்கப் போனால் அரசன், சமூகம், மதம் இவற்றால் ஏற்படும் கொடுமை அன்பால் நேரும் கொடுமையைவிட பலங் குறைந்தவை; மேலும் அவை அன்பின் கொடுமைபோல் எப்போதும் செயல்படுவதல்லை. ஆகவே அன்பின் கொடுமைதான் மற்ற கொடுமைகளைவிட அதிகம் தீங்கு செய்கிறது என்று சொல்லலாம். மேலும் மற்ற கொடுமைகளுக்கு ஓர் எல்லையுண்டு, அந்தக் கொடுமை செய்பவர்களைத் தடுக்கவும் முடியும். ஏனென்றால் அவர்களை எதிர்க்கலாம். கொடுங்கோல் அரசனுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து அவனைப் பதவியிலிருந்து இறக்கலாம், சில சமயம் அவனைக் கொன்றும் விடலாம். கொடுமையிழைக்கும் சமூகத்தை ஒருவன் துறந்து வெளியேறலாம். ஆனால் மதத்தின் கொடுமையிலிருந்தும் அன்பின் கொடுமையிலிருந்தும் விடு தலையில்லை. ஏனென்றால் மனிதனுக்கு இவற்றை எதிர்க்க மனம் வருவ தில்லை. ஆட்டிறைச்சியுணவைப் பார்க்கும்போது வைணவ சீடனின்

நாக்கில் நீர் ஊறலாம்; ஆனால் மாமிசம் சாப்பிட்டால் என்ன குற்றம் என்று அவன் தன் குருவுடன் விவாதிக்கத் துணியமாட்டான். காரணம் இவ்வுலகில் இறைச்சியுணவின் இன்பம் கிடைக்காவிட்டாலும் மறுமையில் சுவர்க்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு.

மனிதன் கொடுமைகளுக்கு ஆட்பட்டிருப்பது அவனது தேவையின் அடிப் படையில்தான். மனிதன் சடப் பொருள்களைத் தன் இச்சைப்படி ஆட்டிப் படைத்தால்தான் அவன் வாழ்க்கை நடத்த இயலும். இதற்கு உடல்வலிமை தேவைப்படுகிறது. இதன் விளைவாக உடல் வலிமையால் கொடுமை நேர்கிறது. உடல் வலிமையின் பலன் அதிகரிக்க சமூகம் தேவைப்படுகிறது; கூடவே சமூகத்தின் கொடுமை தோன்றிவிடுகிறது. சமூகமாகிய பிணைப்பில் பிணைபட்டால்தான் மனிதனின் வாழ்க்கை நிறைவு பெறுகிறது. அதே போல் மனிதர் ஒருவருக்கொருவர் அன்பால் பிணைக்கப்பட்டால்தான் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையும் நிறைவு பெறும். ஆகவே சமூகம் எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவை அன்பு. பார்க்கப்போனால் சமூகத்தின் தேவையைவிட அன்பின் தேவை அதிகம். உடல் வலிமையாலும் சமூகத் தாலும் கொடுமை நேர்கிறது என்பதற்காக உடல்வலிமையையும் சமூகத்தையும் துறக்க இயலாது. அதுபோல் அன்பால் கொடுமை நேர்கிறதென்று அன்பைத் துறக்கவோ அலட்சியப்படுத்தவோ இயலாது. மாறாக, உடல்வலிமை, சமூகம் இவற்றின் கொடுமையைத் துறக்கவோ அலட்சியப்படுத்தவோ செய்யாமல் மனிதன் அந்தக் கொடுமையை மதத்தின் மூலம் கட்டுப்படுத்த முயல்கிறான். அதுபோல் அன்பின் கொடுமையையும் மதத்தின் மூலம் கட்டுப்படுத்த முயல் வது மனிதனின் கடமை. மதத்தாலும் கொடுமை நேர்கிறதென்பது உண்மை தான். ஆனால் இந்தக் கொடுமையைக் கட்டுப்படுத்த வேறொரு கருவியை நாடினால் அந்தக் கருவியாலும் கொடுமை நேர வாய்ப்பு உண்டு. ஏனெனில் கொடுமையிழைப்பது எந்த சக்திக்கும் இயற்கையான தன்மை யாகும். மதத்தின் கொடுமையைக் கட்டுப்படுத்த ஒரு சக்தி உண்டென்றால் அது அறிவுதான். ஆனால் அந்த அறிவாலும் கொடுமை நேரலாம். இவ்விரண்டின் பாதிப்பால் மனிதனின் உள்ளமாகிய கடல் பெருமளவு மேடிட்டுவிட்டது. அறிவின் கொடுமையைத் தடுக்க அறிவைத் தவிர வேறொரு சக்தியை மனிதனால் பயன்படுத்த இயலுமென்று தோன்றவில்லை.

அதே போல் அன்பால்தான் அன்பின் கொடுமையைக் கட்டப்படுத்த இயலும். அன்பு தன்னலமற்றதாயிருந்தால்தான் இது சாத்தியம். ஆனால் தன்னலமற்ற அன்பு மனித இயற்கையில் அரிது. இந்தக் கூற்றின் உண்மை யான பொருளைப் புரிந்து கொள்ளாமல் சிலர் இதை மறுக்கலாம். அன்பு காரணமாகப் பிள்ளையைத் தொலைநாட்டுக்கு அனுப்ப மறுக்கும் தாய் தன்னலக்காரியா என்று அவர்கள் கேட்கலாம். அவள் தன்னலக்காரியாக இருந்தால் பிள்ளையைத் தொலைநாட்டுக்கு அனுப்பியிருப்பாள். ஏனெனில்

அவன் நிறையப் பணம் சம்பாதித்தால் அவளுக்குத் தானே லாபம்! ஆகையால் பிள்ளையைக் கூடவே வைத்துக் கொள்ள விரும்பும் தாய்ப்பாசம் தன்னல மற்றது என்று அவர்கள் கருதலாம். இந்தக் கருத்து சரியல்ல. இத்தகைய பாசம் தன்னலமற்றதல்ல. இத்தகைய தாயைத் தன்னலமற்றவளாகக் கருதுபவர்கள் பண ஆசையை மட்டுமே தன்னலமாகக் கருதுகிறார்கள்; பண ஆசையில்லா தவன் தன்னலமற்றவன் என்று நினைக்கிறார்கள். உலகத்தில் செல்வத்தைத் தவிரவும் பல இன்பங்கள் உண்டு, அவற்றுள் சிலவற்றுக்காக ஏற்படும் ஆசை பண ஆசையை விட வலிமை வாய்ந்தது என்பது அவர்களுக்குப் புரிவ தில்லை. செல்வத்தில் பாசத்தைத்துறந்து பிள்ளையின் அண்மையையே பெரிதும் விரும்பி அவனை நிரந்தர வறுமையில் ஆழ்த்திய தாயும் தன்னின் பத்தையே பெரிதாகக் கருதுபவள்தான். செல்வத்தால் பெறும் இன்பத்தை விடப் பிள்ளை அருகிலிருப்பதால் அவள் அதிக இன்பம் பெறுகிறாள். இந்த இன்பம் தாய்க்குக் கிடைக்கிறது, பிள்ளைக்கு அல்ல. தாயின் அருகி லிருப்பதால் பிள்ளைக்கு இன்பம் கிடைத்தால் அது வேறு விஷயம், அது பிள்ளையின் குணத்தைச் சார்ந்தது, தாயின் குணத்தையல்ல. தன் பிள்ளை அருகில் இருப்பதால் தனக்குக் கிடைக்கும் சுகத்துக்காகப் பிள்ளையை வறுமை யிலாழ்த்தும் தாய் சுயநலக் காரியே; ஏனெனில் அவள் தன் சுகத்துக்காக இன்னொருவனுக்குத் துன்பமளிக்கிறாள்.

மனிதனின் அன்பு நேசிப்பவனுக்கும் நேசிக்கப்படுபவனுக்கும் இன்ப மளிக்கலாம்; ஆனால் அது தன்னலமானது, விலங்கின் தன்மையது. மனிதன் நேசத்தால் ஏற்படும் இன்பத்துக்காக மற்ற இன்பங்களைத் துறப்பதால் அவனைத் தன்னலமற்றவன் எனக் கருதுகிறார்கள். ஆனால் இவ்வாறு அன்பால் ஏற்படும் இன்பம் அன்பு செய்பவனுக்கே கிடைப்பதால், இந்த அன்பு தன்னலமானது என்றே கொள்ள வேண்டும்.

ஆனால் அன்பு என்பது தன்னலத்தைத் திருப்தி செய்து கொள்வதற்காகப் படைக்கப்படவில்லை. மனிதனின் குணங்களில் மிகவும் தூய்மையானதும் நலம் விளைவிப்பதும் அன்பேயாகும். இதுவரையில் மனிதனின் தன்மை உயர்வு பெறாததால்தான் இன்னும் மனித அன்பு விலங்குத் தன்மை கொண்டதாயிருக்கிறது. குழந்தைப் பாசம், காதலியிடம் அன்பு, இந்த உறவு களுக்கு அப்பாற்பட்ட அன்பு இவையெல்லாம் விலங்குகளிடமும் உண்டு. விலங்குகளின் குழந்தைப் பாசம் மனிதர்களின் பாசத்தைவிடச் சற்றும் குறைந்ததல்ல.

உண்மையன்பு தன்னலமற்றது. தன் பிள்ளையின் அருகாமையால் தனக் கேற்படும் இன்பத்தைத் துறந்து அவனுடைய இன்பத்துக்காக அவனைத் தொலைவில் போக அனுமதிக்கும் தாயே தன்னலமற்றவள். அவளது அன்பே உண்மையானது. நேசிப்பதால் தனக்கேற்படும் இன்பத்தைத் துறந்து நேசிக்கப்படுபவனின் நலனை விரும்புபவனே உண்மையான நேசன்.

மனித அன்பு இத்தகைய தூய்மையான நிலையை எய்தும் வரை சுய நலத்தின் கறை அதிலிருந்து நீங்காது. அந்த அன்பும் உரிய மலர்ச்சி பெறாது. இத்தகைய தூய அன்பு மலர்ந்தால் அன்பின் கொடுமை நேராது. இத்தகைய தூய அன்பு கொண்டவர்களும் உண்டு. ஆனால் நாம் இந்தக் கட்டுரையில் அவர்களைப் பற்றிப் பேசவில்லை. மற்ற இடங்களில் அன்பின் கொடுமையை விலக்க ஒரே வழி அன்பை அறத்தால் கட்டுப்படுத்துவதுதான். அந்த அறம் யாது?

யார் எப்படி விளக்கினாலும் அறம் என்பது ஒன்றுதான். அறத்தின் அடிப்படைத் தத்துவங்கள் இரண்டு. ஒன்று தன்னைப் பொருத்தது, மற்றது பிறரைப் பொருத்தது. முதலாவதைத் தன்னைத் திருத்திக் கொள்ளும் தத்துவ மாகக் கொள்ளலாம். அதன் நோக்கம் தன்னுள்ளத்தின் மலர்ச்சியையும் தூய்மையையும் காப்பாற்றிக் கொள்வதாகும். இரண்டாவது தத்துவம் பிறர் சம்பந்தப்பட்டதாகையால் அதையே உண்மையான அறத்தின் அடிப்படை யாகக் கருதலாம். "பிறருக்குத் துன்பம் செய்யாதே; முடிந்தவரை பிறருக்கு நன்மை செய்'— என்ற இந்த உணர்ந்த தத்துவந்தான் உலகின் எல்லா தரும சாத்திரங்களுக்கும் அடிப்படை. வேறெந்த அறக் கொள்கையையும் இந்தத் தத்துவத்துக்குள் அடக்கி விடலாம். தன்னைச் சீர்திருத்திக் கொள்ளும் எல்லாக் கொள்கைகளுடனும் இந்தப் பெருந்தத்துவம் இணைந்திருக்கிறது. பார்க்கப் போனால் தன்னைத் திருத்திக் கொள்ளும் கொள்கையும் பிறருக்கு நன்மை செய்யும் கொள்கையும் ஒரே தத்துவத்தின் இரு வெளிப்பாடுகள்தாம். பிறர் நலனை விழைதல், பிறருக்குத் துன்பம் செய்தலைத் தவிர்த்தல் இவையே எல்லா நீதி நூல்களின் சாரமாகும்.

ஆகவே இந்த அறத்தைக் கடைப்பிடித்தாலேயே அன்பின் கொடுமையைத் தவிர்த்து விடலாம். ஒருவன் தன்னால் நேசிக்கப்படும் இன்னொருவனின் காரியங்களில் தலையிடும் முன், "நான் என் இன்பத்துக்காகத் தலையிட மாட்டேன், என் தலையீடு மூலம் என்னால் நேசிக்கப்படுபவனுக்குத் தீமை செய்ய மாட்டேன்! நான் என்னால் இயன்ற அளவு துன்பத்தைப் பொறுத்துக் கொள்வேன். அவனுக்குத் தீங்கு நேரும் வகையில் அவனைத் தூண்ட மாட்டேன்!" என்று உறுதி கொள்ள வேண்டும்.

இந்தக் கூற்று மிக சாதாரணமாகத் தோன்றலாம். ஒரு பழைய அறிவுரை யாகக் கருதப்படலாம். ஆனால் இதைப் பின்பற்றுதல் அவ்வளவு எளிதல்ல. உதாரணமாக, தசரதன் ராமனைக் காட்டுக்கு அனுப்பிய நிகழ்ச்சியை எடுத்துக் கொள்வோம். இதிலிருந்து தன்னலமற்ற அன்பு செலுத்துவது எவ்வளவு கடினமென்று உணர்ந்து கொள்ளலாம். தசரதன், கைகேயி இரு வரும் அன்பின் கொடுமையைப் பயன்படுத்துகிறார்கள். கைகேயி தசரதன் மேலும், தரசதன் ராமன் மேலும் இதைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களுள் கைகேயியின் செயல் தன்னலமானதாகவும் கொடுமையானதாகவும் கருதப்

படுகிறது. அவளது செயல் இத்தகையதுதானென்றாலும் அதை இவ்வளவு கடுமையாகக் கண்டிப்பது உசிதமல்ல. கைகேயி தன்னின்பத்தைப் பெரிதாகக் கருதவில்லை. தன் பிள்ளையின் சுகத்தைத்தான் விரும்பினாள். பிள்ளையின் இன்பமே தாயின் இன்பம் என்பது உண்மையே. இருந்தாலும், வங்காளத்துத் தாய் தந்தையர் சாதித் தூய்மை கெட்டு விடுமென்ற பயத்தில் தம் புதல்வர் களைக் கடல் கடந்து இங்கிலாந்தக்கு உயர்கல்வி பெறச் செல்லாமல் தடுக் கிறார்களே, அவர்களது செயலைவிடக் கைகேயியின் செய்கை நூறு மடங்கு தன்னலமற்றது என்பதில் ஐயமில்லை.

அது போகட்டும். கைகேயியின் குணத்தையோ குற்றத்தையோ ஆராய்வது நம் நோக்கமல்ல. தரசதன் தன் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக ராமனைக் காட்டுக்கு அனுப்பி, பரதனுக்கு முடிசூட்ட இணங்குகிறான். இதன் விளை வாகத் தானே உயிர் துறக்கிறான். அவன் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன் பிள்ளையின் பிரிவை ஏற்றுக் கொள்கிறான், தன் உயிரையே துறக் கிறான் என்று இந்தியாவின் வரலாறுகளும் இலக்கியங்களும் அவனைப் போற்றிப் புகழ்கின்றன. ஆனால் உண்மையென்னவென்றால், தசரதன் தன் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன் மூத்த புதல்வனின் அரசுரிமையைப் பறித்து அவனைக் காட்டுக்கு அனுப்பிப் பெரும் அநீதி இழைத்தவிட்டான்.

நம் கேள்வி—சத்தியம் மட்டுந்தான் கடைப்பிடிக்கப்பட வேண்டுமா? நற்குலப் பெண் தன் ஒழுக்கத்தைக் கைவிட ஒரு போக்கிரிக்கு வாக்களித்து விட்டால் அந்த வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டுமா? ஒருவன் தன் நண்பனைக் கொல்வதாக அந்த நண்பனின் எதிரிக்கு வாக்களித்தால், அந்த வாக்கை அவன் காப்பாற்றத்தான் வேண்டுமா? ஒருவன் ஒரு பெரும் பாவம் செய்வதாக வாக்களித்தால் அந்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமா?

சத்தியத்தை மீறுவதைவிட அதைக் காப்பாற்றுவதால் அதிகத் தீங்கு நேரும் நிலையில் சத்தியத்தைக் காப்பாற்றுவதா, மீறுவதா? சத்தியந்தான் நிலையான அறம், ஆகையால் அதைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்று சிலர் சொல்லலாம். நலம் விளைப்பது புண்ணியம், தீங்கு தருவது பாவம் என்ற அடிப் படையில் புண்ணியத்தையும் பாவத்தையும் முடிவு செய்யும் உரிமையை ஒரு செயலைச் செய்பவனிடம் விட்டுவிட்டால் குழப்பந்தான் நேரும். பாவத்துக்கும் புண்ணியத்துக்கும் வேற்றுமையிருக்காது. மக்கள் புண்ணியம் என்று சொல்லிக் கொண்டு பெரும்பாவத்தையும் செய்யத் துணிவர். நாம் இந்தப் பிரச்னையை இங்கு விரிவாக ஆராயப்போவதில்லை. ஏனெனில் 'பயனியல்' வாதிகள் இதற்கு ஒரு வகை விடை தயாரித்திருக்கிறார்கள்.

அவர்கள் சொல்வது இதுதான்-இத்தகைய பிரச்னை எழும்போது அறத் தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டு பிரச்னையை ஆராய்ந்து பார்.

"சத்தியம் எப்போதும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமா?" என்ற கேள்விக்கு விடை காணுமுன் "சத்தியம் ஏன் கடைப்பிடிக்கப்படவேண்டும்?"என்ற

கேள்விக்கு விடை காண வேண்டும். சத்தியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு அடிப்படை இரண்டு தத்துவங்கள். ஒன்று அறக் கொள்கை, மற்றது தன்னைத் திருத்திக் கொள்ளும் கொள்கை. நாம் இந்த இரண்டாவது கொள்கையை அறக் கொள்கையின் பகுதியாகக் கருதவில்லை. ஆகவே அறக் கொள்கையை மட்டும் ஆராய்வோம். பிறருக்குத் தீங்கு தரும் செயல் செய்யத்தக்கதல்ல என்பதே அறக் கொள்கை. சத்தியத்தை மறுத்தால் பிறருக்குத் தீங்கு நேர்கிறது. ஆகையால் சத்தியத்தைக் காப்பாற்றுதல் கடமை. ஆனால் சத்தியத்தைக் காப்பாற்றுவதால் தீங்கு நேரும்; சத்தியத்தை மீறினால் அவ்வளவு தீங்கு நேராது என்ற சூழலில் சத்தியம் காப்பாற்றத்தக்கதல்ல. தசரதன் சத்தியத்தைக் காத்ததால் ராமனுக்குப் பெருந்தீங்கு நேரிட்டது; அவன் சத்தியத்தைக் கைவிட்டிருந்தால் கைகேயிக்கு அப்படிப்பட்ட தீங்கு நேர்ந்திருக்காது. ராமன் அரசுரிமையிழந்ததால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிது. தசரதனின் செய்கை மக்களுக்குத் துரோகம். ஆகவே தன் சத்தியத்தைக் காப்பாற்றியதன் மூலம் தசரதன் பெரும் பாவமிழைத்து விட்டான்.

இவ்விஷயத்தில் தசரதன், தன்னலமற்றுச் செயற்படவில்லை. தான் சத்தியத்தை மீறிவிட்டால் உலகோர் அவனைத் தூற்றுவார்களே என்ற பயத்தில் ராமனுடைய அரசுரிமையைப் பறித்துக் கொண்டு அவனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான். அதாவது தன் புகழைக் காப்பாற்றிக் கொள்ளும் சுயநல நோக்கத்துக்காக ராமனுக்குத் தீங்கிழைத்தான். தசரதன் தன் உயிரைத் தியாகம் செய்தது உண்மையே; ஆனால் அவன் தன் புகழை உயிரைவிட மேலாகக் கருதியதால்தான் இறந்தான். இதிலும் அவன் தனக்குப் பிரியமானதையே தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஆகவே அவன் சுயநலக்காரன். சுயநல உணர்வால் செய்யப்படும் செயல் பெரும்பாவமாகும்.

சுயநலமற்ற அன்பு, அறம் இவற்றின் போக்கும் ஒன்றே, இலட்சியமும் ஒன்றே. பிறரின் நலமே இவற்றின் இலட்சியம். ஆகவே, உண்மையில் அன்பும் அறமும் ஒன்றுதான். வாழ்க்கை அன்புக்கு வசப்படும்போது அறம் என்று பெயர் பெறுகிறது. அறம் எல்லா மக்களையும் தழுவிய அன்பாக வளர்ச்சி பெறும் வரை முழுமையடையாது. ஆனால் மக்கள் நடைமுறையில் அன்பை அறத்திலிருந்து பிரித்தே வைத்திருக்கிறார்கள். ஆகையால் அன்பின் கொடுமையிலிருந்து விடுதலை பெற அறத்தின் கட்டுப்பாடு தேவைப்படுகிறது.

(வங்க ஆண்டு 1281, அக்ரஹாயண் மாத 'வங்கதர்சன்' இதழில் முதலில் வெளிவந்த இக்கட்டுரை 'விவித பிரபந்த' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

பூனை

நான் என் படுக்கையறையில் கையில் ஹூக்காவுடன் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தூக்க மயக்கத்திலிருந்தேன். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எதிர்ப் பக்கத்துச் சுவர்மேல் நிழல்கள் பிசாசுபோல் ஆடிக் கொண்டிருந்தன. இன்னும் இரவுச் சாப்பாடு தயாராகவில்லை. நான் கண்களை மூடியவாறு, நான் நெப்போலியனாக இருந்திருந்தால் வாட்டர் லூப் போரில் வெற்றி பெற்றிருப்பேனா என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

இந்த சமயத்தில் "மியாவ்" என்றோர் ஒலி மெதுவாகக் கேட்டது.

கண்களைத் திறந்து பார்த்தேன். முதலில் ஒன்றும் தெரியவில்லை. நெப்போலியனின் எதிரி வெலிங்டன் துரை திடீரென்று பூனையாக மாறி என்னிடம் கொஞ்சம் அபினி கேட்க வந்திருக்கிறாரோ என்று முதலில் தோன்றியது. உடனே மனதைக் கல்லாக்கிக் கொண்டேன்; "உங்களுக்கு நிறைய சன்மானம் கொடுத்தாகிவிட்டது. இனிமேல் ஒன்றும் கிடையாது! இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு பேராசை ஆகாது!" என்று சொல்லிவிடத் தீர்மானித்தேன்.

"மியாவ்"— மறுபடி துரையின் குரல்!

நன்றாகக் கவனித்துப் பார்த்தேன்— வெலிங்டன் துரை அல்ல, ஒரு சிறிய பூனை. அது, பால்காரிபிரசன்னா எனக்காக வைத்திருந்த பாலைக்குடித்து விட்டிருக்கிறது. நான் அப்போது வாட்டர்லூப்போரில் படை வீரர்களைக் கொண்டு வியூகம் அமைத்துக் கொண்டிருந்ததால் இதைக் கவனிக்கவில்லை. பூனையழகி கெட்டிப்பாலை ருசித்துக் குடித்த மகிழ்ச்சியை உலகுக்குத் தெரிவிக்க 'மியாவ்' ஒலியெழுப்பியது. அதன் குரலில் ஏளனம் இருந்ததா இல்லையா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. "ஒருவன் குட்டையில் வலைபோட்டு மீன் தேடிச் சாகிறான். இன்னொருவன் அந்த மீனைச் சாப்பிட்டு ஆட்டம் போடுகிறான்!" என்று அது சொல்கிறதோ என்னவோ! "நான் உன் பாலைக் குடிச்சுட்டேன் என்ன சொல்றே இப்போ?" என்றுதான் கேட்கிறதோ அது?

என்ன சொல்வதென்று புரியவில்லை எனக்கு. அந்தப் பால் என்னுடைய தல்ல. அது மங்களா என்ற பெயருள்ள பசுவினுடையது. அதைக் கறந்தவள் பிரசன்னா. ஆகவே அந்தப் பாலின் மேல் எனக்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு அந்தப் பூனைக்கும் உண்டு. ஆகையால் அதன் மேல் நான் கோபித்துக் கொள்ளக் கூடாது. இருந்தாலும் பூனை பால் குடிக்க வந்தால் அதை விரட்ட வேண்டுமென்று ஒரு மரபு உண்டு. அந்த மரபை நான் மீறி மனித இனத்துக்குக் களங்கம் ஏற்படுத்தும் எண்ணமில்லை. நான் பூனையை விரட்டாமல் விட்டு விட்டால் அது மற்ற பூனைகளிடம் போய் "கமலா காந்தன் ஒரு பயங்கொள்ளி!" என்று சொல்லிச் சிரித்தாலும் சிரிக்கலாம். ஆகவே மனிதனுக்குரிய கடமையைச் செய்யத்தான் வேண்டும். இவ்வாறு முடிவு செய்து நான் அரை மனதோடு எழுந்து ஹூக்காவைக் கீழே வைத்துவிட்டு, வெகுநேரம் தேடி ஓர் கடைந்த தடியைக் கண்டு பிடித்து அதை எடுத்துக் கொண்டு ஆர்ப்பாட்டமாகப் பூனையைத்தாக்க ஓடினேன்.

பூனைக்குக் கமலாகாந்தனை நன்றாகத் தெரியும். அது தடியைக் கண்டு பயந்து போனதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அது என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டுச் சற்று நகர்ந்து உட்கார்ந்து கொண்டது. பிறகு "மியாவ்" என்றது. அது சொல்வது எனக்குப் புரியத் தொடங்கவே நான் தடியை எறிந்து விட்டு, ஹூக்காவைத் கையிலெடுத்துக் கொண்டு மறுபடி கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டேன். அது சொல்வதைப் புரிந்து கொள்ளும் அபூர்வ சக்தி எனக்குக் கிடைத்துவிட்டது.

பூனை கூறியது: இந்த அடிதடியெல்லாம் எதற்கு? ஹூக்காவைக் கையி லெடுத்துக் கொண்டு நிதானமாக உட்கார்ந்து யோசித்துப்பார். இந்த உலகத் திலுள்ள பால், பாலாடை, தயிர், மீன் இறைச்சி எல்லாமே உங்களுக்குத் தானா? அவற்றில் எங்களுக்குப்பங்கு கிடையாதா? நீங்கள் மனிதர்கள், நாங்கள் பூனைகள்— இவ்வளவுதானே வித்தியாசம்? உங்களுக்கு ஏற்படும் பசி தாகம் எங்களுக்கில்லையா? நீங்கள் சாப்பிடுவதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் நாங்கள் சாப்பிட்டால் மட்டும் நீங்கள் எந்த சாத்திர விதிப்படி எங்களைத் தடியாலடிக்க வருகிறீர்கள் என்பதை எவ்வளவு ஆராய்ச்சி செய்தும் எங்களால் கண்டுபிடிக்க முடியவல்லை. நீங்கள் என் உபசேதங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். விலங்கு அறிஞர்களிடம் கற்றுக் கொண்டாலொழிய உங்கள் அறிவு வளர வேறுவழியில்லை. உங்கள் பள்ளிக் கூடங்களைப் பார்த்தால், நீங்கள் இதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்களென்று தோன்றுகிறது.

"படுக்கையில் கிடக்கும் மனிதா? அறம் என்பது என்ன? பிறருக்கு உபகாரம் செய்வதே அறம். இந்தப் பாலைக் குடித்ததால் எனக்கு நன்மை ஏற்பட்டிருக் கிறது. நீ வரவழைத்த பால ல் இந்த நன்மை ஏற்பட்டிருப்பதால் உனக்குப் புண்ணியம் கிடைத்திருக்கிறது. நான் திருடியிருக்கலாம். ஆனால் உனக்குப்

புண்ணியம் கிடைக்க நான்தான் காரணம். ஆகவே நீ என்னைஅடிக்காமல், என்னைப் புகழ வேண்டும் நீ.

"ஆம், நான் திருடிதான். ஆனால் நான் வேண்டுமென்றா திருடினேன்? சாப்பாடு கிடைத்துவிட்டால் யார் திருடுவார்கள்? 'திருட்டு' என்ற சொல் கேட்டாலே நடுங்கும் 'நல்லவர்'களில் பலர் திருடர்களைவிடக் கெட்டவர்கள். அவர்களுக்குத் திருட வேண்டிய அவசியமில்லாததால்தான் அவர்கள் திருட வில்லை. அவர்களிடம் அவர்களது தேவைக்கு மிஞ்சிய பணமிருந்தும் திருடர்களுக்கு அவர்களுக்கு இரக்கம் காட்டுவதில்லை. அதனால்தான் திருடர்கள் திருடுகிறார்கள். திருடிய பாவம் திருடனுக்கல்ல—அவனைத் திருடத் தூண்டிய பேராசைக்காரப் பணக்காரனுக்குத்தான். திருடன் குற்றவாளி தான்; ஆனால் பணக்காரக் கஞ்சன் அவனை விடப் பல மடங்கு குற்றவாளி. திருடனுக்குத்தண்டனை கிடைக்கிறது; திருட்டுக்கு மூலகாரணமான பணக் காரக் கஞ்சன் ஏன் தண்டிக்கப்படுவதில்லை?

"இதோ பார், நான் ஒவ்வொரு சுவர்மேலும் ஏறி 'மியாவ், மியாவ்' என்று கத்திக் கொண்டு திரிகிறேன். எவரும் எனக்கு மீனின் செதில்களைக் கூடக் கொடுப்பதில்லை. மீன் செதிலையும் இலையில் மிஞ்சிய எச்சில் சோற்றையும் சாக்கடையில் எறிகிறார்கள், என்னைக் கூப்பிட்டுக் கொடுப்பதில்லை. உங்கள் வயிறு நிரம்பியிருக்கிறது; எங்கள் பசி உங்களுக்கு எப்படித் தெரியும்? ஏழைக்கு இரங்கினால் உங்கள் கௌரவம் குறைந்தா போய்விடும்? ஆம், என் போன்ற ஏழைகளுக்காக வருத்தப்படுவது உங்களுக்கு வெட்ககரமான விஷயந்தான்! ஒரு குருடனுக்கு ஒரு கைப்பிடி அரிசி கொடுக்காதவன் ஒரு பெரிய அரசன் சங்கடத்தில் மாட்டிக் கொண்டால் இரவு முழுதும் தூங்காமல் அவனுக்காகக் கவலைப்படுகிறான். பெரிய மனிதர்களுக்கு அனுதாபம் காட்ட எல்லாரும் தயார். ஏழை எளியவரிடம் இரக்கப்படுவதற்கு யாரும் தயார் இல்லை.

"ஒரு பேரறிஞரோ, அல்லது அந்தப் பெரிய நாட்டாண்மையோ வந்து உன்பாலைக் குடித்திருந்தால் நீ தவரைத் தடியெடுத்து அடிக்க வருவாயா? 'இன்னும் கொஞ்சம் கொண்டு வரட்டுமா?' என்று கேட்டுக் கொண்டு அவர் முன்னால் கைகூப்பி நிற்பாய். நான் குடித்தால் மட்டும் தடியை எடுக்கிறாய். 'அவர்கள் அறிஞர்கள், மரியாதைக்குரியவர்கள்' என்று நீ சொல்லலாம். படித் தவர்களாயிருந்தாலென்ன; அவர்களுடைய பசி என் பசியை விட அதிகமா? எண்ணெய்த் தலையில் இன்னும் எண்ணெயை வைத்துத் தேய்ப்பது மனித இனத்தின் நோய். ஏழையின் பசியை யாரும் பொருட்படுத்துவதில்லை. சாப்பிடச் சொன்னால் எரிச்சலடைபவனுக்குச் சாப்பாடு போட வரிந்து கட்டிக் கொண்டு வருவீர்கள்; பசிக் கொடுமையால் நீங்கள் கூப்பிடாமலேயே வந்து சாப்பிடுபவனைத் திருடனென்று தண்டிப்பீர்கள்—சீ.சீ!

"நாங்கள் சுவருக்குச் சுவர், முற்றத்துக்கு முற்றம், வீட்டுக்கு வீடு 'மியாவ், மியாவ்' என்று கத்திக் கொண்டு அலைகிறோம்— நாங்களிருக்கும் பக்கம்

யாரும் மீன் செதிலைக் கூட எறிவதில்லை. உங்கள் வளர்ப்புப் பூனையாக இருந்துவிட்டால்—ஒரு கிழவனின் இளம் மனைவியின் தம்பி போல், பணக்கார முட்டாளின் சதுரங்க விளையாட்டுத் தோழன் போல் அந்தப் பூனைக்கு நல்ல வேட்டை! அதன் வால் கொழுத்து வளரும், உடலில் முடி வளரும்; அதன் அழகைப் பார்த்து நிறையப் பூனைகள் கவிகளாகிவிடும்.

"எங்கள் நிலையைப் பார்— உணவில்லாமல் ஒட்டிப்போன வயிறு. எலும்பு வெளியில் தெரிகிறது. வால் தொங்குகிறது. பற்கள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன, நாக்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கிறது. உண வில்லாமல் எப்போதும் கத்திக் கொண்டிருக்கிறோம், 'மியாவ், மியாவ்! பசிக் கிறதே!' என்று. எங்கள் கருப்புத் தோலைப் பார்த்து எங்களை வெறுக்காதே! இந்த உலகத்தின் மீனிலும் இறைச்சியிலும் எங்களுக்கும் கொஞ்சம் உரிமை இருக்கிறது. எங்களுக்குச் சாப்பிடக் கொடு; இல்லாவிட்டால் திருடுவோம்! எங்கள் கருப்புத் தோல், சோர்ந்த முகம், பரிதாப ஒலம் இவற்றைப் பார்த்து உங்களுக்கு வருத்தமேற்படவில்லையா? திருடனுக்குத் தண்டனையுண்டு, கல் நெஞ்சுக்காரனுக்குத் தண்டனை; பணக்காரக் கஞ்சனுக்குத் தண்டனை யில்லை! கமலாகாந்தா, நீ அபினி சாப்பிடுபவன்; ஆகையால் உனக்குத் தொலைநோக்கு உண்டு. பணக்காரனின் குற்றத்தால்தான் ஏழை திருடனா கிறான் என்று உனக்குப் புரியவில்லையா? ஒருவன் ஐநூறு ஏழைகளை ஏமாற்றி அவர்களுடைய உணவைப் பறித்துக் கொள்ளலாமா? சரி, பறித்துக் கொள்ளட்டும்; அவன் சாப்பிட்டு மிஞ்சியதையாவது ஏழைகளுக்குக் கொடுக்கக் கூடாதா? அவன் கொடுக்காவிட்டால் ஏழை அவனிடம் திருடத் தான் செய்வான். ஏனென்றால் பட்டினி கிடந்து உயிர்விட யாரும் இந்த உலகத் துக்கு வரவில்லை."

நான் பூனையின் பேச்சை மேலும் பொறுத்துக் கொள்ள முடியாமல் சொன்னேன்— "பூனைப் பண்டிதையே நிறுத்து, நிறுத்து! நீ சோஷலிஸ்ட் பேச்சல்லவா பேசுகிறாய்! உன் பேச்சு சமூகத்தில் குழப்பமுண்டாக்கும். ஒருவன் தன் திறமைக்கேற்பப் பணம் சம்பாதிக்க முடியாவிட்டால், அப்படிப் பணம் சேர்த்தாலும் திருடனின் தொந்திரவின்றி அதை அனுபவிக்க முடியா விட்டால், யாரும் செல்வத்தைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட மாட்டார்கள். இதன் விளைவாக சமூகத்தின் செல்வ வளர்ச்சி குன்றும்."

"அதனால் எனக்கென்ன?" என்றது பூனை. "சமூகத்தின் செல்வம் பெருகு கிறது என்றால் பணக்காரன் மேலும் பணக்காரனாகிறான் என்று பொருள். பணக்காரன் இன்னும் பணக்காரனாகாவிட்டால் ஏழைக்கு என்ன நஷ்டம்?"

நான் விளக்க முயற்சித்தேன்— "சமூகத்தின் செல்வம் வளராவிட்டால் சமூகம் முன்னேறாது."

பூனை கோபத்தோடு சொல்லியது— "எனக்குச் சாப்பிட ஒன்றும் கிடைக் காதபோது சமூக முன்னேற்றத்தால் எனக்கென்ன லாபம்?"

பூனைக்குப் புரிய வைப்பது கஷ்டமாகிவிட்டது. நீதிபதிக்கும் தர்க்க வாதிக்கும் யாரும் எதையும் விளங்க வைக்க முடியாது. பூனை ஒரு சிறந்த நீதிபதி, திறமையுள்ள தர்க்கவாதியுங்கூட; ஆகையால் புரிந்து கொள்ளாம லிருக்க அதற்கு உரிமையுண்டு. ஆகவே அதன்மேல் கோபங்கொள்ளாமல் அதனிடம் சொன்னேன், "சமூக முன்னேற்றத்தால் ஏழைக்கு லாபமில்லாம லிருக்கலாம், பணக்காரனுக்கு லாபமிருக்கிறது. ஆகையால் திருடனுக்குத் தண்டனையளிப்பது அவசியம்."

பூனை சொல்லியது, "திருடனைத் தூக்கில் போடுங்கள், எனக்கு ஆட்சேப மில்லை. ஆனால் கூடவே ஒரு விதி செய்யுங்கள்—தண்டனையளிக்கும் நீதிபதி அதற்கு முன்னால் மூன்று நாட்கள் பட்டினி கிடக்க வேண்டும். அதன் பிறகும் அவருக்குத் திருடியாவது சாப்பிடவேண்டும் என்று தோன்றாவிட்டால் அவர் தாராளமாகத் திருடனுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கட்டும். நீ என்னை அடிக்கத் தடியை ஓங்கினாய்; நீ மூன்று நாள் பட்டினி கிடந்து பார். அதற்குள் நீ நசீராம் பாபுவின் வீட்டில் உணவு திருட முயன்றதற்காகப் பிடிபடாவிட்டால் என்னை அடித்துக் கொல்லலாம், நான் ஆட்சேபிக்க மாட்டேன்."

வாதத்தில் தோற்றுப் போனால் எதிர்க்கட்சிக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. இந்த மரபுக்கேற்ப நான் பூனை யிடம் சொன்னேன், "நீ சொல்வதெல்லாம் சட்ட விரோதப் பேச்சு. இந்த மாதிரி நினைப்பதே பாவம். நீ இந்தக் கெட்ட நினைப்பையெல்லாம் விட்டு விட்டு அறத்தில் மனதைச் செலுத்து. நீ விரும்பினால் நான் உனக்கு நியுமேனும் பார்க்கரும் எழுதிய புத்தகத்தைத் தருகிறேன். என்னுடைய நாட்குறிப்பைப் படித்தாலும் உனக்கு நன்மை ஏற்படும். வேறெந்த நன்மை உண்டாகா விட்டாலும் அபினியின் எல்லையற்ற பெருமையைப் புரிந்து கொள்வாய். நீ இப்போது உன் இருப்பிடத்துக்குப் போய்விட்டு, சாப்பாட்டு நேரத்துக்கு வா. பிரசன்னா கொஞ்சம் கீர் கொண்டு வந்து தருவதாகச் சொல்லியிருக்கிறான். அதை நாம் பகிர்ந்து சாப்பிடுவோம். இன்று நீ வேறுயாருடைய சட்டியையும் காலி பண்ணாதே. மறுபடியும் பசியால் வருந்தினால் என்னிடம் வா, உனக்குக் கடுகளவு அபினி தருகிறேன்."

பூனை சொல்லியது, "எனக்கு அபினி வேண்டாம். பிறர் வீட்டுச் சட்டியைக் காலி செய்யும் விஷயத்தைப் பசிக்கும்போது யோசிக்கிறேன்."

பூனை விடைபெற்றுச் சென்றுவிட்டது. ஒரு தாழ்ந்த பிறவியை இருட்டி லிருந்து வெளிச்சத்துக்கு அழைத்து வந்ததில் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது எனக்கு.

(வங்க ஆண்டு 1281, சைத்ர மாத 'வங்கதர்சன்' இதழில் முதலில் வெளியான இந்தக் கட்டுரை 'கமலா காந்தனின் நாட்குறிப்பு' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

சந்திர உலகம்

சந்திர தேவன் வங்காளி இலக்கியத்தில் பல வேலைகள் செய்திருக்கிறார். வருணனை, உவமை, காதலர், பிரிவு, சேர்க்கை, சாதுரியப் பேச்சு, இச்சகப் பேச்சு எல்லாவற்றிலும் அவர் இருக்கிறார். சாதாரண மக்களால் அனுபவிக் கப்படும் சந்திர வதனம், சந்திர கிரணம், நிலவு முதலியவற்றை வாரி வழங்கியிருக்கிறார்; சில சமயம் மகளிரின் தோள்களின் மேல் குதித்திருக் கிறார், சில சமயம் அவர்களுடைய கால் நகங்களில் விழுந்து புரண்டிருக் கிறார்; சுதாகர், ஹிமகரகரநிகர்—மிருகாங்க, கசாங்க, களங்க முதலிய எதுகை களில் வங்காளிச் சிறுவர்களின் மனதைக் கவர்ந்திருக்கிறார். ஆனால் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியப் பூங்காவில் மட்டும் விளையாடி விட்டு யாரும் தப்பிவிட முடியுமா? அறிவியல் என்ற அரக்கன்தான் எல்லா வழிகளையும் அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறானே! இப்போது அறிவியல் சந்திரதேவனையும் பிடித்துக் கொண்டு விட்டது. அவர் தப்ப முடியாது. இனி அவரால் இலக்கியமாகிய பிருந்தாவவனத்தில் விளையாடி பொழுதைக் கழிக்க முடியாது. வாசலில் அக்ரூரர் தேரை வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்; "சந்திரா, வா. அறிவியல் என்ற வட மதுரைக்குப் புறப்படு. அங்கு கம்சனைக் கொல்ல வேண்டும்" என்று அழைக்கிறார்.

அபிமன்யுவின் மரணத்தால் சோர்ந்து கிடந்த அர்ஜுனனுக்கு ஆறுத லளிப்பதற்காக, அபிமன்யு சந்திர உலகம் போய்விட்டதாகச் சொல்லப் பட்டது. நீலக் கடல் போன்ற வானத்தில் தங்கத் தீவாகப் பளபளக்கும் சந்திரனைப் பார்க்கும்போது நாமும் நினைக்கிறோம், சந்திரன் என்பது தங்கத்தாலான ஓர் உலகம். அதில் தங்கமயமான மனிதர்கள் தங்கத்தட்டில் தங்க மீன்களும், தங்கச் சோறும் சாப்பிடுகிறார்கள், வைரத்தாலான பழரசத்தைப் பருகுகிறார்கள், அருமையான படுக்கையில் படுத்து ஆனந்தமாக உறங்கு கிறார்கள் என்று. ஆனால் "அதெல்லாம் இல்லை, சந்திரன் ஒரு வறண்ட பாலைவனம், அங்கு யாரும் போக வேண்டாம்" என்கிறது அறிவியல்.

இதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சந்திரன் ஒரு துணைக் கோள் என்று சிறுவர்கள் படித்திருக்கிறார்கள். ஆனால் 'துணைக்கோள்' என்று மட்டும் சொன்னால் சூரிய மண்டலத்தில் அதன் நிலை தெளிவாகிவிடாது. பூமியும் சந்திரனும் இரட்டைக் கோள்கள். இவையிரண்டும் ஒன்று சேர்ந்து ஒரே வழியில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இரண்டுமே பரஸ்பர ஈர்ப்பு சக்திக்குக் கட்டுப் பட்டவை. ஆனால் எடையில் பூமி சந்திரனைப் போல் 81 மடங்கு. ஆகவே பூமியின் ஈர்ப்பு சக்தி அதிகம். ஆகையால் தான் சந்திரன் பூமியைச் சுற்றி வரும் துணைக் கோள் என்று தோன்றுகிறது. சந்திரன் ஒரு சிறிய பூமி. அதன் விட்டம் சுமார் 2,100 மைல்கள்; அதாவது பூமியின் விட்டத்தில் கால்பங்கைவிடச் சற்று அதிகம். இதுவரை பழைய மரபைப் பின்பற்றிக் கதாநாயகிகளைச் சந்திரன் போன்ற முகமுடையவர்களாக வருணித்தனர். அந்த வருணனையில் நிறைவடையாமல் புதிய உவமை தேடும் கவிஞர்களுக்கு நமது அறிவுரை, "இனி நீங்கள் கதா நாயகிகளைப் பூமி போன்ற முகமுடையவர்கள் என்று வருணியுங்கள்" என்பது தான். இந்த உவமை மூலம் கதாநாயகிகளுக்கு அதிக மதிப்பு ஏற்படும் அவர்களது முகமண்டலத்தின் விட்டம் அதிகரித்து ஏறக்குறைய 8000 மைல்களாகிவிடும்.

சந்திரன் எனப்படும் இந்தச் சிறிய பூமி நம் உலகத்திலிருந்து 2,40,000 மைல் தூரந்தான். வான வெளியில் இந்தத் தூரம் மிகச் சாதாரணம்—அண்டை வீடு மாதிரிதான். முப்பது பூமிகளை ஒன்றோடொன்று சேர்த்து வைத்தால் சந்திரனைத் தொட்டுவிடும். இங்கிருந்து சந்திரன் வரை ரயில்பாதை இருந்தால், மணிக்கு இருபது மைல் வேகத்தில் செல்லும் ரயில் வண்டியில் இரவும் பகலும் பிரயாணம் செய்து ஐநூறு நாட்களில் சந்திரனுக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

ஆகையால் தற்கால வானவியல் அறிஞர்கள் சந்திரனை நமக்கு மிகவும் அருகிலிருப்பதாகக் கருதுகிறார்கள். சந்திரன் போன்ற கோள்களை 2400 மடங்கு பெரிதுபடுத்திக் காட்டக் கூடிய தொலைநோக்கிகளை அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். சந்திரன் இங்கிருந்து நூறுமைல் தொலைவில் இருந்தால் அது நமக்கு எப்படித் தெரியுமோ அப்படி இந்தத் தொலை நோக்கியில் பார்த்தால் தெரியும்.

தொலைநோக்கியின் மூலம் சந்திரன் எப்படிக் காணப்படுகிறது? அது கைகால்கள் கொண்ட தேவனுமில்லை, ஒளி நிறைந்த ஒரு பொருளுமல்ல, வெறுங் கற்களும் எரிமலைகளும் நிறைந்த சடப் பொருள் என்று தெரிகிறது. அதில் சில இடங்களில் மிக உயர்ந்த மலைத் தொடர்களும், சில இடங்களில் மிக ஆழமான பள்ளங்களும் உள்ளன. அது பிரகாசமாகக் காணப்படுவது சூரிய வெளிச்சத்தின் பிரதிபலிப்பால்தான். ஒரு பொருளின் மேல் வெயில் பட்டால் அப்பொருளைத் தொலைவிலிருந்து பார்க்கும்போது அது பிரகாச

மாகத் தெரிகிறது. சந்திரனும் அவ்வாறே தெரிகிறது. வெயில் படாத பக்கம் இருளாயிருக்கும். சந்திரனின் பிறை வளர்வதும் தேய்வதும் இந்தக் காரணத்தால்தான். இதையெல்லாம் விளக்கியெழுதத் தேவையில்லை. உயர மான இடத்தில் வெயில் படும். ஆகையால் அது பிரகாசமாயிருக்கும்; பள்ளத்தில் அல்லது மலைநிழலில் வெயில் படாது, ஆகையால் அது இருட்டா யிருக்கும். இந்த இருண்ட பகுதிகளைத் தான் நாம் சந்திரனின் 'கறை' என்றோ 'மான்' என்றோ குறிப்பிடுகிறோம். இதைத்தான் பழைய காலத்தில் "ஒரு கிழவி கதம்ப மரத்தடியில் நூல் நூற்றுக் கொண்டிருக்கிறாள்" என்பார்கள்.

சந்திரனின் வெளிப்புறப் பரப்பு மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டு அதன் மிகத் துல்லியமான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் வெவ் வேறு பகுதிகளுக்கும் மலைகளுக்கும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அதன் மலைத்தொடர்களின் உயரங்களும் அளக்கப்பட்டுள்ளன. பேயர், மால்லர் என்னும் இரு வானவியல் நிபுணர்கள் 1095க்கு மேற்பட்ட மலைகளின் உயரங்களை அளந்திருக்கின்றனர். அவற்றுள் 'நியூட்டன்' எனப்படும் மலையின் உயரம் 22,823 அடி. இவ்வளவு உயரமான மலைச் சிகரம் நம்முலகில் ஆண்டிஸ், இமயமலை இவற்றில் தவிர வேறெங்குமில்லை. பரப்பளவில் பூமியில் ஐம்பதில் ஒரு பங்குதான் சந்திரன். எடையில் எண்பத்தியொன்றில் ஒரு பங்கு. ஆகவே பூமியுடன் ஒப்பிடும் போது சந்திரனின் மலைகளெல்லாம் மிகவும் உயரந்தான். பூமியில் சிம்பரோஸா மலைச் சிகரத்தின் உயரத்தை ஐம்பதால் பெருக்கினால் அந்த உயரத்துக்கும் பூமியின் பரப்புக்கும் உள்ள விகிதம் நியூட்டன் சிகரத்தின் உயரத்துக்கும் சந்திரனின் பரப்புக்கும் உள்ள விகிதத்தை ஒத்திருக்கும்.

சந்திரனில் மலைகள் மிக உயரமென்பது மட்டுமல்ல.அங்கே எரிமலை களும் அதிகம். எண்ணற்ற எரிமலைத் தொடர்கள் தங்கள் அகன்ற வாய்களைத் திறந்து கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு காலத்தில் ஒரு பெரிய அண்டாவில் கொதிக்க வைக்கப்பட்ட ஒரு திரவப் பொருள் மேலே பொங்கி வழிந்து உறைந்து விட்டாற்போல அவை காட்சியளிக்கின்றன. ஆகவே சந்திர மண்டலம் மலைகளும் மடுக்களும் நிறைந்தது, உடைந்து போன கற் களின் குவியல், ஐயோ, இத்தகைய சந்திரனை அழகிகளின் முகத்தக்கு உவமை காட்டும் மரபை யார் கண்டுபிடித்தார்கள்?

இத்தகைய சந்திரனில் பிராணிகள் வசிக்கின்றனவா என்பது கேள்வி. நமக்குத் தெரிந்தவரையில் தண்ணீரும் காற்றும் இல்லாமல் பிராணிகள் உயிர் வாழமுடியாது. சந்திரனில் தண்ணீரும் காற்றும் இருந்தால் அங்கு பிராணிகள் இருக்கலாம். தண்ணீரும் காற்றும் இல்லையென்றால் பிராணிகள் இருக்க முடியாது என்று முடிவு செய்து கொள்ளலாம். சந்திரனில் காற்றும் தண்ணீரும் இருக்குமா என்பதை இப்போது ஆராய்வோம்.

பூமியைப் போல் சந்திரனையும் ஒரு வாயுமண்டலம் சூழ்ந்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஒரு நட்சத்திரம் சந்திரனுக்குப் பின்புறமாகப் போகிறது என்றும் வைத்துக் கொள்வோம். இதை வானவியலில் 'அக்கல்டேஷன்' (Occultation) என்பர், நட்சத்திரம் சந்திரனை நெருங்கி அதன் வாயுமண்டலத்துக்குப்பின்னால் போய், பிறகு சந்திரனுக்குப் பின்னால் போகும். நட்சத்திரம் வாயுமண்டலத்துக்குப் பின்னாலிருக்கும்போது அதன் ஒளி வாயுமண்டலத்தை ஊடுருவிக் கொண்டு வருவதால் சற்று மங்கலாகத் தெரியும். பிறகு அது சந்திரனுக்குப் பின்னால் போகும்போது நம் பார்வையி லிருந்து மறையுமுன் அதன் ஒளி மங்குவதில்லை. ஆகவே சந்திரனைச் சுற்றி வாயுமண்டலம் இல்லை.

சந்திரனில் தண்ணீர் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை சாதாரண வாசகருக்கு எளிதில் விளக்க இயலாது. எனவே இந்த விவரம் இப்போது தேவையில்லை. ஸ்பெக்ட்ராஸ்கோப் கருவியின் மூலம் சந்திரனில் தண்ணீருமில்லை, காற்றுமில்லை என்று அறிந்து கொண்டிருக் கிறோம். அப்படியானால் பூமியிலுள்ளவே போன்ற பிராணிகள் சந்திரனில் இருக்க முடியாது.

இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லி இக்கட்டுரையை முடித்துக் கொள்வோம். சந்திரனின் வெப்பமும் அளக்கப்பட்டுள்ளது. சந்திரன் இரு வாரங்களில் தன்னை ஒரு முறை சுற்றிக் கொள்கிறது. ஆகவே நமது இரண்டு வார காலம் சந்திரனுக்கு ஒரு நாள். மார்கழி மாதத்தைவிட வைகாசியில் நாம் அதிக வெப்பத்தை உணர்கிறோம், காரணம் மார்கழியைவிட வைகாசியில் பகல்நேரம் மூன்றுநான்கு மணி அதிகம். ஒரு நாளில் சில மணி நேரம் அதிகமானாலே இவ்வளவு அதிக வெப்பமேற்படுமானால் நமது இரண்டு வாரங்களுக்குச் சமமான சந்திர நாளில் வெப்பம் எவ்வளவு அதிகமாக இருக்கும்! மேலும் பூமியில் தண்ணீர், காற்று, மேகங்கள் இருப்பதால் பூமியின் வெப்பம் சற்றுக் குறைகிறது. சந்திரனிலோ இவையெதுவுமில்லை. அத்துடன் சந்திரன் வெறுங்கல், ஆகவே விரைவில் சூடாகக் கூடியது. ஆகையால் சந்திரன் மிகவும் சூடாக இருப்பதே சாத்தியம். புகழ் பெற்ற தொலைநோக்கிச் சிற்பியின் புதல்வர் ராஸ் பிரபு சந்திரனின் வெப்பத்தை அளந்திருக்கிறார். தளதளவென்று கொதிக்கும் தண்ணீரையும் குளிர்ச்சியானது என்று சொல்லும் வகையில் சந்திரனின் சில பகுதிகள் சூடானவை என்று அவர் கண்டுபிடித்திருக்கிறார். பூமியிலுள்ளது போன்ற பிராணியெதுவும் அந்தச் சூட்டில் ஒரு வினாடி கூடப் பிழைத்திருக்க இயலாது. இத்தகைய சந்திரனையா நாம் குளிர்ந்த, பனி போன்ற கிரணங்களைக் கொண்டவன், அமுதம் போன்ற கிரணங்கள் வாய்ந்தவன் என்றெல்லாம் வருணிக்கிறோம்! ஐயோ, குருட்டுப் பிள்ளையைத் தாமரைக் கண்ணன் என்று அழைப்பது போலல்லவா இருக்கிறது இது!

("சந்திரன் சூடாயிருந்தாலென்ன, நாம் நிலவின் குளுமையை உணர்கிறோமே" என்று சிலர் கூறலாம். ஆனால் உண்மையில் நாம் நிலவின் குளுமையையோ வெப்பத்தையோ உணர்வதில்லை. இருண்ட இரவைவிட நிலவு காயும் இரவு குளுமையானது என்று யாராவது நினைத்தால் அது அவரது பிரமைதான். மாறாக, நிலவில் சிறிது வெப்பம் இருக்கிறது. எனினும் இது மிகக் குறைவாயிருப்பதால் நம்மால் உணரப்படுவதில்லை. ஜாந்த தேசி,மேலனி, பியாஜி முதலிய அறிவியல் அறிஞர்கள் பரிசோதனைகள் மூலம் இதை நிரூபித்திருக்கிறார்கள்)

ஆகவே இன்பத்தின் உறைவிடமாகக் கருதப்படும் சந்திர உலகம் எப்படிப் பட்டது என்பதை நாம் பார்த்துவிட்டோம். சந்திர உலகம் கரடுமுரடான, வறண்ட, சூட்டால் பொசுங்கிய கற்கள் நிறைந்தது. அதில் நீரில்லை, கடலில்லை, ஆறுஇல்லை, காற்றில்லை, மேகமில்லை, மழையில்லை. மனிதர் களில்லை, பிராணிகள் இல்லை, மரமில்லை, ஒலியில்லை—ஏனென்றால் அங்கு காற்று இல்லை. எல்லையற்ற சூடு உள்ள, நரகம் போன்ற இடந்தான் சந்திர உலகம்!

இதனால்தான் காவியத்தால் அறிவியலை அடக்கி வைக்க இயலவில்லை. காவியம் அல்லது கவிதை படைக்கிறது, அறிவியல் படைக்கப்பட்டதை உடைக்கிறது.

(வங்க ஆண்டு 1281, சைத்ர மாத 'வங்கதர்சன்' இதழில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விஞ்ஞான் ரகஸ்ய' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது)

சகுந்தலையும் மிராண்டாவும் டெஸ்டிமோனாவும்

சகுந்தலையும் மிராண்டாவும்

இருவருமே முனிவர்களின் புதல்விகள்; விசுவாமித்திரர், பிராஸ்பெரோ இருவரும் ராஜரிஷிகள். ரிஷிகன்னியர் என்ற முறையில் இரு பெண்களும் தெய்வீக உதவியைப் பெறுகிறார்கள். மிராண்டா ஏரியலால் காப்பாற்றப் படுகிறாள். சகுந்தலை அப்சரசால் காப்பாற்றப்படுகிறாள்.

இருவருமே முனிவர்களால் வளர்க்கப்படுபவர்கள். இருவரும் காட்டுக் கொடி போன்றவர்கள், அழகில் பூங்காவில் வளரும் கொடியை விஞ்சிய வர்கள். சகுந்தலையின் அழகைப் பார்த்து துஷ்யந்தனுக்கு அரண்மனை அந்தப்புரத்திலுள்ள தன் ராணிகளின் மங்கிப்போன அழகு நினைவு வருகிறது:

"ஆசிரம வாசியின் இந்த அழகு அந்தப்புரத்தில் காண இயலாதது; காட்டுக் கொடிகள் பூங்காக் கொடியைச் சிறப்பில் விஞ்சிவிட்டன."

ஃபெர்டினாண்டும் மிராண்டாவைப் பார்த்து இதே மாதிரிதான் நினைக்கிறான்!

"நான் எத்தனையோ பெண்களைப் பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறேன்; எத்தனையோ பெண்களின் இனிய குரலை விரும்பிக் கேட்டிருக்கிறேன்; வெவ்வேறு பெண்களை வெவ்வேறு சிறப்புகளுக்காக நேசித்திருக்கிறேன். .. ஆனால் நீ...நீயோ ஒப்பற்றவள், சிறப்பின் எல்லை! உலகின் எல்லா சிறப்புத்தன்மைகளின் ஒருமித்த உருவம்!"

இருவருமே காட்டில் வளர்பவர்கள்; எளிமையில் உள்ள மாயக் கவர்ச்சி இருவரிடமும் உண்டு. அழகிய எளிமையான, தூய்மையான பெண்மை நாகரிகமான சமுதாயத்தில் வாழும்போது மாசடைந்து விடுகிறது. நம்மை யார் காதலிப்பார், யார் நம் அழகைப் பாராட்டுவார், எப்படி ஆண்மனதைக் கவர்வது என்ற ஆசையால் உந்தப்பட்டு, ஒப்பனைகளிலும் சாகசங்களிலும் ஈடுபடுவதால் பெண்ணின் இயற்கையான இனிமை மேகத்தால் மூடப்பட்ட

நிலவுபோல் மறைந்து விடுகிறது. சகுந்தலையும் மிராண்டாவும் மனித சமூகத்தில் வளராததால் அவர்களிடம் இந்தக் கறை படியவில்லை. சகுந்தலை மரவுரி தரித்து ஒரு சிறிய குடத்தில் தண்ணீரெடுத்து ஆசிரமத்துச் செடிகளுக்குத் தண்ணீரூற்றிப் பொழுது போக்குகிறாள். அவளால் நனைக்கப் படும் நவுமல்லிகையைத் தங்கையைப் போல் நேசிக்கிறாள்; மாஞ்செடியை சகோதரனாகக் கருதுகிறாள். தாயற்ற மான் குட்டியிடம் தாய்ப்பாசம் வைத்திருக்கிறாள். கணவன் வீடு செல்லுமுன் இவற்றிடமிருந்து விடை பெற நேரும்போது அவள் கையறுநிலையில் பரிதாகமாகக் கண்ணீர் விடுகிறாள். இவற்றுடன் அவள் உரையாடுகிறாள். ஒரு மரத்துடன் கேலிப்பேச்சு, இன்னொரு மரத்துக்கு அரவணைப்பு, இன்னொரு கொடிக்குத் திருமணம் இவ்வாறு மகிழ்ச்சியடைகிறாள் சகுந்தலை. ஆனால் எளிமை வாய்ந்தவளா யினும் அவள் கல்விப் பயிற்சியற்றவளல்ல. அவள் பெற்ற பயிற்சியின் அடையாளம் அவளது நாணம். அவளது குணத்தில் மிகவும் வலிமைவாய்ந்த தன்மை நாணம். துஷ்யந்தனின் ஒவ்வொரு பேச்சும் அவளை நாணத் திலாழ்த்துகிறது, நிலம் நோக்கச் செய்கிறது. தன் தோழிகளிடம்கூடத் தன் காதலை வெளிப்படுத்த முதலில் தயங்குகிறாள் அவள்.

மிராண்டா அப்படிப்பட்டவளல்ல. நாணங்கூடத் தோன்றாத அளவுக்கு எளிமையானவள் அவள். அவளுக்கு நாணம் எங்கிருந்து வரும்? அவளுடைய தந்தையையும் காலிபனையுந் தவிர வேறு ஆண்களை அவள் பார்த்ததே யில்லையே! முதன் முதலில் ஃபெர்டினாண்டைப் பார்க்கும் போது அவன் யாரென்றே புரியவில்லை அவளுக்கு:

"ஆகா, எப்படிப்பட்ட தோற்றம்!
எவ்வளவு மேன்மையான உருவம் இது!
இது ஓர் ஆவிதான், ஐயமில்லை!"

சமூகத்தின் நடுவே வாழ்வதால் மனிதன் பெறும் மரபுணர்வுகள் யாவும் சகுந்தலையிடம் உள்ளன, மிராண்டாவிடம் அவை சிறிதுமில்லை. ஆகவே தான் தந்தையிடம் ஃபெர்டினாண்டைப் புகழ்ந்து பேசும் போது மிராண்டா வுக்குக் கூச்சமேற்படவில்லை. ஏதோ ஓர் ஓவியத்தைப் பாராட்டுவது போல் ரசித்துச் சொல்கிறாள்:

"நான் அவனை ஒரு தேவதை என்றே சொல்வேன்;
ஏனெனில், இவ்வளவு மேன்மையான எதையும்
நான் இயற்கையில் பார்த்ததில்லை"

எனினும் பெண்ணுக்கு இயற்கையாக உள்ள தூய்மை—இதை வெளிப்புற நாணத்துக்குள்ளே உறையும் நாணம் என்று சொல்லலாம். மிராண்டாவிடம் நிறையவே உண்டு. இது காரணமாக சகுந்தலையின் எளிமையைவிட மிராண் டாவின் எளிமையில் புதுமையும் இனிமையும் அதிகம். தந்தை ஃபெர்டி னாண்டைத் துன்புறுத்த முற்படுவது கண்டு மிராண்டா சொல்கிறாள்:

"அருமைத் தந்தையே!
அவனைக் கடுமையாகச் சோதிக்காதீர்
அவன் மென்மையானவன்;
பயப்படத்தக்கது எதுவும் இல்லை அவனிடம்."

தந்தை ஃபெர்டினாண்டின் அழகை இகழ்வது கேட்டு அவள் சொல்கிறாள்:

"அப்படியானால் என் அன்பு
மிக எளியதாயிருக்க வேண்டும்
இதைவிட அழகானவனை
விரும்பத் தோன்றவில்லை எனக்கு.

மிராண்டா மரபுணர்வுகளால் பாதிக்கப்படாதிருக்கலாம்; ஆனால் இரக்கம் மனித நேயம் ஆகிய குணங்கள் உடையவள். நாணத்தின் உயிர் நாடியான தூய்மை மிராண்டாவிடம் இருக்கிறது.

அவள் தன் குழந்தைப் பருவத்துக்குப் பிறகு தன் தந்தையையும் காலிபனையுந் தவிர வேறெந்த ஆண்மகனையும் பார்த்ததில்லை. ஆகவே ஃபெர்டினாண்டை அவன் முதலில் சந்திக்கும் வரை அவளது இதயத்தில் காதல் தோன்றவில்லை. அதே போல் துஷ்யந்தனைப் பார்க்கும் வரை சகுந் தலையின் இதயமும் காதலுணர்வு அற்றதாக இருந்தது. கண்வரின் ஆசிர மத்தில் சகுந்தலையும் பிராஸ்பெரோவின் இருப்பிடத்தில் மிராண்டாவும் தங்களுக்கேற்ற ஆண்மகனைக் கண்டதும் காதல்வயப்பட்டனர்.

கவிகளின் அபூர்வத்திறனைப் பாருங்கள். காளிதாசனும் ஷேக்ஸ்பியரும் ஒருவரோடொருவர் கலந்து பேசிக் கொண்டு சகுந்தலை, மிராண்டா பார்திரங்களைச் சித்தரிக்கவில்லை. ஆனால் இவ்விரு பாத்திரங்களும் ஒரே கவியால் படைக்கப்பட்டவர்கள் போல் தோன்றுகிறார்கள். ஒரே கவி இவ்விரு பாத்திரங்களையும் படைத்திருந்தால் அவர்களது காதல் வெளிப் பாட்டை எவ்வாறு வேறுபடுத்திக் காட்டியிருப்பார்? சகுந்தலை மரபுணர்வு வாய்ந்தவள், நாணம் பொருந்தியவள், ஆகவே அவளது காதல் சாடைகள் மூலமே வெளிப்படும்; வார்த்தைகள் மூலம் அல்ல என்று அவருக்குப் புரிந் திருக்கும். அதே போல் சமூக மரபுணர்வு அற்ற மிராண்டாவுக்கு நாண மென்றால் என்னவென்று தெரியாது, ஆகையால் அவள் தன் காதலைச் சொற்களில் தயக்கமின்றி வெளிப்படுத்துவாள். இந்த முறையிலேயே இவ்விரு பாத்திரங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

துஷ்யந்தனைப் பார்த்ததுமே காதல் வயப்பட்டுவிட்டாள் சகுந்தலை. ஆனால் அதைத் துஷ்யந்தனிடம் வெளிப்படுத்துவது இருக்கட்டும்; அவ ளுடைய இரு தோழிகள் அவளது சோர்வைக் கவனித்து, விஷயத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டு அவளை வற்புறுத்தி அவளிடமிருந்து தெரிந்து கொள்வதற்கு முன் அவள் அவர்களிடங்கூடத் தன் புதிய காதலுணர்வைக் காட்டிக் கொள்ளவில்லை. அவளது காதல் சாடைகள் மூலமே வெளிப் படுகிறது!

"வேறெங்கோ பார்க்கினும் அவளது கண்களில் அன்பு தெரிகிறது;
புட்டங்களின் பளுவால் மந்தமான அவளது நடையில் சாகசம் தெரிகிறது;
'போகாதே' எனக்கூறும் தோழியை அவள் கடிந்து கொள்கிறாள்;
இதெல்லாம் எனக்காகவோ? காதல் எப்போதும் தன்னையே முன் வைத்துக் கொள்கிறது."

சகுந்தலை துஷ்யந்தனிடமிருந்து செல்லும்போது சகுந்தலையின் மரவுரி செடியில் சிக்கிக் கொள்கிறது; தருப்பை முனை அவளது காலில் குத்துகிறது. ஆனால் மிராண்டாவுக்கு இந்தச் சாக்குகள் அவசியப்படவில்லை. இப்படி யெல்லாம் அவளுக்குப் பாசாங்கு செய்யத் தெரியாது. அவள் தன் காதலனைப் பார்த்ததுமே சற்றும் கூச்சமின்றித் தன் காதலைத் தந்தையிடம் தெரிவிக் கிறாள்:

"நான் பார்க்கும் மூன்றாவது மனிதனிவன்;
நான் ஏங்கும் முதல் மனிதனுங்கூட."

ஃபெர்டினாண்டைத் தந்தை துன்புறுத்துவதைப் பார்த்து அவள் அவன் தன் காதலுக்குரியவன் என்று கூறித் தந்தையின் இரக்க உணர்வைத் தூண்டிவிட முயல்கிறாள். தனக்குக் கிடைத்த முதல்வாய்ப்பிலேயே காதலனிடம் தன்னைப் அர்ப்பணித்துவிடுகிறாள்.

துஷ்யந்தனுடன் சகுந்தலையின் முதல் உரையாடல் ஒரு வகைக் கண்ணா மூச்சி விளையாட்டுத்தான்:

"ஏன் அரசரைத் தடுத்து நிறுத்தி வைக்கிறாய், தோழி?"
"அப்போ, நான் கிளம்பிப் போறேன்."
"இந்த மரத்துக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்கறேன்"...

இதெல்லாம் சகுந்தலையின் கபடம். மிராண்டாவிடம் இது இல்லை. நாணம் மிக்க ஒரு குலப்பெண்ணுக்கு இதெல்லாம் தேவைதான். ஆனால் மிராண்டா அப்படிப்பட்ட பெண்ணல்ல. அவள் காட்டுப் பறவை—பொழுது புலர்ந்ததும் பாடத்தொடங்குவதில் அவளுக்குக் கூச்சமில்லை; அவள் ஒரு மலர்— மாலைக் காற்றில் மலர அவள் வெட்கப்படவில்லை. காதலனைக் கண்டதும் அவனிடம் இவ்வாறு சொல்வதில் அவளுக்கு நாணமில்லை:

"என் மிக உயர்ந்த செல்வமான,
என் அடக்கத்தின் மேல் ஆணை—
உன்னைத் தவிர வேறு தோழனை
யான் வேண்டேன் இவ்வுலகில்.
உன் போன்ற உருவம் சமைக்கக்
கற்பனையாலும் இயலாது...
நாணமே, கற்பனையே, தூரப் போ!
புனிதமான எளிமை என்னை இயக்கட்டும்!
நீ மணந்தால் நானுன் மனைவி;

இல்லையேல்,
உன் சேவகியாய் மடிவேன் நான்.
உன் தோழமையை நீ எனக்கு மறுக்கலாம்; ஆனால்
நீ விரும்பினும் விரும்பாவிடினும்
நான் உன் பணிப்பெண்!"

மிராண்டா ஃபெர்டினாண்டின் இந்த முதல் காதலுரையாடல் முழுவதையும் மேற்கோள் காட்ட விரும்பினோம். ஆனால் அது தேவையில்லை. எல்லோர் வீட்டிலும் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் உள்ளன. அவர்கள் இந்த நாடகத்தைத் தாங்களே படித்துக் கொள்ளலாம். முன்காலத்துக் கல்லூரி மாணவர்களுக்கு மனப்பாடமாயிருந்த, பூங்காவில் ரோமியோ-ஜூலியட்டின் காதலுரையாட லுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல இந்த உரையாடல். "என் கொடை கடல் போல் எல்லையற்றது; என் காதல் கடல் போல் ஆழமானது" என்கிறாள் ஜூலியட். இதே உணர்வுதான் மிராண்டாவுக்கும். கொடிக்குடிலில் துஷ்யந்தன்-சகுந்தலையின் உரையாடலுடன் இந்த உரையாடலை ஒப்பிட்டுப் பாருங்கள். அந்தச் சமயத்தில் தான் சகுந்தலை நெடுங்காலமாக மூடிக்கிடந்த தன் இதய மொட்டைத் தன் இதயங்கவர்ந்த சூரியனின் அருகாமையில் மலரச் செய்து சிரிக்கிறாள். ஆனால் அவளது உரையாடலில் மிராண்டாவின் பேச்சிலுள்ள மேன்மை இல்லை. மனித இயற்கையாகிய ஆற்றின் கரைகளில் வந்து மோதும் அலைவரிசைகளின் கொந்தளிப்பு சகுந்தலையின் உரையாடலில் காணப்பட வில்லை. அதில் இருப்பது வெறும் "சீ...சீ..." "நான் போறேன்" என்பது போன்ற கண்ணாமூச்சி விளையாட்டு; "என் தாமரைத் தண்டு வளையல் கையிலிருந்து நழுவி விழுந்து விட்டதை நடுவழியில் கவனித்துவிட்டுத் திரும்பி வந்தேன்" என்று சொல்லும் கபடம். துஷ்யந்தனின் பேச்சில் சிறிது துடுக்குத் தனம் தெரிகிறது: "வண்டு தாமரையின் மணத்தை நுகர்வதோடு திருப்தியடைந்து விடாதே!" "திருப்தியடையாவிட்டால் அது என்ன செய்யும்?" என்று குறும்புத் தனமாகக் கேட்கிறாள் சகுந்தலை. சகுந்தலை-துஷ்யந்தன் உரையாடலில் இவை தவிர வேறெதுவுமில்லை. இது கவிஞனின் குற்றமல்ல, அவனது சிறப்பு. இங்கு துஷ்யந்தன் என்ற பாத்திரத்தின் பெருமையில் சகுந்தலைப் பாத்திரம் மங்கிப் போய்விடுகிறது. ஃபெர்டினாண்டும் ரோமியோவும் சாதாரணமான வர்கள், வயதில் தங்கள் காதலியரையொத்தவர்கள்; எந்தப் பெருமையும் கிடையாது அவர்களுக்கு. கடல் சூழ்ந்த உலகுக்கு அரசன், இந்திரனின் நண்பன் துஷ்யந்தனுக்கு முன் சகுந்தலா எம்மாத்திரம்! துஷ்யந்தன் என்ற பெரிய மரத்தின் நிழல் சகுந்தலை என்ற மொட்டை மறைத்து விடுகிறது. அந்த மொட்டு நன்றாக மலர முடியவில்லை. அவர்களது உரையாடல் காதல் பரிமாற்றமல்ல; அரசன் தன் பூங்காவில் விளையாடும் காதல் விளையாட்டு. மதம் பிடித்த யானை போன்ற துஷ்யந்தன் சகுந்தலை என்ற தாமரை மொட்டைத் தன் தும்பிக்கையால் பறித்து விளையாடுகிறான்; மொட்டு எப்படி மலரும்?

இதையெல்லாம் மனதில் கொள்ளாதவர் சகுந்தலையின் பாத்திரத்தைப் புரிந்து கொள்ள முடியாது. காதலாகிய தண்ணீர்பட்டு மிராண்டாவும் ஜூலியட்டும் மலர்ந்தார்கள். சகுந்தலா மலரவில்லை. காதல்வயப்பட்ட சகுந் தலையிடம் ஒரு சிறுமியின் சஞ்சலத்தன்மை, நாணம், பயம் இவற்றைக் காண்கிறோம். ஆனால் ஒரு பருவமடைந்த பெண்ணின் கம்பீரம், காதல் எங்கே? இதற்குக் காரணம் நாட்டுக்கு நாடு வேறுபடும் பண்பாடுதான் என்று சிலர் கூறலாம். இந்தக் கூற்று சரியில்லை. சகுந்தலை நம் நாட்டுக் குலப்பெண் ஆகையால் வெட்கப்படுகிறாள்; வேற்று நாட்டுப் பெண்களாதலால் மிராண் டாவும் ஜூலியட்டும் தங்கள் காதலைக் கூச்சமின்றி வெளிப்படுத்துகிறார்கள் என்பது தவறு. நாடு, காலம் போன்ற வேறுபாடுகள் வெளிப்புற நடத்தையைப் பாதிக்குமே தவிர, மனித இதயத்தைப் பாதிக்காது என்பது சிற்றறிவு படைத்த விமரிசகர்களுக்குத் தெரியவில்லை. எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங் களிலும் மனித இதயம் ஒரே மாதிரிதான். பார்க்கப்போனால் இம்மூவருள் நாணமற்றவளாக சகுந்தலையைத் தான் கூறவேண்டும். "திருப்தியடையா விட்டால் வண்டு என்ன செய்யும்?" என்ற அவளது கேள்வியே இதற்கு சாட்சி. சில மாதங்களுக்குப் பின் துஷ்யந்தனின் சபையில் நின்று கொண்டு அவனைக் கண்டித்து, "கண்ணியமற்றவனே, எல்லோரையும் உன்னைப் போலவே நினைக்கிறாய்! என்று கூறும் சகுந்தலை காட்டில் கொடிக்குடிலில் வெறும் சிறுமியாகவே இருப்பதற்குக் காரணம் குலப்பெண்ணின் நாண மல்ல. அதற்குக் காரணம் துஷ்யந்தனின் குணத்தின் அரசவையில் நிராகரிக் கப்படும் ஓர் அரசனின் மனைவி, விரைவில் தாயாக விருப்பவள்; ஆகவே அவள் அப்போது நன்கு முதிர்வு பெற்ற பெண். காட்டிலோ அவள் அரசனின் அன்புக்காக ஏங்கும் ஒரு ரிஷிகுமாரிதான்-யானைத் தும்பிக்கையில் ஒரு தாமரைதான்.

சகுந்தலையைப் படைத்த கவி 'டெம்பெஸ்ட்' நாடக ஆசிரியரைவிடத் திறன் குறைந்தவரல்லர் என்பதைக் காட்டவே இவ்வளவும் கூறினோம்.

சகுந்தலையும் டெஸ்டிமோனாவும்

சகுந்தலை மிராண்டா அல்ல என்பதைப் பார்த்தோம். மிராண்டாவுடன் ஒப்பிட்டால் சகுந்தலா என்ற பாத்திரத்தின் ஒரு பகுதியை மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அதன் இன்னொரு பகுதியை டெஸ்டிமோனாவுடன் ஒப்பிட்டுப் புரிந்து கொள்ள முயல்வோம்.

சகுந்தலையும் டெஸ்டிமோனாவும் சில விஷயங்களில் ஒப்பிடத் தக்க வர்கள், சில விஷயங்களில் வேறுபடக் கூடியவர்கள்.

இருவரும் பெரியவர்களின் அனுமதிக்குக் காத்திராமல் தங்களைத் தங்கள் காதலர்களுக்குக் கொடுத்தனர். கௌதமி துஷ்யந்தனிடம் சகுந்தலை பற்றிச்

சொல்லும் கூற்று ஒதெல்லோவிடம் டெஸ்டிமோனாவைப் பற்றியும் சொல்லப்படலாம்:

"இவளும் பெரியவர்களைக் கேட்கவில்லை. நீயும் உறவினரைக் கலந்து கொள்ளவில்லை;

உங்கள் ஒவ்வொருவரின் தன்மை பற்றி நான் என்ன உரைப்பேன் உங்களுக்கு?"

இருவரும் வீர ஆடவரிடம் மயங்கித் தங்களைப் பறி கொடுத்தனர். இருவரது "மேலேறும் வலிமையற்ற ஆசைக் கொடி" ஒரு மரத்தைப் பற்றிக் கொண்டு ஏற முயன்றது. ஆனால் டெஸ்டிமோனா காதலனின் வீரத்தில் மயங்கியது போல் சகுந்தலை மயங்கவில்லை. ஒதெல்லோவின் உடல் நிறம் கருப்பு. ஆகையால் ஓர் இத்தாலியப் பெண்ணுக்கு அவன் அவ்வளவு கவர்ச்சியானவனல்ல. ஆனால் அழகைவிட வீரமே பெண்ணின் இதயத்தை அதிகம் கவர்வதாகும். ஐவரின் மனைவியான திரௌபதியை அர்ஜுனனிடம் தனிப்பட்ட காதலுறச் செய்து அவள் உடலோடு சுவர்க்கம் செல்வதைத் தடுத்த மகாகவிக்கும், டெஸ்டிமோனாவைப் படைத்த கவிக்கும் இந்த உண்மை தெரியும்.

இரண்டு கதாநாயகிகளின் 'மேலேறும் வலிமையற்ற ஆசைக் கொடி" இறுதியில் உடைந்து போய்விட்டது. இருவருமே தங்கள் காதலர்களால் கைவிடப்பட்டனர். வாழ்க்கை அலட்சியமும் கொடுமையும் நிறைந்தது. எனினும் பரிவு பெறத் தகுதிபெற்றவன் குறிப்பாக அலட்சியத்துக்கும் கொடுமைக்கும் ஆளாகும் நிலை வாழ்க்கையில் அடிக்கடி நேர்கிறது. ஆனால் கொடுமைக்குள்ளான மனிதனுக்கு முற்றிலும் தீமையில்லை. ஏனெனில் மனிதனிடமுள்ள உயர்ந்த தன்மைகள் இத்தகைய இடையூறுகளுக்கிடையே தான் முழுமையாக மலர்கின்றன. இதுதான் மனித உலகில் உயர்ந்த கல்வியின் அடிப்படை-கவிதையின் முக்கியமான கருப்பொருள். டெஸ்டிமோனாவின் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ, அவளுக்கேற்பட்ட துன்பத்தால் அவளது உயர்ந்த தன்மைகள் முதிர்ச்சியடைந்தன; சகுந்தலையின் விஷயமும் அவ்வாறே.

இருவரும் அன்பு நிறைந்தவர்கள், தூயவர்கள். இந்த குணங்கள் இப்போது கொச்சைப்படுத்தப்பட்டுவிட்டன. இந்தக் காலத்தில் ராம், சியாம், யது, விது, நிது—யார் நாடகம் அல்லது நாவல் எழுதினாலும்அந்த நாடகம் அல்லது நாவலின் கதாநாயகி அன்பு நிறைந்தவள், தூய்மையானவளாகச் சித்தி ரிக்கப்படுகிறாள். அனால் இந்தத் 'தூய' கதாநாயகிகளிடம் ஒரு வளர்ப்புப் பூனை வரட்டும். அவர்கள் அதைக் கொஞ்சுவதில் தங்கள் கணவன்மாரை மறந்து விடுவார்கள்! ஆனால் துர்வாச முனிவரின், "நான் வந்திருக்கிறேன்!" என்ற பயங்கரக் குரலைக் கணவனின் நினைவில் மெய்மறந்திருந்த சகுந்தலை கவனிக்கவில்லை. எல்லோரும் தூயவர்கள்தாம்; ஆனால் பிரபஞ்சத்தில் தூய்மையற்றவர்களே கிடையாது. ஒரு பெண் தூய்மையற்றவளாக இருக்க

முடியாது என்ற டெஸ்டிமோனாவின் உறுதியான நம்பிக்கை யாருக்கு வரும்? கணவன் அடித்தாலும், தூற்றினாலும், கொடுமை செய்தாலும், உதறித் தள்ளினாலும் அவனிடம் மாறாத அன்புதான் கற்புடைப் பெண்ணின் இலக்கணமெனில் இத்தன்மையில் டெஸ்டிமோனா சகுந்தலையை விடச் சிறந் தவள். கணவனால் உதறித்தள்ளப்பட்ட சகுந்தலை மிதிபட்ட பாம்பு போல் அவனைச் சீறிச் சாடுகிறாள். சகுந்தலை அதிகக் கல்வியறிவற்றவளாயினும் தந்திரக்காரிதான் என்று அரசன் கேலியாகப் பேசியபோது அவள் சினங் கொண்டு, பழைய நாணத்தையும் வருத்தத்தையும் கைவிட்டு, "கண்ணிய மற்றவனே, எல்லோரையும் உன்னைப் போலவே நினைக்கிறாய்!" என்று சீறுகிறாள். அரசன், அவனுக்கேயுரிய முறையில், "பெண்ணே, துஷ்யந்தனின் குணத்தை யாவரும் அறிவர்" என்ற போது அவள் கேலியாகச் சொல்கிறாள்:

"நீயே உன்னை அறத்துக்குச் சான்றாக எண்ணிக் கொண்டிருக்கிறாய்;

ஆனால் நாணத்துக்குக் கட்டுப்பட்ட மகளிருக்கும் கொஞ்சம் அறம் தெரியும்."

இந்தச் சினம் இந்தப் புண்பட்ட மானம், இந்தக் கேலி டெஸ்டிமோனாவிட மில்லை. ஒதெல்லோ எல்லோருக்கும் முன்னால் டெஸ்டிமோனாவை அடித்து விரட்டியபோது அவள், "நான் இங்கு நின்று கொண்டு உங்களுக்கு எரிச்சலூட்ட மாட்டேன்" என்று மட்டும் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்கிறாள்; அவன் கூப்பிட்டதும் மறுபடியும் அவனிடம் வருகிறாள். குற்றமற்ற அவளை ஒதெல்லோ ஒழுக்கங்கெட்டவளென்று திட்டி அவமானப்படுத்திய போது கூட அவள், "நான் குற்றமற்றவள் என்பது கடவுளுக்குத் தெரியும்" என்று மட்டுமே சொல்கிறாள். அதன்பிறகு, கணவனின் அன்பையிழந்த அவளுக்கு உலகமே சூனியமாகத் தோன்றுகிறது. அவள் இயாகோவைக் கூப்பிட்டுச் சொல்கிறாள்:

"பண்புமிக்க இயாகோ!
என் கணவரைத் திரும்பப் பெற
என்ன செய்ய வேண்டும் நான்?
நல்ல நண்பனே, அவரிடம் போ; கடவுள் சாட்சியாக,
அவரன்பை எப்படி இழந்தேனென்று எனக்குத் தெரியாது.
இதோ மண்டியிடுகிறேன் நான்:"

ஒதெல்லோ கொடிய அரக்கன் போல வந்து இரவில் படுத்திருக்கும் அழகி யின் முன்னால் நின்று கொண்டு "கொன்றுவிடுவேன்!" என்ற போது கூட அவள் அவன் மீது கோபப்படவில்லை, வெறுக்கவில்லை; "அப்படியானால் கடவுள் என்னைக் காப்பாற்றட்டும்!" என்கிறாள். சாவுக்குப் பயந்த அவள் ஒரு நாள், ஒரிரவு, ஒரு சில நிமிடங்கள் தன்னை வாழவிடும்படி அவனைக் கெஞ்சு கிறாள்; மூடன் இந்த வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அப்போதும் அவளுக்கு அவனிடம் கோபமில்லை, வெறுப்பில்லை, அலட்சியமில்லை.

அவள் சாகும் தறுவாயில் எமிலியா அங்கு வந்து அவளைக் கேட்கிறாள்: "இது யார் செய்த காரியம்?" அப்போதும் அவள், "இது நானே செய்து கொண்டது தான், போய் வருகிறேன். என் நாதனுக்கு என் வணக்கத்தைத் தெரிவி." என்று சொல்கிறாள். தன் கணவன் தன்னைக் காரணமின்றிக் கொன்றுவிட்டான் என்பதைப் பிறர் அறிந்து கொள்ள அனுமதிக்கவில்லை அவள்.

சகுந்தலையும் டெஸ்டிமோனாவும் சில விஷயங்களில் ஒப்பிடத் தக்கவர்கள், சிலவிஷயங்களில் வேறுபடக் கூடியவர்கள் என்று கூறியதற்குக் காரணம் வெவ்வேறு வகைப்பட்ட பொருள்களிடையே ஒப்புமை சாத்திய மல்ல. ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒரு கடல், காளிதாசனின் நாடகம் ஓர் உல்லாசப் பூங்கா. இவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட இயலாது. அழகு, மணம், இசை, கவர்ச்சி, போன்ற இன்பந்தரும் தன்மைகளெல்லாம் இந்தப் பூங்காவில் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடக்கின்றன. ஆழம், சஞ்சலத் தன்மை, பயங்கர ஓசை இவையெல்லாம் கடலில் நிறைந்துள்ளன. கடல் போன்ற ஷேக்ஸ்பியரின் இந்த ஒப்பில்லா நாடகத்தில் மனித இதயத்திலெழும் உணர்ச்சியலைகள் கொந்தளிக்கின்றன; கூடவே இதன் நீலப் பரப்பு, எண்ணற்ற ஒளிச்சிதறல்கள், ஒளி-நிழல், ரத்தினக் குவியல், மென்மையான இசை இவையெல்லாம் இலக்கிய உலகில் அரிதாகும்.

இவ்விரண்டு இலக்கியப் படைப்புகளும் வெவ்வேறு வகை என்று நாம் கூறுவதற்குக் காரணமுண்டு.

நம் நாட்டில் நாடகமாகக் கருதப்படும் இலக்கியப் படைப்பை ஐரோப்பியர் நாடகமாகக் கருதுவதில்லை. இரு நாடுகளிலும் நாடகம் என்பது ரசிகர்களால் பார்த்து அனுபவிக்கப்படும் கலைதான் என்றாலும் ஐரோப்பிய விமரி சகர்கள் நாடகத்தில் இன்னும் சற்று அதிகம் எதிர்பார்க்கிறார்கள். பார்த்து ரசிக்கப்படும் முறையில் எழுதப்படும் இலக்கியப் படைப்புகள் சில நாடக மாகா என்பது அவர்களது கருத்து. அதற்காக அவை தரங்குறைந்தவை என்று பொருளல்ல. அவற்றுள் பல இல்க்கியச் சிறப்பு மிக்கவை—உதாரணம், கெத்தே இயற்றிய 'ஃபௌஸ்ட்', பைரனின் 'மான் ஃப்ரெட்'. ஆனால் இவை சிறந்த இலக்கியமோ இல்லையோ, நாடகமல்ல. ஷேக்ஸ்பியரின் டெம்பெஸ்டும் காளிதாசனின் சாகுந்தலமும் நாடக உருவில் இயற்றப்பட்ட சிறந்த காவியங்கள்; நாடகங்களல்ல. நாடகங்களல்ல என்பதால் இவற்றைத் தாழ்வாகக் கூறியதாக ஆகாது. ஏனெனில் இத்தகைய காவியங்கள் உலகில் மிக அரிது, இவ்விரு நாடகங்களுக்கும் இணையேயில்லை என்று கூறலாம். இந்திய அணியியல் நிபுணர்கள் நாடகத்தில் எதிர்பார்க்கும் எல்லா அம்சங் களும் இந்த இரு படைப்புகளிலும் இருப்பதால் நாம் இவற்றை நாடகமாகக் கருதலாம். ஆனால் நாகடத்தில் ஐரோப்பிய விமரிசகர்களால் எதிர்பார்க்கப் படும் அம்சங்கள் இவ்விரு படைப்புகளிலும் இல்லை. 'ஒதெல்லோ'வில் அவை

நிறைய உள்ளன. ஆகையால் 'ஒதெல்லோ' ஒரு நாடகம், 'சாகுந்தலம்' ஒரு கதை சொல்லும் காவியம். ஆகையால்தான் டெஸ்டிமோனா பாத்திரம் மலர்ந்து வளர்ந்த அளவுக்கு மிராண்டாவும் சகுந்தலையும் வளரவில்லை. டெஸ்டிமோனா உயிர்த்துடிப்புள்ள பாத்திரம், சகுந்தலையும் மிராண்டாவும் சிந்தனை மூலமே உணர்ந்து ரசிக்கப்படத்தக்கவர்கள். டெஸ்டிமோனா பேசும் போது அவளது குரலிலேயே அவளது பரிதாப நிலையை நாம் புரிந்து கொள்கிறோம். கண்ணீர் சொட்டுச் சொட்டாக அவள் கண்களிலிருந்து கன்னங்களில் வழிவதை மனக்கண்ணால் பார்க்கிறோம். தரையில் மண்டியிட்டிருக்கும் அந்த அழகியின் படபடக்கும் கண்களின் பார்வை நம் இதயத்தைத் துளைக்கிறது. ஆனால் துஷ்யந்தனின் பேச்சிலிருந்து தான் நாம் சகுந்தலையின் சிவந்த கண்களைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம்:

"அவளது பார்வை நேராயிருக்கிறது, கண்கள் சிவந்திருக்கின்றன;

மிகக் கடுமையான சொற்களைக் கொண்ட அவளது பேச்சு சற்றும் தடுமாறவில்லை;

கோவைக் கனி போன்ற அவளது உதடு பனியால் துன்புறும் மலர்போல் நடுங்குகிறது;

மிகவும் வளைந்த அவளுடைய புருவங்கள் சுருங்குவதால் சமநிலை தவறிவிட்டன."

நாம் சகுந்தலையின் துன்பத்தின் வீச்சையோ, வேகத்தையோ, போக்கையோ பார்க்க முடிவதில்லை. இவையெல்லாம் டெஸ்டிமோனாவிடம் தெளிவாகத் தெரிகின்றன. சகுந்தலா ஓர் ஓவியம்; டெஸ்டிமோனா சிற்பி வடித்த உயிர்த்துடிப்புள்ள சிலை. டெஸ்டிமோனாவின் இதயம் நமக்கு முன்னால் திறந்து காட்டப்படுகிறது; சகுந்தலையின் இதயமோ அறிகுறிகளால் மட்டுமே உணரப்படக் கூடியது.

ஆகவே டெஸ்டிமோனா பாத்திரத்தின் பிரகாசத்துக்கு முன் சகுந்தலை மங்கிப் போய்விடுகிறாள். மற்றப்படி இருவரும் ஒன்றுதான். சகுந்தலையில் பாதி மிராண்டா, பாதி டெஸ்டிமோனா. முதிர்ச்சி பெற்ற சகுந்தலை டெஸ்டிமோனாவை ஒத்திருக்கிறாள், முதிர்ச்சி பெறுமுன் அவள் மிராண்டாவை ஒத்திருக்கிறாள்.

(வங்க ஆண்டு 1282, பைசாக் மாத 'வங்கதர்சன்' இதழில் முதலில் வெளியான இந்தக் கட்டுரை 'விவித பிரபந்த' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

திரௌபதி

பழங்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, இந்துக் காவியங்களின் நாயகிகள் யாவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள். ஆரிய இலக்கியத்தின் இலட்சிய நாயகி பதிவிரதை, மென்மையான தன்மை வாய்ந்தவள், நாணம் மிக்கவள், எல்லையற்ற பொறுமை வாய்ந்தவள். முதுபெருங் கவிஞர் வால்மீகி இந்த இலட்சியத்துக்கேற்பத்தான் உலக மக்களின் மனதைக் கவர்ந்த சீதையின் பாத்திரத்தைச் சமைத்தார். அது முதல் ஆரியக் கதாநாயகிகளின் பாத்திரம் இதே இலட்சியத்தைப் பின்பற்றி வந்துள்ளது. சகுந்தலை, தமயந்தி, ரத்னாவளி முதலிய புகழ்பெற்ற கதாநாயகிகள் சீதையின் வார்ப்புதான். ஆரிய இலக்கியத்தில் இதிலிருந்து வேறுபட்ட கதாநாயகிகளைப் பார்க்க முடியாது என்பதில்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் சீதையைப் பின்பற்று பவர்கள். இப்போதும் அதிகச் செலவில்லாமல் அச்சிடும் வாய்ப்பு கிடைத்து விட்டால் நாவல் அல்லது நாடகம் எழுதி வெளியிட முயல்பவன் தன் கதாநாயகியாக இன்னொரு சீதையைப் படைக்கிறான்.

இந்த நிலைக்கான காரணங்களை ஊகிப்பது கடினமல்ல. முதலாவது, சீதையின் பாத்திரம் மனதை ஈர்ப்பது; இரண்டாவது, இத்தகைய பாத்திரமே ஆரியர்களால் போற்றப்படுவது; மூன்றாவது ஆரியப் பெண்களுக்கு எளிதில் கைவரப் பெற்றவை சீதையின் குணங்களே.

திரௌபதி ஒருத்தி மட்டும் சீதையிலிருந்து முற்றிலும் வேறுபட்டவள். அவள் மகாபாரதக் கவியின் முற்றிலும் புதுமையான பாத்திரம். சீதையைப் பின்பற்றி ஆயிரம் கதாநாயகிகள் தோன்றிவிட்டனர். ஆனால் திரௌபதியைப் பின்பற்றும் கதாநாயகி ஒருவர் கூட இல்லை.

சீதை பதிவிரதையாகப் போற்றப்படுகிறாள். மகாபாரதக் கவி திரௌபதியையும் அவ்வாறே சித்திரிக்கிறார். ஏனென்றால், கணவன் ஒருவனாயிருந்தாலும் சரி, ஐவராயிருந்தாலும் சரி, கணவன் அல்லது கணவர்களிடம் பக்தி செலுத்துவதே பதிவிரதையின் இலக்கணம் என்பது கவியின் கருத்து. சீதை, திரௌபதி இருவருமே மனைவி என்ற முறையிலும் அரசி என்ற முறையிலும் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கிறார்கள்,

தருமத்தில் ஈடுபாடு கொண்டவர்களாகவும், பெரியவர்களுக்கு அடங்கியவர் களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடையே ஒற்றுமை இத்துடன் நின்று விடுகிறது. சீதை அரசியாயினும் முக்கியமாகக் குலப் பெண்தான்; திரௌபதியோ குலப்பெண்ணாயினும் முக்கியமாக வீரமிக்க ராணி: பெண்ணினத்தின் மெல்லியல்புகள் சீதையிடமும், தீவிரமான பண்புகள் திரௌபதியிடமும் ஒளிர்கின்றன. சீதை ராமனுக்கேற்ற மனைவி, திரௌபதி பீமனுக்கேற்ற வீரியம் மிக்க தோழி. இராவணன் வெகு எளிதில் சீதையை அபகரித்துவிட்டான். அவன் திரௌபதியை அபகரிக்க முயன்றிருந்தால் கீசகன் போல் உயிரிழந்திருப்பான், அல்லது ஜயத்திரதன் போல் திரௌ பதியால் தரையில் வீழ்த்தப்பட்டிருப்பான்.

திரௌபதி பாத்திரத்தை முறையாக அலசி ஆராய்வது கடினம். காரணம் மகாபாரதம் ஓர் எல்லையற்ற கடல் போன்றது; அக்கடலில் ஒரு நாயகன் அல்லது நாயகியின் பாத்திரம் ஒரு துரும்பு மாத்திரமே. கடலின் எண்ணற்ற அலைகளால் அடித்துத் தள்ளப்படும் துரும்பு எங்கே போகும் என்று யார்தான் சொல்லமுடியும்! இருந்தாலும் ஓரிரு கட்டங்களில் இந்தப் பாத்திரத்தை ஆராய முயல்வோம்.

திரௌபதியின் சுயம்வரம். ஒரு கடினமான இலக்கைப் பாணத்தால் துளைப்பவனுக்கே அவளைக் கொடுப்பதாக சபதம் செய்திருக்கிறான் துருபதன். உலகத்தின் அரசர்கள், வீரர்கள், முனிவர்கள் சபையில் குழுமியிருக் கிறார்கள். திரௌபதி சபைக்கு அழைத்து வரப்படுகிறாள். சபையோரின் வீரியத்தின் வெப்பத்தில் கன்னிகையாகிய மலர் உலர்ந்து போய் விடுகிறது. அவளை அடைவதற்காகத் துரியோதனன் ஜராசந்தன், சிசுபாலன் முதலி யோர் இலக்கைத் துளைக்க முயற்சி செய்கின்றனர். ஒருவராலும் இயல வில்லை. ஐயோ, திரௌபதிக்குத் திருமணம் ஆகாதா?

அங்கராஜன் கர்ணன் இலக்கைத் துளைக்க எழுகிறான். இது ஒரு இக்கட்டான இடம். இந்த இடத்தில் ஒரு சாதாரணக் கவி என்ன செய்திருப்பாரென்று சொல்ல இயலாது. திரௌபதி பாண்டவர்களை மணந்து கொள்வதாகக் கதை. கர்ணன் இலக்கைத் துளைத்துவிட்டால் அது நடக்காது. ஆகையால் கர்ணனாலும் இலக்கைத் துளைக்க முடியவில்லை என்று சாதாரணக் கவி சொல்லியிருப்பார். ஆனால் கர்ணன் அர்ஜுனனின் எதிரி. அர்ஜுனனின் வீரத்தை மதிப்பிடக் கர்ணனின் வீரமே அளவு கோல். கர்ணனை வென்றதால்தான் அர்ஜுனனுக்குப் புகழ். கர்ணனையும் மற்ற வர்களைப் போல் வீரங்குறைந்தவனாகச் சித்திரித்தால் அர்ஜுனனின் பெருமை என்னாவது? இந்தச் சிக்கலை ஒரு சாதாரணக் கவியிடம் சொன்னால் அவர் ஏதாவது குறுக்கு வழியில் தீர்க்க முயல்வார், கர்ணன் திரௌபதியை அடைய முயற்சியே செய்யவில்லையென்று சொல்லி

விடலாமே! அப்படிச் செய்தால் காவியத்தின் சிறப்புக்கு ஊறு நேர்ந்துவிடும். உலகத்தின் பெரிய பெரிய அரசர்களெல்லோரும் திரௌபதியை அடைய முயற்சி செய்தபோது கர்ணன் மட்டும் ஏன் சும்மா இருந்தான் என்ற கேள்வி எழும். சாதாரணக் கவி இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வார்?

மகாபாரதக் கவி மகாமேதை, கூரிய பார்வை வாய்ந்தவர். அவர் மிக எளிதாகக் கர்ணனை இலக்கைத் துளைப்பதற்காக இருக்கையிலிருந்து எழச் செய்தார். இதன் மூலம் கர்ணனின் வீரப் புகழைக் காப்பாற்றிவிட்டார். அத்துடன் இன்னொரு காரியத்தையும் சாதித்துவிட்டார். திரௌபதியின் குணத்தையும் வாசகனுக்குத் தெரியவைத்துவிட்டார். பிற்காலத்தில் ஒரு நாள் திரௌபதி ஜயத்திரதனைத் தரையில் வீழ்த்தப் போகிறாள். இன்னொரு நாள் துரியோதனனின் சபையில் சூதாட்டத்தால் அடிமையாக்கப்பட்டு, அவமானத் துக்குள்ளாகும் போது தன் கணவர்களிடமிருந்ததே விடுபட்டுத் தனித்து நிற்க முயற்சி செய்யப் போகிறாள்; அந்த நாட்களில் வெளிப்படப் போகும் திரௌபதியின் வீரியத்தை இப்போதே சூசகமாக உணர்த்திவிட்டார் கவி; அதிலும் ஒரு சிறுவாக்கியத்தைப் பயன்படுத்துவன் மூலம். குமரியாகிய மலரை உலர்ந்துவிடச் செய்யும் வீரியம் மிக்க அரசர்களும் மற்றவர்களும் நிறைந்த சபைதான் அது. ஆனால் இத்தகைய சபையில் வீற்றிருக்கும் அரசர்களுக்கோ, வீரர்களுக்கோ, முனிவர்களுக்கோ அஞ்சாமல், தன் தந்தை துருபதனையும் சகோதரன் திருஷ்டத்யும்னனையும் பொருட்படுத்தாமல் "நான் ஒரு தேரோட்டி மகனைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்!" என்று சொல்கிறாள். இதைக் கேட்டதும் கர்ணன் கோபத்துடன் சூரியனைப் ப்பார்த்துவிட்டு வில்லைப் போட்டுவிடுகிறான்.

இந்த ஒரு வாக்கியத்தால் திரௌபதியின் தன்மை வெளிப்பட்ட அளவு நூறு பக்கங்கள் எழுதினாலும் வெளியிடமுடியாது. கவிக்கு இந்த இடத்தில் விரிவான வருணனையோ திரௌபதியின் வீரியம் பற்றிய விளக்கமோ தேவைப்படவில்லை. ஆனால் ராஜகுமாரியின் துணிவு மிகத் தெளிவாக உணர்த்தப்பட்டு விடுகிறது.

சூதாட்டக் காட்சியில் திரௌபதியின் நடத்தையைப் பாருங்கள். வீரம், கர்வம், பலம் இவையாவும் வாய்ந்த பீமன்கூட சூதாட்டத்தில் பணயமாக வைக்கப்பட்டு அடிமையானபோது ஒன்றும் சொல்லவில்லை; பேசாமல் அடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்டான். இந்நிலையில் பீமனுக்கும் அவ னுடைய சகோதரர்களுக்கும் மனைவியான திரௌபதியின் கடமை என்ன? தன் கணவர்களைப் போல் தானும் அடிமைத் தனத்தை ஏற்றுக் கொள்வது தானே ஆரியப் பெண்மணியின் இயற்கை?

ஆனால் திரௌபதி என்ன செய்தாள்? சூதாட்ட விவரங்களையும் துரியோ தனின் சபைக்குத் தான் அழைக்கப்படுவதையும் பிராதுகாமி மூலம் அறிந்து

கொண்டு அவனிடம் சொன்னாள்: "தேரோட்டி மகனே, நீ சபைக்குத் திரும்பிப் போய், தருமர் எனனை முதலில் பணயம் வைத்து இழந்தாரா அல்லது தன்னை முதலில் பணயம்வைத்திழந்தாரா என்று கேள். கேட்டுவிட்டு வந்து என்னை இங்கிருந்து அழைத்துப் போ. இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டபின் நான் சபைக்கு வருகிறேன்." அடிமைத் தனத்தை எளிதில் ஏற்க அவள் விரும்பவில்லை.

திரௌபதியிடம் இரண்டு தன்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. ஒன்று, அறம் சார்ந்த செயற்பாடு; இரண்டு, கர்வம். கர்வம் அறத்துக்குப் பொருந்தாது எனினும் ஒரே இடத்தில் அறமும் கர்வமும் சேர்ந்திருப்பதில் முரணேதும் இல்லை. மகாபாரத நாயகர்களில் பலரிடம் இவ்விரு குணங்களும் ஒருங்கே காணப்படுகின்றன. பீமன், அர்ஜுனன், அசுவத்தாமா, மற்றும் சத்திரிய பாத்தி ரங்களில் கவி இவ்விரு குணங்களையும் சித்திரித்திருக்கிறான். கர்வம் பீமனிடம் முழு அளவிலும் அர்ஜுனனிடமும் அசுவத்தாமாவிடமும் பாதி அளவிலும் காணப்படுகிறது. நாம் இங்கு 'கர்வம்' என்ற சொல்லைத் 'தற்பெருமை' என்ற பொருளில் பயன்படுத்தவில்லை, மனதின் வீரியத்தையே இந்தச் சொல்லால் குறிப்பிடுகிறோம். இது திரௌபதியிடமும் முழு அளவில் உள்ளது. அர்ஜுனனிடமும் அபிமன்யுவிடமும் இந்த வீரியம் தங்கள் சக்தி பற்றிய உறுதியான நம்பிக்கையாக மலர்ந்தது; பீமனிடம் இது பலம் வளரக் காரணமாயிற்று; திரௌபதியிடம் இது தார்மீக பலத்தை வளர்த்தது.

அரசவையில் அவளது கர்வமும் வீரியமும் இன்னும் வளர்ந்தன. அவள் துச்சாதனனிடம் சொன்னாள்: "இந்திரன் முதலான தேவர்கள் உனக்கு உதவி செய்தாலும் ராஜபுத்திரர்கள் (என் கணவன்மார்) உன்னை மன்னிக்க மாட்டார்கள்." அவள் எல்லோருக்கும் முன்னால் தன் கணவன்மாரை நோக்கிச் சொன்னாள்: "பாரத வம்சத்தினரின் அறம் அழிந்துவிட்டது. சத்திரிய தர்மம் அறிந்தவர்களின் குணம் முற்றிலும் நசித்துவிட்டது." பீஷ்மர் முதலிய பெரியவர்களை நேருக்கு நேரே உதாசீனம் செய்து பேசினாள் அவள்: "ஐயோ, பீஷ்மர், துரோணர், மகாத்மா விதுரர் ஆகியோரும் தங்கள் தன்மையை இழந்துவிட்டார்களே!"

ஆனால் அபலை எவ்வளவு நேரந்தான் எதிர்த்து நிற்க முடியும்? மனித குணமாகிய கடலின் அடித்தளம் வரை நகக் கண்ணாடிபோல் ஆராய்ந்து அறிந்தவர் மகாபாரதக் கவி. கர்ணன் திரௌபதியை வேசி என்றழைத்த போது, துச்சாதனன் அவளது உடையைக் களைய முற்பட்டபோது அவளது வீரியம் மறைந்தது பயம் அவளை ஆட்கொண்டது. அப்போது அவள் கதறத் தொடங்கினாள்: "ரமாநாதா! விரஜ நாதா! இன்னலைத் தீர்ப்பவனே! நான் கௌரவர்களாகிய கடலில் முழுகிக் கொண்டிருக்கிறேன்; என்னைக் காப்பாற்று!" இந்த இடம் கவியின் கவித்துவத்தின் கொடு முடியாகும்.

திரௌபதியின் கர்வம் தீவிரமானது. அவளது அற உணர்வும் அசாதாரண மானது. அவள் கர்வம் மிக்க ராணியாகச் செயற்படாத சமயங்களில் அறத்தில் தீவிர ஈடுபாடுடையவளாகத் தோற்றமளிக்கிறாள். இந்தத் தீவிர அற உணர்வே இன்னும் தீவிரமான அவளது கர்வத்தின் அளவு கோலாகும். இந்த அசாதாரண அறஉணர்வும், வீரியத்துடன் இந்த உணர்வின் அழகான சேர்க்கையும் அவள் திருதராஷ்டிரனிடமிருந்து வரம் பெறுங்காலத்தில் அழகாக வெளிப்படுகின்றன. காவியத்தின் இந்தப் பகுதி மிகவும் சுவையானது. இதை நூறு முறை படித்தபின்னும் இன்னுமொரு முறை படிக்கத் தோன்றும். இப்பகுதியை இங்கு மேற்கோள் காட்டுகிறோம்:

"நலம் விரும்பியான அரசன் திருதராஷ்டிரன் இவ்வாறு துரியோதனனைக் கடிந்து விட்டுத் திரௌபதியிடம் சொன்னான், 'துருபதன் பெண்ணே, நீ என் மருமகள்களில் மிகச் சிறந்தவள்; வேண்டிய வரம் கேள்.'

"திரௌபதி சொன்னாள், 'பரதகுல விளக்கே, தங்களுக்கு என்மேல் பரிவு இருந்தால் அறத்தில் சிறந்த தருமர் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறவரங்கொடுங்கள். உங்கள் புதல்வர்கள் இந்தப் பெருமக்னை அடிமை யென்று அழைக்காதிருக்கட்டும்; என் புதல்வன் பிரதி விந்தியன் அடிமையின் மகனாயில்லாமல் இருக்கட்டும். பிரதிவிந்தியன் ராஜபுத்திரன், அரசர்களால் வளர்க்கப்பட்டவன்; அவன் அடிமையின் மகனாயிருப்பது உசிதமல்ல." திருத ராஷ்டிரன் சொன்னான், 'மங்கலம் பொருந்தியவளே, இவ்வரமளித்தேன். நீ ஒரேயொரு வரத்துக்கு மட்டும் தகுதியானவள் அல்ல; இன்னொருவரம் கேள்.'

"திரௌபதி சொன்னாள், 'பேரரசே, பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் இவர்களும் தங்கள் ரதங்களுடனும் வில்களுடனும் விடுதலை பெறட்டும்'. திருதராஷ்டிரன் சொன்னான், 'பெண்ணே, நீ கேட்ட இந்த வரமும் தந்தேன்; மூன்றாவது வரம் கேள். நீ அறத்தில் சிறந்தவள், என் எல்லா மருமகள்களையும் விடச் சிறந்தவள். உன் பெருமைக்கு இரண்டு வரங்கள் போதாது'.

"திரௌபதி சொன்னாள், 'பிரபுவே, பேராசை அறத்தைக் கொல்லும். ஆகவே எனக்கு இன்னொருவரம் வேண்டாம். நான் மூன்றுவரம் பெறத் தகுதியற்றவள். ஏனெனில் வைசியன் ஒருவரமும், சத்திரியன் இரண்டு வரமும் மட்டுமே ஏற்கலாம்; பிராமணன் நூறு வரம் பெறலாம். இப்போது என் கணவன்மார் அடிமைத்தனமாகிய கொடிய சேற்றிலிருந்து விடுபட்டு விட் டனர்; அவர்கள் இனி தங்கள் நற்செயல்கள் மூலம் பெருமை எய்தலாம்'..."

அறம், கர்வம் இவ்விரண்டு குணங்களின் இத்தகைய பொருத்தமான சேர்க்கையே திரௌபதி பாத்திரத்தின் முக்கிய அணியாகும். ஜயத்திரதன் அவளை அபகரிக்க எண்ணி அவள் தனியாக இருக்கும் போது காம்யக

வனத்துக்கு வருகிறான். திரௌபதி முதலில் அறமுறைப்படி விருந்தோம்பல் மூலம் அவனை மகிழ்விக்க முயல்கிறாள். பின்னர் அவன் தன் கெட்ட எண்ணத்தை வெளிப்படுத்தவே, அவள் பெண்புலிபோல் சீறித்தன் வீரியத்தைக் காட்டுகிறாள். வீரமும் கர்வமும் நிறைந்த அவளுடைய பேச்சை மீறிப் பலவந்தமாக அவளைப் பிடிக்க முயன்று தன் செயலுக்கேற்ற பலனைப் பெறுகிறான். சிந்து சௌவீர நாடுகளுக்கதிபதியான அவன் பீம-அர்ஜுனரின் மனைவியும் திருஷ்டத்யம்னனின் சகோதரியுமான திரௌபதியின் உடல் வலிமையைத் தாங்க முடியாமல் வேரறுந்த மரம்போல் தரையில் விழுகிறான்.

இறுதியில் ஜயத்திரதன் மறுபடி பலவந்தமாக அவளைத் தன் தேரில் ஏற்றிக் கொள்கிறான். மிகவும் வீரியம் வாய்ந்த ஒரு பெண் செய்யக்கூடிய காரியத்தையே இப்போது செய்கிறாள் திரௌபதி. அவள் வீண் புலம்பல் புலம்பவில்லை; தன் கணவன்மாரின் கவனக்குறைவையோ, அவர்கள் திரும்பு வதில் தாமதம் செய்வதையோ ஒரு தடவைகூடக் குறை கூறவில்லை. அவள் குலப்புரோகிதர் தௌம்யரை வணங்கிவிட்டுத் தேரில் ஏறிக் கொள்கிறாள். தேரில் செல்லும்போது ஜயத்திரதன் தொலைவில் வரும் பாண்டவர்களைக் காட்டி அவர்கள் யார் யார் என்று கேட்கும்போது, திரௌபதி ஜயத்திரதனின் தேரில் இருந்து கொண்டே கர்வத்தோடும் சற்றே பயமின்றியும் தன் கணவன் மாரை அறிமுகம் செய்து பேசும் வசனங்கள் மீண்டும் மீண்டும் படித்து ரசிக்கத்தக்கவை.

(வங்க ஆண்டு 1282, பாத்ர மாத 'வங்கதர்சன்' இதழில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

சமத்துவம்/பெண்ணினம்

மனிதர்களெல்லோரும் சம உரிமையுள்ளவர்கள் என்பதே சமத்துவக் கொள்கை. இந்தக் கொள்கையின் சிதைவின் ஓர் உதாரணம் நில உடைமை யாளனுக்கும் உழவனுக்குமிடையேயுள்ள ஏற்றத் தாழ்வு. இது பற்றி முன்பே கூறியுள்ளோம். இப்போது இன்னொரு உதாரணத்தை, ஆண், பெண் களிடையே நிலவும் வேற்றுமையை ஆராய்வோம்.

மனிதர்கள் யாவரும் சம உரிமையுள்ளவர்கள். பெண்களும் மனிதர்கள் தாம்; ஆகவே அவர்களுக்கும் ஆண்களோடு சம உரிமை உண்டு. என்னென்ன காரியங்களைச் செய்ய ஆண்களுக்கு உரிமையுண்டோ, அந்தக் காரி யங்களைச் செய்யப் பெண்களுக்கும் உரிமையுண்டு. ஏன் இருக்கக் கூடாது? சிலர் பதிலளிக்கலாம்—ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இயற்கையிலேயே பல வேற்றுமைகள் உண்டு; ஆண் பலசாலி, பெண் பலங்குறைந்தவள்; ஆண் தைரியசாலி, பெண் பயங்கொள்ளி; ஆண் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வான், பெண்ணோ மென்மையானவள்; இன்னும் வேற்றுமைகள் உள்ளபோது உரிமைகளிலும் வேற்றுமை இருப்பது பொருத்தந்தான். ஏனெனில் ஒரு துறையில் வலிமை குறைந்தவருக்கு அந்தத் துறையில் உரிமை இருக்க முடியாது.

இந்த ஆட்சேபத்துக்கு சுருக்கமாக இரண்டு மறுப்புகளைத் தெரிவித்தால் போதுமானது. முதலாவது, இயற்கையில் வேற்றுமைகளிருப்பதால் உரிமை யிலும் வேற்றுமையிருப்பது நியாயந்தான் என்ற கருத்தை நாம் ஏற்கவில்லை. இந்தக் கருத்து சமத்துவக் கொள்கைக்கு முரணானது. ஆண்களுக்கும் பெண் களுக்குமிடையே இயற்கையிலேயே சில வேற்றுமைகள் இருப்பது போல் ஆங்கிலேயருக்கும் வங்காளிகளுக்குமிடையே பல வேற்றுமைகள் உள்ளன. ஆங்கிலேயன் வலிமையுள்ளவன், வங்காளி வலிமை குறைந்தவன்; ஆங்கி லேயன் தைரியசாலி, வங்காளி பயங்கொள்ளி; ஆங்கிலேயன் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவன், வங்காளி மென்மையானவன்; இன்னும் எவ்வளவோ சொல்லலாம். இயல்புகளில் வேற்றுமை இருப்பதால் உரிமை களில் வேற்றுமை இருக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டால் நாம் ஏன்

ஆங்கிலேயருக்கும் வங்காளிகளுக்குமிடையே உள்ள உரிமை வேற்றுமைகளை எதிர்த்துக் குரல் எழுப்புகிறோம்? ஆண் எசமான், பெண் அடிமை என்பது நியாயமாயிருந்தால் ஆங்கிலேயன் எசமான், வங்காளி அடிமை என்பதும் நியாயந்தானே!

இரண்டாவது, ஆண்பெண் உரிமைகளில் வேற்றுமை காணப்படும் துறைகளில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இயல்புகளில் வேற்றுமையில்லை. சமூக விதிகளால்தான் இந்த உரிமை வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இந்த விதிகளைச் சீர்திருத்துவதே சமத்துவக் கொள்கையின் நோக்கம். புகழ்பெற்ற ஜான்ஸ்டுவர்ட் மில்லின் ஆராய்ச்சியில் இந்த விஷயம் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. (அவரது 'Subjection of Women' என்ற நூலைப் பார்க்கவும்) இதை இங்கு மீண்டும் கூறத் தேவையில்லை.

எல்லா நாடுகளிலும் பெண் ஆணின் அடிமையாயிருக்கிறாள். பெண்ணைக் கூண்டில் அடைத்து வைக்காத நாடுகளிலும் அவள் ஆணை அண்டி வாழ நேர்கிறது. அவனது ஆளுகைக்குட்பட்டு நடக்க வேண்டியிருக்கிறது.

எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் இந்தப் பெண்ணடிமை வழக்கம் இருந்து வந்தாலும் இக்காலத்தில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் சில சமூகவியல் நிபுணர்கள் இந்த வழக்கத்தை எதிர்க்கிறார்கள். இவர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமையுண்டு என்று நம்பும் சமத்துவ வாதிகள். ஆண் உத்தியோகம் பார்க்கிறான், தொழில் செய்கிறான்; பெண்ணும் ஏன் அவற்றைச் செய்யக் கூடாது? பெண்ணும் ஆண் போல் அரசவையில், நாட்டின் ஆட்சி மன்றத்தில் ஏன் இடம் பெறக்கூடாது? பெண் ஆணின் மனைவிதான், அடிமையல்லவே!

நம்நாட்டில் பெண் ஆணுக்கு அடிமைப்பட்டிருக்கும்அளவில் நூறில் ஒரு பங்குகூட அமெரிக்கா அல்லது ஐரோப்பாவில் இல்லை. நம் நாடு அடிமை நாடு; எல்லா விதமான அடிமைத் தனங்களும் இங்கு விதைக்கப்பட்டு, நிலம் செழிப்பாக இருப்பதால் நன்றாக வளர்ந்து விட்டன. இங்கே மக்கள் அரசனுக்கு அடிமைப்பட்டுள்ள அளவு வேறெங்குமில்லை. கல்வியறிவற்றவர்கள் படித்தவர்களுக்கு அடிமைப்பட்டுள்ள அளவு வேறெங்குமில்லை; இங்கு பெண் ஆணுக்கு அடங்கி நடக்குமளவு வேறெந்த நாட்டிலுமில்லை.

இங்கு பெண் கூண்டிலடைபட்ட பறவை. அவள் தனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டதைத் திருப்பிச் சொல்லுவாள்; உணவு கொடுத்தால் உண்பாள், இல்லாவிட்டால் பட்டினி கிடப்பாள். கணவன் அவளுக்குக் கடவுள் போன்றவன்; போன்றவன் என்ன கணவன்தான் கடவுள்களிலேயே மிகச் சிறந்தவன் என்று சாத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனைவிகளுக்கு இலட்சியமாகத் திகழும் திரௌபதி, தான் தன் கணவன்மாரை மகிழ்விப்பதற்காகத் தன் சக்களத்திகளுக்கும் பணிவிடை செய்வதாகத் தன்னைப் பற்றிப் பெருமையாக சத்தியபாமையிடம் சொல்லிக் கொள்கிறாள். பெண்

களின் அடிமையுணர்வு இவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

ஆரியர்களின் பதிவிரதைத்தன்மை மிக அழகியதுதான். இதனால்தான் ஆரியனின் குடும்ப வாழ்க்கை சுவர்க்கம் போல் இன்பமாயிருக்கிறது. பதி விரதைத் தன்மையை யாரும் எதிர்க்கவில்லை. பெண் ஆணுக்கு அடிமையா யிருப்பதையும் வாழ்க்கையின் பலதுறைகளில் பெண்ணின் உரிமை மறுக்கப் பட்டிருப்பதையுந்தான் சமத்துவவாதிகள் எதிர்க்கிறார்கள்.

நம் நாட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே பெரும் வேற்றுமை யிருப்பதை மக்கள் ஒரளவு உணரத் தொடங்கியிருக்கிறார்கள். சில துறை களில் இந்த வேற்றுமையைப் போக்க சமூகத்தில் சில இயக்கங்களும் நடை பெற்று வருகின்றன. அத்துறைகளாவன:

1. ஆண் கல்வி பெறுவது கட்டாயமாயிருக்கிறது. ஆனால் பெண் ணுக்குக் கல்வி இல்லை.
2. மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்து கொள்கிறான். ஆனால் கணவன் இறந்தால் மனைவி மறுமணம் செய்து கொள்ள முடியாது. அவள் வாழ்க்கை இன்பங்களைத் துறந்துவிட்டுத் தன் வாழ் நாள் முழுதும் புலனடக்கம் கடைப்பிடிக்க வேண்டும்.
3. ஆண் எங்கு வேண்டுமானாலும் போகலாம். பெண்கள் வீட்டுக்கு வெளியே போகக் கூடாது.
4. கணவன் இறந்தால்கூட, பெண் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது. ஆனால் ஆண் தன் மனைவி உயிருடனிருக்கும்போதே விருப்பப்படி எண்ணற்ற பெண்களை மணந்து கொள்ளலாம்.

முதல் விஷயத்தில் மக்களின் கருத்து சற்று மாறியிருக்கிறது. பெண்களும் சிறிது கல்வி பெற வேண்டியது அவசியமென்று இப்போது எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் பெண்ணும் ஆணைப்போல் பல்வகை இலக்கியம், கணிதம், அறிவியல், தத்துவம் போன்ற எல்லாக் கலைகளையும் ஏன் பயிலக் கூடாதென்று அநேகமாக யாருமே நினைப்பதில்லை. பிள்ளை எம்.ஏ. தேர்வில் தேறாவிட்டால் தற்கொலை செய்து கொள்ள விரும்பும் பெற்றோர் பெண் அரிச்சுவடி படித்து முடித்தாலே திருப்தியடைந்து விடுகிறார்கள். பெண்ணும் ஏன் பிள்ளையைப் போல் எம்.ஏ வரை படிக்கக் கூடாது என்று அவர்களுக்கு ஒரு தடவை கூடத் தோன்றுவதில்லை. யாராவது அவர்களை இவ்வாறு கேட்டால் கேட்பவரை அவர்கள் அதிகப் பிரசங்கி என்று நினைக் கிறார்கள். "பெண் எதற்கு நிறையப் படிக்க வேண்டும்? அவள் வேலை பார்க்கப்போகிறாளா?" என்று சிலர் கேட்பார்கள். "ஏன வேலை பார்க்கக் கூடாது?" என்று சமத்துவவாதி அவர்களைத் திருப்பிக் கேட்டால் அவர்கள் "ஐயோ!" என்று அலறிவிடுவார்கள். கொஞ்சம் புத்திசாலியாயிருப்பவன் திருப்பிக் கேட்பான், "பையனுக்கே வேலை கிடைக்கவில்லை, பெண்ணுக்கு எப்படி வேலை கிடைக்கும்?" கல்வி கற்பது வேலை பார்ப்பதற்கு மட்டுமல்ல

என்றுணர்ந்தவர்கள், "பிள்ளைகளைப் போல் பெண்களையும் படிக்க வைக்க வழி ஏது? பெண் பள்ளி எங்கே இருக்கிறது?" என்று கேட்பார்கள்.

உண்மைதான். வங்காளத்தில்—ஏன், இந்தியா முழுவதுமே ஆண்களைப் போல் பெண்களுக்குக் கல்விப் பயிற்சியளிக்க வசதியில்லை, மக்கள் பெண் கல்விக்குத் தரும் ஆதரவு வெறும் வார்த்தை மட்டுமே என்பது இதிலிருந்து தெரிகிறது. சமூகம் எதையாவது உண்மையில் விரும்பினால் அது நிறை வேறிவிடும். வங்காளிகள் உண்மையாகவே பெண் கல்வியை விரும்பினால் அதற்கான வசதிகளும் ஏற்பட்டுவிடும்.

இதற்கான வழிகள் இரண்டு. ஒன்று, பெண்களுக்காகத்தனிப் பள்ளிகள்; இரண்டு, ஆண் பள்ளிகளிலேயே பெண்களுக்கும் கல்வியளிப்பது.

இரண்டாவது வழியைப் பற்றிப் பேசத் தொடங்கினாலே வங்காளி களுக்குக் கோபம் வந்துவிடும். பெண்கள் ஆண்பள்ளிகளில் படிக்கத் தொடங் கினால் வேசிகள் போல் நடந்து கொள்ள முற்படுவர்; பெண்களின் ஒழுக்கங் கெடுவதோடு ஆண்களும் கெட்டுப் போவார்கள் என்று பலர் கருதுகிறார்கள்.

பெண்கள் தனிப் பள்ளிகளில் படிப்பதற்கு எதிர்ப்பிருக்காது. ஆனால் வேறு ஆட்சேபங்களுக்குக் குறைவில்லை. பெண்கள் கல்லூரிகளில் படிக்கப் போனால் அவர்களுடைய குழந்தைகளுக்குப் பாலூட்டுவது யார்? குழந்தை களை யார் கவனித்துக் கொள்வார்கள்? வீட்டு வேலையை யார் செய்வார்? வங்காளிப் பெண் பதிநான்கு வயதிலேயே தாயாகவும் இல்லத்தரசியாகவும் ஆகிவிடுகிறாள். ஆகையால் அவள் பதின்மூன்று வயதுவரை வேண்டு மானால் கல்வி கற்கலாம். ஊகும், அதுகூட சாத்தியமில்லை; காரணம், பதின் மூன்று வயது வந்த குடும்பப் பெண்புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே எப்படிப் போவாள்?

நாம் இந்த ஆட்சேபங்களுக்கெல்லாம் இப்போது பதில் சொல்லப் போவ தில்லை. நாம் சுட்டிக் காட்டவிரும்புவது என்னவென்றால், எல்லா விஷயங் களிலும் முழுமையான சமத்துவம் ஏற்பட்டாலன்றி, ஒரு சில விஷயங்களில் மட்டும் ஓரளவு சமத்துவத்தை நிலைநாட்டமுடியாது என்பதுதான். சமத்துவம் சம்பந்தப்பட்ட எல்லா சமூக விதிகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந் தவை. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமையுண்டு என்றால் குழந்தை களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு பெண்களுக்கு மட்டும் உரியதல்ல. சம உரிமையிருந்தால் வீட்டுப் பொறுப்பிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பங்கு இருக்கும். ஒருவர்வீட்டு வேலை பார்க்கும் பொறுப்பு காரண மாகக் கல்வி பெற முடியாமலிருக்க, இன்னொருவர் வீட்டு வேலைப் பொறுப் பின்றி கல்வி கற்க வாய்ப்புப் பெறுவது இயற்கைக்குப் பொருந்துமோ பொருந்தாதோ, சம உரிமைக் கொள்கைக்கு நிச்சயம் பொருந்தாது. மேலும் ஆண்கள் தங்களிஷ்டப்படி எங்கும் போகலாம், பெண்கள் வீட்டைவிட்டு

வெளியே போகக் கூடாது என்ற விதியும் சம உரிமைக்கு முரண்பட்டதுதான. இத்தகைய வேற்றுமைகள் காரணமாகத்தான் கல்விப் பயிற்சியிலும் வேற்றுமை நேர்கிறது. வேற்றுமையின் விளைவு இன்னும் வேற்றுமை. ஒரு தடவை தாழ்ந்து போகிறவன் நாளாவட்டத்தில் இன்னும் தாழ்ந்த நிலைக்குப் போய்விடுவான்.

இந்த விஷயத்தை இன்னொரு வகையில் ஆராய்ந்தால் நன்கு புரிந்து கொள்ளலாம்.

பெண் கல்வி அவசியமா? எல்லோருமே அவசியம் என்று ஒப்புக் கொள்வார்கள்.

ஏன் அவசியம்? யாரும் "வேலைபார்ப்பதற்காக" என்று சொல்ல மாட்டார் களென்று தோன்றுகிறது. (வேலை பார்ப்பதற்குந்தான் என்று சமத்துவ வாதிகள் சொல்வார்கள்) பெண்கள் நீதிப் பயிற்சி, அறிவு வளர்ச்சி, மனத் தெளிவு இவை பெறுவதற்காகப் பெண் கல்வி அவசியமென்று இந்த நாட்டு அறிஞர்கள் சொல்வார்கள்.

இப்போது ஒரு கேள்வி—ஆண்கள் ஏன் கல்வி பயில வேண்டும்? கழுதைப் புத்தி கொண்டவர்கள், 'வேலைகிடைப்பதற்காக" என்று பதில் சொல்லலாம். இந்தப் பதில் ஏற்கத்தக்கதல்ல, நீதிப் பயிற்சி, அறிவு வளர்ச்சி, மனத்தெளிவு இவற்றுக்காகத்தான் ஆண்கள் கல்வி பெற வேண்டும் என்றுதான் அறி ஞர்கள் சொல்வார்கள். இவற்றைத் தவிர வேறு ஏதாவது நன்மை ஏற்பட்டால் அது உபரி நன்மைதான், முக்கியமான நன்மையல்ல. இந்த உபரி நன்மை கூட ஆண், பெண் இரு பாலாருக்கும் சமமாகவே பொருந்தும்.

ஆகவே கல்விப் பயிற்சியில் அண், பெண்களின் சம உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் சம உரிமையை ஒப்புக் கொண்டால் மற்ற விஷயங்களிலும் அதை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது? குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலை, விருப்பப்படி வெளியே போவது ஆகிய விஷயங்களில் சம உரிமையை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது? ஒரு துறையில் சம உரிமையை ஏற்றுக் கொண்டால் எல்லாத் துறைகளிலும் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட நான்கு சமூக ஏற்றத்தாழ்வுகளில் இரண்டாவது— விதவை மறுமணம். விதவை மறுமணம் நல்லதா, கெட்டதா என்பது வேறு விஷயம். அதை முடிவு செய்ய இது இடமல்ல. யாராவது நம்மை, 'பெண் கல்வி நல்லதா கெட்டதா?" என்று கேட்டால் நாம் உடனே, 'பெண்கல்வி மிகவும் நல்லது; எல்லாப் பெண்களும் கல்வி பெற வேண்டும்" என்று சொல்லி விடுவோம். ஆனால் விதவை மறுமணம் பற்றி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல மாட்டோம். நாம் சொல்வோம்! விதவை மறுமணம் நல்லதுமில்லை, கெட்டதுமில்லை. எல்லா விதவைகளும் மறுமணம் செய்து கொள்வது நல்லதல்ல; ஆனால் விதவை விரும்பினால் அவளுக்கு மறுமணம் செய்து

கொள்ள உரிமை இருப்பது நல்லது. இறந்த கணவனை இதயபூர்வமாக நேசித்தவள் மறுபடி மணம் செய்து கொள்ள விரும்ப மாட்டாள். விதவை மறுமணம் வழக்கிலுள்ள இனங்களில்கூட புனிதத் தன்மையும் அன்பும் ஒழுக்கமும் வாய்ந்த பெண்கள் விதவையானால் மறுமணம் செய்து கொள்வதில்லை. ஆனால் இந்துவானாலும் சரி, வேறு சாதியானாலும் சரி, ஒரு விதவை மறுமணம் செய்து கொள்ள விரும்பினால் அவளுக்கு அந்த உரிமை இருக்க வேண்டும். மனைவியையிழந்த ஆணுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமையிருக்கும்போது பெண்ணுக்கு மட்டும் ஏன் அது இருக்கக் கூடாது?

மனைவி இறந்தபின் கணவன் மறுமணம் செய்து கொள்வது உசிதமா இல்லையா என்று இங்கு ஒரு கேள்வி எழலாம். ஆனால் இந்த விஷயத்தில் உசிதம், உசிதமல்ல என்ற பேச்சுக்கு இடமில்லை. பிறருக்குத் துன்பம் ஏற் படாதவாறு தன் விருப்பப்படி நடந்து கொள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. ஆகவே மனைவியையிழந்த ஆணுக்கும், கணவனையிழந்த பெண்ணுக்கும் மறுமணம் செய்து கொள்ள சம உரிமை உண்டு.

ஆனால் பெண்ணின் இந்த உரிமை நம் நாட்டில் இன்னும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆங்கிலக் கல்வியின் விளைவாகவோ, அலலது வித்தியாசாகர், பிரும்ம சமாஜத்தினர் ஆகியோரின் அறிவுரை யாலோ விதவை மறுமணத்தை ஏற்றுக் கொள்பவர்கள் அதைச் செயற் படுத்துவதில்லை. அவர்கள் வீட்டிலேயே விதவைகள் இருக்கிறார்கள். அந்த விதவைகளுக்கு மறுமணம் செய்துவைக்க அவர்களுக்குத் துணிவில்லை. காரணம் , அவர்களுக்கு சமூகத்திடம் பயம். சமூகத்தில் விதவை மறுமணம் ஏற்கப்படவில்லை. மற்ற சம உரிமைகள் சமூகத்தில் இடம் பெறாததற்குக் காரணம்புரிகிறது. சமூக விதிகளை இயற்றியவர்கள் ஆண்கள். அவர்கள் தங்களுக்குத் தீமையான சமூக வழக்கங்களைத் தடை செய்து விட்டார்கள். ஆனால் விதவை மறுமணத்தால் ஆண்களுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. இருந் தாலும் இந்த வழக்கம் சமூகத்தில் ஆதரிக்கப்படாததற்குக் காரணம் புரிய வில்லை. இந்த வழக்கத்தால் யாருக்கும் தீமையில்லை, பலருக்கு நன்மை. இருந் தாலும் இது சமூக ஆதரவு பெறும் அடையாளத்தைக் காணோம். இதற்குக் காரணம் நடைமுறைப்பழக்கத்தின் வலிமைதான்.

இன்னொரு விஷயம்: இந்துப் பெண்களின் பதிவிரதைத் தன்மை மிக உறுதியானது; ஆகவே இந்து விதவைகள் மறுமணத்தைப் பற்றிச் சிந்திப்பதே தவறு என்று சிலர் நினைக்கிறார்கள். தன் கணவன் உயிரோடிருக்கும் வரையில்தான் வாழ்க்கையில் தனக்கு இன்பம் என்று ஒவ்வொரு இந்துப் பெண்ணுக்கும் தெரியும். அதனால்தான் அவள் கணவனிடம் மிகுந்த பக்தி செலுத்துகிறாள். ஆகையால்தான் இந்துக் குடும்பங்களில் இவ்வளவு இன்பம் நிலவுவதாக இந்தக் கருத்துள்ளவர்கள் நினைக்கிறார்கள். இந்தக் கருத்து

சரியென்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் இந்த விதி ஏன் ஒருதலைப்பட்சமாக இருக்க வேண்டும்? விதவை விதவையாகவே வாழ்க்கை நடத்துவது சமூகத்துக்கு நலம் என்றால் மனைவியிழந்தவனும் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்று ஏன் விதி செய்யப்படவில்லை? நீ இறந்தால், உன் மனைவி வாழ்நாள் முழுதும் விதவையாக வாழ்வாள், ஆகையால் அவள் அன்புமிக்கவள். உன் மனைவி இறந்தால், நீயும் தனியாக வாழ்க்கை நடத்தி, மனைவியிடம் அன்புமிக்கவன் என்று பெயர் பெறலாமே! இல்றல இன்பத்தின் மதிப்பும் இரண்டு மடங்காகுமே! இந்த விதி உனக்கு மட்டும் ஏனில்லை? பெண்களுக்கு மட்டும் ஏனிந்தக்கட்டுப்பாடு?

நீ ஆண், சமூக விதிகளை இயற்றுபவன்; ஆகையால் உனக்குக் கொண் டாட்டம். உனக்கு வலிமையிருக்கிறது, ஆகையால் உன்னிஷ்டப்படி நடந்து கொள்கிறாய்; பெண்களுக்குக் கொடுமை செய்கிறாய். ஆனால் இந்த வேற்றுமை அநியாயம், அறத்துக்கு முரண்பட்டது.

மூன்றாவது வேற்றுமை, காட்டு விலங்குகளைக் கூண்டில் அடைத்து வைப்பதைப் போல் பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைப்பது. ஆண்-பெண் ஏற்றத் தாழ்வுகளில் இது கொடியது, வெறுக்கத்தக்கது, அறத்துக்கு முரணானது. ஆணாகிய நீ சாதகப்பறவைபோல் பூமியிலும் வானத் திலும் உன்னிஷ்டப்படி சுற்றலாம். ஆனால் பெண் எழுநூறு சதுர அடிப் பரப்புக்குள் அடைபட்டுக் கூண்டுப் பறவை போலக் காலந்தள்ள வேண்டும். உலகத்தின் இன்பங்கள், கவர்ச்சிகள், கல்வி, மற்ற நல்ல அனுவபங்கள் இவற்றை முழுமையாக நுகர்ந்து மகிழ அவளுக்கு உரிமையில்லை. ஏன்? இது ஆணின் ஆணை!

கல்வியறிவுள்ளவர்களில் பெரும்பான்மையோர் இந்த விதி அநியாயம், கேடுவிளைப்பது என்று ஒப்புக் கொள்கிறார்கள், ஆனால் யாரும் இதை மீற முயற்சி செய்வதில்லை, காரணம், சமூகம் அவர்களை இகழும் என்ற பயந்தான். அவர்களுயுடைய மனைவியரை, பெண்களைப் பிறர் பார்த்து விட்டால் அது அவர்களுக்கு அவமானமாம்! அவர்கள் அந்தப் பெண்களை விலங்குகளைப் போல் வீட்டிற்குள் அடைத்து வைத்திருக்கிறார்களே, அது அவமானமில்லையாம்! வெட்கமில்லையாம்!

இவர்களது இந்த மனப்போக்கைப் பார்த்து நமக்கு வெட்கமாயிருக்கிறது.

நம்கேள்வி: உனக்கு வெட்கம், அவமானம் என்பதற்காகப் பிறரை இவ்வாறு துன்புறுத்த உனக்கு என்ன உரிமை? பெண்கள் உன் கௌர வத்தைக் காப்பாற்றத்தான், உன் கைப்பாவையாக இரக்கத்தான் பிறப் பெடுத்து வந்திருக்கிறார்களா? எல்லாமே உன் மானமும் கௌரவமும் மட்டுந் தானா? அவர்களுடைய இன்பதுன்பம் ஒன்றுமேயில்லையா?

வங்காளிப் பெண்கள் தங்களுக்கிழைக்கப்படும் கொடுமையைக் கொடுமை

யாகவே கருதுவதில்லை. நீ அந்த மாதிரி அவர்களை நெறிப்படுத்திவிட்டாய். இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஒருவனைப் பாதியுணவுக்குப் பழக்கப் படுத்திவிட்டால் அவன் பாதியுணவிலேயே திருப்தியடைந்து விடுவான்; தனக்கு முழு உணவு கிடைக்கவில்லையென்றே தோன்றாது அவனுக்கு. ஆனால் அதற்காக உன் கொடுமையை மன்னிக்க முடியாது. பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ நீ அவர்களது இன்பத்தைக் குறைத்தாய், அவர்கள் கல்வி பெறாமல் தடுத்தாய்; இந்தக் குற்றத்துக்காக நீ காலமெல்லாம் பெரும் பாவியாகக் கருதப்படுவாய்.

இன்னும் சில முட்டாள்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆட்சேபத் தோடு நின்றுவிடுவதில்லை. பெண்கள் சமூகத்தில் தங்களிஷ்டப்படி வெளியே நட மாடினால் கெட்டுப் போய்விடுவார்கள், ஒழுக்கங்கெட்ட ஆண்கள் அவர் களைக் கெடுத்துவிடுவார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஐரோப்பா முதலிய நாகரீக நாடுகளில் குடும்பப் பெண்கள் தங்களிஷ்டப்படி வெளியே நடமாடுகிறார்களே, அதனால் என்ன கேடு நேர்ந்துவிட்டது என்று கேட்டால், அந்தப் பெண்கள் இந்துப் பெண்களை விட ஒழுக்கங்கெட்டவர்களென்று இவர்கள் பதில் சொல்கிறார்கள்.

இந்துப் பெண்களின் ஒழுக்கத்தை காப்பதற்காக அவர்களைக் கூண்டி லடைத்து வைக்க வேண்டும் என்ற கூற்று அவர்களை அவதூறு செய்வதாகும். இதை நம்மால் பொறுக்க முடியவில்லை. பிறருடன் பழகினாலே அவர்களது ஒழுக்கம் கெட்டுவிடும், ஆண்கள் கிடைத்தால் அவர்கள் தங்கள் அறத்தைக் கைவிட்டு அந்த ஆண்களின் பின்னே ஓடிவிடுவார்கள் என்னுமளவுக்கு அவர்களது ஒழுக்க உணர்வு பலவீனமானது அல்ல. துணியில் ஊற்றப்படும் தண்ணீர் உடனே ஒழுகி விடுவதுபோல் இந்துப் பெண்களின் ஒழுக்கம் எளிதில் சிதறிப் போவதாயிருந்தால் அந்த ஒழுக்கம் இருப்பதும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதான். அத்தகைய ஒழுக்கத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை. அதன் பலவீனமான ஆதாரத்தைத் தகர்த்தெறிந்து விட்டுப் புதிய ஆதாரத்தை அமைக்க வேண்டும்.

நான்காவது வேற்றுமை ஆண்களுக்குப் பல பெண்களை மணந்து கொள்ளும் உரிமை. இதைப்பற்றி அதிகம் எழுதத் தேவையில்லை. இந்த உரிமை நியாய விரோதமானது என்பது வங்காளி இந்துக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டனர். ஆகவே இவ்விஷயத்தில் பெண்களுக்கும் சம உரிமை கொடுக்கும் நோக்கம் சமூக சீர்திருந்த வாதிகளுக்கு இருக்க முடியாது. ஆண்களின் பலதார மண உரிமையை நீக்குவதே அவர்களது நோக்கமா யிருக்க வேண்டும். ஏனெனில் மனித இனத்தில் ஒருவர் பலரை மணந்து கொள்வது நியாயமற்ற செயல். (ஒரு சில சமயங்களில்—உதாரணமாக, அரச னுக்கு ஒரு மனைவியிடம் பிள்ளை பிறக்காவிட்டால், அல்லது ஒருவனுடைய மனைவி தொழுநோய் போன்ற தீராத நோயினால் பீடிக்கப்பட்டால்

இன்னொரு மனைவியை மணந்து கொள்வதை அனுமதிக்கலாம். ஆனால் இதே உரிமை பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும். இந்த விஷயத்தில் சில கருத்துக்களை வெளியிட வாய்ப்பு உண்டு. ஆனால் பலதார மணம் மிகவும் அருவருக்கத் தக்க விஷயம். அது பற்றிப் பேசுவதே தீங்குதான்) பெண்களும் ஆண்களைப் போல் பலரை மணந்து கொள்ளலாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். பெண்ணைப் போல் ஆணும் ஒரு மணந்தான் செய்து கொள்ளலாம் என்றே எல்லோரும் கூறுவர். ஆகவே நியாயமான உரிமைகளை விரிவு படுத்துவதும் நியாயமற்ற உரிமைகளைக் குறைப்பதுமே சமத்துவத்தின் நோக்கமாயிருக்க வேண்டும். சமத்துவத்தின் விளைவு நியாய மற்ற உரிமைகளை அனுமதிப்பதாக இருக்கக் கூடாது, நீதி சாத்திரங்கள் யாவும் சமத்துவம், சுதந்திரம் இவ்விரண்டிலும் அடங்கியுள்ளன.

இப்போதைக்கு வங்காளி சமூகத்தின் கவனம் இந்த நான்கு வேற்றுமை களின் பக்கம் திரும்பியிருக்கிறது. மிகவும் மோசமான பழக்க வழக்கங்களே இன்னும் சீர்திருத்தப்படாதபோது, மற்ற பழக்கங்களைப் பற்றிப் பேசுவதால் பயனிருக்குமென்று தோன்றவில்லை. நாம் ஒரு சில விஷயங்களை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துக் கொள்வோம்.

சமூகம் முழுவதிலும் ஆண்பெண்களுக்கிடையே வழங்கிவரும் வேற்றுமை களில் மிகவும் கொடுமையானதும் வருந்தத்தக்கதும் சொத்தின் வாரிசுரிமை பற்றியதாகும். தந்தையின் சொத்தில் முழு உரிமையும் பிள்ளைக்குத்தான்; பெண்ணுக்கு அதில் பங்கு இல்லை. பிள்ளை, பெண் இருவரும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள்தாம். தாயும் தந்தையும் அவர்களிடம் ஒரேவிதமான கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் தந்தையின் மரணத்துக்குப்பின் பிள்ளை தந்தையின் கோடிக்கணக்கான ரூபாய்களைக் குடியிலும் கூத்தியிலும் இறைக் கலாம்; ஆனால் பெண்ணுக்கு ஒரு அவசியத்தேவைக்குக் கூட அதிலிருந்து ஒரு தம்படி கிடைக்காது. காரணம், திவசம் செய்ய உரிமையுள்ள பிள்ளைதான் சொத்துக்கு வாரிசு என்று சாத்திரம் விதித்திருக்கிறது. இந்த விதி எவ்வளவு பொருத்தமற்றது என்பதை விளக்கத் தேவையில்லை. இந்த விதிக்கு வேறு ஏதாவது பொருத்தமான காரணம் இருக்கிறதா என்று ஆராய்வோம். மனைவிக்குத்தன் கணவனின் சொத்தில் உரிமையுண்டு, ஆகையால் அவளுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு அளிக்கத் தேவையில்லை என்று சொல்லலாம். அப்படியானால் விதவைப் பெண்ணுக்கும், ஏழைக் கணவனை மணந்து கொண்ட பெண்ணுக்கும் ஏன் தந்தையின் சொத்தில் பங்களிக்கக் கூடாது? ஆனால் நாம் இத்தகைய அற்பமான ஆட்சேபங்கள் எழுப்ப விரும்ப வில்லை. ஒரு பெண் தன் கணவன் அல்லது தன் பிள்ளையை அண்டித்தான் சொத்து பெற முடியும் என்ற ஏற்பாட்டையே நாம் ஆட்சேபிக்கிறோம். பிறர் பணம் மூலந்தான் பெண் பணத்துக்கு உரிமை பெற முடியும். பிறரை அண்டியிருக்காவிட்டால் அவளுக்குப் பணமில்லை என்பதில் நமக்கு ஆட்சேபம். கணவன் கெட்டவனாக, முரடனாக, கொடுமை செய்பவனாக

இருந்தாலும் மனைவி எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு அவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்க வேண்டும்; பிள்ளை தான்தோன்றியாக, நன்றி கெட்டவனாக, ஒழுக்கமற்றவனாயிருந்தாலும் தாய் அவனுக்கு அடங்கி இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அவளுக்குப் பணமில்லை. கணவனோ பிள்ளையோ அவளை விரட்டிவிட்டால் அவளது கதி அதோகதிதான். அவள் தனித்து வாழ வழியில்லை. அவள் எல்லாக் கொடுமை களையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆணுக்கோ எல்லா உரிமைகளும் உண்டு. மனைவியின் பணமும் அவனுக்கே உரியது. அவன் விரும்பினால் அவளது செல்வத்தையும் பறித்துக் கொண்டுவிடலாம். அவன் தனித்து வாழலாம். இந்த வேற்றுமை மிகப் பெரிய கொடுமை, அநியாயம்.

இது நல்ல ஏற்பாடாயிற்றே, இதனால் மனைவி கணவனுக்கு அடங்கி யிருப்பாள் என்று பலர் சொல்வார்கள். ஆண் செய்துள்ள ஏற்பாடுகள் எல்லா வற்றின் நோக்கமும் இதுதான்—முடிந்தவரையில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திப் பெண்ணைக் கட்டிப்போட்டு ஆணின் காலடியில் தள்ளிவிடு. ஆண் அவளைக் காலால் உதைக்கலாம், அவள் வாயைத் திறக்கக் கூடாது. பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டிருப்பது நல்லதுதான்; ஆண்களும் ஏன் பெண்களுக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடாது என்று நாம் கேட்கிறோம். பெண்களுக்கு இவ்வளவு கட்டுப்பாடுகள்; ஆண்களுக்கு மட்டும் ஏன் ஒரு கட்டுப்பாடும் இல்லை? பெண்கள் ஆண்களைவிட இயற்கையாகவே கெட்ட வர்களா? அல்லது ஆணின் கையில் கயிறு இருப்பதால் அவன் பெண்ணை இவ்வளவு இறுக்கமாகக் கட்டி வைக்கிறானா? இது அநியாயம் இல்லா விட்டால் வேறு எதுதான் அநியாயம்?

கணவன் பிள்ளையின்றி இறந்தால் மனைவி கணவனின் சொத்துக்கு வாரிசாகிறாள். இந்த விதி சாத்திரத்துக்குப் பெருமைதான். இத்தகைய ஒரு சில விதிகள் இருப்பதால்தான் நாம் பண்டைய ஆரிய சாத்திரவிதிகளைச் சில அம்சங்களில் ஐரோப்பிய சாத்திர விதிகளைவிடச் சிறந்ததாகக் கூறிப் பெருமைப்படுகிறோம். ஆயினும் மேலே குறிப்பிட்ட விதி மிகச் சிறந்ததல்ல; ஏனென்றால் மனைவி சொத்துக்கு வாரிசானாலும் அவள் அதை விற்கவோ யாருக்காவது கொடுக்கவோ முடியாது. இந்த உரிமை எம்மாத்திரம்? அந்தச் சொத்தைக் கொண்டு அவள் தன்னைப் பராமரித்துக் கொள்ளலாம், அவ்வளவுதான், ஒழுக்கங் கெட்டபிள்ளை தகப்பனின் சொத்தைக் கெட்ட விஷயங்களில் வாரி இறைக்கலாம்; சாத்திரம் அதை ஆட்சேபிக்காது. ஆனால் ராணி சுவர்ணமயி போன்ற அறஉணர்வு மிக்க ஒரு பெண் பிறரது உயிரைக் காப்பாற்றக் கூடச் சிறிது நிலத்தைத் தானம் செய்ய முடியாது! ஏனிந்த வேற்றுமை? இந்தக் கேள்விக்கு நிறைய பதில்கள் கிடைக்கும். பெண்கள் அறிவில் குறைந்தவர்கள், சபல மனம் படைத்தவர்கள், செல்வத்தை நிர்வகிக்க இயலாதவர்கள். ஆகையால் அவர்கள் சொத்தைப் பாழாக்கி விடுவார்கள். அவர்களுடைய வாரிசுகளுக்கு இழப்பு ஏற்படும். நாம் இந்தக்

கருத்தை ஏற்கவில்லை. அறிவிலோ, உறுதியிலோ நிர்வாகத் திறனிலோ ஆணுக்குப் பெண் இளைத்தவளல்ல. சொத்துக்களைப் பாதுகாக்கத் தேவையான நிர்வாக அனுபவத்தில் அவள் சற்றுக் குறைந்தவள்தான்; ஆனால் இதற்கும் காரணம் ஆண்களே. ஆண்கள்தாம் பெண்களை அடைத்து வைத்திருக்கிறார்கள். பெண்களுக்குச் சொத்துக்களை நிர்வகிக்கும் வாய்ப்புத் தருவதில்லை. ஆண்கள் இந்த வாய்ப்பைப் பெண்களுக்குத் தந்து, பிறகு அவர்களிடம் நிர்வாகத் திறனை எதிர்பார்க்கட்டும். ஆட்டின் தலையை முன் புறமும் உடலைப் பின்புறமும் வைத்து ஆட்டை வெட்டமுடியாது.

பெண் கல்வியறிவற்றிருப்பது ஆணின் குற்றத்தால். ஆனால் இந்தக் குற்றத்துக்கான தண்டனையும் பெண்ணே பெறுகிறாள். என்ன நியாயம் இது?

பெண்ணின் சொத்துரிமை பற்றி ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு வந்தது. ஒழுக்கங்கெட்ட மனைவி தன் இறந்த கணவனின் சொத்தைப் பெறலாமா என்பதுதான் வழக்கின் சாரம். பெறலாம் என்றார் நீதிபதி. உடனே நாடெங்கும் பெருங்கூக்குரல் எழுந்தது. இந்துப் பெண்ணின் பதிவிரதைத் தன்மைபோய் விட்டது! இனி ஒரு விதவையும் ஒழுக்கத்தோடு இருக்க மாட்டாள்!...சாதாரணமாக வங்காளிகள் தாமாக எந்தக் காரியத் துக்கும் சந்தா கொடுத்துவிட மாட்டார்கள். அரசாங்கத்தின் கட்டாயமிருந்தால் தான் கொடுப்பார்கள். ஆனால் இந்தத் தீர்ப்பு அவர்களை மிகவும் பாதித்து விட்டது. அவர்கள் தங்களாகவே பணம் சேர்த்துப் பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்ய முனைந்து விட்டார்கள்! ஆங்கில, வங்காளிப் பத்திரிகைகள், “ஐயோ, பெண்களின் தூய்மை போய்விட்டதே!” என்று ஓலமெழுப்பி, மேல்கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதற்காக நிதியுதவி செய்ய வேண்டுகோள் விடுத்தன. இறுதியில் என்ன ஆயிற்று என்று நமக்குத் தெரியாது, ஏனெனில் நாம் வேண்டுமென்றே இந்திய செய்திப்பத்திரிகைகளைப் படிப்பதில்லை. அது போகட்டும். இந்தத் தீர்ப்பை இவ்வளவு பயங்கரமாகக் கருதுபவர்களிடம் நாம் ஒன்று கேட்க விரும்புகிறோம். ஒழுக்கங்கெட்ட பெண்ணுக்குச் சொத்துரிமை கூடாதுதான். அப்போது தான் ஒழுக்கக் கேடு கட்டுப்பாட்டி லிருக்கும். ஆனால் அதே சமயத்தில் ஒழுக்கங்கெட்ட ஆணுக்குச் சொத்துரிமை கிடையாது என்ற விதி இயற்றக் கூடாதா? சொத்துரிமையை வைத்துப் பயமுறுத்திப் பெண்ணின் ஒழுக்கத்தைக் காப்பாற்ற முயல்பவர்கள் அதே முறையில் ஆணின் ஒழுக்கத்தைக்காக்க ஏன் முயல்வதில்லை? ஒழுக்கங்கெட்ட பெண் ணுக்கு வாரிசுரிமை இல்லை, ஒழுக்கங்கெட்ட ஆணுக்கு மட்டும் ஏன்? அவன் ஆண் என்பதாலா? இதுதான் தரும சாத்திரம் என்றால், அதரும சாத்திரம் எது? இதுதான் சட்டம், நீதி என்றால், அநீதி எது? இந்தச் சட்டத்தை ஆதரித்து நிதி திரட்டுவது தேசபக்தி என்றால், எதுதான் பாவம்?

பெண்ணின் தூய்மை காக்கப்பட வேண்டியதுதான், அதற்காக எவ்வளவு

கட்டுப்பாடுகள் செய்யப்பட்டாலும் அதில் எவருக்கும் ஆட்சேபமில்லை. ஆனால் ஆணுக்கு ஏன் ஒரு கட்டுப்பாடும் இல்லை? அவன் வேசியையோ, பிறன்மனைவியையோ நேசித்தால் அவனை ஏன் யாரும் தண்டிப்பதில்லை? சாத்திரம் பலவிதத் தடைகள் விதித்துள்ளது. ஆண் ஒழுக்கமின்றி நடந்து கொள்வதும் தவறுதான் என்று எல்லோரும் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஆணைச் சிறிது நிந்திப்பார்கள். அவ்வளவுதான். பெண்ணின் மேல் செய்யப்படும் கட்டுப்பாடுகள் ஆணுக்கில்லை. வெறும் நிந்தைப் பேச்சால் என்ன பயன்? ஒழுக்கங்கெட்ட ஆணை சமூகம் தண்டிப்பதில்லை. ஒழுக்கங் கெடும் பெண் வெளியில் முகத்தைக் காட்ட முடியாது; அவளுடைய உற வினர்கள் நஞ்சூட்டி அவளைக் கொல்லக்கூட முயல்வார்கள். ஆண் ஒளிவு மறைவின்றி வண்டியில் சவாரி செய்து கொண்டுபோய் வேசியுடன் இரவைக் கழித்துவிட்டு இரவு கழிந்ததும் வீடு திரும்புகிறான். அவன் மனைவி அவனது கால்பட்ட தண்ணீரைப் பருகி மகிழ்கிறாள். யாரும் அவனைக் குறை கூறுவ தில்லை. சமூகத்தில் அவனது பெருமை குறைவதில்லை. யாரும் அவனுடன் பழகத் தயங்குவதில்லை. அவன் விரும்பினால் நாட்டின் தலைவனாகக் கூட ஆகிவிடலாம். இது ஆண்-பெண்ணுக்கிடையேயுள்ள ஒரு பெரும் வேற்றுமை.

இன்னொரு மோசமான வேற்றுமை-நம்நாட்டில் மிகக் கீழான சமூகநிலை யிலுள்ள பெண்களைத் தவிர மற்ற பெண்கள் வேலை செய்து பணம் சம்பாதிக்க முடியாது. சாதாரணமாக, வேலை செய்யும் ஆண் தன் மனைவியைப் பராமரிக்கிறான் என்பது உண்மைதான். ஆனால் சில குடும்பங்களில் பெண்களைப் பராமரிக்கக்கூடிய ஆண்மகன் இல்லை. குறிப்பாக நாம் வங்காளி விதவைகளின் நிலையைப் பற்றித்தான் சொல் கிறோம். அநாதை வங்காளி விதவைகளின் சேரற்றுக்கஷ்டம் எல்லோரு மறிந்ததே; அதைப் பற்றி விரிவாக எழுதத் தேவையில்லை. அவர்கள் வேலை செய்து வயிறு வளர்ப்பதைத் தடுப்பது சமூகத்தின் கொடிய செயல். பெண்கள் வேலைக்காரிகளாகவோ, சமையல்காரிகளாகவோ பணிபுரியலாந்தான்; ஆனால் கண்ணியமான குடும்பப் பெண்கள் இந்தத் தொழில்களைச் செய்ய விரும்பமாட்டார்கள்; இதைவிடத் தற்கொலை செய்துகொள்வதே மேல் என்று கருதுவார்கள். அவர்கள் வேறு பணி செய்ய இயலாமைக்கு மூன்று காரணங்கள் உண்டு. ஒன்று— அவர்கள் சமூக வழக்கப்படி வீட்டுக்கு வெளியே போக இயலாது. வீட்டுக்கு வெளியே போகாமல் சம்பாதிக்க முடியாது. இரண்டு—நம் பெண்கள் கல்வியறிவும் தொழிற்பயிற்சியும் அற்ற வர்கள்; ஆகையால் அவர்களால் சம்பாதிக்க இயலாது. மூன்று— வெளி நாடுகளிலிருந்தும் வேலைக்குப் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டு ஆண்களே ஆபீஸ்வேலை, தொழில், வியாபாரம் முதலிய துறைகளில் பணி செய்து சம்பாதிக்க இயலாதபோது, பெண்களால் என்ன செய்ய முடியும்?

இந்த மூன்று தடைகளையும் சமாளிக்க ஒரேவழி—கல்வி. மக்களுக்கு நல்ல

கல்வி கிடைத்தால், குறிப்பாகப் பெண்கள் கல்விப் பயிற்சி பெற்றால் அவர்கள் வீட்டுக்குள்ளே அடைந்து கிடக்கும் வழக்கத்தைக் கைவிடுவார்கள். கல்வி இருந்தால் பெண்களுக்கு வேலை செய்து சம்பாதிக்கத் திறமை பிறக்கும். நம் நாட்டு ஆண்களும் பெண்களும் கல்வியோடு எல்லா வகைத் தொழில் களிலும் பயிற்சி பெற்றால், வெளிநாட்டுத் தொழிலாளியும் வியாபாரியும் அவர்களுடைய சோற்றைப் பறித்துக் கொள்ள முடியாது. எல்லாவித சமூகத் தீமைகளையும் நீக்க ஒரே வழி கல்விதான்.

நாம் இக்கட்டுரையில் கூறியுள்ள செய்திகள் உண்மையாயிருந்தால் நம் நாட்டுப் பெண்களின் நிலை மிகவும் பரிதாபமானது. இந்த நிலையை மாற்ற யார் என்ன செய்திருக்கிறார்கள்? பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகர் அவர்களும் பிரும்ம சமாஜத்தினரும் இதற்காக நிறைய முயற்சி செய்திருக் கிறார்கள். அவர்களது புகழ் என்றும் நிலைத்திருக்கட்டும்! ஆனால் சமூகத்தில் இவர்கள் ஒரு சிலரைத் தவிர வேறுயாரும் எந்த முயற்சியும் மேற்கொள்ள வில்லை. நாட்டில் அநேக அசோசியேஷன்கள், சபைகள், சொசைட்டிகள், கிளப்புகள் இருக்கின்றன. சிலவற்றின் நோக்கம் அரசியல் முன்னேறறம், சில வற்றின் நோக்கம் சமூக முன்னேற்றம், வேறு சிலவற்றின் நோக்கம் மதப் பிரசாரம், சிலவற்றின் நோக்கம் ஒழுக்கக் கேடு; ஆனால் இவற்றில் எதுவும் பெண்ணினத்தின் முன்னேற்றத்துக்காகக் கவலைப்படுவதில்லை. விலங்கு களைத் துன்புறுத்துவதைத் தடுக்கக் கூட ஒரு சங்கம் இருக்கிறது; ஆனால் வங்காள ஜனத் தொகையில் பாதியான பெண்ணினத்தின் நலனுக்காக உழைக்க ஒரு சங்கமும் இல்லை. பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கால் நடை விடுதிகள் இவற்றுக்காகப் பணம் தாராளமாகச் செலவு செய்யப் படுவதை நாம் பார்த்திருக்கிறோம்; ஆனால் வங்காளி சமூகமாகிய கால்நடை விடுதியைச் சீர்திருத்த ஒன்றும் செய்ய முடியாதா?

செய்ய முடியாது; ஏனென்றால் அதில் வேடிக்கை விநோதம் எதுவுமில்லை. செய்ய முடியாது; ஏனெனில் அதன் மூலம் ராய்பகதூர், ராஜா பகதூர், ஸ்டார் ஆஃப் இந்தியா போன்ற பட்டங்கள் கிடைக்காது; முட்டாள்களின் கைதட்டல் தான் கிடைக்கும். ஆகவே யார்தான் இத்தகைய முயற்சி செய்ய முன் வருவார்கள்?

(வங்க ஆண்டு 1282 கார்த்திக் மாத 'வங்கதர்சன் இதழில் முதலில் வெளியான இந்தக் கட்டுரை 'சாம்ய' என்ற கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

மக்கள் கல்வி

வங்காளத்தில் ஆறுகோடியே அறுபது லட்சம் மக்கள் வசிப்பதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து தெரிகிறது. இந்த ஆறுகோடியே அறுபது லட்சம் மக்கள் சாதிக்க முடியாத காரியமெதுவும் உலகில் இருக்க முடியாது. ஆனால் வங்காளிகளால் எந்தக் காரியத்தையும் சாதிக்க இயலவில்லை. இதற்கு நிச்சயம் ஏதோ ஒரு காரணமிருக்கிறது. இரும்பால் செய்யப்படும் கருவியால் கல்லைக்கூடத் துளைத்துவிடலாம். ஆனால் வெறும் இரும்புத் தண்டுக்கு அந்தத் திறன் இல்லை. அதற்கு இரும்பைப் பல வகைகளில் பதப்படுத்தி தீட்டிக் கூர்மையாக்க வேண்டும். அப்போதுதான் இரும்பு உறுதியான எஃகு ஆகும். அதேபோல் மனிதனுக்கும் பயிற்சியளித்து அவனைப் பக்குவப்படுத்தினால் தான் அவனால் எதையும் சாதிக்க இயலும். வங்காளிகளால் ஒரு காரி யத்தையும் சாதிக்க இயலாமைக்குக் காரணம் வங்காளத்தில் மக்கள் கல்வி இல்லாமைதான். வங்காளத்தைப் பல வகைகளிலும் முன்னேறச் செய்ய முயற்சிப்பவர்கள் தங்கள் தங்கள் கல்வியறிவைக்காட்டிக் கொள்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள்; அவர்கள் மக்கள் கல்வியைப் பற்றி நினைப்பதில்லை.

பள்ளிகளில் புத்தகங்கள் மூலம் இலக்கணம், இலக்கியம், கணக்கு கற்றுக் கொடுத்து ஏழுகோடி மக்களுக்குக் கல்வியளிப்பது ஒரு போதும் சாத்திய மில்லை. இந்த வகைக் கல்வி உண்மையான கல்வியுமல்ல. மக்கள் அவரவரது கடமைகளைத் திறமையாகச் செய்யும் வகையில் அவர்களுக்கு ஊக்கமும் பயிற்சியும் அளிப்பதே உண்மையான கல்வியாகும். இலக்கணமும் கணக்கும் படிப்பதால் இந்தக் கல்வி பெறமுடியாது. ராம் மோகன்ராய் முதல் ஃபடிக் சாந்த் அவர்கள் வரை ஆங்கிலக்கல்வி பயின்ற எவரும் இதுபற்றி எதுவும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை.

ஐரோப்பாவில் இத்தகைய மக்கள் கல்வி பல வகைகளில் அளிக்கப் படுகிறது. பிரஷியா போன்ற பல நாடுகளில் எல்லாப் பாமர மக்களும் கல்வி பெறப் பள்ளிகள் உண்டு. அங்கெல்லாம் செய்திப் பத்திரிகைகள் மக்கள் கல்வி பரவ இன்னொரு சாதனமாகச் செயல்படுகின்றன. செய்திப் பத்திரி

கைகள் மக்கள் கல்விக்கு எவ்வளவு தூரம் உதவக் கூடுமென்பதை நம் நாட்டு மக்கள் எளிதில் புரிந்து கொள்ள இயலாது.

இந்த நாட்டில் ஒவ்வொரு மொழியிலும் பத்துப்பதினைந்து செய்திப் பத்திரிகைகள் உள்ளன. சில பத்திரிகைகளுக்குச் சந்தாதார்கள் இருநூறு பேர், சில பத்திரிகைகளுக்கு ஐநூறு பேர். மொத்தம் ஐயாயிரம் அல்லது ஏழாயிரம்பேர் இந்தப் பத்திரிகைகளைப் படிக்கிறார்கள். ஐரோப்பாவிலோ ஒவ்வொரு நாட்டிலும் ஆயிரக்கணக்கான செய்திப் பத்திரிகைகள். ஒவ் வொரு பத்திரிகைக்கும் ஆயிரக்கணக்கான சந்தாதார்கள். படிப்பவர்கள் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில். நகரத்துக்கு நகரம், கிராமத்துக்குக் கிராமம் சபைகள் உண்டு; அவற்றில் உரைகள் நிகழ்வதுண்டு. யாருக்காவது ஏதாவது சொல்லவேண்டியிருந்தால், அவர் அக்கம்பக்கத்திலுள்ள எல்லோ ரையும் கூப்பிட்டுத் தாம் சொல்லவிரும்பியதைச் சொல்லுவார். அதே பேச்சு நூற்றுக்கணக்கான செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகி, நூற்றுக் கணக்கான நகரங்களிலும் கிராமங்களிலும் படிக்கப்பட்டு விவாதிக்கப்படும். இவ்விதம் லட்சக்கணக்கானவர் கல்விப் பயிற்சி பெறுவர். ஐரோப்பியர் விருந்துகளில் கலந்து கொண்டு சுவையான உணவை அருந்தியவாறே பல விஷயங்களை விவாதித்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள். இத்தகைய அனுபவமே நமக்கில்லை. நம்நாட்டுச் செய்திப் பத்திரிகைகளின் மோசமான நிலையை முன்பே குறிப்பிட்டுள்ளோம். அவற்றில் வெளியாகும் பேச்சுக்கள் மக்கள் கல்வியை நெருங்குவது கூட இல்லை. இதற்குப் பல காரணங்கள்; அவற்றில் ஒன்று இந்தப் பேச்சுக்கள் நாட்டு மொழிகளில் நிகழ்த்தப்படுவதில்லை. ஒரு சிலரே அவற்றைக் கேட்கிறார்கள், ஒரு சிலரே அவற்றைப் பத்திரிகைகளில் படிக்கிறார்கள், வெகு சிலரே அவற்றைப் புரிந்து கொள்கிறார்கள். இந்தப் பேச்சுக்கள் பெரும்பாலும் சாரமற்றவையா யிருப்பதால் இவற்றால் மக்களுக்குக் கல்வியறிவு கிடைப்பதில்லை.

தற்போது இந்த நிலை இருந்தாலும், எப்போதுமே நம் நாட்டில் மக்கள் கல்விக்கான வாய்ப்பு இருந்ததில்லை என்று சொல்ல முடியாது. மக்கள் கல்விக்கான வழிமுறைகள் இல்லாதிருந்தால் புத்தர் எப்படி பாரதநாடு முழுவ துக்கும் பௌத்த மதத்தைக் கற்பித்தார்? பௌத்த மதத்தின் சிக்கலான வாதங்களைப் புரிந்து கொள்வதற்குள் தற்காலத் தத்துவவாதிகளின் நெற்றி வியர்வை காலை நனைத்து விடுகிறது. மாக்ஸ்முல்லர் புத்தமதக் கொள்கை களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்குச் சான்று 'கல்கத்தா ரெவ்யூ'வில் இருக்கிறது. இத்தகைய சிக்கலான தத்துவங்கள், நிர்வாண வாதம், அகிம்சைக் கொள்கை இவற்றைக் கொண்ட, எளிதில் புரிந்து கொள்ள முடியாத பௌத்த மதத்தைப் புத்தரும் அவருடைய சீடர்களும் நம்நாடு முழு வதிலும் இல்லறத்தான், துறவி, பண்டிதன், முட்டாள், பிராமணன், சூத்திரன்

முதலிய எல்லோருக்கும் போதித்தனர். அப்போது மக்கள் கல்விக்கான வழி முறைகள் இல்லையா? நாடு முழுவதையும் வென்று, வேரூன்றி, சமத்துவத்தைப் போதித்த பௌத்த தருமத்தை சங்கராச்சாரியார் அழித்து மறுபடியும் இந்து மதத்தைப் போதித்தாரே, அப்போது மக்கள் கல்விக்கான வழிமுறைகள் இல்லையா? அண்மையில்தானே சைதன்ய தேவர் ஒரிஸ்ஸா முழுவதிலும் வைணவ மதத்தைப் பரப்பினார்!... இதற்கு மாறாக இப்போது ராம் மோகன் ராயிலிருந்து கல்லூரி மாணவர்கள் கோஷ்டி வரை மூன்றரைத் தலைமுறை களாகப் பிரும்ம சமாஜக் கொள்கையைப் பரப்பியும் மக்களிடையே அது பரவவில்லை. காரணம் முன்பு மக்கள் கல்விக்கான வழிமுறைகள் இருந்தன. இப்போது இல்லை.

மக்கள் கல்விக்கான ஒரு வழி அண்மைக்காலம் வரை இருந்தது, இப்போது இல்லை. கதாகாலட்சேபத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். ஒவ்வொரு கிரா மத்திலும் நகரத்திலும் கொழுக்கு மொழுக்கு உடம்பும் கருப்பு நிறமும் கொண்ட கதாகாலட்சேபக்காரர் ஆசனத்திலமர்ந்து கொண்டு, கிழிந்த காகிதக்கட்டு ஒன்றை முன்னால் வைத்துக் கொண்டு சீதையின் தூய்மை, அர்ஜுனனின் வீரம், லட்சுமணனின் சத்திய விரதம், பீமனின் புலனடக்கம், ராட்சசியின் காதல் பெருக்கு, ததீசியின் தியாகம் இவற்றைக் கூறும் சம்ஸ்கிருத சுலோகங்களை இனிய குரலில் பாடி சாதாரண மக்களுக்கு விளக்குவார். கலப்பை உழுபவனும், பஞ்சு அடிப்பவனும், சோற்றுக்கில்லாதவனும்கூட 'அறம் நிலையானது, தெய்வீகமானது; சுயநலம் நிந்தனைக்குரியது, பிறருக்காக வாழவேண்டும். கடவுள் இருக்கிறார், அவர்தான் பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து அழிப்பவர். பாவத்துக்குத் தண்டனையும் புண்ணியத்துக்கு நற்பலனும் உண்டு; அகிம்சையே பெரிய அறம், மக்கள்வேலையே சிறந்த கடமை' என்று அறிந்து கொள்வான். அந்தக் கதாகாலட்சேபக்காரர் எங்கு போனார், ஏன் போனார்? அவர் மறைந்ததற்குக் காரணம் நவீன வங்காளி இளைஞனின் கெட்ட ரசனைதான். பன்றி மேய்த்து வந்த குல்கி தன் தொழிலை விட்டுவிட்டு வேசித் தொழில் தொடங்கிவிட்டாள். அவளது குரலினிமையில் மயங்கி விட்டான் இளைஞன். அவளுடைய பாட்டுக்கு முன் கதாகாலட்சேபம் எம்மாத்திரம்! தட்ச யாகத்தில் சதியின் உயிர்த்தியாகத்தைப் பற்றிக் கேட்டு என்ன பிரயோசனம்! பிராந்தி சாப்பிட்டுவிட்டு நாடகத்துக்குப் போய்க் குல்கியின் பாட்டைக் கேட்கலாம், வா! அரைகுறை ஆங்கிலம் கற்று, அறநெறி யிலிருந்து வழுவி, நடத்தை கெட்ட வங்க இளைஞனின் குற்றத்தால் மக்கள் கல்விக்கு உதவியாயிருந்த காலட்சேபக்கலை அழிந்துவிட்டது. ஆங்கிலக் கல்வியின் விளைவாக மக்கள் கல்வியின் கருவிகள் கொஞ்சங் கொஞ்சமாக மறைகின்றனவேயன்றி வளரவில்லை.

இந்த நிலைக்கு முக்கிய காரணம்—கற்றவனுக்கும் கல்லாதவனுக்கு மிடையே நல்லுறவு இல்லை. கற்றவன் கல்லாதவனைப் பொருட்படுத்துவ

தில்லை, அவனுடைய மனதைப் புரிந்து கொள்வதில்லை. ராமா உழுது சாகட்டும், எனக்குக் கோழிக்கறி கிடைத்தால் போதும். ராமா எப்படி வாழ் கிறான், என்ன நினைக்கிறான், அவனுக்கு எதனால் துன்பம் எதனால் இன்பம் என்பதையெல்லாம் சற்றும் சிந்திப்பதில்லை நமது ஃபடிக்சாந்த். ஃபடிக் சாந்தின் கவலையெல்லாம் இங்கிலாந்திலுள்ள பாசெட் துரையும், இந்த நாட்டி லுள்ள சர் ஆஷ்லி ஈடனும் அவருடைய சொற்பொழிவைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதுதான். ராமா எக்கேடு கெட்டுப் போகட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை. நாட்டுமக்கள் ஆறுகோடி அறுபது லட்சம் பேரில் ராமா இனத்தவர் ஆறுகோடி ஐம்பத்தொன்பது லட்சம் தொண்ணூற்று ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரம் பேர். அவர்களுக்கு ஃபடிக் சாந்தின் சிந்தனைகள் புரியாது...புகழால் என்ன பயன்? ஆங்கிலேயர் பாராட் டினால் என்ன பயன்? ஆறுகோடி அறுபது லட்சம் மக்களின் அழுகையொலி வானத்தைப் பிளக்கிறது. வங்காளிகளுக்குக் கல்வியறிவில்லை. வங்காளத்தில் கற்றவர் இல்லை என்பதை மெத்தப்படித்தவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

கற்றவர்கள் கல்லாதவர்களை அழைத்துத் தாங்கள் கற்றுக் கொண்டதை அவர்களுக்குப் போதித்தால், கல்லாதவர்களும் கல்வி பெறுவர். இந்தக் கருத்து வங்காளம் முழுவதும் பரவ வேண்டும். கற்றவர் கல்லாதவருடன் பழகினா லன்றி இது சாத்தியமில்லை. கற்றவருக்கும் கல்லாதவருக்குமிடையே நல்லுறவு தேவை.

(வங்க ஆண்டு 1285 அக்ரஹாயண் மாதத்தில் 'வங்க தர்சன்' இதழில் முதலில் பிரசுரமான இந்தக் கட்டுரை 'விவித பிரபந்த' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)

ராம்தன் போத்

வங்காளி இலக்கியக் காட்டில் "வங்காளிக்கு உடல்வலிமை இல்லை" என்ற அழுகை கேட்கிறது. இந்தப் புதிய விழிப்புணர்வுக் காலத்தில் வங்காளியின் உடைந்த குரல் "வங்காளிக்கு உடல்வலிமை இல்லையே!" என்று தெளிவில்லாத ஓலத்தையெழுப்புகிறது. வங்காளிக்கு உடல்வலிமை இன்மைதான் அவனுடைய எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்.

வங்காளிக்கு ஏன் உடல்வலிமை இல்லை என்பதை ஆராய்ந்தோமானால் வங்காளத்தில் உணவு இல்லாததுதான் வங்காளியின் வலிமை இன்மைக்குக் காரணம் என்று தெளிவாகிறது. ஒரு தாய் ஒரே சமயத்தில் பல குழந்தைகளைப் பெற்றால் எல்லாக் குழந்தைகளுக்கும் போதுமான தாய்ப்பால் கிடைக்காது. அது போல் வங்காளத்தில் நிறைய மக்கள் பிறப்பதால் நாட்டில் விளையும் உணவு அவர்களுக்குப் போதவில்லை. உலகில் வேறெந்த நாட்டிலும் இவ்வளவு அதிக மக்கள் இல்லையென்று தோன்றுகிறது. வங்காளத்தின் தாழ்ந்த நிலைக்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கந்தான். இதன் விளைவாக உணவுப் பற்றாக்குறை, உணவுப் பற்றாக் குறையால் ஊட்டச் சத்துக் குறைவு, உடல் மெலிவு, உடல் மன நோய்கள் என்று வரிசையாகத் தொடர் விளைவுகள்.

பலர் சொல்லலாம்: "நாட்டில் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவுக் கஷ்டமில்லை. எனினும் அவர்கள் பட்டினிகிடக்கும் தாழ்ந்த இனத்துப் பொதுமக்களைவிட உடல்வலிமை குறைந்திருக்கிறார்கள். பார்க்கப்போனால் அவர்கள்தான் உண்மையில் குரங்கு போலிருக்கிறார்கள்." உண்மைதான். ஆனால் உணவுப் பஞ்சத்தின் பாதிப்பு ஒரு தலைமுறையில் மறைந்து விடாது. தலைமுறை தலைமுறையாகக் குரங்கு போலிருப்பவர்கள் ஓரிரு தலைமுறைகள் வயிறு நிரம்ப சாப்பிடு வதால் மனிதர் போலாகிவிட முடியாது. மேலும் பெரிய வீட்டுப்பிள்ளைகள் அதிகம் நடமாடுவதில்லை. ஆகையால் அவர்களுக்குப் பசியெடுப்பதில்லை. அவர்களால் தயாரிக்கப்பட்ட உணவை நன்றாகச் சாப்பிட முடிவதில்லை. சாப்பிட்ட உணவை ஜீரணம் செய்ய முடிவதில்லை. எல்லா நாடுகளிலுமே

பெரிய இடத்துப் பிள்ளைகள் குரங்கு போலத்தானிருப்பார்கள். உடலால் உழைக்கும் சாதாரண மக்களின் உடல் வலிமைதான் நாட்டின் வலிமை.

வேறு பலர் கோபித்துக் கொண்டு சொல்லலாம்: "இந்த மாதிரி ஈவிரக்க மற்ற மல்தூஸ் கொள்கைகளைச் சொல்லிக் கொண்டிருக்காதே. இதை யெல்லாம் நாங்கள் நிறைய கேட்டிருக்கிறோம். நம் நாட்டிலேயே போதுமான உணவில்லையென்றால் அரிசியும் கோதுமையும் எப்படி வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது?" ஒரு நாட்டில் பற்றாக் குறையாயிருக்கும் பொருளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகலாம் என்று இவர்களுக்குப் புரிவதில்லை. யார் நமக்கு அதிகப் பணம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு நாம் நமது பொருள்களை விற்போம்.

நம் நாட்டில் போதிய அளவு கிடைக்கும் ஒரே உணவு அரிசிதான். அரிசி கிடைக்காததால் பட்டினி கிடப்பவர்களின் எண்ணிக்கை நம் நாட்டில் மிகக் குறைவு. பெரும்பாலான மக்களுக்கு வேறெந்தப் பொருள் கிடைக்கா விட்டாலும் அரிசிக்கு மட்டும் பஞ்சமில்லை. அநேகமாக எல்லோருமே வயிறு நிறையச் சோறு சாப்பிடுகிறார்கள். ஆனால் வயிறு நிறையச் சோறு மட்டும் சாப்பிட்டால் சாப்பிட்டதாக ஆகாது. இப்படிச் சாப்பிடுவதால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம், அவ்வளவுதான். அதனால் உடம்பு வலிமை பெறாது. அரிசியில் சத்துப் பொருள் ஏழு விழுக்காடு மட்டுமே. உடலின் வலிமைக்குத் தேவையான கொழுப்புச் சத்து அரிசியில் கொஞ்சமும் இல்லை.

வெறும் சோறுமட்டும் உண்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம் இல்லை. பெரும்பாலான வங்காளிகள் சோற்றுடன் சிறிது பருப்பு, ஒரு சிறு மீன்துண்டு, கீரை அல்லது உருளைக் கிழங்கு அல்லது வாழைக்காய்த் துண்டையும் சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். இதற்குப் பெயர் 'வெஞ்சனம்'. இந்த உணவில் அரிசி 90 விழுக்காடு; வெஞ்சனம் 10 விழுக்காடுதான். ஆகையால் இந்த உணவை வெறும் சோற்றுணவு என்றே சொல்லலாம். வங்காளத்தின் பெரும்பாலான மக்கள் இந்த உணவைத்தான் உண்கிறார்கள். இதனால் அவர்களால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது. ஆனால் இந்த நிலையில் உடம்பு எளிதில் நோய்வாய்ப்படுகிறது. மலேரியாக் காய்ச்சல் இதற்கு ஓர் உதாரணம். உடம்பில் வலிமை இருப்பதில்லை. ஆகவே வங்கா ளிக்கு உடல் வலிமை இல்லை.

இதையெல்லாம் சிந்தித்துவிட்டுச் சிலர், "வங்காளி இறைச்சியுணவு நிறைய உண்டால்தான் அவனுக்கு வலிமை உண்டாகும்" என்று சொல்கிறார்கள். நாம் அவ்வாறு சொல்லவில்லை. இறைச்சி தேவையில்லை. பால், தயிர், மைதா, பருப்பு, கொத்துக் கடலை, நல்ல காய்கறிகள், இவையே சிறந்த உணவாகும். இந்துஸ்தானி மக்கள் இத்தகைய சத்துணவை உண்கிறார்கள். சோற்றுடன் இந்தப் பொருள்களைப் பெயருக்குத் 'தொட்டு'க் கொண்டு சாப்பிடாமல், இவற்றை அதிகமாக உணவில் சேர்த்துக் கொண்டால் அது நல்ல உணவாகும்.

வங்காளி சோற்றின் அளவைக் குறைத்துக் கொண்டு இந்தப் பொருள்களின் அளவை அதிகப்படுத்திக் கொண்டால் அவன் ஒரு தலைமுறைக்குள் நோயற்ற வனாகவும், இரண்டு மூன்று தலைமுறைகளில் உடல் வலிமை வாய்ந்தவனாகவும் ஆகிவிடுவான்.

நான் இதையெல்லாம் ராம்தன் போதுக்கு விளக்கிக் கொண்டிருந்தேன். அவனது இனத்தவர் எல்லோரும் உடல் மெலிந்தவர்கள். அவன் சொன்னான், "ஐயா, நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனால் நெய், மைதா, பருப்பு, கொத்துக் கடலை இதெல்லாம் எனக்கு எங்கே கிடைக்கும்? அரிசி வாங்கவே திண்டாட்டமாயிருக்கே!"

அவன் கூறியது உண்மைதான். நான் அவனுடைய வீட்டில் நெல்குத்தும் அறையில் டேங்க்கி (நெல் குத்தும் கருவி) யின் மேல் உட்கார்ந்திருந்தேன். முற்றத்தில் ஒரு சொறிநாய் படுத்திருந்ததால் நான் வீட்டுக்குள் நுழையவில்லை. நான் அங்கே அமர்ந்தபடியே ராம்தனின் குடும்பத்தைப் பற்றி விசாரித்தேன். அவனுக்கு நான்கு பிள்ளைகள், ஐந்து பெண்கள். இரண்டு பிள்ளைகளுக்கும் மூன்று பெண்களுக்கும் திருமணம் செய்ய வேண்டும். போத் இனத்தில் பிள்ளை திருமணத்திலும் செலவு; பெண் திருமணத்திலும் செலவு; ஆனால் சற்றுக் குறைவான செலவு. 'குடும்பத்துக்குக் கிழிந்த துணி கிடைக்கவில்லை; நெய்க்கும் மைதாவுக்கும் பருப்புக்கும் எங்கே போவேன்?" என்றான் ராம்தன்.

என்னுடைய பேச்சு பொருத்தமற்றது என்று எனக்குப் புரிந்தது. முற்றத்தில் படுத்திருந்த சொறி நாய்கூட என்மேல் கோபித்துக் கொண்டு குரைக்கத் தயாராவதாகத் தோன்றியது. "ஒரு கைப்பிடி சோறு கிடைக்கவில்லை எனக்கு. இந்தப் பெரிய மனிதர் காலிலே பூட்ஸ் போட்டுக்கிட்டு, டேங்க்கி மேலே உக்காந்துக்கிட்டு நெய்யும் மைதாவும் சாப்பிடச் சொல்றாரு!" என்று அது உறுமுவதாகத் தோன்றிற்று. முடியுதிர்ந்த பூனையொன்று முதுகைத் திருப்பிக் கொண்டு வாலை உயரே நிமிர்த்தியவாறு போயிற்று. இந்த மகிழ்ச்சியற்ற ராம்தன்னின் வீட்டில் பால், வெண்ணெய் நெய் இவை பேசப்படுவதைக் கேட்டு அது என்னைக் கேலி செய்கிறதென்பதில் சந்தேகமில்லை.

நான் ஆச்சரியப்பட்டுச் சொன்னேன், "இப்போ உன் வீட்டிலே நாலு பிள்ளை, மூணு பொண்ணு இருக்கு. அதோட ரெண்டு மருமகள்களையும் சேத்துக்கிட்டிருக்கே!"

ராம்தன் கைகூப்பிக் கொண்டு சொன்னான், "ஆமாங்க, உங்க ஆசீர் வாதத்திலே ரெண்டு மருமகள் வந்திருக்கா."

"அவங்களுக்குக் குழந்தைகள் இருக்கா?"

"இருக்குங்க. ஒருத்திக்கு ரெண்டு பெண்ணு, இன்னொருத்திக்கு ஒரு பிள்ளை."

"உன் குடும்பம் பெரிசா இருந்ததாலே, முன்னாலேயே சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டுக்கிட்டிருந்தே, இப்போ இன்னும் கஷ்டமாயிருக்குமே!"

"ஆமாங்க, ரொம்பக் கஷ்டந்தான்."

"ஏன் இப்படிக் குடும்பத்தைப் பெருக்கிக்கிட்டே?"

என் கேள்வியைக் கேட்டு ராம்தன் ஆச்சரியத்தோடு சொன்னான், "குடும் பத்தை நானா பெருக்கினேன்? பிரும்மான்னா பெருக்கினாரு!"

"பிரும்மா பாவம். அவர் மேலே குத்தஞ்சொல்லாதே! பிள்ளைகளுக்குத் திருமணம் பண்ணி வச்சது நீதான். நீதான் ரெண்டு மருமகள்களைக் கூட்டிக் கிட்டு வந்திருக்கே. நீ உன் பிள்ளைகளுக்குத் திருமணம் முடிச்சி வச்சதால் தானே மூணு பேரன் பேத்திகள் பிறந்திருக்காங்க!"

ராம்தன் வருத்தத்தோடு சொன்னான், "என்னை இப்படியெல்லாம் திட்டா தீங்க. என் பாவம், என் பேரன் ஒருத்தன் செத்துப் போயிட்டான்."

நான் வருத்தந்தெரிவித்து அவனைக் கேட்டேன், "அவன் எப்படி செத்துப் போனான்?"

ராம்தன் முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவனை மேன்மேலும் வற்புறுத்திக் கேட்டுத் தெரிந்து கொண்டேன், அந்தக் குழந்தை சரியான உணவின்றி இறந்துவிட்டதென்று. அதன் தாய் நோய் வாய்ப் பட்டதால் அதற்குத் தாய்ப்பால் கிடைக்கவில்லை. ராம்தன்னின் பசுவும் இறந்து போய்விட்டது. பால் வாங்கிக் கொடுக்க அவனுக்கு வசதியில்லை. சரியான ஆகாரமில்லாததால் குழந்தைக்கு வயிற்றுவலி ஏற்பட்டு அது இறந்து போய்விட்டது.

"மற்ற பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்து வைக்கப் போறியா?"

"பணத்துக்கு ஏற்பாடு பண்ண முடிஞ்சதும் செஞ்சுடுவேன்"

"இந்தக் குடும்பத்துக்கே சோறுபோட முடியலே உன்னாலே. மறுபடியும் ஏன் குடும்பத்தைப் பெருக்கிக்கறே? மருமகள்கள் வந்தால் அவங்களுக்குச் சோறு போடணும். பிறகு அவங்களுக்குக் குழந்தைகள் பிறக்கும்...பிள்ளை களுக்குத் திருமணம் பண்ணணுமா?"

ராம்தன்னுக்கு எரிச்சல் வந்தது. "யாருதான் பிள்ளைக்குத் திருமணம் பண்ணாம இருக்காங்க? சாப்பிட இருந்தாலும் பண்றாங்க, இல்லாட்டியுந்தான் செய்யறாங்க."

"சோத்துக்கில்லாதவன் பிள்ளைக்குத் திருமணம் செய்யறது நல்லதா?"

"உலகம் பூரா இப்படித்தான் நடக்குது."

"உலகம் பூரா இல்லே. நம் நாட்டிலே மட்டுந்தான் இப்படி. நம்மைப் போல முட்டாள்கள் வேறே எந்த நாட்டிலேயும் இல்லை."

"தேசம் பூரா இப்படித்தான் செய்யறாங்க. நான் செஞ்சால் மட்டும் குத்தமா?"

இப்படிப்பட்ட முட்டாளுக்கு எப்படிப் புரிய வைப்பது? "தேசம் பூரா ஜனங்க தூக்குப் போட்டுகிட்டு செத்தால் நீயும் சாவியா?"

ராம்தன் கத்தினான், "நீங்க என்ன சொல்றீங்க, ஐயா! பிள்ளைக்குத் திரு மணம் முடிச்சி வைக்கிறதும் தூக்குப் போட்டுக்கிட்டுச் சாகிறதும் ஒண்ணா?"

எனக்கும் கோபம் வந்துவிட்டது. "ரெண்டும் ஒண்ணுன்னு யாரு சொன்னது? இந்த மாதிரி பிள்ளைக்குத் திருமணம் செய்யறதைவிடக் கழுத்திலே தூக்குப் போட்டுகிட்டு சாகிறது நல்லது. வேறே யாருக்கும் தூக்குப் போட முடியல்லன்னா உன் பிள்ளைக்கே தூக்குப் போடு!" என்று சொல்லி விட்டு எழுந்து வந்து விட்டேன்.

வீட்டுக்கு வந்து, அமைதியாக யோசித்ததில் ராம்தன் மேல் குற்றம் சொல்லி என்ன பயன் என்று தோன்றியது. வங்காளம் முழுதும் ராம்தன்கள் நிறைந்திருக்கிறார்கள். ஏழைப் போத் இனத்தவன், கல்வியறிவற்றவன். கல்வி யறிவுள்ளவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள் கூட ராம்தனை விட மோசமாக இருக்கிறார்கள். வீட்டில் சோறு இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். வெறும் சோற்றில் கொஞ்சம் பருப்பைத் தெளித்துக் கொண்டு சாப்பிடும் பெரிய குடும்பத்தில் எல்லோரும் கட்டையாகக் காய்ந்து கிடக்கிறார்கள். எப்போதும் காய்ச்சல், வியாதி. அப்படியும் இந்த மோசமான சோற்றில் பங்கு பெற, காய்ச் சலும் வியாதியும் சேர்ந்து அனுபவிக்க, பணம் செலவு செய்து அயல் வீட்டிலிருந்து மருமகளைக் கொண்டுவர வேண்டும்! மனித வாழ்க்கையில் இதுதான் அவர்களுடைய ஒரே இன்பம். பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்க இயலாத வங்காளியின் பிறப்பே வீண். ஆனால் திருமணம் செய்து கொண்டபிள்ளை தன் மனைவிக்குச் சோறு போடமுடியுமா என்பதை யோசிக்க வேண்டுமே என்று அவன் நினைப்பதில்லை. பிள்ளையின் பள்ளிப் படிப்பு முடிவதற்குள் அவனுக்கு ஒரு குழந்தைப் பட்டாளம்! அவற் றுக்குச் சோறு போட தாத்தா திண்டாடுகிறான். திருமணமான ஏழைப்பையன் பாடப் புத்தகங்களைத் தூக்கியெறிந்துவிட்டு வேலைக்குச் சிபாரிசு தேடுகிறான். ஆங்கிலேயனின் வீட்டு வாசலில் நின்று கொண்டு 'வேலை! வேலை' என்று கதறுகிறான். அவன் ஒழுங்காகப் படிப்பை முடித்து உருப்படியான மனிதனாக ஆகியிருக்கலாம். தன் வாழ்க்கை முறையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டபின் குடும்ப வாழ்க்கையில் நுழைந் திருந்தால் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆனால் அதற்கு முன்னாலேயே அவன் நம்பிக்கையிழந்துவிட்டான். சிபாரிசுக்கு அலைச்சல், வேலைத் தொந்திரவு, குடும்பத் தொல்லை இவற்றால் அவனது உடலும் மனமும் சீர் குலைந்து விடுகின்றன. திருமணம் ஆகிவிட்டது, குழந்தைகள் பிறந்துவிட்டன, இனி தனக்கேற்ற வாழ்க்கை முறையைத் தேடிக் கொள்ள நேரமில்லை. இப்போதுள்ள ஒரே வழி வேலை தேடுவதுதான். அவன் பிறருக்கு உதவி செய்ய வாய்ப்பில்லை. ஏனெனில் அவனால் தன் மனைவி குழந்தைகளையே பராமரிக்க முடியவில்லை. அவர்கள் 'கொடு! கொடு!' என்று கதறுகிறார்கள். அவர்களுடைய நன்மைக்காக உயிரைப் பிடித்துக் கொண்டு உழைக்கும் அவன் நாட்டுக்கு என்ன நன்மை செய்ய முடியும்? புத்தகம்

படிக்கவோ அறச் சிந்தனைக்கோ நேரமில்லை; குழந்தையின் அழுகையை நிறுத்துவதிலேயே காலம் கழிந்து விடுகிறது. அவன் தேசபக்த சங்கத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கக் கூடிய பணத்தில் மனைவிக்கு வளையல் செய்து போடுகிறான். எனினும் ராம்தனு போன்ற வங்காளிகள் சிறு வயதிலேயே பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்காவிட்டால் அவனும் கெட்டுப் போய் விடுவான், தாங்களும் நாசமாகிவிடுவோமென்று நினைக்கிறார்கள். பிள்ளையிருந்தால் அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்; மனிதர்கள் எல்லோரும் திருமணம் செய்து கொள்ளத்தான் வேண்டும்; சிறுவயதிலேயே பிள்ளைக்குத் திருமணம் செய்து வைப்பதுதான் பெற்றோரின் முக்கிய கடமை—இத்தகைய தவறான கருத்துக்கள் எங்கும் பரவியுள்ள நாட்டுக்கு நன்மை ஏது? பிள்ளை நீந்தக் கற்றுக் கொள்வதற்கு முன்பே, மனைவி என்ற கல்லை அவனுடைய கழுத்தில் கட்டி, கடக்க இயலாத வாழ்க்கைக் கடலில் அவனைத் தள்ளிவிடும் பெற்றோர்கள் உள்ளநாடு முன்னேறுமா?

(வங்க ஆண்டு 1288 பாத்ர மாதத்தில் 'வங்க தர்சன்' இதழில் முதலில் பிரசுரமான இக்கட்டுரை 'விவித பிரபந்த' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

மனிதத் தன்மை எது?

குரு—மனிதத் தன்மை எது என்று புரிந்து கொண்டால் அறத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆகையால் மனிதத் தன்மையை விளக்குகிறேன். மனிதத் தன்மையைப் புரிந்து கொள்ளுமுன் மரத்தின் தன்மையைப் புரிந்து கொள். இதோ ஒரு புல், இங்கே ஒரு ஆலமரம். இவையிரண்டும் ஒரே இனமா?

சீடன்— ஆம், ஒரு வகையில் ஒரே இனந்தான்—தாவர இனம்.

குரு— இரண்டையுமே மரம் என்று சொல்லலாமா?

சீடன்— சொல்லக்கூடாது. ஆலமரத்தைத்தான் மரம் என்று சொல்லலாம். மற்றது புல்தான்.

குரு— இந்த வேற்றுமை ஏன்?

சீடன்— அடிமரம், கிளை, இலை, பூ, பழம் இவையெல்லாம் அடங்கியது மரம். ஆலமரத்தில் இவையெல்லாம் உள்ளன; புல்லில் இல்லை.

குரு— புல்லிலும் இவையெல்லாம் மிகச் சிறிதாக, முதிர்ச்சியடையாத நிலையில் இருக்கின்றன. புல்லை மரம் என்று சொல்ல மாட்டாயா?

சீடன்— புல் மரமாகுமா?

குரு— புல்லை மரமென்று சொல்லாவிட்டால், மனிதனுக்குரிய தன்மைகளெல்லாம் முதிர்ச்சியடையாத நிலையில் உள்ள மனிதனையும் மனிதன் என்று கூற முடியாது. புல்லில் தாவரத் தன்மை இருப்பது போல் ஹாட்டென்டாட் அல்லது சிபேபா இனத்து மனிதனிடமும் மனிதத் தன்மை இருக்கிறது. ஆனால் புல்லை எப்படி மரம் என்று சொல்ல முடியாதோ, அப்படியே ஹாட்டென்டாட்டையும் சிபேபாவையும் சிறப்பான மனிதத் தன்மை கொண்டவனாகக் கருத முடியாது. மரத்தின் உதாரணத்தை விட்டு விடாதே; அப்போதுதான் விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியும். அதோ வளர்ந்திருக்கிறதே மூங்கில்; அதை மரமென்று சொல்லலாமா?

சீடன்— சொல்ல முடியாதென்று தோன்றுகிறது. அதில் அடிமரம், கிளை, இலை இருக்கின்றன. ஆனால் பூ, காய் இல்லையே! அதாவது முழுமையான மரத்தின் தன்மை அதில் இல்லை. ஆகையால் அதை மரமென்று சொல்ல முடியாது.

குரு— உனக்குத் தெரியவில்லை. ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு மூங்கில் பூக்கிறது, காயும் காய்க்கிறது. காய் அரிசி மாதிரி இருக்கும். அதைக் கொண்டு சோறு சமைக்கலாம்.

சீடன்— அப்படியானால் மூங்கிலையும் மரமென்று சொல்ல வேண்டியது தான்.

குரு— எனினும் மூங்கில் ஒருவகைப்புல்தான். ஒரு புல்லைப்பிடுங்கி அதை மூங்கிலுடன் ஒப்பிட்டுப் பார். இரண்டும் பொருந்தும். தாவரவியல் அறிஞர் களும் மூங்கில் புல் இனத்தைச் சேர்ந்தது என்றே கூறுகிறார்கள். ஒரு புல்லுக்கும் இன்னொரு புல்லுக்கும் வளர்ச்சியிலே எவ்வளவு வேற்றுமை, பார். இத்தனைக்கும் மூங்கிலில் முழுமையான வளர்ச்சி இல்லை. மனிதன் முழு மையான வளர்ச்சி பெற்ற நிலையை எட்டினால் அந்த நிலையையே மனிதத் தன்மை என்று கூறலாம்.

சீடன்— அறத்தால் இத்தகைய நிலையை எய்த முடியுமா?

குரு— தாவரத்தின் இத்தகைய வளர்ச்சி சில முயற்சிகளின் பலன்; இந்த முயற்சிகளைப் 'பண்படுத்தல்' அல்லது 'விவசாயம்' என்று கூறுவர். இவை சில இடங்களில் மனிதனால் செய்யப்படுகின்றன, சில இடங்களில் இயற்கையால் செய்யப்படுகின்றன. ஒரு எளிய உதாரணம் சொல்லுகிறேன். இப்போது ஒரு தேவதை உன்னிடம் வந்து, "நான் பூமியில் புல், மரம் இரண்டையும் வைத்தி ருக்கப் போவதில்லை. ஒன்றைமட்டும் வைத்துவிட்டு மற்றதை அழிக்கப் போகிறேன். நீ எதை வைத்துக் கொள்ள விரும்புகிறாய்?" என்று கேட்டால் நீ என்ன சொல்வாய்?

சீடன்— நான் மரத்தையே வைத்துக் கொள்ள விரும்புவேன், இதிலென்ன சந்தேகம்? புல் இல்லாவிட்டால் ஆடுமாடுகளுக்குக் கொஞ்சம் கஷ்டந்தான். மர மிருந்தால் நமக்கு மாம்பழம், பலாப்பழம் இன்னும் மற்ற பழங்கள் கிடைக்குமே!

குரு— முட்டாள்! தானியப் பயிரும் புல்வகைதான் என்று உனக்குத் தெரியாதா? உலகில் புல் இல்லாமற்போனால் நீ சோறு இல்லாமல் செத்துப் போவாய். இந்த நெருஞ்சிச் செடியைக் கவனமாகப் பார். நெல் பயிர் பண் படுத்தப்படுவதற்கு முன் இந்த நெருஞ்சி மாதிரிதானிருந்தது. விவசாயத்தின் விளைவாகத்தான் அது நமக்கு உணவளிக்கும் லட்சுமியாக வளர்ச்சி பெற்றது. இதே மாதிரிதான் கோதுமையும். நீ நிறையச் சோறு சாப்பிட உதவி செய் கிறதே பூக்கோசு, அதுவும் தொடக்க நிலையில் கடற்கரையில் வளரும் ஒரு கசப்பான, அற்பத் தாவரமாகத்தானிருந்தது. பண்படுத்தப்பட்ட பிறகுதான் அது இந்த நிலைக்கு வந்துள்ளது. தாவரங்கள் இந்த மாதிரி விவசாயத்தால் வளர்ச்சி பெறுகின்றன. ஆகையால்தான் இவ்விரண்டு வகைச் செயல் களுக்கும் ஆங்கிலத்தில் 'Culture' அல்லது பண்பாடு என்று பெயர். இதனால் தான் "மனிதத் தன்மையை வளரச் செய்வதே அறம் அல்லது மதம்" (The substance of religion is culture) என்று சொல்கிறார்கள்.

சீடன்— சரி. இந்த விஷயம் எனக்கு இவ்வவளவு காலம் தெரியவில்லை. மனிதனின் முழுமையான வளர்ச்சி என்று எதைச்சொல்வது?

குரு— முளையின் வளர்ச்சி பெரிய மரம். மண்ணைத் தோண்டிப் பார்த்தால் உள்ளே ஒரு நுண்ணிய, கண்ணுக்குக் கூடச் சரியாகத் தெரியாத ஒரு முளை தென்படும். அதுதான் முழு வளர்ச்சியடையும்போது பெரிய ஆலமரமாகிறது. ஆனால் அது இத்தகைய வளர்ச்சி பெறுவதற்கு அதைப் பண்படுத்த வேண்டும். அதற்குச் செழிப்பான மண் வேண்டும்; தண்ணீர் வேண்டும்; வெயில் வேண்டும், நிழலில் அது சரியாக வளராது. மரமாகிய உடலுக்கு வலிமை அளிக்கும் சத்துக்கள் மண்ணில் கிடைக்க வேண்டும். ஆகவே மண்ணுக்கு உரமிட வேண்டும். செடியைப் பாதுகாக்க வேலி போட வேண்டும்... இதையெல்லாம் செய்தால் முளை பெரிய மரமாக வளரும். மனிதனும் இதே மாதிரிதான். குழந்தைதான் முளை. உரிய பண்படுத்தலால் அது உண்மையான மனிதத் தன்மையை எய்தும். எல்லா நற்குணங்களும் பொருந்திய முழுமையான மனிதன் தோன்றுவான். இதுதான் மனிதனின் வளர்ச்சி.

சீடன்— இது எனக்குப் புரியவில்லை. எல்லோரும் எல்லா நற்குணங்களும் பொருந்திய மனிதர்களாக ஆகமுடியுமா?

குரு— முடியுமா இல்லையா என்பது பற்றி இப்போது ஆராயத் தேவை யில்லை. அது ஒரு விரிவான ஆராய்ச்சி. எல்லா நற்குணங்களும் பொருந்திய மனிதன் இதுவரை உண்டாகவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அப்படிப்பட்ட மனிதன் விரைவில் தோன்றவும் வாய்ப்பில்லை. ஆனால் நான் இப்போது விளக்கிக் கொண்டிருக்கும் மதத்தை அல்லது அறத்தை உரிய முறையில் பின் பற்றினால் எல்லா நற்குணங்களுமில்லாவிட்டாலும் பல நற் குணங்கள் பொருந்திய மனிதன் தோன்றுவான். அவனிடம் எல்லா இன்பங் களும் வந்து சேராவிட்டாலும் பல இன்பங்கள் வந்து சேரும்.

சீடன்— என்னை மன்னியுங்கள். மனிதனின் முழுமையான வளர்ச்சி எது என்பதை இன்னும் என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

குரு— புரிந்து கொள்ள முயற்சி செய். மனித உறுப்புகள் இரண்டு வகை. ஒன்று உடல், மற்றது மனம். உடலில் பல புலன்கள் உள்ளன—கை, கால் போன்ற செயற்புலன்கள்; கண், காது போன்ற அறிவுப் புலன்கள்; மூளை, இதயம், சுவாசகோசம், குடல் போன்றவை உயிரை நெறிப்படுத்தும் உறுப்புகள். இவற்றுக்கு உதவியாயிருப்பவை எலும்பு, மச்சை, கொழுப்பு, இரத்தம் முதலியவை, பசி, தாகம் போன்ற உணர்வுகள். இவையெல்லாம் சரியான முறையில் வளர வேண்டும். மனதிற்கும் பல உறுப்புகள்...

சீடன்— மனதைப் பற்றிப் பிறகு தெரிந்து கொள்கிறேன். இப்போது உடலின் வளர்ச்சியை நன்றாக விளக்குங்கள். உடலுறுப்புகள் எல்லாவற்றையும் வளரச் செய்வது எப்படி? குழந்தையின் சிறிய, பலமற்ற கைகள் மற்ற உறுப்புகள்

காலப் போக்கில் தாமாகவே வளர்ந்து வலுப்பெற்றுவிடும். வேறென்ன வேண்டும்?

குரு— நீ குறிப்பிடும் இயற்கையான வளர்ச்சிக்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவை ஊட்டமும் இயக்கமுமாகும். நீ குழந்தையின் கையில் இரத்தம் பாயாதபடி அதன் தோளில் ஒரு கயிற்றை இறுக்கமாகக் கட்டிவை. அப்படிச் செய்தால் அந்தக் கை வளராது, அது செயலிழந்து விடும். அல்லது சூம்பிப் போய்விடும். ஏனென்றால் இரத்தத்திலிருந்து அதற்குக் கிடைக்க வேண்டிய ஊட்டத்தை அது பெறவில்லை. அல்லது கையைக் கட்டக் கூட வேண்டாம், குழந்தை தன் கையை அசையாமல் வைத்திருக்கும்படி ஏதாவது ஏற்பாடு செய். நாளாவட்டத்தில் அந்தக் கை செயலிழந்து போய்விடும். அல்லது காரியங்கள் செய்யத் தேவையான அளவுக்கு அந்தக் கையில் லாகவமிருக்காது. கைகளை எப்போதும் மேலே தூக்கிக் கொண்டு தவம் செய்கிறார்களே, அவர் களுடைய கைகளைப் பார்த்திருக்கிறாயா?

சீடன்— புரிகிறது—பயிற்சியால்தான் குழந்தையின் சிறிய மென்மையான கை வளர்ச்சியடைந்த மனிதனின் கையின் வலிமையையும் லாகவத்தையும் பெறுகிறது. இந்த வளர்ச்சிதான் எல்லோருக்கும் ஏற்படுகிறதே, வேறென்ன வேண்டும்?

குரு— உன் கைகளை இந்தத் தோட்டக்காரனின் கைகளுடன் ஒப்பிட்டுப் பார். நீ உன் கைவிரல்களுக்கு நன்றாகப் பயிற்சியளித்திருப்பதால் ஐந்து நிமிடங்களில் இரண்டு பக்கங்கள் எழுதிவிடுவாய், தோட்டக்காரனோ பத்து நாள் முயன்றாலும் நீ எழுதுவது போல் ஒரு 'க' எழுத்தை எழுதமுடியாது. நீ சற்றும் யோசனையோ முயற்சியோ செய்யாமல் உனக்கு வேண்டிய அளவில் தேவையான எழுத்துக்களை மிக எளிதாக எழுதிக் கொண்டு போகிறாய். இதைப் பார்த்து அவனுக்கு ஒன்றும் புரியவில்லை; ஒரே ஆச்சரியமா யிருக்கிறது அவனுக்கு. நாகரீக சமூகத்தில் நிறையப் பேருக்கு எழுதத் தெரியும்; ஆகையால் இந்தப் பயிற்சியை ஓர் ஆச்சரியமான விஷயமாக யாரும் நினைப்பதில்லை. ஆனால் உண்மையில் இந்த எழுத்துக்கலை மாயாஜாலத்தை விட அதிசயமானது. ஒரு சொல்லை, இந்தப் 'பயிற்சி' என்ற சொல்லைத்தான் எழுதுகிறோமென்று வைத்துக் கொள். முதலில் இந்தச் சொல்லை எழுத்துக் களாகப் பிரிக்க வேண்டும். பிரித்தால் ப-யி-ற்-சி என்று நான்கு எழுத்துக்கள் வரும். இவற்றின் ஒலிகள் காதில் விழும்; பிறகு இவற்றின் உருவத்தை மனக் கண்ணால் பார்த்து ஒவ்வொன்றின் உருவத்தையும் காகிதத்தில் தீட்ட வேண்டும். ஆனால் நீ இந்த எழுத்துக்களை மிக வேகமாக எழுதுகிறாய். நீ அவற்றைப் பற்றிச் சிந்திப்பதாகத் தோன்றாதபடி அவ்வளவு வேகமாக எழுது கிறாய். எழுதுபவர்கள் எல்லாருமே பயிற்சியின் பலனாக இந்த அசாதாரணத திறமையை எய்துகிறார்கள்.

பயிற்சியாலேற்படும் இன்னொரு வேற்றுமையும் தோட்டக்காரனோடு உன்னை ஒப்பிட்டுக் கொள்ளும் போது தெரிகிறது. நீ ஐந்து நிமிடங்களில்

இரண்டு பக்கங்கள் எழுதிவிடுவது போல் தோட்டக்காரன் வயல் முழு வதையும் மண்வெட்டியால் ஐந்து நிமிடங்களில் கொத்திவிடுவான். உன்னால், ஐந்து மணி நேரத்தில் கூட இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. ஏனென்றால் உன் கைகள் இந்த வேலை செய்யப் பயிற்சி பெறவில்லை, அதாவது இந்தத் தொழிலுக்கேற்ற முழுமையான வளர்ச்சியடையவில்லை. ஆகவே உன் கைகளும் தோட்டக்காரனின் கைகளும் ஒவ்வொரு வகையில் வளர்ச்சி பெறவில்லை. முழுமையாக வளரவில்லை. இதோ போல் உன்னை ஒரு பாடகனுடன் ஒப்பிட்டுப்பார். சிறு வயதில் உன் தொண்டைக்கும் பாடகனின் தொண்டைக்குமிடையே அதிக வேற்றுமை இருந்திராது. பல பாடகர்களுக்கு இயற்கையான குரல் வளமில்லை. ஆனால் அவர்கள் பயிற்சி மூலமாகத் தங்கள் குரலை இனியதாதக்கிக் கொள்கிறார்கள். அவர்களது குரல் முழுமையான வளர்ச்சி பெற்று விடுகிறது...சரி, உன்னால் எவ்வளவு மைல் நடக்க முடியும்?

சீடன்— என்னால் நிறைய நடக்க முடியாது. அதிகபட்சம் இரண்டு மைல் நடக்க முடியும்.

குரு— உன் கால்கள் முழுமையான வளர்ச்சியடையவில்லை. அதாவது உன் கை, கால், தொண்டை முதலியன இயற்கையான வளர்ச்சி பெற்றுள்ளன, ஆனால் இவற்றில் ஒன்றுகூட முழுமையான வளர்ச்சியடையவில்லை. உடலின் ஒவ்வோர் உறுப்பின் விஷயமும் இப்படித்தான். உடலின் ஒவ்வோர் உறுப்பும் முழுமையான வவளர்ச்சி பெறாவிட்டால் உடல் முழுமையான வளர்ச்சியடைந்துவிட்டதாகக் கூற முடியாது; ஏனெனில் உறுப்புகளின் வளர்ச்சியில்தான் உடலின் முழுமையான வளர்ச்சி அடங்கியுள்ளது. ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணா. ஓரணாவில் அரைக்காசு குறைந்தால் ரூபாயிலும் அதே குறைவு நேரும். உடலைப் பற்றி நான் கூறியதெல்லாம் மனதுக்கும் பொருந்தும், மனதுக்கும் பல உறுப்புகளுண்டு; இவற்றைத் தன்மைகள் எனலாம். இவற்றில் சிலவற்றின் தொழில் அறிவைச் சேகரித்தல், சிந்தனை செய்தல்; சிலவற்றின் தொழில் செயலுக்கு ஊக்கமளிப்பது—பக்தி, அன்பு, இரக்கம் போன்ற உணர்ச்சிகளைத் தோற்றுவிப்பது; சிலவற்றின் தொழில் மகிழ்ச்சியை அனுபவிப்பது, அழகை ரசிப்பது முதலிய அனுபவங்கள். இந்த மூன்று வகைத் தன்மைகளின் முழுமையான வளர்ச்சி மனதின் முழுமையான வளர்ச்சியாகும்.

சீடன்— அதாவது, அறிவு வளர்ச்சி, சிந்தனைத் திறன், செயல்திறன், அற உணர்வு, ரசனைத் திறன் இவற்றின் வளர்ச்சிதான் மனதின் முழுமையான வளர்ச்சி. உடல் வலிமையுள்ளதாக, நோயற்றதாக, எல்லாவிதமான காரியங்களையும் செய்யத் தக்கதாக இருந்தால் அது உடலின் முழுமையான வளர்ச்சி. கிருஷ்ண—அர்ஜுன—ராம—லட்சுமணர்களைத்தவிர வேறு யாரும் இத்தகைய வளர்ச்சியடைந்திருந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை.

குரு— மனித இனத்தில் உயர்ந்தவர்கள் முயற்சி செய்தால் இந்த வளர்ச்சியை அடைய முடியாது என்று சொல்ல இயலாது. வேறு யுகங்களில் மனித இனம் உண்மையாகவே முன்னேற்றமடையும்போது பல மனிதர்கள் இந்த இலட்சியத்தை எய்திவிடுவார்கள் என்பது என் நம்பிக்கை. சம்ஸ்கிருத நூல்களில் பழங்கால சத்திரிய அரசர்களைப் பற்றிய வருணனையைப் பார்த்தால் அவர்கள் இப்படிப்பட்ட முழுமையான மனிதத் தன்மையை அடைந்திருந்தார்களென்று தெரிகிறது. இந்த வருணனைகளில் பெரும் பாலானவை கவிகளின் கற்பனையில் தோன்றியவை என்பதில் ஐயமில்லை. ஆனால் இத்தகைய வருணனைகள் தாராளமாகக் காணப்படுவதிலிருந்து இத்தகைய இலட்சியம் அந்தக் காலத்துப் பிராமண, சத்திரியருக்கு முன்னால் இருந்தது என்று ஊகிக்கலாம். நானும் இதே இலட்சியத்தைதான் முன்னால் வைக்கிறேன். ஒருவன் எப்படி ஆக விரும்புகிறானோ அதற்கான இலட்சியம் அவன் முன்னே இருக்க வேண்டும். அவனால் அந்த இலட்சியத்தை அடைய முடியாவிட்டாலும் அதற்கு அருகிலாவது போய்ச் சேர முடியும். பதினாறு அணா என்று அறியாத குழந்தையிடம் ஒரு ரூபாய்க்குப் பதிலாக ஓரணாவைக் கொடுத்தாலும் அது திருப்தியடைந்துவிடுமே!

சீடன்— இத்தகைய இலட்சியமானிடனை எங்கும் பார்க்க முடியவில்லையே! இந்த இலட்சியம் எங்கே கிடைக்கும்?

குரு— மனிதனில்லாவிட்டால் என்ன? கடவுள் இருக்கிறாரே! முழுமையான வளர்ச்சியின் ஒரே உதாரணம் கடவுள்தான். அதனால் குணங்களற்ற கடவுளில் அறம் தன் முழுமையை எய்துவதில்லை. குணமற்றவர் நமக்கு இலட் சியமாக இருக்க இயலாது. அத்துவைதவாதிகளின் 'ஒன்றேயான' அறிவுப் பொருளை அல்லது ஹெர்பெர்ட் ஸ்பென்சர் கூறும் 'புரிந்து கொள்ள இயலாத இயற்கைச் சக்தி'யை— அதாவது தத்துவ வாதியின் கடவுளை ஆராதிப்பதால் அறம் முழுமை பெறுவதில்லை. நமது இதிகாச புராணங்களிலும், கிருத்துவர் களின் அறநூல்களிலும் கூறப்படும் குணங்கள் பொருந்திய கடவுளின் ஆரா தனையே அறத்தின் வேர்; காரணம் அவர்தான் நமக்கு இலட்சியமாக இருக்கக் கூடியவர். தனி மனிதத்தன்மையற்ற (impersonal) கடவுளின் ஆராதனை பயனற்றது. தனி மனிதத்தன்மையுள்ள கடவுளை ஆராதித்தலே பலனளிக்கும்.

சீடன்— குணங்கள் வாய்ந்த கடவுளை இலட்சியமாகக் கொள்ள வேண்டு மென்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவரை ஏன் ஆராதிக்க வேண்டும்?

குரு— கடவுளை நம்மால் பார்க்க இயலாது. அவரைப் பார்த்து அவர் வழி நடக்க முடியாது. ஆகையால் அவரை மனதால் நினைக்கத்தான் முடியும். இந்த நினைப்புதான் ஆராதனை. ஆனால் இதை வேண்டா வெறுப்பாகச் செய்தால் பலன் கிட்டாது. சந்தியாவந்தன மந்திரத்தைச் சும்மா உச்சரித்தால் போதாது.

கடவுளின் எல்லா குணங்களும் நிறைந்த தூய்மையான தன்மையைப் பக்தி யோடு இதயத்தில் வைத்துத் தியானம் செய்ய வேண்டும். அன்போடு அவருக்கு நம் இதயத்தை சமர்ப்பிக்க வேண்டும். அவருடைய குணங்கள் நமக்கும் கிட்ட வேண்டும் என்று உறுதியாக விரும்பிக் கொண்டு வேண்ட வேண்டும். இப்படிச் செய்தால் கடவுளின் தூய ஒளி நம் தன்மையிலும் படியும். அவருடைய தூய்மை போன்ற தூய்மையை, அவரது சக்தி போன்ற எங்கும் மங்கலமயமான சக்தியை நாம் முழுமனதோடு விரும்ப வேண்டும். அவர் எப்போதும் நமக்கருகில் இருப்பதாகக் கருத வேண்டும், அவரது தன்மைக்குப் பொருந்திய தன்மையை நாமும் அடைய முயற்சி செய்ய வேண்டும். அதாவது அவரது அண்மை, அவர் வாழுமிடத்தில் நாமும் வசித்தல், அவர் போன்ற உருவம், அவருடன் ஒன்றி விடுதல் இவற்றையெல்லாம் விரும்ப வேண்டும். இப்படிச் செய்தால் நாம் சிறிதுசிறிதாகக் கடவுளுக்கு அருகில் சென்று விடுவோம். இப்படிச் செய்தால் கடவுளுடன் ஒன்றிப் போய்விடலாம் என்று ஆரிய ரிஷிகள் நம்பினார்கள். இதுதான் 'மோட்சம்' (விடுதலை) எனப்படும். மோட்சம் என்பது வேறொன்றுமல்ல—கடவுளை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து கடவுள் தன்மையை எய்துவதுதான். இந்த நிலையை எய்திவிட்டால் எல்லாத்து துன்பங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கும், எல்லா இன்பங்களும் நம்மை வந்தடையும்.

சீடன்— கடவுள் ஒரு பெருங்கடல், நான் ஒரு நீர்த்துளி; நான் அக்கடலில் போய்ச் சேர்ந்துவிடுவேன் என்றுதான் இவ்வளவு காலம் நினைத்துக் கொண் டிருந்தேன்.

குரு— கடவுளை ஆராதிப்பதின் உண்மையான தத்துவப் பொருளை இந்துக்கள் போல் வேறெந்த இனத்தாரும் புரிந்து கொண்டதில்லை. இந்த அழகிய, சத்து மிக்க ஆராதனை முறை இப்போது ஒரு பக்கம் தன்னை வருத்திக் கொள்ளும் பழக்கமாகவும், இன்னொரு பக்கம் கேளிக்கைக் கூத்தாகவும் ஆகிவிட்டது.

சீடன்— இப்போது எனக்கு இன்னொரு விஷயத்தை விளக்குங்கள். உண்மை யான மனிதத் தன்மையின்—அதாவது முற்றிலும் சிறந்த தன்மை யின்—இலட்சியமாக மனிதரெவரும் இல்லை; ஆகையால் கடவுளைத் தியானம் செய்ய வேண்டும். ஆனால் கடவுளின் தன்மை எல்லையற்றது, நமது தன்மையோ அற்பமானது. அவருடைய குணங்கள் எண்ணிக்கையிலும் சரி, வீச்சிலும் சரி மிகப் பரந்தவை. எல்லையற்ற தன்மை அற்பத்தன்மைக்கு எவ்வாறு இலட்சியமாக முடியும்? கடலை மாதிரியாகக் கொண்டு குளம் வெட்ட முடியுமா, ஆகாயம் போல் பந்தல் போட முடியுமா?

குரு— இதற்குத்தான் மதம் பற்றிய வரலாறு தேவைப்படுகிறது. கிருத்த வர்களின் 'புதிய ஏற்பாடு'ம் (New Testament), நம் நாட்டில் இடைச் செருகல்கள்

நீக்கப்பட்ட புராண இதிகாசங்களும் இலட்சிய மத வரலாறுகளாகும். மத வரலாறுகளில் உண்மையான அறச் செல்வர்களின் வரலாறு கூறப்பட்டிருக்கும். பக்தியின் தொடக்க நிலையில் எல்லையற்ற தன்மையுள்ள கடவுள் பக்தனின் இலட்சியமாக இருக்க முடியாதுதான்; ஆனால் சிறந்த குணங்கள் வாய்ந்த மனிதர்களைக் கடவுளின் அம்சமாக அல்லது அவதாரமாகக் கருதி அவர்களை இலட்சியமாகக் கொள்ளலாம். ஆகவே கிருத்துவர்களின் இலட்சியம் ஏசுநாதர், பௌத்தர்களின் இலட்சியம் புத்தர். ஆனால் அறத்தை வளர்க்கவல்ல இத்தகைய இலட்சியங்கள் இந்து நூல்களில் உள்ளது போல் உலகில் வேறெந்த மத நூல்களிலும் இல்லை, வேறெந்த இனத்திலும் இவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. ஜனகர் போன்ற ராஜரிஷிகள், நாரதர் போன்ற தேவரிஷிகள், வசிஷ்டர் போன்ற பிரும்ம ரிஷிகள்—எல்லோருமே நாம் பின்பற்றத்தக்க இலட்சியங்கள். ராமன், தருமன், அர்ஜுனன், லட்சுமணன், பீஷ்மர் ஆகிய சத்திரியர் இன்னும் முழுமையான இலட்சியங்களாவர். ஏசுவும் புத்தரும் துறவு மனப்பான்மை கொண்ட, பற்றற்ற மத ஞானிகள், ஆனால் இந்த சத்திரியர்கள் அப்படிப் பட்டவர்களல்லர்—இவர்களிடம் எல்லா குணங்களும் முழுமையாக மலர்ந்துள்ளன. இவர்கள் அரியணையில் அமர்ந்திருந்தாலும் பற்றற்றவர்கள்; கையில் வில்லேந்தியும் தரும ஞானிகள்; அரசர்களாயிருந்தும் அறிஞர்கள்; பலம் பொருந்தியவர்களாயினும் எல்லா மக்களிடமும் அன்பு கொண்டவர்கள். ஆனால் இந்துக்களுக்கு இந்த இலட்சியங்களுக்கெல்லாம் மேற்பட்ட இன்னோர் இலட்சியமும் உண்டு. இந்த இலட்சியத்துக்கு முன் மற்ற இலட்சியங்கள் மங்கி விடுகின்றன. இந்த இலட்சியத்திலிருந்துதான் தருமர் அறத்தைக் கற்றார்; அர்ஜுனன் இந்த இலட்சியத்தின் சீடன்; ராமனும் லட்சுமணனும் இதன் உறுப்புகள் மாத்திரமே; இதற்கிணையான பெருமைமிக்க பாத்திரம் வேறெதுவும் மனித மொழிகளில் பாடப்படவில்லை. வா, நான் உனக்குக் கிருஷ்ணரை ஆராதனை செய்யக் கற்றுத் தருகிறேன்.

சீடன்— என்ன? கிருஷ்ணரா?

குரு— ஜயதேவர் வருணித்த கிருஷ்ணரையும் தெரு நாடகங்களில் வரும் கிருஷ்ணரையுந்தான் உனக்குத் தெரியும். அதனால்தான் கிருஷ்ணரின் பெயரைக் கேட்டு ஆச்சரியப்படுகிறாய். உனக்குத் தெரிந்த கிருஷ்ணரின் முழுமையான பொருளும் உனக்குத் தெரியாது. அவருக்குப் பின்னாலுள்ள கிருஷ்ணரின் குணங்களைப் பற்றியும் நீ அறியாய். உடல் தொடர்பான தன்மைகள் அவரிடம் மலர்ந்து, அனுபவிக்கவோ அளவிடவோ இயலாத முழுமையை எய்தியுள்ளன; மனதுடன் தொடர்பான தன்மைகள் அது போலவே வளர்ச்சியடைந்து உலகங்களைக் கடந்த கல்வி, அறிவு, வீரியமாகப் பரந்துள்ளன; அன்புத் தன்மையும் இது போலவே வளர்ந்து எல்லா ஜீவன்களுக்கும் நலமளிக்கிறது. அவர் கூறியிருக்கிறார்:

"நல்லவர்களைக் காப்பாற்றவும், கெட்டவர்களை அழிக்கவும்,

அறத்தைப் பாதுகாக்கவும் ஒவ்வொரு யுகத்திலும் தோன்றுகிறேன் நான்"

தம் உடல் வலிமையால் கெட்டவர்களை அடக்கிய, அறிவு வலிமையால் பாரத நாட்டை ஒன்று படுத்திய, ஞானத்திறத்தால் பற்றற்ற அறத்தைப் பிரசாரம் செய்த கிருஷ்ணரை நான் வணங்குகிறேன். அவர் அன்பு மயமான வராயும் பற்றற்றவராயுமிருப்பதால் மனிதர் செய்ய இயலாத காரியங்களைச் சாதித்துள்ளார்; அவர் தம் உடல் வலிமையால் எல்லோரையும் வென்று பிறர் பேரரசு அமைக்க உதவினாலும் தாமே அரியணையில் அமரவில்லை; அவர் சிசுபாலனின் நூறு குற்றங்களை மன்னித்து மன்னிப்புத் தன்மையின் பெருமையைப் பரப்பினார். இறுதியில் குற்றத்துக்குத் தண்டனையளிக்க வேண்டுமென்ற கடமைக்காக அவனைத் தண்டித்தார்; வேதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த நாட்டில், செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் "அறம் வேதத்திலில்லை, அது உலகத்துக்கு நன்மை செய்வதில்தானிருக்கிறது" என்று முழங்கினார்; இப்படிப் பட்டவர் கடவுளாயிருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, அவரை நான் வணங்குகிறேன். புத்தர், ஏசு, முகம்மது, ராமர் இவர்கள் எல்லோரும் நன்றிணைந்த தத்துவம் கிருஷ்ணர். அவர் எல்லா வலிமைகளுக்கும் ஆதாரமானவர், எல்லா குணங்களுக்கும் இருப்பிடமானவர், எல்லா அறங்களையும் அறிந்தவர், அவன் அன்பு மயமானவர்; அவர் கடவுளா யிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவரை நான் வணங்குகிறேன்.

"நமஸ்காரம், ஆயிரம் முறை நமஸ்காரம்!

மீண்டும் மீண்டும் நமஸ்காரம், நமஸ்காரம்!"

(இது வங்க ஆண்டு 1291 பாத்ர மாதம் வெளியான 'தர்மதத்வ' என்ற நூலின் ஒரு பகுதி)

மதமும் இலக்கியமும்

நான் 'பிரசார்' பத்திரிகையின் எழுத்தாளர்களில் ஒருவன். இதைத் தெரிந்து கொண்டு அப்பத்திரிகையின் வாசகர் ஒருவர் என்னிடம் வந்து சொன்னார். "'பிரசார்' பத்திரிகையிலே இவ்வளவு மத விஷயங்கள் வருவது எனக்குப் பிடிக்கலே. ஜனரஞ்சகமான விஷயங்கள் இல்லேன்னாப் படிக்க முடியலே"

நான் சொன்னேன், "ஏன், பத்திரிகையிலே ஒவ்வொரு இதழிலும் ஒரு தொடர்கதை வருதே. அது ஜனரஞ்சகமில்லையா?"

"அது ஒண்ணுதானே வருது!" என்றார் அவர்.

'பிரசார்' மூன்று ஃபார்மா அளவுள்ள பத்திரிகை. அதில் சுமார் ஒரு ஃபார்மா தொடர்கதை. இது போதவில்லையாம் அவருக்கு! இதைத் தவிரக் கவிதை முதலிய வேறு விஷயங்களும் உண்டு. பத்திரிகையில் ஒரு மூலையில் மத சம்பந்தமான கட்டுரை ஏதாவது இருக்கும். அது கூட அவருக்குப் பொறுக்க வில்லை. மத விஷயங்கள் படிக்கப் பிடிக்காத வாசகர்கள் இன்னும் நிறையப் பேர் இருக்கிறார்களென்று தோன்றுகிறது. அவர்களுக்கு மதவிஷயங்கள் ஏன் பிடிக்கவில்லை; நாவல், கதை இவையெல்லாம் ஏன் பிடிக்கின்றன என்று அவர்களைக் கேட்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

வாசகர்களே, நன்றாகச் சிந்தித்து இந்தக் கேள்விக்கு விடையளியுங்கள். வாசகர்களுக்கு ஏதாவது கற்றுக் கொடுப்பதால் ஏற்படும் லாபத்தைவிட அவர்கள் தாங்களாகவே சிந்தித்துப் பதில் அளிப்பதால் அதிகலாபம் கிடைக்கும். இருந்தாலும் நாம் அவர்களுக்குச் சிறிது உதவி செய்வோம்.

பொதுவாக மதப் பிரசாரகர்கள் நம் மனதில் ஏற்படுத்தும் மதத்தின் உருவம் விரும்பத் தக்கதல்ல. நம் நாட்டில் இக்காலத்து மதகுருக்களால் விவரிக்கப்படும் இந்து மதம் பயங்கரமான தோற்றங் கொண்டது; பட்டினி கிடந்து விரத மிருப்பது; பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்வது; தன்னை வருத்திக் கொள்வது; உலகத்து இன்பங்களைத்தவிர்ப்பது. இவையே மதம் என்று நமது மதகுருக்களும் புரோகிதர்களும் நினைக்கிறார்கள். கோடைகாலத்தில் எனக்கு மிகவும் தாகம் ஏற்பட்டுநான் குளிர்ந்த தண்ணீர் குடித்துவிட்டால் என் தூய்மை கெட்டுவிட்டதாம்! ஜன்னிக் காய்ச்சலில் என் உயிர் போகும் போல் இருக்கிறது; நான் படுக்கையில் வேதனையால் துடித்துக் கொண்டிருக்கிறேன்; அப்போது

மருத்துவர் என் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஐந்து துளி பிராந்தியை மருந்தில் கலந்து கொடுத்தால் என் தூய்மை கெட்டுவிட்டதாம்! (இதனால் பல இந்துக்கள் இங்கிலீஷ் மருந்துகளை உட்கொள்வதில்லை) எட்டு வயதுப் பெண் விதவையாகிவிட்டாள்; புலனடக்கம் என்றால் என்னவென்று அவளுக்குத் தெரியாது; அறுபது வயதுக் கிழவனாலும் கடைப்பிடிக்க இயலாத புலனடக் கத்தை அவள் மேல் சுமத்தி அவளை அழவிட வேண்டும், தாமும் அழ வேண்டும், உறவினரையும் அழச் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் நம் தூய்மை கெட்டுப் போய் விடும்! 'புண்ணியம் சம்பாதிக்க வேண்டுமென்றால் புரோகிதருக்குத் தானம் செய், குருவுக்குத் தட்சிணை கொடு,வேலை செய்யாத சோம்பேறிகள், சுயநலக்காரர்கள், பேராசைக் காரர்கள், கெட்ட நடத்தை யுள்ளவர்கள், பிச்சையெடுப்பவர்கள் இப்படிப்பட்ட பிராமணர்களுக்குத் தானம் கொடு, நீ கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தைத் தகுதியற்றவர்களுக்கு வாரியிறை' என்றெல்லாம் போதிக்கும் மதம் உண்மையான மதமல்ல, அது ஒரு பிசாசுத்தனமான கற்பனை. ஆனால் நாம் சிறு வயது முதலே இதைத் தான் மதம் என்று சொல்லக் கேட்டு வந்திருக்கிறோம். ஆகவே வாசகர் இதை ஒரு பிசாசு அல்லது அரக்கனாகக் கருதிப் பயந்தால், அதன் பெயரைக் கேட்டு அதிலிருந்து விலகப் பார்த்தால் அது பொருத்தந்தான்.

'படித்தவர்கள்' அதாவது ஆங்கிலம் படித்தவர்கள் இதை மதம் என்று கருதுவதில்லை. ஆனால் அவர்கள் வேறொருவகையான சங்கடத்தில் அகப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்தோடு கிருத்துவ மதத் தையும் பயின்றிருக்கிறார்கள். இதற்குப் பைபிள் படிக்க வேண்டிய அவசி மில்லை. மேலைநாட்டு இலக்கியத்தில் இந்த மதம் நிறைந்திருக்கிறது. நாம் கிருத்துவ மதத்தில் சேர்ந்தாலும் சேராவிட்டாலும், 'மதம்' என்றால் கிருத்துவ மதம் என்றே நினைக்கிறோம். ஆனால் அந்த மதத்தின் தோற்றமும் பயங்கர மானதுதான். 'பரமேசுவரன்' என்ற பெயரைக் கேட்டால் நம் மனதுக்குத் தோன்றுவது கிருத்துவர்களின் பரமேசுவரனைத்தான். அந்தப் பரமேசுவர அந்தப் பெயருக்குச் சற்றும் தகுதியற்றவன். அவர் பிரபஞ்சத்துக்கே அரச தாம். ஆனால் எந்த ஒரு மனிதப் பிசாசும் அவர் போன்ற மக்களை வருத்தும் நீதியற்ற கொடுங்கோலராக இருக்க முடியாது. மனிதன் கண நேரத்தில் செய் அற்பக் குற்றத்துக்காக அவர் அவனை எல்லையற்ற காலத்துக்குத் தண்டித்து விடுவார். சிறிய, பெரிய குற்றங்கள் எல்லாவற்றுக்கும் தண்டனை— முடி வில்லாத நரகவாசம். பாவம் செய்யாதவனும் கிருத்துவ மதத்தில் சேரா விட்டால் முடிவில்லா நரகத்துக்குள் தள்ளப்படுவான். கிருத்துவின் பெயரை கேட்டிராதவன் கிருத்துவமதத்தில் சேர வாய்ப்பில்லை. இருந்தாலும் அ னுக்கும் தண்டனை நரகவாசம்தான். ஒருவன் இந்துவாகப் பிறந்திருந்தா அது அவனது குற்றமல்ல. பரமேசுவரனே அவனை இந்துக் குடும்பத்தி பிறக்கச் செய்திருக்கிறார். ஆகவே இதற்கான பொறுப்பு பரமேசுவரனை சாரும். இருந்தாலும் கிருத்துவனாக இல்லாத குற்றத்துக்காக அவன் நரக வா

அனுபவிக்க வேண்டும். கிறித்து பிறப்பதற்கு முன்னால் தான் பிறந்த காரணத்தால் கிருத்துவனாக ஆகும் வாய்ப்பே பெறாதவனுக்குக் கூட நகர வாசந்தான். இரவும் பகலும் மனிதனின் மனதுக்குள் எட்டிப் பார்த்து யார் மனதில் என்ன கெட்ட எண்ணம் எழுகிறது என்பதைக் கவனித்துக் கொண் டிருப்பதே இந்தக் கொடுங்கோலரான பரமேசுவரனின் ஒரே வேலை. யாராவது கெடுதலை நினைத்துவிட்டால் போதும், உடனே அவனுக்கு நரக தண்டனை. இந்தக் கிருத்துவ மதமாகிய சுழலில் அகப்பட்டுக் கொண்டவர்கள் தங்கள் வாழ்நாள் முழுதும் இந்தத் தண்டனைக்குப் பயந்து ஒடுங்கிப் போய், உயிரிருந்தும் இறந்து விட்டவர்கள் போல் காலங்கழிக்கிறார்கள். உலக இன்பம் எதுவுமே அவர்களுக்கு இன்பமாகத் தோன்றுவதில்லை. இந்த அரக்கத்தனமான மதத்தை மதம் என்று நினைக்கக் கற்றுக் கொண்ட வர்களுக்கு மதம் என்றாலே பயமேற்படுவது இயற்கைதான்.

சாதாரண மதப் பிரசாரகர்களின் இந்தக் குற்றங்களால்தான் பொது மக்க ளுக்கு மதத்திடம் இத்தகைய கசப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையான மதம் மனதை ஈர்க்க வல்லது; மக்கள் மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு மதத் தையே பயிலுமளவுக்கு மனத்தைக் கவர்வது. அகவே மக்கள் மதத்தை விரும்புவது இயற்கை. இது தற்காலத்து ரசனை திரிந்து போன வாசகர் களுக்குப் பொருந்தாது. இந்துக்களுக்கும் கிருத்துவர்களுக்கும் தெரிந்த மதம் உண்மையான மதமல்ல, அது மதத்துக்கு நேர் எதிரி என்பதை வாசகர்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால் புரிந்து கொள்வார்கள். மதத்தின் உண்மையான உருவம் அழகானது. கடவுள் கொடுங்கோலரல்ல; மக்களைக்காப்பவர்; மதம் என்பது மனிதன் தன்னை வருத்திக் கொள்வதல்ல; அவன் தன்னை உயர்த்திக் கொள்ளும் வழியே மதம். கடவுளிடம் பக்தி, மனிதனிடம் அன்பு, இதயத்தில் அமைதி— இதுவே உண்மையான மதம் அல்லது அறம். பக்தி, அன்பு, அமைதி இந்த மூன்று சொற்களால் சித்திரிக்கப்படும் பொருளைப் போல் அழகான பொருள் உலகில் வேறென்ன இருக்க முடியும்? அதைவிட்டுவிட்டு வேறு விஷயங்களில் ஈடுபாடு கொள்ள யார்தான் விரும்புவார்?

நாடகம், நாவல் இவற்றைப் படிக்க விரும்புபவர்கள் அவர்கள் எதற்காக அவற்றைப் படிக்க விரும்புகிறார்களென்பதை ஒரு முறை யோசித்துப் பார்க் கட்டும். அவற்றில் கூறப்படும் விசித்திரமான நிகழ்ச்சிகளால் அவர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படுகிறதென்றால், அவர்களைக் கேட்கிறேன்— பரமேசு வரனால் படைக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சத்தைவிட ஆச்சரியமான விஷயம் எந்த இலக்கியத்திலாவது வருணிக்கப்பட்டுள்ளதா? ஒரு புல்லில் அல்லது ஓர் ஈயின் இறக்கையில் பொதிந்துள்ள திறமை எந்த நாவலாசிரியனின் எழுத்தில் இருக்கிறது? சராசரி வாசகனைவிட உயர்ந்த ரசனையுள்ள வாசகர்கள் இலக் கியப் படைப்பின் சிறப்பில் சுவைகாண்கிறார்கள். அவர்களை நான் கேட்கிறேன்— கடவுளின் படைப்பை விட அழகான படைப்பு இலக்கியத்தில் எது? உண்மையில் கவியின் படைப்பு கடவுளின் படைப்பைப் பிரதிபலிப்

பதால்தான் அழகாயிருக்கிறது. நகல் என்றுமே அசலுக்கு நிகராக முடியாது. ஆகவே மதத்தின் ரம்மியமான அழகுக்கு முன்னால் இலக்கியம் ஒளிமங்கிவிடும்.

ஆனால் வாசகன் சொல்லலாம்: "நீங்கள் சொல்வது சரியாயிருக்க முடியாது. ஏனென்றால் எனக்கு நாவல், நாடகம் படிக்கப்பிடிக்கிறது, படித்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறது; ஆனால் மதக் கட்டுரைகளைப் படிக்கப் பிடிப்பதுமில்லை, படித்தால் மகிழ்ச்சி ஏற்படுவதுமில்லையே!" இதற்கு விடையளிப்பது எளிது. நீ இலக்கியம் படிக்க விரும்புவதற்கும், படித்து மகிழ்வதற்கும் காரணமென்ன வென்றால், எந்தெந்தத் தன்மைகள் மூலம் இலக்கியத்தின் சாரத்தைப் புரிந்து கொண்டு அனுபவிக்க முடியுமோ அந்தத் தன்மைகளை நீ நெடுங்காலமாகப் பயின்று வந்திருக்கிறாய், ஆகவே அதிலிருந்து மகிழ்ச்சி பெறுகிறாய். மதத்தின் சாரத்தைப் புரிந்து கொண்டு அனுபவிக்கத் தேவையான தன்மைகளை நீ பயிலவில்லை, ஆகையால் மதத்தைப் பற்றிப் படிப்பதில் உனக்கு மகிழ்ச்சி கிடைப்பதில்லை. ஆனால் இந்தத் தன்மைகளைப் பயில்வது இப்போது மிகவும் அவசியமாகிவிட்டது. ஏனெனில் இதில்தான் உண்மையான இன்பம் அடங்கியுள்ளது. இலக்கியம் பயில்வதால் இன்பம் உண்டுதான். இருந்தாலும் உனக்கு இலட்சியமாக இருக்க வேண்டிய, உனக்குக் கிடைக்க வேண்டிய இன்பத்தில் ஒரு சிறு பகுதிதான் இலக்கிய இன்பம். மதத்தைத் தவிர்த்து இலக்கியம் இல்லை. ஏனென்றால் இலக்கியம் சத்தியத்தை ஆதாரமாகக் கொண்டது; சத்தியமே உண்மையான மதம் அல்லது அறம். உண்மைக்கும் அறத்துக்கும் முரணான கெட்ட இலக்கியம் ஏதாவது இருந்தால், ரசனை கெட்ட, குணங்கெட்ட வாசகன்தான் அதிலிருந்து இன்பம் பெறுவான். இலக்கியத்தில் இடம்பெறும் சத்தியமும் அறமும் மதத்திலுள்ள சத்தியம் அறம் இவற்றின் ஒரு பகுதிதான். ஆகையால் இலக்கியத்தைப் பயில்வதைவிட, இலக்கியம் எந்தப் பொருளின் ஒரு பகுதியோ அந்தப் பொருளான மதத்தைப் பயில்வதே சிறந்த செயல். இலக்கியத்தைக் கைவிடாதே; அதை ஒரு படியாக வைத்துக் கொண்டு மதமாகிய உயர்ந்த மேடையின் மேலே ஏறிக்கொள்.

ஆனால் ஒன்று நினைவிருக்கட்டும்—தொடக்கத்தில் சிறிது கஷ்டப்படா விட்டால் எந்த சுகமும் கிடைக்காது. புலனின்பங்களைப் பெறுவதற்காக முயற்சி செய்யும்போது சில கஷ்டங்களை மேற்கொள்கிறான். ஆகையால் அறத்தைப் பயில்வதால் ஏற்படும் விவரிக்க இயலாத, எல்லையற்ற இன்பத்தை அடைவதற்காக, கரடுமுரடான பாறைகள் போன்ற சிக்கலான தத்துவங்களை முதலில் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எனவே மதம் பற்றிய கட்டுரைகள் பார்வைக்குக் கடினமாகத் தோன்றினாலும் அவற்றை அலட்சியம் செய்து நல்லதல்ல.

(வங்க ஆண்டு 1291 பௌஷ் மாத 'பிரசார்' இதழில் முதலில் வெளிவந்த இக்கட்டுரை 'விவித பிரபந்த' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

புதிய வங்காளி எழுத்தாளர்களுக்கு விண்ணப்பம்

1. புகழுக்காக எழுதாதீர்கள். எழுதினால் புகழும் கிடைக்காது. எழுத்துப் படைப்பும் தரமாயிருக்காது. எழுத்து தரமாயிருந்தால் புகழ் தானே வரும்.

2. பணத்துக்காக எழுதாதீர்கள். இப்போது ஐரோப்பாவில் பல எழுத் தாளர்கள் பணத்துக்காக எழுதுகிறார்கள்; அவர்களுக்குப் பணமும் கிடைக் கிறது. அவர்களது எழுத்தும் நன்றாயிருக்கிறது. ஆனால் நமக்கு அந்த நாள் இன்னும் வரவில்லை. இப்போது பணத்துக்காக எழுதுவதென்றால், எழுத்தில் ஜனரஞ்சகத் தன்மை முக்கியமாகிவிடும். இப்போது நம் நாட்டு வாசகர்களின் ரசனை, கல்வியறிவு இவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் எழுதினால் படைப்பின் தரம் கெட்டு அதனால் கேடு விளையும்.

3. எழுதுவதன் மூலம் நாட்டுக்கு அல்லது மனித இனத்துக்கு நல்லது செய்ய முடியும் அல்லது அழகைப் படைக்க முடியும் என்று தோன்றினால் கட்டாயம் எழுதுங்கள். வேறு நோக்கங்களுடன் எழுதுபவர்கள் ஒரு நாடகம் போன்ற தரங்குறைந்த எழுத்துக்களைப் படைக்கும் மட்டமான எழுத்துத் தொழி லாளிகள் போல் கருதப்படுவார்கள்.

4. சத்தியத்துக்குப் புறம்பான அறத்துக்கு முரண்பட்ட படைப்புகள்; பிறரை நிந்திப்பதை அல்லது துன்புறுத்துவதை நோக்கமாகக் கொண்ட படைப்புகள் இவை ஒரு போதும் பிறருக்கு நலனளிப்பவையல்ல. ஆகையால் இவை தவிர்க்கப்பட வேண்டும். இலக்கியத்தின் நோக்கம் சத்தியமும் அறமுமே யாகும்; வேறெந்த நோக்கத்துடனும் எழுதுகோலைக் கையாள்வது பெரும் பாவம்.

5. படைப்புகளை உடனே அச்சுக்குக் கொடுக்காதீர்கள். அதைச் சிறிது காலம் வைத்திருந்து விட்டுப் பிறகு திருத்துங்கள். அப்போது உங்கள் கட்டு ரையில் பல குறைகளிருப்பது தெரியவரும். காவியம், நாடகம், நாவல் முதலிய வற்றை ஓரிரு ஆண்டுகள் வைத்திருந்துவிட்டுப் பிறகு திருத்தினால் அவை இன்னும் சிறப்பாக அமையும். பத்திரிகைகளுக்காக எழுதுபவர்கள் இந்த

யோசனையைக் கடைப்பிடிக்க முடியாது. ஆகையால் பத்திரிகைகளில் எழுது வது தரமான எழுத்தாளனுக்குக் கேடு விளைவிப்பதாகும்.

6. தெரியாத விஷயங்களைப் பற்றி எழுத வேண்டாம். இது ஒரு சாதாரண விதி; எனினும் பத்திரிகைகளில் எழுதும்போது இந்த விதி கடைப்பிடிக்கப் படுவதில்லை.

7. உங்கள் அறிவை உங்கள் எழுத்தில் வலுக்கட்டாயமாக வெளிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்யாதீர்கள். உங்களிடம் அறிவு இருந்தால் அது உங்கள் எழுத்தில் தானாக வெளிப்படும். அதை வெளிப்படுத்த முயற்சி தேவை யில்லை. அறிவை வெளிப்படுத்திக் கொள்ளச் செய்யப்படும் முயற்சி வாசக னுக்கு அலுப்பூட்டும்; அது படைப்பின் சிறப்புக்கும் ஊறு செய்யும். இக்காலக் கட்டுரைகளில் ஆங்கிலம், சம்ஸ்கிருதம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழி மேற் கோள்களை அதிகம் காண்கிறேன். உங்களுக்கு ஒரு மொழி தெரியா தென்றால் இன்னொருவரின் நூலிலிருந்து அந்த மொழி மேற்கோள்களை எடுத்து உங்கள் படைப்பில் பயன்படுத்தாதீர்கள்.

8. இலக்கிய அணிகளைப் பயன்படுத்தவும் நகைச்சுவையுண்டாக்கவும் முயற்சி செய்யாதீர்கள். படைப்பில் சில இடங்களில் இலக்கிய அணிகளும் நகைச்சுவையும் இருப்பது நல்லதுதான். எழுத்தாளனிடம் இவை இருந்தால் தக்க இடங்களில் தாமாகவே வெளிப்படும். இவை எழுத்தாளனிடம் இல்லா விட்டால் அவன் மண்டையை உடைத்துக் கொண்டாலும் அவனுடைய எழுத்தில் இடம் பெறா. இவை எழுத்தாளனிடம் இல்லாதபோது இவற்றைப் பொருத்தமற்ற இடங்களில் புகுத்த முயற்சி செய்வது போல் மோசமான செயல் வேறெதுவும் இல்லை.

9. அணியும் நகைச்சுவையும் எந்தெந்த இடங்களில் மிகப் பொருத்தமாகத் தோன்றுகின்றனவோ அந்தந்த இடங்களில் பயன்படுத்தினால் போதும் என்பது பண்டைக்கால விதி. நான் அப்படிச் சொல்லவில்லை. என் அறிவுரை என்னவெனில், அந்தப் பகுதிகளைஉங்கள் நண்பர்களுக்கு மீண்டும் மீண்டும் படித்துக் காண்பியுங்கள். அணியும் நகைச் சுவையும் பொருத்தமாக அமையா விட்டால், நீங்கள் அந்தப் பகுதிகளை மூன்று நான்கு முறை படிக்கும்போது உங்களுக்கே அவை பிடிக்காமல் போகும். அவற்றை நண்பர்களுக்குப் படித்துக் காட்ட உங்களுக்குக் கூச்சமேற்படும். அப்படியானால் அந்தப் பகுதி களை நீக்கி விடுங்கள்.

10. எல்லா அணிகளிலும் மிகச் சிறந்தது எளிமை. தன் கருத்தை எளிய முறையில் நேரடியாக வாசகனுக்குத் தெரிவிக்கும் திறனுள்ளவனே சிறந்த எழுத்தாளன். ஏனெனில் வாசகனுக்கு ஒரு விஷயத்தைத் தெரிவிப்பதே எழுத்தின் நோக்கம்.

11. எவருடையும் எழுத்தையும் பின்பற்றி எழுதாதீர்கள். அப்படி எழுதினால் மூல எழுத்தாளரின் குறைகள் உங்கள் எழுத்தில் வந்துவிடும்,

அவருடைய சிறப்புகள் உங்கள் எழுத்தில் இடம் பெறா. குறிப்பிட்ட ஆங்கில சம்ஸ்கிருத அல்லது வங்காளி எழுத்தாளர் போல் நாமும் எழுதவேண்டும் என்ற எண்ணத் துக்கு ஒரு போதும் மனதில் இடங்கொடுக்காதீர்கள்.

12. உங்களால் நிறுவ முடியாத விஷயங்களை எழுதாதீர்கள். உங்கள் எழுத்தில் உங்கள் கருத்துக்களுக்கு ஆதரவான சான்றுகள் எப்போதும் வெளிப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால் அவை உங்களிடம் இருக்க வேண்டும்.

வங்காளத்தின் நம்பிக்கைக்கு ஆதாரம் வங்காளி இலக்கியந்தான். மேலே கூறுப்பட்ட விதிகளை வங்காளி எழுத்தாளர்கள் பின்பற்றினால் வங்காளி இலக்கியம் மிக வேகமாக முன்னேற்றமடையும்.

(வங்க ஆண்டு 1291 மாக் மாத 'பிரசார்' இதழில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

வங்காளி இலக்கியத்துக்கு மதிப்பு

பாத்திரங்கள்
மெத்தப்படித்த ஒரு வங்காளி பிரபு
அவருடைய மனைவி

பாபு— என்ன பண்றே?

மனைவி— படிக்கிறேன்.

பாபு— என்ன படிக்கிறே?

மனைவி— எனக்குப் படிக்கத் தெரிஞ்சதைப் படிக்கறேன். எனக்கு உங்களைப் போல இங்கிலீஷ் தெரியாது, பிரெஞ்சு தெரியாது. என் விதி எப்படியோ அப்படிப் படிக்கிறேன்.

பாபு— இந்த வங்காளிக் குப்பையையெல்லாம் ஏன் படிக்கிறே? இதைப் படிக்கிறதுக்குப் படிக்காமலேயே இருக்கலாம்.

மனைவி— ஏன்?

பாபு— இதெல்லாம் immoral. obscene. filthy (ஒழுக்கங்கெட்டது, ஆபாசம், அழுக்கு)

மனைவி— அப்படீன்னா?

பாபு— immoral னா... அதாவது... morality (ஒழுக்கம்)க்கு விரோதமானதுன்னு அர்த்தம்.

மனைவி— அது என்ன மிருகமா?

பாபு— இல்லையில்லே...அதாவது... இதுக்கு வங்காளியிலே என்ன சொல்றது?... அதாவது எது Moral இல்லியோ அது.

மனைவி— ஒ மராலா? அன்னமா?

(குறிப்பு— வங்காளியில் 'மரால்' என்ற சொல்லுக்கு 'அன்னம்' என்று பொருள்)

பாபு— *சீச்சீ!* **O women! thy name is stupidity** (ஒ பெண்ணே! உன் மறுபெயர் முட்டாள்தனம்.)

மனைவி— அப்படீன்னா?

பாபு— இதையெல்லாம் வங்காளியிலே சொல்லிப் புரியவைக்க முடியாது. நான் சொல்லவந்தது என்னன்னா, வங்காளிப் புஸ்தகம் படிக்கறது நல்லதில்லே.

மனைவி— ஆனா இந்தப் புத்தகம் நல்லாத்தான் இருக்கு...நல்ல கதை.

பாபு— ஒரு ராஜாவுக்கு ரெண்டு ராணி...அந்தக் கதைதானே? இல்லேன்னா, நள தமயந்தி கதையா?

மனைவி— இதுகளைத் தவிர வேறே கதையே இல்லையா வங்காளியிலே?

பாபு— வேறே என்ன இருக்கு?

மனைவி— இது அந்த மாதிரிக் கதையில்லே. இதிலே கட்லெட் இருக்கு, பிராந்தி இருக்கு, விதவை மறுமணம் இருக்கு, வைஷ்ணவியோட பாட்டு இருக்கு...

பாபு— அதுக்காகத்தான் சொல்றேன், இந்தக் குப்பையையெல்லாம் ஏன் படிக்கிறே?

மனைவி— ஏன், படிச்சா என்ன?

பாபு— படிச்சா, படிக்கிறவங்க demoralise ஆயிடுவாங்க (ஒழுக்கங்கெட்டுப் போயிடுவாங்க)

மனைவி— அதென்ன? தேமோராஜாவா?

பாபு— ஐயோ, இதென்ன கஷ்டம்! Demoraliseனா ஒழுக்கங்கெட்டுப் போறதுன்னு அர்த்தம்.

மனைவி— பிராண நாதரே! நீங்க போத்தல் போத்தலாப் பிராந்தியைக் குடிக்கிறீங்க. உங்களோட வேலை செய்யறவங்களோட மூஞ்சியைப் பார்த்தாலே பாவம். அவ்வளவு ஒழுக்கங்கெட்டவங்க அவங்க. சாப்பிட்ட பிறகு உங்க சிநேகிதங்க பேசற ஆபாசப் பேச்சக் கேட்டு வேலைக்காரன் கூடக் காதைப் பொத்திக்குவான். நீங்க யார் யார் வீட்டுக்கோ போய்க் கோழிக்கறியும் ஆட்டுக் கறியும் சாப்பிட்டுட்டு வரீங்களே, அவங்க ரகசியமாச் செய்யாத கெட்ட காரியம் கிடையாது. அதிலே எல்லாம் உங்க ஒழுக்கம் கெட்டுப் போகல்லே...நான் ஒரு ஏழை வீட்டுப் பொண்ணு, நான் ஒரு வங்காளிப் புஸ்தகம் படிச்சாக் கெட்டுக் குட்டிச் சுவராப் போயிடுவேனாக்கும்?

பாபு— நாங்க brass pot (பித்தளைக்குடம்); நீங்க earthen pot (மண் குடம்).

மனைவி— ஏன் இப்படிப் 'பாட், பாட்'ங்றீங்க? கோயி மீன் காஞ்ச எண்ணெயிலே விழுந்திருச்சா?... அது போகட்டும், நீங்க ஒரு தடவை இந்தப் புஸ்தகத்தைப் படிச்சுப் பாருங்களேன்!

பாபு— (திடுக்கிட்டுப் பின் வாங்கி) நான் இதையெல்லாம் தொட்டு hand contaminate பண்ணிக்க மாட்டேன். (கையை அசிங்கப்படுத்திக்கொள்ள மாட்டேன்)

மனைவி— அப்படீன்னா?

பாபு— இதையெல்லாம் தொட்டுக் கையை அசிங்கப்படுத்திக்க மாட்டேன்.

மனைவி— உங்க கை அழுக்காகாது. நான் புத்தகத்தைத் தொடைச்சுத் தரேன். (அவள் புத்தகைத்தைப் புடவைத் தலைப்பால் நன்றாகத் துடைத்து விட்டுப் பாபுவிடம் தருகிறாள். புத்தகத்தைத் தொடுவதால் தன் மனத் தூய்மை கெட்டுவிடும் என்று பயந்த பாபுவின் கையிலிருந்து புத்தகம் கீழே விழுந்து விடுகிறது.)

மனைவி— இதென்ன கஷ்டம்! நீங்க இந்தப் புத்தகத்தை இவ்வளவு வெறுக்கிறீங்க, ஆனா இங்கிலீஷ்காரங்ககூட இதை வெறுக்கலே. அவங்க இதை மொழி பெயர்த்துப் படிக்கறாங்க.

பாபு— உனக்குப் பைத்தியமா?

மனைவி— ஏன்?

பாபு— வங்காளிப் புத்தகத்தை இங்கிலீஷிலே மொழி பெயர்ப்பாங்களா? இந்த மாதிரி நம்பமுடியாத கதையை யார் உனக்குச் சொன்னாங்க? புஸ்தகம் seditiousஆ (ராஜத்துரோகமானதோ)? அப்படீன்னா சர்க்கார் இதை மொழிபெயர்த்திருப்பாங்க. புத்தகத்துக்குப் பேரு என்ன?

மனைவி— விஷவிருட்சம்.

பாபு— அப்படீன்னா?

மனைவி— 'பிஷ்' னாத் தெரியாதா? அதோட்விருட்சம் அதாவது மரம்.

பாபு— 'பிஷ்' தானே? அதாவது இருபது!

(குறிப்பு— 'பிஷ்' என்றால் வங்காளியில் 'இருபது' என்று பொருள்)

மனைவி— இன்னொரு வகைப் 'பிஷ்' இருக்குன்னு உங்களுக்குத் தெரியாதா? உங்க தொந்திரவு பொறுக்காமே ஒரு நாள் அதைத்தான் சாப்பிடப்போறேன் நான்.

பாபு— ஓ... poisonஆ? ஐயோ, விஷ மரம்! பொருத்தமான பேர்தான்! ஐயோ, ஐயோ!

மனைவி— மரத்துக்கு இங்கிலீஷிலே என்ன பேரு?

பாபு— Tree.

மனைவி— இப்போ ரெண்டு வார்த்தையையும் சேர்த்துக் சொல்லுங்க.

பாபு— ஓகோ, Poison tree சரிதான்! Poison tree ன்னு ஒரு இங்கிலீஷ் புத்தகத்தைப் பத்திப் பேப்பரிலே படிச்சேன். அது ஒரு வங்காளிப் புத்தகத்தோட மொழி பெயர்ப்பா?

மனைவி— உங்களுக்கு என்ன தோணுது?

பாபு— Poison treeன்னு ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் இருக்கு, அதை வங்காளியிலே பெயர்த்திருக்காங்கன்னு நினைச்சேன்...அது இங்கிலீஷிலே இருக்கிற போது நான் ஏன் வங்காளிப் புத்தகம் படிக்கணும்?

மனைவி— உங்களுக்கு இங்கிலீஷ் முறைதான் பிடிக்கும். அது படிச் கறதாயிருந்தாலும்சரி, குடிக்கறதாயிருந்தாலும் சரி... நான் உங்களுக்கு இங்கிலீஷ் முறைப் புத்தகமே தரேன். இது இங்கிலீஷிலேயிருந்து வங்கா ளிக்குப் பெயர்க்கப்பட்ட புத்தகம்...

பாபு— இந்த மாதிரிப் புத்தகம் படிக்கலாம். எந்த இங்கிலீஷ் புஸ்தகத் தோட மொழி பெயர்ப்பு— 'ராபின்சன் க்ரூஸோ'வா அல்லது வாட் எழுதின 'Improvement of the Mind'ஆ?

மனைவி— இங்கிலீஷ் புத்தகத்தோட பேர் தெரியாது எனக்கு. வங்காளி புத்தகத்தோட பேர் 'சாயாமயி'!

பாபு— சாயாமயியா? அதென்ன! (புத்தகத்தை எடுத்துப் பார்த்து அடெ தாந்தேயா?

மனைவி— (புன்சிரிப்புடன்) இது எனக்குச் சரியாப் புரியலே. வங்காளி பொண்ணுதானே, இதையெல்லாம் புரிஞ்சுக்கற மூளை இல்லே எனக்கு, நீங் கொஞ்சம் விளக்கறீங்களா?

பாபு— அதுக்கென்ன! தாந்தே பதினாலாம் நூற்றாண்டிலே வாழ்ந்தவ அதாவது அவர் fourteenth century யிலே Flourish பண்ணினவர்.

மனைவி— 'ஃபுட்டந்த சுந்தரியைப் பாலிஷ்' பண்ணினவரா? (மலர்ந் அழகிக்கு மெருகு போட்டவரா?) அவ்வளவு பெரிய கவியா?

பாபு— இதென்ன கஷ்டம்! fourteen னாப் பதினாலுன்னு அர்த்தம்.

மனைவி— பதினாலு அழகிகளுக்கு மெருகு போட்டாரா? பதினாலா யிருக்கட்டும், பதினஞ்சாயிருக்கட்டும், அழகிகளுக்கு எதுக்கு மெரு போடணும்?

பாபு— அதில்லே, பதினாலாம் நூற்றாண்டிலே வாழ்ந்தார் சொன்னேன்.

மனைவி— அவர் பதினாலு அழகிகளிலே வாழட்டும் அல்லது பதினா நூறு அழகிகளிலே வாழட்டும். புத்தகத்தைப் பத்தித்தான் நமக்குப் பேச்சு

பாபு— ஆனா மொதல்லே author ஒட lifeஐப் பத்தித் தெரிஞ்சுக்கணு அவர் ஃபிளாரென்ஸ் நகரத்திலே பிறந்து அங்கே பெரிய பெரிய appointm hold செஞ்சார் (பதவிகளில் இருந்தார்)

மனைவி— போர்ட்மான்ட்டோவை ஹொல்தே செஞ்சாரா? (தே பெட்டியை மஞ்சளாக்கினாரா?) நம்ம கருப்புத் தோல்பெட்டி மஞ்சளாகும

பாபு— அவர் பெரிய பெரிய வேலை பார்த்தார்னு சொன்னே அப்புறம் கெல்ஃபுகளுக்கும் கிபிலைன்களுக்கும் ஏற்பட்ட சச்சரவிலே...

மனைவி— ஏன் பிராணனை எடுக்கறீங்க? இந்தப் புத்தகத்தைக் கொஞ் விளக்குங்க.

பாபு— அதைத்தான் செஞ்சுக்கிட்டிருக்கேன். புத்தகம் எழுதினவரே வாழ்க்கையைப் பத்தித் தெரிஞ்சுக்கலேன்னா அவரோட புத்தகம் எப்ப புரியும்?

மனைவி— நான் ஒரு சாதாரண வங்காளிப் பொண்ணு. எனக்கு அந்த ஆர்ப்பாட்டமெல்லாம் வேண்டாம். புத்தகத்தோட சாரத்தை விளக்கினால் போதும்.

பாபு— சரி, புத்தகம் எப்படி எழுதியிருக்கார், பார்ப்போம்.

(புத்தகத்தை எடுத்து அதன் முதல் வரியை வாசிக்கிறான்)

"சந்த்யா ககனே நிபிட காலிமா"

(அந்தி வானத்தில் அடர்ந்த கருமை)

உன்கிட்ட அகராதி இருக்கா?

மனைவி— எதுக்கு? எந்த வார்த்தை புரியல்லே?

பாபு— 'ககன்'னா என்ன?

மனைவி— 'ககன்'னா வானம், ஆகாயம்

பாபு— 'நிபிட'ன்னா?

மனைவி— அட கடவுளே! நீங்க எப்படி எனக்கு விளக்கப் போறீங்க? 'நிபிட'ன்னா 'அடர்ந்த', 'அடர்த்தியான'ன்னு அர்த்தம், இது கூட உங்களுக்குத் தெரியாதா? வெக்கமாயில்லே உங்களுக்கு?

பாபு— இந்த வங்காளி, கிங்காளியெல்லாம் கீழ்மட்டத்து ஜனங்கதான் படிப்பாங்க. எங்க சொசைட்டியிலே வங்காளி கிடையாது. அது எங்களுக்கு அழகில்லே.

மனைவி— நீங்க யாரு?

பாபு— நாங்க polished society (நாகரீக சமூகம்) எங்க சமூகத்திலே யாரும் வங்காளிப் புத்தகம் படிக்கமாட்டாங்க. வங்காளி எழுதறதும் படிக்கறதும் கீழ்த் தரமான ஜனங்களோட காரியம். அவங்களுக்குத் துரைமார்கிட்டே மதிப் பில்லே.

மனைவி— தாய்மொழிமேலே பாலிஷ்—ஷஷ்டிக்கு ஏன் இவ்வளவு கோபம்? (குறிப்பு— வங்காளத்தில் பூசிக்கப்படும் ஒருதேவதைக்குப் பெயர் 'ஷஷ்டி')

பாபு— அம்மா எப்பவோ செத்துச் சாம்பலாயிட்டா. அவ மொழியோடே நமக்கு இப்போ என்ன சம்பந்தம்?

மனைவி— அந்த மொழியைத் தானே நானும் பேசறேன். நான் செத்துச் சாம்பலாப் போயிடல்லியே.

பாபு— என் கண்மணியே, உனக்காக நான் படிக்கறேன். ஆனா ஒரே யொரு வங்காளிப் புத்தகந்தான் படிப்பேன்!

மனைவி— அதுதான் படிங்களேன்.

பாபு— ஆனால் இந்த அறைக்குள்ளே உக்காந்துகிட்டுக் கதவை உள் பக்கம் தாழ்ப்பாள் போட்டுக்கிட்டுப் படிப்பேன். நான் படிக்கறது வேறே யாருக்கும் தெரியக்கூடாது.

மனைவி— சரி.

பாபு— (அவள் காமரசம் மிகுந்த ஒரு ஆபாசமான புத்தகத்தைப் பொறுக்கியெடுத்துக் கணவனிடம் கொடுக்கிறாள். அவன் அதை முதலி லிருந்து கடைசி வரை படித்து முடிக்கிறான்)

மனைவி— புத்தகம் எப்படி இருக்கு?

பாபு— பிரமாதம்! வங்காளியிலே இவ்வளவு நல்ல புத்தகம் இருக்குன்னு எனக்கு இதுவரை தெரியாது.

மனைவி— (அருவருப்புடன்) சீ, இதுதானா உங்க பாலிஷ் ஷஷ்டி! உங்க பாலிஷ்— ஷஷ்டியைவிட என்னோட சப்பட்டை— ஷஷ்டி எவ்வளவோ தேவலை!

(வங்க ஆண்டு 1291, சைத்ர மாதத்தில் முதலில் பிரசுரமான இக்கட்டுரை 'லோக் ரகஸ்ய' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது)

திரௌபதி

(இரண்டாம் இயல்)

நான் பத்தாண்டுகளுக்கு முன் 'வங்கதர்சன்' பத்திரிகையில் திரௌபதி பாத்திரத்தைப் பற்றி ஆராய்ந்திருந்தேன். திரௌபதியின் பாத்திரம் மற்ற ஆரியப் பெண்மணிகளின் தன்மையிலிருந்து எவ்வளவு தீவிரமாக மாறுபட்டிருக்கிறது என்பது அக்கட்டுரையில் விளக்கப்பட்டது. ஆனால் திரௌபதி பாத்திரத்தின் மையத் தத்துவம் பற்றி அக்கட்டுரையில் எதுவும் சொல்லப் படவில்லை. சொல்லத் தக்க பருவம் அப்போது வரவில்லை. இப்போது அதைச் சொல்லலாமென்று தோன்றுகிறது.

இந்தத் தத்துவத்தின் வெளித்தோற்றம் மிகவும் பிரகாசமானது. அவள் ஐந்து பேருக்கு மனைவி. ஆயினும் அவள் ஒழுக்கங்கெட்டவளென்று சொல்ல முடியாது. இந்தப் பொருத்தமின்மை சரியாக்கப்பட்டது எப்படி?

நமது ஐரோப்பிய ஆசிரியர்கள் இந்தப் பிரச்னைக்கு நேரடியாகப் பதில் அளித்துவிடுகிறார்கள்— பாரதநாட்டினர் நாகரீகமற்றவர்கள். முன் காலத்தில் அவர்களிடையே ஒரு பெண் பல ஆண்களை மணந்து கொள்ளும் வழக்கம் இருந்தது; ஆகையால்தான் திரௌபதிக்கு ஐந்து கணவர்கள்.

ஐரோப்பிய ஆசிரியர்களுக்கு வேறெந்தத் திறமை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம் நாட்டைப் பற்றி ஆணித்தரமாகக் கருத்துக்களை வெளியிடும் திறமை அவர்களுக்கு நிறையவே உண்டு.

ஐரோப்பியர்கள் நம் நாட்டுப் பண்டைய நூல்களை எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள் என்பது பற்றிச் சிறிது காலத்துக்கு முன் நான் ஆராய்ச்சி செய்ய நேர்ந்தது. வேதம், சமஸ்கிருத நூல்களுக்கு ஐரோப்பியர்கள் செய்துள்ள மொழி பெயர்ப்பு, விளக்கம், விமரிசனம் இவற்றைப் படிப்பதைவிடப் பெரிய பாவம் இருக்க முடியாது என்று எனக்கு இந்த ஆராய்ச்சியின் விளைவாக நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. முட்டாள்தனத்தை வெளிப்படுத்திக் கொள்ளவும் இவற்றை எழுதுவதைவிடச் சிறந்த வழிஇல்லை. இப்போதும் பல

வங்காளிகள் இவற்றைப் படிப்பதால் அவர்களை எச்சரிப்பதற்காக இந்தக் கருத்தை— இந்த இடத்தில் இதற்குத் தேவையில்லாவிட்டாலும் வெளியிட நேர்ந்தது.

சம்ஸ்கிருத நூல்கள் எண்ணற்றவை. ஆராய்ச்சி வளர வளரப் புதிய புதிய நூல்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. சம்ஸ்கிருத நூல்களுடன் ஒப்பிடும்போது அளவைப் பொருத்த வரையில் ஐரோப்பிய நூல்களை நூல்களாகவே எண்ணத் தோன்றவில்லை. யானையோடு ஒப்பிட்டால் நாய் எப்படியோ, ஆலமரத்தோடு ஒப்பிட்டால் வில்லோ அல்லது சைப்ரஸ் மரம் எப்படியோ, கங்கை அல்லது கோதாவரியுடன் ஒப்பிடப்படும் கிரேக்க கவிகள் வருணிக்கும் மலையருவி எப்படியோ, அப்படித்தான் ராமாயணம் அல்லது மகாபாரதத்துடன் ஒப்பிடப்படும் ஓர் ஐரோப்பிய நூலும். வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள், கிருஹ்ய சூத்திரங்கள், சிரௌத சூத்திரங்கள், தரும சூத்திரங்கள், இவற்றின் விளக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஸ்மிருதிகள், காவியங்கள், அணியிலக்கியங்கள், இலக்கணம், கணிதம், ஜோதிடம் முதலிய பலவகைப்பட்ட சம்ஸ்கிருத நூல்கள் நம் நாட்டில் நிறைந்து காணப்படுகின்றன. இந்தப் பரந்த எழுத்துக் கடலில் எங்கும் ஆரியர்களிடையே பெண்கள் பல ஆண்களை மணந்து கொண்டதாக ஒரு குறிப்பும் இல்லை. எனினும் இந்த ஐரோப்பிய அறிஞர்கள் திரௌபதிக்கு ஐந்து கணவன்மார் இருந்ததை வைத்துக் கொண்டு ஒரு பெண் பல ஆண்களை மணந்து கொள்ளும் வழக்கம் ஆரியர்களிடம் இருந்ததாக முடிவு செய்து விட்டார்கள். இதே மாதிரி ஃபெர்குசன் என்ற பண்டிதர் ஒரு பாழடைந்த மாளிகையின் சுவற்றில் தீட்டப்பட்டிருந்த சில நிர்வாணப் பெண்களின் சித்திரங்களைப் பார்த்துவிட்டுப் பண்டைக் காலத்து இந்தியப் பெண்கள் உடையணிவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அதாவது சீதையும் திரௌபதியும் சாவித்திரியும் தமயந்தியும் தங்கள் மாமனார், மைத்துனர்களுக்கு முன்னால் நிர்வாணமாக நடமாடினார்களாம்! அதனால்தான் சொன்னேன்— இந்த அறிஞர்களுடைய நூல்களைப் படிப்பதைப் போன்ற மகாபாவம் இலக்கிய உலகில் அரிதென்று.

திரௌபதிக்கு ஐந்து கணவன்மார் இருந்ததன் உட்பொருளை ஆராயுமுன், இந்த நிகழ்ச்சி உண்மை வரலாறுதானா அல்லது வெறும் கற்பனையா என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும். திரௌபதிக்கு உண்மையிலேயே ஐந்து கணவன்கள் இருந்தார்களா அல்லது கவி இப்படிக் கற்பனை செய்தாரா? மகாபாரதத்துக்கு வரலாற்று ஆதாரம் இருக்கிறது என்பதை நான் இன்னொரு கட்டுரையில் ஏற்றுக் கொண்டு விளக்கியிருக்கிறேன். ஆனால் மகாபாரதத்துக்கு வரலாற்று ஆதாரம் இருப்பதால் அதில் கூறப்படும் எல்லா நிகழ்ச்சிகளும் உண்மை என்று கொள்ளலாகாது. இடைச் செருகல்கள்

உண்மை வரலாறு அல்ல என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் திரௌபதியை இடைச் செருகலாகக் கொள்ள முடியாது. மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் வரலாற்று உண்மை என்று கூடச் சொல்ல முடியாது. ஒருவரே வரலாற்று ஆசிரியராகவும் கவியாகவுமிருந்த அந்தக் காலத்தில் வரலாறும் காவியமும் கலந்து விடுவது இயற்கை. திரௌபதி யுதிஷ்டிரனின் மனைவி என்பதை வரலாற்று உண்மையாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவள் ஐந்து பாண்டவர்களுக்கும் மனைவி என்பதையும் உண்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

ஒரு பெண் பல ஆண்களை மணந்து கொள்ளும் நிகழ்ச்சி பாரத இலக்கியமாகிய பெருங்கடலில் வேறெங்கும் காணப்படவில்லை. விதவையான பெண் மறுமணம் செய்து கொள்ளும் சான்றுகள் பல உண்டு; ஆனால் ஒரு பெண் ஒரே சமயத்தில் பல ஆண்களுக்கு மனைவியாக இருந்ததற்குச் சான்று இல்லை. சில சமயம் சில மனிதர்கள் ஒவ்வொரு கையிலும் ஆறு விரல்களுடன் பிறக்கிறார்கள், சிலர் பிறக்கும் போதே குருடாயிருக்கிறார்கள். இதைக் கொண்டு எல்லா மனிதர்களுக்கும் கையில் ஆறு விரல்கள் உண்டென்றோ, எல்லோரும் குருடாகப் பிறக்கிறார்களென்றோ முடிவு செய்யலாமா? அதே மாதிரி திரௌபதியைச் சான்றாகக் கொண்டு அந்தக் காலத்தில் ஆரியப் பெண்கள் பல ஆண்களை மணம் செய்து கொள்வது வழக்கம் என்று சொல்ல முடியாது. அத்தகைய வழக்கம் இல்லை என்பது மகாபாரதத்திலிருந்தே தெரிகிறது. வழக்கத்துக்கு மாறான இந்த நிகழ்ச்சி ஏன் நேர்ந்தது என்பதை விளக்குவதற்காக மகாபாரதக் கவி முற்பிறப்பின் அடிப்படையில் பல நம்பவியலாத கதைகளைப் புகுத்த நேர்கிறது. இதிலிருந்து அந்த வழக்கம் அப்போது அமுலில்லை என்பது தெளிவு.

சமூகத்தில் வழங்காத ஒரு நிகழ்ச்சி நேர்ந்தால் அது சமூகத்தின் கடுமையான கேலிக்கும் இகழ்ச்சிக்கும் இலக்காவது இயற்கையே. ஆகவே இத்தகைய நிகழ்ச்சி பாண்டவர்கள் போன்ற புகழ்பெற்ற ஒரு அரச குலத்தில் நேர வாய்ப்பே இல்லை. ஆனால் கவி ஒரு தத்துவத்தை விளக்குவதற்காக இத்தகைய ஒரு நிகழ்ச்சியைக் கற்பனை செய்திருக்கலாம்.

ஒரு கற்பனைக் கதையின் பல அடையாளங்கள் இதில் உள்ளன. திரௌபதிக்கு ஒவ்வொரு கணவனிடமும் ஒரேயொரு பிள்ளைதான்; ஒரு பாண்டவனுக்கும் இரண்டோ மூன்றோ பிள்ளைகள் இல்லை, ஒருவருக்கும் பெண் குழந்தை இல்லை, ஒருவருக்கும் குழந்தையில்லாமலில்லை. இந்த ஐந்து புதல்வர்களும் பிழைத்திருக்கவில்லை; அவர்களில் யாருக்கும் அரசுரிமை கிடைக்கவில்லை. அவர்களெல்லோரும் அசுவத்தாமாவால் கொல்லப் பட்டனர். அவர்கள் குருட்சேத்திரப் போரில் இடையிடையே சேர்ந்து வந்து போர் செய்துவிட்டுப் போய் விடுகிறார்கள்; வேறு எதுவும் செய்யவில்லை.

இவர்களோடு ஒப்பிடுகையில் அபிமன்யு, கடோத்கசன், பப்ருவாகன் ஆகியோர் எவ்வளவு உயிர்த்துடிப்போடு சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள்!

திரௌபதிக்கு ஐந்து கணவன்மார் இருந்தமையைக் கற்பனை என்று வைத்துக் கொண்டால், அவள் தருமருக்கு மட்டுமே மனைவி என்று கொண்டால், மற்ற பாண்டவர்கள் மணம் செய்து கொள்ளவில்லையா என்ற கேள்வி எழலாம். இக்கேள்விக்கு விடையளிப்பது கடினந்தான்.

பீமனும் அர்ஜுனனும் வேறு திருமணங்கள் செய்து கொண்டது நமக்குத் தெரியும். ஆனால் நகுலனும் சகாதேவனும் வேறு திருமணங்கள் செய்து கொண்டதாக மகாபாரதம் சொல்லவில்லை. சொல்லவில்லை என்ற ஒரே காரணத்தால் அவர்கள் வேறு திருமணங்கள் செய்து கொள்ளவில்லை என்றும் முடிவுகட்ட இயலாது. மகாபாரதம் முக்கியமாக முதல் மூன்று பாண்டவர்களின் கதை. மற்ற இரு பாண்டவர்களும் முன்னவர் மூவரின் நிழலாயிருந்து கொண்டு அவர்களுடன் செயற்படுகிறார்கள். அவர்கள் வேறு திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அவ'ற்றைக் குறிப்பிடுவது கதைக்குத்தேவையில்லையென்று கவி அவற்றைக் கூறாதிருந்திருக்கலாம். திரௌபதிக்கு ஐந்து கணவன் மார் இருந்தமைக்கு நாம் முன்னமே தெரிவித்துள்ள ஆட்சேபங்கள் பலமானவை.

திரௌபதியின் திருமண நிகழ்ச்சியைக் கவியின் கற்பனையாக வைத்துக் கொண்டால், அவர் ஏன் இப்படி ஓர் அதிசயக் கற்பனையைச் செய்தார்? ஏதோ ஒரு முக்கியமான நோக்கம் இருந்ததால்தான் அவர் இவ்வாறு கற்பனை செய்திருப்பார். அவருடைய நோக்கம் என்ன? வாசகரும் ஆங்கிலேய அறிஞர்களைப் போல், "இது ஒரு பெண் பல ஆண்களை மணக்கும் வழக்கத்தையொட்டியதுதான்" என்று சொல்லி விட்டால் வேறு பேச்சுக்கு இடமில்லை; இவ்வாறு சொல்லவில்லையென்றால் இந்த நிகழ்ச்சிக்குப் பின் மறைந்துள்ள ஆழ்ந்த தத்துவம் ஆராயப்பட வேண்டும்.

இந்தத் தத்துவத்தை ஆராயப்புகு முன்னர் அறிஞரும் மரியாதைக்குரியவருமான ஒருவரின் கூற்று ஒன்றை இங்கு எடுத்துக் காட்டுகிறேன். 'பிரசார்' பத்திரிகையில் வெளியான 'கிருஷ்ண சரித்திர'த்தைப் பற்றிச் சொல்லப் பட்டது இந்தக் கூற்று:

"ஸ்ரீ கிருஷ்ணர் மனித உடலில் இவ்வுலகில் நடமாடினார் என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம். மகாபாரதம் எழுதப்படுவதற்கு முன்பே மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தி ஸ்ரீகிருஷ்ணர் மூலம் செயற்பட்டதாக மக்கள் நம்பினர் என்பதையும் உண்மையாகக் கொள்ளலாம். ஆகையால் மகாபாரதக் காவியத்திலும் முதலிலிருந்தே இந்த நம்பிக்கை பிரதிபலிப்பதில் வியப்பு இல்லை; இவ்வாறு நேர்வதுதான் இயற்கை. எனினும் நமக்குத் தோன்றுவது என்னவென்றால், மகாபாரதக்கவி பல நோக்கங்களுடன் தம் காவியத்தைப்

படைத்தார். இவற்றுள் சில மனிதனுக்கு அவனுடைய கடமைகளை அறிவுறுத்தல், வேதங்களுக்கு விளக்கமளித்தல் முதலியன. இத்துடன் அவர் அர்ஜுனனையும் சுபத்ராவையும் இலட்சிய ஆண்-பெண்ணாகச் சித்திரித்தார். கடவுளிடம் உறுதியான பக்தியும் அதன் விளைவாகக் கடவுளின் தலைமையில் அசையாத நம்பிக்கையுமே இலட்சிய மனிதனின் உண்மையான பலம் என்பதைக் காட்டுவதற்காகக் கிருஷ்ணரை ஒரு தெய்வீக சக்தியின் உருவகமாகச் சித்திரிக்க முயல்கிறார். எந்த நாட்டிலும் எந்தக் கவியும் இவ்வாறு தெய்வீக சக்தியை ஒரு பூவுலகத்துப் பாத்திரத்தில் சித்திரித்ததில்லை. ஆதி கவி வால்மீகியும் இத்தகைய முயற்சி செய்ததில்லை. மகாபாரதக் கவி இந்த முயற்சியில் ஈடுபட்டு, இம்முயற்சி நிறைவேறுவது எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு நிறைவேற்றியிருக்கிறார்; ஆகையால்தான் மகாபாரதம் 'ஐந்தாம் வேதம்' என்று போற்றப்படுகிறது. இந்தத் தெய்வீக சக்தியின் பெயர் 'பற்றின்மை'. பற்றின்மையின் மனித உருவகந்தான் ஸ்ரீகிருஷ்ணர். (வங்க ஆண்டு 1293, பைசாக் மாதம், 28ம் தேதியிட்ட 'எஜுகேஷன் கெஜெட்'.)

இந்தப் பற்றின்மை சாதாரண மக்கள் நினைக்கும் 'வைராக்கியம்' அல்லது துறவு மனப்பான்மையல்ல. கீதையின் ஒரு சுலோகத்திலிருந்து இதை விளக்கலாம்:

"விருப்பு வெறுப்பற்றவையும் ஆத்மாவுக்கு அடங்கியவையுமான புலன்களின் மூலம் இன்பங்களை அனுபவித்துக் கொண்டு புலனடக்கத்துடன் வாழும் மனிதன் அமைதியை எய்துகிறான்."

ஆகவே பற்றற்றவன் புலனின்பங்களைத் தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. தவிர்க்கும் முயற்சியே பற்றை உணர்த்துகிறது. தேவை தோன்றுவதிலிருந்தே ஆத்மா இன்னும் பற்றில் மாட்டிக் கொண்டிருக்கிறது, புலனின்பங்களைத் தவிர்த்தால்தான் பற்றிலிருந்து விடுதலை பெறலாம் என்பது தெளிவாகிறது. ஆனால் புலனின்பங்களைத் துய்த்துக் கொண்டே அவற்றில் பற்றில்லாதவர், தம் கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் புலன்களை வென்று புலனின்பங்களைத் துய்ப்பவர்— இப்படிப்பட்டவர்தான் உண்மையில் பற்றற்றவர். புலனின்பங்கள் அவருடைய ஆத்மாவை மாசுபடுத்தா. அவர் பாவத்தையும் துக்கத்தையும கடந்தவர்.

இந்து சாத்திரங்களையும் காவியங்களையும் படைத்தவர்கள் இந்தப் 'பற்றின்மை'யை எடுத்துக்காட்ட ஒரு திட்டத்தை மேற்கொள்கிறார்கள்— அவர்கள் ஒரு பற்றற்ற மனிதரை அளவுக்கதிகமான புலனின்பங்களால் சூழப்பட்டவராகச் செய்கிறார்கள். இதனால்தான் மகாபாரதத்துக்குப் பிற்பட்ட புராணங்களை எழுதியவர்கள் கிருஷ்ணர் எண்ணற்ற அழகிகளால் சூழப்பட்டிருப்பதாகச் சித்திரிக்கிறார்கள். இதே காரணத்தால்தான்தாந்தரீக வழிபாட்டு முறையில் புலனின்பங்களைத் துய்க்கத்தக்க பல பொருள்கள் இடம்

பெற்றுள்ளன. இத்தகைய இன்பங்களுக்கிடையே வாழ்ந்தும் பற்றற்று இருப்பவனே உண்மையில் பற்றற்றவன். இந்த நோககத்துடன்தான் திரௌபதிக்குப் பல கணவன்மார் கற்பனை செய்யப்பட்டிருக்கிறாகள். பெண்ணினத்தின் பற்றின்மையின் உருவகம் திரௌபதி. இவ்வாறுதான் கவி அவளைக் கற்பனை செய்துள்ளார். ஆகையால்தான் ஒரு வேசி போல் பல ஆண்களுடன் உறவு கொண்டாலும் அவள் தூய்மையானவள், பதிவிரதைகளில் சிறந்தவள். திரௌபதிக்கு அவளுடைய ஐந்து கணவன்மாரும் ஒரே கணவன் போலத்தான்— அவளது ஆராதனைக்குரிய பொருள், அவளது அற வாழ்க்கையின் ஒரே இலட்சியம். உண்மையான அறிஞனுக்கு ஆராதனைக்குரிய ஒரே பொருள் கடவுள் மட்டுமே, பூசிக்கப்படும் பல கடவுள்களையும் அவன் ஒரே கடவுளாகத்தான் காண்கிறான். அதே போல் பற்றற்ற திரௌபதியும் தன் ஐந்து கணவன்மாரையும் தன் அறவாழ்க்கைக்குத் தேவையான ஒரே கருவியாகத்தான் கருதுகிறாள். அவர்களிடையே அவள் எவ்வித வேற்றுமையும் பாராட்டவில்லை; இல்லத்தரசி என்ற முறையிலும் அவள் பற்றில்லாமல், அமைதியாகத் தன் கடமைகளைச் செய்கிறாள். திரௌபதி பாத்திரத்தில் வெளிப்புறமாகத் தோற்றமளிக்கும் நெருடலின் சாரம் இதுதான். ஆனால் இவ்வாறு கடமையை நிறைவேற்றுவது மிகவும் கடினமான செயல். மகாபாரதக் கவி மகாப் பிரஸ்தானப்பருவத்தில் இதையும் உணர்த்துகிறார். திரௌபதி மற்ற கணவன்மாரைவிட அர்ஜுனனைச் சிறிது அதிகம் நேசித்ததால் அவள் உடலோடு சுவர்க்கம் செல்லும் தகுதியை இழந்ததாகவும், ஆகவே சுவர்க்கம் செல்லும் வழியில் முதலிலேயே கீழே விழுந்துவிட்டதாகவும் கூறுகிறார் கவி.

திரௌபதிக்குத் தன் கணவன்மார் ஒவ்வொருவர் மூலமும் ஒரே பிள்ளை பிறந்ததற்குக் காரணம் இப்போது புரிகிறது. பிள்ளை பெறுவது இல்லறக் கடமை என்பது இந்து சாத்திரங்களின் கருத்து. இல்லறத்தான் பிள்ளை பெறுவதைத் தவிர்ப்பது பாவம். பிள்ளை பெற்றால்தான் திருமணம் பலன் பெற்றதாக ஆகும், இல்லாவிட்டால் அறம் நிறைவேறவில்லை என்று பொருள். அறம் நிறைவேறுதற்கு ஒரு பிள்ளை பெற்றால் போதும். ஒன்றுக்கு மேற்பட்ட புத்திரர்களைப் பெறுவது அறத்துக்காக அல்ல, புலனின்பத்துக்காகத்தான். திரௌபதி பற்றற்றவள். அவள் ஒவ்வொரு கணவனுக்கும் ஒரு பிள்ளை பெற்றுக் கொடுத்ததோடு அறத்தின் நோக்கம் நிறைவேறி விடுகிறது. அதன் பிறகு அவள் தன் கணவன்மாரோடு உடலுறவு கொள்ளவில்லை. ஆகவே தான் அவளுக்கு ஐந்துக்கு மேற்பட்ட குழந்தைகள் பிறக்கவில்லை. கவியின் கற்பனையின் பொருள் இதுதான்.

பற்றின்மையை விரதமாக ஏற்றுக் கொண்டுள்ள ஒரு பெண் ஐந்தாறு ஆண்களை மணம் செய்து கொள்ள வேண்டும் என்பது மேற்கண்ட கற்பனையில் பொருளல்ல. மனத்தூய்மை கொண்டவர்கள் சாதாரணமாக மக்க

ளால் பெரும் பாவமெனக் கருதப்படும் செயல்களைச் செய்தாலும் பாவம் அவர்களைத் தீண்டாது என்பதே இந்தக் கற்பனையின் பொருளாகும். சாதாரணப் பெண்கள் திரௌபதி போல் ஒரே சமயத்தில் பல ஆண்களை மணந்தால் அது போன்ற பெரும்பாவம் வேறெதுவுமில்லை. ஆனால் திரௌபதி தன் மனத்தூய்மையால் அந்தப் பெரும் பாவத்தையும் அறமாக மாற்றிவிட்டாள்.

திரௌபதி அறத்தில் மிகவும் கர்வமுள்ளவளாக இருந்தாள் என்பதை முதல் கட்டுரையில் காட்டியிருக்கிறேன். சில சமயங்களில் அந்தக் கர்வம் அறத்தின் எல்லைகளையும் மீறி விடுகிறது. அந்தக் கர்வத்துக்கும் இந்தப் பற்றின்மைக்குமிடையே எவ்வித முரண்பாடும் இல்லை. எனினும் திரௌபதியின் பற்றின்மையாகிய விரதம் முழுமையை எய்தியதா இல்லையா என்பது வேறு விஷயம்.

(வங்க ஆண்டு 1293 பைசாக் மாதத்தில் முதலில் வெளியான இக்கட்டுரை 'விவித பிரபந்த' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)

கிருஷ்ணர் கூறிய அறக் கொள்கை

அசுவத்தாமா கொல்லப்பட்ட நிகழ்ச்சியைக் கூறும் கவி அர்ஜுனனை ஓர் உயர்ந்த நிலையில் வைத்திருக்கிறார். கிருஷ்ணர், தருமர், பீமன் ஆகியோரை விட அர்ஜுனனுக்கு அற உணர்வு அதிகமிருப்பதாக அவர் சித்திரித்துள்ளார். கிருஷ்ணரால் பரிந்துரைக்கப்பட்டுப் பின்னர் பீமனாலும் தருமராலும் நிறைவேற்றப்பட்ட யோசனை பொய்யை அடிப்படையாகக் கொண்டது என்ற காரணத்தால் அர்ஜுனன் அதை ஏற்காததோடு, அதன்படி நடந்ததற் காகத் தருமரைக் கண்டிக்கிறான்.

ஆனால் இப்போது நாம் விவரிக்கப் போகும் நிகழ்ச்சியில் அர்ஜுனன் பெரிய முட்டாளாகவும் பாவியாகவும் சித்திரிக்கப்படுகிறான்; கிருஷ்ணரின் அறிவுரை பெற்றபின்பே நல்ல வழியை மேற்கொள்கிறான்.

அந்த நிகழ்ச்சி இதுதான்—

துரோணருக்குப் பிறகு கர்ணன் கௌரவப் படைக்குத் தளபதியாகிறான். அவனுடைய தாக்குதலில் பாண்டவப்படை வெலவெலத்துப் போகிறது. துரதிர்ஷ்ட வசமாகத் தருமர் கர்ணனுக்கு முன்னால் வருகிறார். கர்ணன் அவரைக் கடுமையாகத் தாக்கவே அவர் பயந்து போய்ப் போர்க்களத்தை விட்டோடித் தன் பாசறையில் ஒளிந்து கொண்டு விடுகிறார். அர்ஜுனன் போரில் வெற்றி பெற்றுத் தருமரைப் போர்க்களத்தில் காணாமல் கவலை யுடன் அவரைத் தேடிக் கொண்டு பாசறைக்கு வருகிறான். இன்னும் கர்ணன் இறக்கவில்லை. இந்தச் செய்தி கேட்டுத் தருமர் அர்ஜுனனை மிகவும் கோபித்துக் கொள்கிறார். தான் செய்ய முடியாத காரியத்தைப் பிறர் தன் சார்பில் செய்யாவிட்டால் பிறரைக் கோபித்துக் கொள்வது கோழையின் இயற்கை. ஆகையால் தருமர் அர்ஜுனனைக் கடுமையாகத் திட்டுகிறார். கடைசியில், 'நீ பயந்து போய்ப் போர்க்களத்திலிருந்து ஓடி வந்துவிட்டாய்; ஆகையால் உன் காண்டீவத்தைக் கிருஷ்ணரிடம் கொடுத்துவிடு!" என்று கேலியாகச் சொல்கிறார்.

காண்டீவம் ஒரு தெய்வீக ஆயுதம்; அழிவற்றது பயங்கரமானது'. அர்ஜுனன் மிகவும் போற்றிய ஆயுதம் அது. தருமரின் பேச்சைக் கேட்டு அர்ஜுனனுக்குக்

கோபம் வந்துவிடுகிறது. அவன் வாளை எடுத்துக் கொண்டு தருமரை வெட்டிவிடப் பாய்கிறான். "கிருஷ்ணர் அவனைத் தடுத்து, "நீ யாரைக் கொல்லப் போகிறாய்?" என்று கேட்க, அவன் சொல்கிறான்: "யாராவது என்னிடம் 'உன் காண்டீவத்தை இன்னொருவனுக்குக் கொடுத்துவிடு' என்று சொன்னால் அவனுடைய தலையைக் கொய்துவிடுவதாக நான் சபதம் செய்து கொண்டிருக்கிறேன். இப்போது இந்த வார்த்தைகளை அண்ணன் கூறியதால் நான் அவரைக் கொன்று சபதத்தை நிறைவேற்றப் போகிறேன்."

இந்த மூடத்தனமான பேச்சு அர்ஜுனனுக்கு ஏற்றதல்ல. காண்டீவத்தை இன்னொருவனுக்கக் கொடு என்று சொன்னதற்காக ஒருவனைக் கொல்வது என்று சபதம் செய்து கொள்வது முட்டாள்தனம். மரியாதைக்குரிய அண்ணன் உணர்ச்சி வசப்பட்டு இந்த வார்த்தைகளைச் சொன்னதற்காக அவரையே கொலை செய்ய முற்படுவது பெரும்பாவம். எனினும் இதில் ஒரு முக்கியமான சிக்கல் இருக்கிறது. இந்தச் சிக்கலைத் தீர்த்துவைக்கிறார் கிருஷ்ணர். ஆகவே தான் நான் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட நேரிட்டுள்ளது.

சத்தியமே மிகச் சிறந்த அறம். அர்ஜுனன் தன் சபதப்படி தருமரைக் கொல்லாவிட்டால் அவன் சத்தியம் பிறழ்ந்தவனாகிறான். சத்தியத்தைக் காப்பாற்றத் தருமரைக் கொல்வது தன் கடமையா இல்லையா என்பது அர்ஜுனனின் ஐயம். அவன் கிருஷ்ணரைக் கேட்கிறான், "இப்போது என் கடமை என்ன?"

கிருஷ்ணர் இதற்கு என்ன பதில் சொன்னார் என்பதை நாம் கூறுமுன் வாசகர்களையே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லமுயலும்படி கேட்டுக் கொள்கிறோம். இத்தகைய சபதத்தை நிறைவேற்றத் தருமரைக் கொல்வது அர்ஜுனனின் கடமையல்ல என்றே எல்லா வாசகர்களும் சொல்வார்களென்று நாம் நம்புகிறோம். கிருஷ்ணரும் இதே பதிலைத் தான் அளித்தார். ஆனால் மேலைநாட்டு சிந்தனை ஓட்டத்தில் தேர்ந்த தற்கால வாசகர்கள் எந்தக் காரணத்துக்காக இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்களோ, அந்தக் காரணத் துக்காக் கிருஷ்ணர் தம் பதிலைச் சொல்லவில்லை. அவர் கீழைநாட்டு அற நெறிப்படியே இந்த மாதிரி கருத்துத் தெரிவித்தார். காரணம், அவர் பாரதத்தில் அவதரித்தவர், இங்கிலாந்தில் அல்ல, அவர் பாரத நீதிமுறைகளில் தேர்ந்தவர். ஐரோப்பிய நீதிமுறை அப்போது உருவாகவே இல்லை. மேலும் கிருஷ்ணர் ஐரோப்பிய நீதி முறையைப் பின்பற்றியிருந்தால் அவரது கருத்து அர்ஜுனனுக்குப் புரிந்திருக்காது.

அர்ஜுனனுக்கு அறிவுறுத்தக் கிருஷ்ணர் கூறிய கருத்துக்களில் விவாதத் துக்குரிய பகுதியை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

கிருஷ்ணரின் முதல் அறிவுரை: 'அகிம்சையே சிறந்த அறம்.' எல்லா இடங் களிலும் அகிம்சை சிறந்த அறமாகாது என்ற ஆட்சேபம் எழலாம். மேலும், கிருஷ்ணரே அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசித்து அவனைப் போர் செய்யத் தூண்டியிருக்கிறார் என்பதும் சுட்டிக் காட்டப் படலாம்.

அகிம்சைத் தத்துவத்தின் உண்மையான பொருளை அறியாதவர்கள்தாம் இத்தகைய ஆட்சேபங்களை எழுப்புவார்கள். 'அகிம்சை சிறந்த அறம் என்றால் எந்த நிலையிலும் உயிர்களைக் கொல்லக் கூடாது என்று பொருளல்ல, உயிர்க் கொலை செய்யாமல் நாம் கணநேரமும் உயிர் வாழ முடியாது, இது கடவுளின் விதி. நாம் குடிக்கும் தண்ணீருடன் எண்ணற்ற பூதக் கண்ணாடி மூலமே கண்ணனுக்குத் தெரியக் கூடிய—கிருமிகளையும் உட் கொள்கிறோம்; அதேபோன்ற எண்ணற்ற நுண்கிருமிகளை மூச்சுக் காற்றோடு உள்ளிழுத்துக் கொள்கிறோம்; ஒவ்வொரு காலடிவைக்கும் போதும் பல ஜீவன்களை நசுக்கிக் கொன்றுவிடுகிறோம்; ஒரு கீரையிலை அல்லது கத்தரிக்காயுடன் பல உயிர்களைச் சமைத்துச் சாப்பிட்டு விடுகிறோம். இவையெல்லாம் நாமறியாமல் செய்யும் செயல்கள், ஆகையால் இவற்றால் பாவமில்லை என்று சொல்லலாம். ஆனால் நாம் தெரிந்தும் பல கொலைகள் செய்கிறோம். விஷப்பாம்போ தேளோ நம் வீட்டில் அல்லது படுக்கைக் கடியில் வந்து ஒளிந்து கொண்டால்நாம் அதைக் கொல்லத்தான் வேண்டும்; இல்லாவிட்டால் அது நம்மைக் கொன்றுவிடும். நம்மைத் தாக்க வரும் புலியை நாம் கொல்லாவிட்டால் அது நம்மைக் கொன்றுவிடும். நம்மைக் கொல்ல ஆயுதமேந்திவரும் எதிரியை நாம் கொல்லாவிட்டால் அவன் கையால் நாம் சாக நேரும். ஒரு திருடன் ஆயுதத்துடன் நள்ளிரவில் நம்வீட்டுக்குள் நுழைந்து நம் பொருள்கள் எல்லாவற்றையும் பறித்துக் கொள்ள முனைந்தால் அவனைக் கொன்றால்தான் அவனைத் தடுக்க முடியும் என்ற நிலை ஏற்படும்போது அவனை அழிப்பதே நம் கடமை. ஒரு குற்றவாளியின் குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு, சட்டப்படி அந்தக் குற்றத்துக்கேற்ற தண்டனை தூக்குத் தண்டனைதான் என்றால், தூக்குத் தண்டனை விதிப்பது நீதிபதியின் கடமை. அத்தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு எந்த அரசு ஊழியனுக்கு உண்டோ, அவன் அத்தண்டனையை நிறைவேற்றத்தான் வேண்டும். அலெக் சாந்தர், முகம்மது கஜினி, ஆத்திலா, செங்கிஸ்கான், தைமூர், நாதிர்ஷா, இரண்டாவது ஃப்ரெடெரிக், நெப்போலியன் பிறநாடுகளையும் பிறர் சொத்துக்களையும் கைப்பற்ற அழைத்து வந்த எண்ணற்ற 'கல்வியறிவுள்ள' திருடர்கள் லட்சக் கணக்கானவராயிருந்தாலும் அவர்களில் ஒவ்வொருவரும் கொல்லப்படத்தக்கவரே. இவ்விடங்களில் கொலையே அறம்.

மாறாக, ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் பறவையை உணவுக் காகவோ, விளையாட்டுக்காகவோ கொல்வது அதர்மம். தேனைத் தேடிப் பறந்து கொண்டிருக்கும் ஈயை விளையாட்டுச் சிறுவன் பிடித்து நசுக்குவதும் அறத்துக்கு முரண்பட்டதே. உன்னையும் என்னையும் போல் உலகில் வாழ வந்திருக்கும் மானையும் கோழியையும் நம் வயிற்றை நிரப்பிக் கொள்வ தற்காகக் கொல்வதும் அதர்மந்தான். நாம் நிலத்தில் வாழும் பிராணிகள்; மீன்கள் நீரில் வாழும் பிராணிகள்; நாம் மீன்களைப் பிடித்து உண்பதும் அறத்துக்கு மாறான செயல்தான்.

ஆகவே, தேவையின்றிச் செய்யப்படும் ஹிம்சையைத் தவிர்ப்பதுதான் சிறந்த அறம்— இதுதான் 'அகிம்சையே சிறந்த அறம்' என்ற தத்துவத்தின் உண்மையான பொருள். நமக்கு இன்னல் செய்பவனைத் தடுப்பதற்காக நாம் மேற்கொள்ளும் ஹிம்சை அதர்மமில்லை, அதுவே அறம். இந்தக் கருத்தைத் தெளிவு படுத்துவதற்காகக் கிருஷ்ணர் அர்ஜுனனுக்குப் பலாகன் என்ற ஒரு வேடனின் கதையைச் சொல்கிறார். பல பிராணிகளை அழித்துக் கொண்டிருந்த ஒரு கொடிய விலங்கைப் பலாகன் கொன்றான். உடனே அவன் மேல் "வானிலிருந்து மலர் மாரிபொழிந்தது; அப்சரப் பெண்கள் கீதமிசைத்தனர்; அவனை சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல விமானம் வந்தது" ஹிம்சை செய்த ஒரு பிராணியைக் கொன்றதே அந்த வேடன் செய்த புண்ணியம்.

அறத்துக்காகத் தேவைப்பட்டாலொழிய ஹிம்சை செய்யக் கூடாது. ஆனால் இந்த விஷயத்தில் ஒரு குழப்பம் இருக்கிறது; இந்தக் குழப்பம் வெகு காலமாகவே தொடர்ந்து வருகிறது. அறத்தின் தேவை என்பது என்ன? அறம் என்பது என்ன? 'இன்க்விசிஷன்' (Inquisition) என்ற மத அமைப்பு சில மதக் கருத்துக்களை எதிர்த்தவர்களைக் கொல்வது அறமெனக் கருதி எண்ணற்ற மனிதர்களை யமபுரிக்கு அனுப்பியது. செயின்ட் பார்த்தலோமியோ படு கொலை மதம் காரணமாகவே நிகழ்ந்தது. 'க்ரூஸேட்' எனப்படும் மதப் போர்களை நிகழ்த்தியவர்கள் தாங்கள் அறம் செய்வதாகவே நினைத்துக் கொண்டு மனித இரத்தத்தால் பூமியைச் சேறாக்கினார்கள். முஸ்லிம்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக லட்சக் கணக்கான மனிதர்களைக் கொன்றனர். மதத் தேவை என்ற தவறான எண்ணத்தால் மனிதர்கள் கொல்லப்பட்ட அளவுக்கு வேறெந்தக் காரணத்தாலும் மக்கள் அழியவில்லை.

இத்தகைய குழப்பந்தான் அர்ஜுனனுக்கும் ஏற்பட்டது. தன் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தருமரைக் கொல்வது தன் கடமை என்று நினைத்தான் அவன். 'அகிம்சையே சிறந்த அறம்" என்று சொன்னால் மட்டும் அவனது குழப்பம் தீராது. ஆகவேதான் கிருஷ்ணர் வேறு வாதங்களையும் முன் வைத்தார்.

கிருஷ்ணரின் இரண்டாவது வாதம்—பொய்கூடச் சொல்லலாம், ஆனால் ஒருபோதும் உயிரைக் கொல்லக் கூடாது.

(இந்தக் கருத்தைக் கொண்ட மூல சம்ஸ்கிருத சுலோகம் இதுதான்:

"ப்ராணினாம் அவதஸ்தாத சர்வஜ்யாயான் மதோமம;

அன்ருதாம் வா வதேத் வாசம் நது ஹிம்ஸ்யாத் கதஞ்ச்சன")

அகிம்சை, சத்தியம் இவ்விரண்டுக்குள் அகிம்சையே சிறந்த அறம். பலவகைப் புண்ணியச் செயல்களை அறம் என்கிறோம். தானம், தவம், கடவுள் பக்தி, சத்தியம், தூய்மை, அகிம்சை இவையெல்லாம் அறந்தான். ஆனால் இவையெல்லாம் சமமான மதிப்புள்ளவையல்ல. இவற்றின் மதிப்பில் ஏற்றத் தாழ்வு உண்டு. தானமும் தூய்மையும் சத்தியத்துக்கும் அகிம்சைக்கும்

ஒப்பானவை என்று சொல்ல முடியுமா? முடியாது. அப்படியானால் மிக உயர்ந்தது எது? அகிம்சைதான் மிக உயர்ந்ததென்பது கிருஷ்ணரின் கருத்து, அதற்கு அடுத்தபடி தான் சத்தியம்.

நாம் மேலைநாட்டுத் தத்துவத்தின் சீடர்கள். ஆகவே மேலே கூறப்பட்ட கருத்தைக் கேட்டுப் பல வாசகர்கள் திடுக்கிடுவார்கள். எந்த நிலையிலும் பொய் சொல்லக்கூடாதென்று மேலைநாட்டினர் சொல்கிறார்களாம். நாம் இதுபற்றி இப்போது பேசவில்லை. பொய் சொல்பவன் கொலைகாரனை விடப் பெரிய பாவி என்றோ இவ்விருவரும் ஒரே மாதிரி பாவிகள் என்றோ மேலைநாட்டினர் கூறுவதாக யாரும் சொல்லமாட்டார்கள். இதற்குச் சான்று மேலைநாட்டுச் சட்டவிதிகள். அப்படியானல் கிருஷ்ணரின் கருத்துக்கும் மேலைநாட்டுத் தத்துவத்துக்குமிடையே வேற்றுமை ஏது? இப்போது நாம் பேசுவது பாவத்தின் தரத்தைப் பற்றி. அறத்துக்கு முரணான செயலை ஒரு போதும் செய்யக் கூடாது. மனிதனைக் கொல்வதும் கூடாது, பொய் சொல் வதும் கூடாது. பொய் சொல்லவேண்டும் அல்லது மனிதக் கொலை செய்ய வேண்டும் என்ற ஒரு இக்கட்டான நிலையில் ஒரு மனிதன் மாட்டிக் கொண்டால் அவன் பொய் சொல்லலாம், மனிதனைக் கொல்லக்கூடாது என்பதே கிருஷ்ணரின் கருத்து. நீதி நெறியறிந்தவர் எனக் கூறிக் கொள்பவர் யாராவது இந்த நிலையில் மனிதக் கொலை செய்யலாம், ஆனால் பொய் சொல்லக்கூடாது என்று கூறுவாரானால் அந்த அரக்க நீதி அவரிடமே யிருக்கட்டும், அது நம் நாட்டுக்கு வேண்டாம்.

அர்ஜுனன் கிருஷ்ணரின் இந்தக் கருத்தைப் பின்பற்றினாலே அவன் தருமரைக் கொல்வதைத் தவிர்த்துவிடலாம். ஆனால் அவன் சொல்லலாம்: "இது உன் கருத்து. ஆனால் உலகத்தில் பின்பற்றப்படும் அறம் என்ன? உன் கருத்து சரியாக இருக்கலாம். இருந்தாலும் அது நடைமுறை வழக்கத்துக்கு எதிராயிருந்தால் நான் சமூகத்தால் பாவி என்று இகழப்படுவேன், என் பெயருக்குக் களங்கமேற்படும்." இதற்காகக் கிருஷ்ணர் தம் கருத்தை வெளி யிடுவதோடு நடைமுறை வழக்கத்தையும் விளக்குகிறார். அவர் சொல்கிறார்: "தனஞ்சயா, கௌவர்களின் பாட்டனாரான பீஷ்மர், அறத்தில் சிறந்த தருமர், விதுரர், புகழுக்குரிய குந்தி ஆகியோர் கூறியுள்ள அறக் கொள்கையை நான் அப்படியே உனக்குச் சொல்கிறேன், கேள்... 'நல்ல மனிதன் சத்தியமே பேசுவான். சத்தியத்தைவிட உயர்ந்தது எதுவுமில்லை.' சத்தியத்தைக் கையாள் வதே மனிதனின் கடமை."

(மேற்கண்ட கூற்று முதலில் கூறப்பட்ட 'அகிம்சையே சிறந்த அறம்' என்ற கூற்றுக்கு முரணானது. மேற்கண்ட கூற்று பீஷ்மர் ஆகியோரின் கருத்து; முன்னர் சொல்லப்பட்டதோ கிருஷ்ணரின் கருத்து.)

பொதுவான கொள்கையை இவ்வாறு சொல்லிவிட்டுக் கிருஷ்ணர் மேலும் கூறுகிறார்: "ஆனால் பொய் சத்தியமாகவும், சத்தியம் பொய்யாகவும் ஆகிவிடக்கூடிய சமயங்களில் பொய் சொல்வது குற்றமல்ல."

இந்த நிலை எப்போது ஏற்படும்? இந்தக் கேள்வி இன்னுமோரிடத்தில் எழும். அப்போது இதற்கான விடையை ஆராய்வோம்.

கிருஷ்ணர் சொல்கிறார்: "திருமணம், புணர்ச்சி, உயிருக்கு ஆபத்து,எல்லா உடைமைகளும் பறிபோகும் நிலை, பிராமணனின் நன்மை இவற்றுக்காகப் பொய் சொல்வது பாவமல்ல."

இந்தக் கூற்று மிகவும் விவாதத்துக்குரியது, ஆனால் இப்போது விவாதம் வேண்டாம். மேலே சொல்லப்பட்ட கூற்று மகாபாரதத்துக்குக் காளிப் பிரசன்ன சின்ஹா செய்த வங்காளி மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப் பட்டது. மூல மகாபாரதத்தில் இந்த இடத்தில் இரண்டு சுலோகங்கள் உள்ளன. அவையாவன:

1. "ப்ராணாத்யயே விவாகேச வக்தவ்யம் அன்ருதம் பவேத்;
   சர்வஸ்வஸ்யாபகாரேச வக்தஸ்யம் அன்ருதம் பவேத்.
2. விவாககாலே ரதிசம்ப்ரயோகே ப்ராணாத்யயே சர்வதனாபகாரே;
   விப்ரஸ்ய சார்த்தே ஹ்யன்ருதம் வதேத பஞ்சான்ருதான்ருதானி ஆகுர பாதகானி."

இந்த இரண்டு சுலோகங்களுக்கும் பொருள் அநேகமாக ஒன்றுதான். இரண்டாவது சுலோகத்தில் புணர்ச்சியும், பிராமணனின் நன்மையும் இடம் பெற்றுள்ளன, முதல் சுலோகத்தில் அவை இல்லை.

ஒரே பொருளுள்ள இரண்டு சுலோகங்களுக்கு என்ன தேவை என்ற கேள்வி வாசகரின் மனதில் எழலாம்.

இந்த இரண்டு சுலோகங்களும் கிருஷ்ணரின் கூற்று அல்ல, வேறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்களே. இத்தகைய மேற்கோள்கள் சம்ஸ்கிருத நூல்களில் மேற்கொள்களாகக் குறிப்பிடப்படாமலேயே இடம் பெறுவதுண்டு. மகாபாரதத்தின் கீதைச்சுருக்கத்திலேயே இத்தகைய மேற் கோள்கள் இருப்பதை நாம் வேறொரு நூலில் விளக்கியிருக்கிறோம்.

இவை மேற்கோள்கள் என்று நாம் வெறும் ஊகத்தால் சொல்லவில்லை. இரண்டாவது சுலோகம் வசிஷ்டரின் கூற்று. இது வாசிஷ்டத்தில் பதினாறாம் இயலில் முப்பத்தைந்தாவது சுலோகம். இது மகாபாரதத்தின் ஆதிபருவத்தில் 3412ம் சுலோகமாக, சற்று மாறுபட்ட உருவத்தில் இடம் பெற்றுள்ளது. இநதப் பருவத்துக்கும் கிருஷ்ணருக்கும் ஒரு தொடர்புமில்லை. அந்த சுலோகம் பின் வருமாறு:

"ந நர்ம்ம யுக்தம் வசனம் ந ஸ்த்ரீஷு ராஜன் ந விவாக காலே;
ப்ராணாத்யயே சர்வதனாபகாரே பஞ்சான்ருதானி ஆகுர பாதகானி."

இந்த சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொய்கள் நான்குதான்; எனினும் 'ஐந்து பொய்கள்' என்று சுலோகமே சொல்கிறது. செவிவழியாகப் பரவும் பழமொழிகள் இவ்வாறு தான் திரிந்து போய்விடுகின்றன.

மகாபாரதத்தில் முதல் சுலோகத்துக்கு முற்பட்ட சுலோகத்தோடு முதல் சுலோகத்தையும் சேர்த்து எழுதினால் இவ்வாறு இருக்கும்:

(அ) "பவேத் சத்யமவக்தஸ்யம் வக்தவ்ய மன்ருதம் பவேத்;

(ஆ) யத்ர அன்ருதம் பவேத் சத்யம் சத்யஞ்சாப்யன்ருதம் பவேத்

(இ) ப்ராணாத்யயே விவாகேச வக்தவ்யமன்ருதம் பவேத்;

(ஈ) சர்வஸ்யாபகாரேச வக்தவ்யமன்ருதம் பவேத்."

கிருஷ்ணருடன் தொடர்பில்லாத மகாபாரத சபாபருவத்தின் 13844ஆம் சுலோகம் பின்வருமாறு:

(உ) "ப்ராணாந்த்திகே விவாகே சவக்தவ்யமன்ரும் பவேத்;

(ஊ) அன்ருதேன பவேத் சத்யம் சத்யேனைவான்ருதம் பவேத்."

மேற்கண்ட சுலோகங்களில் (இ), (உ)விலுள்ள வரிகள் ஏறக்குறைய ஒரே மாதிரி. (ஆ), (ஊ) வரிகளும் அவ்வாறே.

இந்த சுலோகங்களின் கருத்து கிருஷ்ணரின் சொந்தக் கருத்து அல்ல. தாம் இதை ஏற்றுக் கொள்வதாகவும்அவர் சொல்லவில்லை. தாம் பீஷ்மர் முதலியோரிடம் கேட்ட கருத்தை அவர் திருப்பிச் சொல்கிறார், அவ்வளவுதான். அவர் ஏன் இக்கருத்தை அர்ஜுனனுக்குச் சொல்ல நேர்ந்தது என்பதை முன்பே விளக்கியிருக்கிறோம். இக்கருத்து பொருத்தமா இல்லையா என்ற ஆராய்ச்சி கிருஷ்ணரின் தன்மையைப் புரிந்து கொள்ள அவசியமில்லை.

இப்போது விஷயத்துக்கு வருவோம். சூழ்நிலையைப் பொருத்து சத்தியமும் பொய்யாகலாம், பொய்யும் சத்தியமாகலாம் என்பதே கிருஷ்ணரின் கருத்து மாகும். அந்த நிலையில் பொய் பேசலாம்.

எப்போதாவது பொய் மெய்யாகிவிடுமா? மெய் பொய்யாகிவிடமா என்பது முதலில் ஆராயத்தக்கது. அறத்தால் அனுமதிக்கப்படுவது சத்தியம், மறத்தால் அனுமதிக்கப்படுவது பொய். அறத்தால் அனுமதிக்கப்படுவது பொய்யாகாது. மறத்தால் அனுமதிக்கப்படுவது சத்தியம் அல்லது மெய் ஆகாது. ஆகவே சத்தியம் எது. அசத்தியம் எது என்பதை முடிவு செய்வது அறம் எது, மறம் எது என்பதைப் பொருத்தது. ஆகையால்தான் கிருஷ்ணர் அறம் என்றால் என்ன என்பதை முதலில் விளக்குகிறார். இந்த விளக்கத்தில் பகவத்கீதையின் தாராளத் தன்மையைக் காண்கிறோம். கிருஷ்ணர் சொல்கிறார்:

"அறத்தையும் மறத்தையும் முடிவு செய்ய அளவு கோல்கள் வரையறுக்கப் பட்டுள்ளன. அறம் என்ன என்பதை முடிவு செய்வதில் சிக்கல் நேரும் நிலையில் ஊகத்தின் மூலமும் ஒரு முடிவுக்கு வரலாம்."

இதைவிடத் தாராளமான விளக்கம் ஐரோப்பாவில்கூட இல்லை.

"பலர் சுருதியை அறத்துக்குச் சான்றாகக் கொள்கிறார்கள். இதை நான் மறுக்கவில்லை. ஆனால் எல்லா அறத்தத்துவங்களும் சுருதியில் கூறப்பட

வில்லை. பல சமயங்களில் ஊகத்தின் மூலம் அறம் என்ன என்பதை முடிவு செய்து கொள்ள நேர்கிறது."

மேற்கண்ட கூற்று நாகரீக உலகில் இன்றும் பெரும் குழப்பத்தை விளைவித்து வருகிறது. "வேதம், பைபிள், குரான் போன்ற நூல்களிலுள்ளவை கடவுளின் கூற்று. இவற்றில் உள்ளவையே அறம், இவற்றுக்கு வெளியே அறமில்லை" என்று கூறுபவர்கள் இன்றும் வலிமைமிக்கவர்களாயிருக்கிறார்கள். இத்தகைய கடவுள் கூற்றே அறத்தைத் தீர்மானிக்கிறது, அறம் ஊகத்துக்குரிய விஷயமல்ல என்பது இவர்களது கருத்து. இந்தக் கருத்து மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு ஒரு பெருந்தடையாகும். இந்தக் கருத்து இந்தியாவில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலும் மனித மேம்பாட்டுக்கான வழியை அடைத்துக் கொண்டிருக்கிறது. நம் நாட்டின் வீழ்ச்சிக்கு இது ஒரு முக்கிய காரணம். பாரதத்தின் அற உணர்வு இன்னும் வேதங்களாலும், மனு, யாக்ஞவல்கியர் ஆகியோர் இயற்றிய ஸ்மிருதிகளாலும் நெறிப்படுத்தப்பட்டு வருகிறது; இதில் ஊகத்துக்கு இடமில்லை. சிறந்த தொலைநோக்குள்ளவரும் இலட்சிய மனிதருமான கிருஷ்ணர் மிகப் பண்டைய காலத்திலேயே இது மனித முன்னேற்றத்துக்கு பெருந்தடையாயிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இப்போது இந்து சமூகத்தின் அற உணர்வைப் பார்க்கும்போது நம் மனம் வருத்தத்துடன் அந்தக் கிருஷ்ணரையே சரணடையவிரும்புகிறது.

ஆனால் ஊகத்துக்கும் ஏதாவதொரு ஆதாரம் வேண்டும். நெருப்பின்றிப் புகையில்லை. ஆகவே எதிரிலுள்ள மலையிலிருந்து புகை எழுந்தால் அதில் நெருப்பும் இருப்பதை ஊகித்துக் கொள்கிறோம். அதுபோல் தருமம் அல்லது அறம் இதுதான் என்று சுட்டிக்காட்ட ஒரு சான்று வேண்டும். கிருஷ்ணர் அறத்தின் அடையாளத்தை இவ்வாறு விளக்குகிறார்:

"பிராணிகளைத் தாங்குவதால்தான் தருமத்துக்கு அந்தப் பெயர். ஆகவே. பிராணிகளைக் காப்பது எதுவோ, அதுவே தருமம் அல்லது அறம்."

ஹெர்பெர்ட் ஸ்பென்சர், பெந்த்தாம், மில் ஆகியோரின் சீடர்கள் கிருஷ்ணரின் இந்தக் கருத்தை மறுக்க மாட்டார்கள். ஆனால் இது அப்பட்டமான 'பலனையே ஆதாரமாகக் கொண்ட தத்துவம்' (utilitarianism) அல்லவா என்று பலர் சொல்லலாம். ஆமாம். அறத்தை இத்தகைய 'இதவாத'த்திலிருந்து பிரிக்க முடியாது என்பதை இன்னொரு நூலில் விளக்கியிருக்கிறேன். கடவுள் எங்கும், எல்லா ஜீவன்களிலுமிருக்கிறார் என்ற நம்பிக்கையிலிருந்து இந்தத் தத்துவத்தை ஊகித்துக் கொள்ளலாம். குறுகிய கிருத்துவ மதத்தத்துவம் இந்த 'இதவாத'த்தை எதிர்க்கலாம். ஆனால் கடவுள் எல்லா ஜீவன்களிலும் இருக்கிறார் என்ற கொள்கையைக் கொண்ட இந்து மதத்தில் இதவாதத் தத்துவமும் அடங்கியதுதான். ஆகவே கிருஷ்ணனின் கூற்றே உண்மையான அறத்தை அடையாளம் காட்டுவதாகும்.

அறத்தால் அனுமதிக்கப்பட்டது சத்தியம், அனுமதிக்கப்படாதது பொய் என்பதை முன்பே விளக்கினோம். ஆகவே மக்களுக்கு நலனளிப்பதே சத்தியம், மக்களுக்குத் தீங்களிப்பது பொய். உலகவழக்கில் சத்தியமாயிருப்பது அற உணர்வுக்குப் பொய்யாக இருக்கலாம்; உலக வழக்கில் பொய்யாகத் தோன்றுவது அறத்தின் அளவுகோல்படி சத்தியமாயிருக்கலாம். இந்த மாதிரி சமயங்களில் பொய்யும் சத்தியமாகிறது. சத்தியமும் பொய்யாகச் செயற் படுகிறது.

இதற்கு ஓர் உதாரணம் தருகிறார் கிருஷ்ணர். ஒருவனைக் கொல்ல நினைத்து அவனைத் தேடிக் கொண்டிருப்பவன் அவன் எங்கேயென்று இன்னொருவனைக் கேட்டால், இவ்வாறு கேட்கப்பட்டவன் மௌனம் கடைப் பிடிக்க வேண்டும்; அது இயலாவிட்டால் பொய் சொல்லலாம். இந்த இடத்தில் பொய்தான் மெய்.

இந்தத் தத்துவத்தை விளக்கும் முன்னரே கிருஷ்ணர் இதன் முன்னுரையாக அர்ஜுனனுக்குக் கௌசிகரின் கதையைச் சொன்னர்.

அந்தக் கதைபின் வருமாறு:

"கல்விகேள்விகளிலும் தவத்திலும் சிறந்த கௌசிகர் என்ற பிராமணர் ஒரு கிராமத்துக்கு அருகில் பல ஆறுகள் சேருமிடத்தில் வாழ்ந்து வந்தார். சத்தியம் பேசுவதையே விரதமாகக் கொண்டவர் என்ற புகழ் அவருக்கிருந்தது. ஒரு சமயம் சிலர் கொள்ளையர்களுக்குப் பயந்து காட்டுக்குள் ஒளிந்து கொண் டார்கள். கொள்ளையர்கள் அவர்களைத் தேடிக் கொண்டு கௌசிகரிடம் வந்து அவரிடம் சொன்னார்கள்: "சாமி, சிலபேர் இந்தக் காட்டுக்குள் ஓடி வந்தார்களே, அவர்கள் எந்த வழியில் போனார்கள் என்பதை உண்மையாகச் சொல்லுங்கள்." கௌசிகர் தம் சத்திய விரதத்தைக் காப்பாற்றும் பொருட்டு அந்த ஆட்கள் சென்ற வழியைக் கொள்ளையர்களுக்குக் காட்டிவிட்டார். உடனே அந்தக் கொடிய கொள்ளையர்கள் அந்த ஆட்களைத் துரத்திச் சென்று கண்டுபிடித்து அவர்களைத் தாக்கிக் கொன்றார்கள். தம்முடைய சத்திய வார்த்தையால் பலரது சாவுக்குக் காரணமாயிருந்த கௌசிகர் அந்தப் பாவத்துக்காகக் கொடிய நரகத்தில் விழுந்தார்."

தம்மை வந்து கேட்டவர்கள் கொள்ளையர்கள் என்பதும் அவர்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்தவர்களைக் கொல்லவிரும்புகிறார்களென்பதும் கௌசிகருக்கும் தெரியும். அவருக்குத் தெரியாதிருந்தால் அவருக்குப் பாவம் நேர்ந்திராது. தெரிந்தே அவர் உண்மை பேசியது பெரும் பாவம் என்பது கிருஷ்ணரின் கருத்து. இவ்விஷயத்தில் கிழக்குக்கும் மேற்குக்குமிடையே கடுமையான வேற்றுமை உண்டு. 'சத்தியம் நிலையனது, அது ஒருபோதும் பொய்யாகாது, எந்த நிலையிலும் பொய் பேசக் கூடாது' என்பது நாம் மேலைநாட்டு அறிஞர்களிடமிருந்து கற்றுக் கொண்ட படிப்பினை. ஆகையால்

கிருஷ்ணரின் கருத்தை தமது கல்வியறிவு பெற்ற சமூகம் ஏற்றுக் கொள்ளாது. (நானும் இக்கருத்தை ஆதரிக்கவில்லை). இந்தக் கருத்தைக் கண்டிப்பவர்களை நான் கேட்கிறேன்: 'கௌசிகர் என்ன செய்திருக்க வேண்டும்?" அவர் மௌனமாக இருந்திருக்க வேண்டும் என்று எளிதில் பதில் சொல்லிவிடலாம். இதே கருத்தைக் கிருஷ்ணரும் கூறியிருக்கிறார். இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் கொள்ளையர்கள் கௌசிகரை மௌனமாக இருக்க விடவில்லையென்றால், அவரைக் கொடுமைப்படுத்திப் பேசவைத்தால் அவர் என்ன செய்ய வேண்டும்? கொள்ளையர்களின் கொடுமையைப் பொறுத்துக் கொண்டு, அவர்கள் அவரைக் கொல்ல முற்பட்டால் உயிர்விடவும் துணிந்து அவர் மௌனமாயிருந்திருக்க வேண்டும் என்று சிலர் சொல்லலாம். நாமும் இந்தக் கருத்தை ஆதரிக்கிறோம். ஆனால் இத்தகைய அறம் உலகில் சாதாரண மக்களால் கடைப்பிடிக்கப்படும் வாய்ப்பு இருக்கிறதா?

இந்த இடத்தில் சாங்கிய தத்துவத்தை இயற்றிய கபிலர் கூறியுள்ள சூத்திரம் ஒன்று (முதலாம் இயல், ஒன்பதாவது சூத்திரம்) நினைவுக்கு வருகிறது:

"நாசக்யோபதேச விதிருபதிஷ்டே அப்யனுபதேசஹா"

(பின்பற்ற இயலாத உபதேசத்தைச் செய்வதும் செய்யாததும் ஒன்றே)

இத்தகைய உபதேசங்களைச் செய்வதில் பலனில்லை. இவற்றை மனிதர்கள் பின்பற்ற முடிந்தால் அவர்கள் பேறுபெற்றவர்கள்தாம்.

அனால் ஏதாவது சொல்லித்தான் ஆகவேண்டுமென்றால் என்ன செய்வது? சத்தியத்தைச் சொல்லி, தெரிந்தே மனிதக் கொலைக்கு உடந்தையாயிருக் கலாமா? இந்த நிலையிலும் சத்தியம் சொல்லவேண்டுமென்பவரின் கொள்கை சரியாயிருக்கலாம், அல்லது தவறாயிருக்கலாம்; ஆனால் இந்தக் கொள்கை மிகக் கொடியது.

கிருஷ்ணரின் கருத்துப்படி ஒரு கொலைகாரனைக் காப்பாற்றுவதற்காகப் பொய் சொல்வதும் அறந்தான் என்று சிலர் வாதிக்கலாம். இவ்வாறு வாதிப் பவர்கள் கிருஷ்ணரின் சத்திய தத்துவத்தைப் புரிந்து கொள்ளவில்லை. கொலைகாரனைத்தண்டிப்பது மனித சமூகத்தின் பாதுகாப்புக்குத் தேவைப் படுகிறது. கொலைகாரனுக்குத் தண்டனையில்லாவிட்டால் அவன் தனக்கு அகப்பட்டவர்களை எல்லாம் கொன்றுவிடுவான். ஆகையால் கொலை காரனைத் தண்டிப்பதே அறம். அவனைக் காப்பாற்றுவதற்காகப் பொய் சொல்பவன் பாவி.

கிருஷ்ணர் வெளியிட்ட இந்த சத்திய தத்துவம் குற்றமற்றதா? பொது மக்களால் பின்பற்றப்படத்தக்கதா? என்றெல்லாம் கூற நான் இப்போது தயாராயில்லை. ஆனால் கிருஷ்ணரின் தன்மையை விளக்குவதற்காக நான் சத்தியம் பற்றிய அவரது கொள்கையைத் தெளிவாக்கக் கடமைப்பட் டுள்ளேன். சத்தியம் எப்போதும் சத்தியமே, அது ஒரு போதும் கைவிடப்படத் தக்கதல்ல என்ற மேலைநாட்டினரின் கருத்துக்கு அடிப்படையாக ஒரு முக்கிய

மான விஷயம் இருப்பதையும் நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அந்த விஷயம் இதுதான்—மனிதனுக்கு நலனளிப்பதெல்லாம் அறம்; அவனுக்குத் தீங்கிழைப்பதெல்லாம் அதருமம் என்று கொள்வோமானால் மனித வாழ்க்கையும் மனித சமூகமும் மிகுந்த குழப்பத்துக்குள்ளாக நேரும்; நம்நோக்கமான மக்கள் நலத்துக்கே ஊறுநேரும். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் சத்தியம் பேச வேண்டுமா அல்லது பொய்பேசலாமா என்பதை யார் தீர்மானிப்பது? அவனவன் தானே தீர்மானிக்கவேண்டும்? இப்படித்தீர்மானிக்கப்படும் செயல் எப்போதும் அறத்துக்குப் பொருத்தமாக இல்லாமலும் போகலாம். பலரது கல்வியும் அறிவும் சாதாரணமானவை; முழுமையான அறிவு பெற்றவர் யாருமில்லை. பலருடைய ஆய்ந்தறியும் திறன் மிகக் குறைவு; அத்தோடுபலன்கள், அன்பு, பாசம், பயம், பேராசை, அறியாமை போன்ற உணர்ச்சிகளின் தாக்கம் வேறு. சத்தியம் எப்போதும் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்ற விதி இல்லாவிட்டால் மனித இனத்தில் சத்தியம் மறைந்துவிடும் ஆபத்து உண்டு.

பண்டைய இந்து முனிவர்களுக்கு இது தெரியாமலில்லை. தெரிந்தே அவர்கள் இன்னின்ன சமயங்களில் பொய் சொல்லலாம் என்று விதி செய்தனர். மனு, கௌதமர் ஆகிய முனிவர்களும் இந்த விதியை ஆதரித்தனர். இந்த விதி அறத்துக்குப் பொருந்துமா என்பதை நாம் ஆராயத் தேவையில்லை. கிருஷ்ணரின் தன்மையை விளக்குவதே நம்நோக்கம். விதிவிலக்கின்றி எல்லா மக்களும் எல்லா சமயங்களிலும் சத்தியத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் கடினம் என்பதைத் தற்கால ஐரோப்பியரைப் போல் கிருஷ்ணரும் உணர்ந்திருந்தார். ஆனால் அதே சமயத்தில் விதிவிலக்குகளைக்க கூறிவிட்டால் மட்டும் மக்களுக்கு அவர்களது கடமை தெளிவாகிவிடாது. ஆகையால் கிருஷ்ணர் சத்தியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற பொது விதியை மக்கள் எந்தெந்த சமயங்களில், எதற்காக மீறலாம் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அதைத்தான் நாம் இங்கு விளக்குகிறோம்.

தானம், தவம், தூய்மை, நேர்மை, சத்தியம் முதலிய பல செயல்கள்ள அறம் எனப்படுகின்றன. இவையெல்லாம் பொதுவாக அறந்தான் என்றாலும் சில குறிப்பிட்ட சமயங்களில் மறம் அல்லது அதருமமாகவும் ஆகக் கூடும். அதாவது இந்தச் செயல்களை உசிதமற்ற நேரங்களில் செய்வது அதருமமாகும். உதாரணமாக, "திருடர்களுக்குத் தானம் செய்வது அதருமம். பாவிகளுக்குத் தானம் செய்தால் அவர்கள் செய்யும் பாவச் செயல்களுக்கான பொறுப்பு தானம் கொடுத்தவர்களையும் சேரும்." சத்தியம் சொல்வதும் இதுபோலத்தான். கிருஷ்ணர் கூறிய இரு உதாரணங்களில் ஒன்று மேலே சொல்லப்பட்டது. மற்ற உதாரணம் இதோ:

"பொய் சொல்வதால் திருடர்களின் சேர்க்கையிலிருந்து விடுதலை கிடைக்குமானால், பொய் சொல்வதே உசிதம். அந்தப் பொய் சத்தியமே ஆகும்."

மேலே கூறப்பட்ட உதாரணங்களைத் தவிர அறநூல்களிலிருந்து "உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது, விவாகத்தில்...பொய் சொல்லலாம்" என்ற கருத்து மீண்டும் கூறப்படுகிறது.

ஆகவே கிருஷ்ணர் அறிவுரைத்த சத்திய தத்துவம் இத்தகையது:

1. அறத்தால் அனுமதிக்கப்படுவது சத்தியம், ஆதரிக்கப்படாதது அசத்தியம்.

2. எதனால் மக்களுக்கு நன்மையோ அதுவே அறம்.

3. ஆகவே எதனால் மக்களுக்கு நலனோ அதுவே சத்தியம்; எதனால் தீமையோ அதுவே அசத்தியம்.

4. இத்தகைய சத்தியம் எப்போதும் எல்லா இடங்களிலும் கடைப் பிடிக்கத்தக்கது.

"இதைவிட உயர்ந்த சத்திய தத்துவம் வேறெங்கும் கூறப்படவில்லை; கூறப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டால் நாங்கள் கிருஷ்ண ஆராதனையைக் கைவிடத் தயார்; நிரூபிக்க முடியாவிட்டால் இதுவே மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சிய விதி என்று ஒப்புக் கொள்ளுங்கள்" என்று கிருஷ்ண பக்தர்கள் கூறலாம்.

மக்களின் பாதுகாப்பும் நலனும் எதனால் சாத்தியமோ அதுவே அறம் என்ற கிருஷ்ணரின் இந்தக் கருத்தை நாம் இந்து மதத்தின் அடிப்படையாக முழு ஈடுபாடுடன் ஏற்றுக் கொண்டால் இந்து மதமும் இந்து சமூகமும் முன்னேற்றமடைவதில் தாமதம் நேராது. அப்படியானல் தூய்மையானதும் உலகில் ஒப்பற்றதுமான இந்து மதத்தைத் தற்போது சாம்பல் போல் சூழ்ந் திருக்கும் மூட நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் விரைவில் பறந்தோடி விடும்; சாத்திரத்தின் பெயரால் கெட்ட செயல்கள், வீண் உழைப்பு, நேர இழப்பு இவை நாட்டிலிருந்து நீங்கி நற்செயல்களால் இந்து சமூகம் பலம் பெறும்; கபட நடத்தை, சாதிச் சண்டை, பரஸ்பர விரோதம், பிறருக்குத் தீங்கு செய்வதில் நாட்டம் முதலியன இருக்காது. நாம் கிருஷ்ணரின் மிக உயர்ந்த தத்துவத்தைப் புறக்கணித்துவிட்டு, இந்து ஆசாரவிதிகளை விதித்துள்ள சூலபாணி, ரகுநந்தன் ஆகியோரின் காலடியில் விழுந்து கிடக்கிறோம்; மக்களின் நன்மையை அலட்சியம் செய்துவிட்டுத் திதி, நட்சத்திரம், மலமாதம் முதலிய இருபத்தெட்டு விதிகள்பற்றி ஒருவரோடு ஒருவர் விவாதித்துச் சச்சரவு செய்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நமது சமூகம் முன்னேறு மென்றால் எந்த சமூகந்தான் வீழ்ச்சியடையும்?

(குறிப்பு— சந்திரனை அடிப்படையாகக் கொண்டு மாதத்தைக் கணக்கிடும் போது சில ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓராண்டில் பதின்மூன்று மாதங்கள் வரும். இந்த உபரி மாதத்தை மலமாதம் என்பர். விழாக்களுக்கும் நற்சடங்கு களுக்கும் மலமாதம் தகுதியற்றது எனக்கருதப்படுகிறது.)

நமக்கு நற்காலம் ஏற்பட்டால், இந்துக்களாகிய நாமெல்லோரும் ஒன்றாக இணைந்து 'பகவான் கிருஷ்ணருக்கு வணக்கம்' என்று சொல்லிக் கிருஷ்ணரின் காலடியில் வணங்கி, அவர் உபதேசித்த அறத்தைப் பின்பற்றக் கடவோம். (பெந்த்தாமின் அறிவுரையை இங்கிலாந்து கேட்டது. கிருஷ்ணரின் அறிவுரையைப் பாரதம் கேட்காதா?) அப்படியானால் நாம் நிச்சயமாக நம் இனத்தை முன்னேற்ற முடியும்.

(வங்க ஆண்டு 1299 சிராவண் மாதம் 'பிரசார்' பத்திரிகையில் முதலில் வெளி வந்தது. 'கிருஷ்ண சரித்திர' என்ற நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது.)